# தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
# க.பொ.த. (உ/த)

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 13

(2019ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

சிங்கள மொழிகள் திணைக்களம்
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
தரம் - 13

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு : 2019

தேசிய கல்வி நிறுவகம்
ISBN

சிங்கள மொழிகள் திணைக்களம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

*பதிப்பு:*

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்டுள்ள தேசிய கல்விக் குறிக்கோள்களை அடைவதையும் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்தலையும் அடிப்படையாகக் கொண்டு, அப்போது இருந்த விடய உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டத்தை நவீனமயப்படுத்தி, எட்டு ஆண்டு கால வட்டத்திற்காக, தேர்ச்சிகள் சார்ந்த கலைத்திட்டத்தின் முதலாவது கட்டம், 2007 இல் தேசிய கல்வி நிறுவகத்தினால் பாடசாலைகளின் ஆரம்ப, இடைநிலைப் பிரிவுகளில் அறிமுகஞ் செய்யப் பட்டது. ஆய்வு மூலம் கண்டறியப்பட்ட விடயங்களையும் கல்வி தொடர்பாகப் பல்வேறு தரப்பினர் முன்வைத்த யோசனைகளையும் அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்ட கலைத்திட்ட நியாயிப்புச் செய்முறையின் பெறுபேறாகக் கலைத்திட்ட வட்டத்தின் இரண்டாம் கட்டத்தை கல்வி முறைமையில் அறிமுகஞ் செய்யும் பணி 2015 இல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நியாயிப்புச் செயன்முறையின் போது சகல பாடங்களதும் தேர்ச்சிகளை அடித்தள மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை ஒழுங்கு முறையாகக் கட்டியெழுப்புவதற்குக் கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் நிலைக்குத்துச் சேர்மானமும் வெவ்வேறு பாடங்களில் ஒரே பாட விடயம் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்படுவதை இயன்றவரை குறைத்தல், விடய உள்ளடக்கத்தை வரையறைப்படுத்தல், நடைமுறைப்படுத்துவதற்கேற்ற மாணவர் நேயமான கலைத்திட்டமொன்றினைத் தயாரிப்பதற்காகக் கிடையான சேர்மானமும் பயன் படுத்தப்பட்டுள்ளன.

ஆசிரியர் பாடங்களைத் திட்டமிடுதல், கற்றல் கற்பித்தற் செயன்முறையில் வெற்றி கரமாக ஈடுபடுதல், வகுப்பறைக் கணிப்பீட்டினையும் மதிப்பீட்டினையும் பயனுள்ளவாறு பிரயோகித்தல் ஆகியவற்றிற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குதல் போன்ற நோக்குடன் புதிய ஆசிரியர் வழிகாட்டி அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. வகுப்பறையில் பெரிதும் விளைதிறன் மிக்க ஓர் ஆசிரியராகச் செயற்படுவதற்கு இந்த வழிகாட்டி துணையாக அமையும். மாணவரிடத்தே தேர்ச்சிகளை வளர்ப்பதற்காகத் தரவிருத்தி உள்ளீடுகளையும் செயற்பாடுகளையும் தெரிவு செய்து கொள்வதற்கான சுதந்திரம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் விதந்துரைக்கப்பட்டுள்ள பாடநூல்களில் அடங்கியுள்ள பாடவிடயங்கள் தொடர்பான அதிக சுமையேற்றம் இந்த ஆசிரியர் வழிகாட்டிகளில் அடக்கப்படவில்லை. எனவே இந்த ஆசிரியர் வழிகாட்டி மூலம் உச்சப்பயன் பெறுவதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள பாடநூல்களையும் இவற்றுடன் சமாந்தரமாகப் பயன்படுத்துவது அவசியமானதாகும்.

நியாயிக்கப்பட்ட பாடத்திட்டங்கள், புதிய ஆசிரிய வழிகாட்டிகள், புதிய பாடநூல்கள் ஆகியவற்றின் முதன்மையான நோக்கம் ஆசிரியர் மையக் கல்விக் கோலத்திலிருந்து விடுபட்டு மாணவர் மையக் கல்விக் கோலத்தையும் பெரிதும் செயற்பாடுகள் சார்ந்த கல்விக் கோலத்தையும் முன்னெடுப்பதன் மூலம் வேலை உலகிற்குத் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் கொண்ட மனித வளமாக மாணவர் சமுதாயத்தை விருத்தி செய்தலாகும்.

புதிய பாடத்திட்டத்தினையும் ஆசிரியர் வழிகாட்டியையும் தயாரிக்கும் பணியில் பங்காற்றிய தேசிய கல்வி நிறுவக கல்விசார் அலுவல்கள் சபையினதும், தாபன பேரவையினதும் சகல வளவாளர்களினதும் அர்ப்பணிப்பைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

**கலாநிதி. ரீ. ஏ. ஆர். ஜே. குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப் படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்த ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப் பதற்குமான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புக்களினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படு கின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற் காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி. வண. மாம்புல்கொட சுமனரதன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## கலைத்திட்டக் குழு

| | |
|---|---|
| **அனுமதி மற்றும் ஆலோசனை:** | கல்வி அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம் |

**இணைப்பாக்கம்:**

| | |
|---|---|
| பீ.ரீ.எம். ரத்னாயக: | சிரேஷ்ட விரிவுரையாளர், சிங்கள மொழிகள் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், மஹரகம. |

**பாட நிபுணத்துவ ஒத்துழைப்பு**

| | | |
|---|---|---|
| பேராசிரியர். சுனந்த மஹேந்திர | : | தகைசார் பேராசிரியர், களனி பல்கலைக்கழகம். |
| பேராசிரியர். ஆரியரத்ன அதுகல | : | சிரேஷ்ட பேராசிரியர், களனி பல்கலைக்கழகம். |
| பேராசிரியர். கமல் வலேபொட | : | பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம். |
| பேராசிரியர். தியடோர் பெர்ணாந்து | : | பேராசிரியர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம். |
| கலாநிதி. மஹீம் மென்டீஸ் | : | சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக் கழகம். |
| கலாநிதி. டியூடர் வீரசிங்ஹ | : | சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீபாலி, கொழும்புப் பல்கலைக்கழகம். |
| கலாநிதி. எஸ். ரகுராம் | : | சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம். |
| எம். ஏ. எஸ். ஹரிஸ் சந்திர | : | சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். |

**எழுத்தாளர் குழு** (வெளிவாரி)

| | | |
|---|---|---|
| விஜயாநந்த ரூபசிங்ஹ | : | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| அருண லொகு லியன | : | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| தம்மிக பண்டார | : | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| ஜீ.ரீ. மதுபாஷினி | : | சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை திறந்தப் பல்கலைக்கழகம். |
| திவங்கி அபேவர்தன விக்கிரமசிங்ஹ | : | சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை திறந்தப் பல்கலைக்கழகம். |
| மிஹிரி குமாரகே | : | ஆசிரியர் சேவை, புனித பேதுறு மகா வித்தியாலயம், ஹொரணை. |
| பிரசன்ன விமல சூரியா | : | ஆசிரியர் சேவை, தொடம்கொல்ல மகாவித்தியாலயம், பிபில. |
| இந்திவர ஜய ஜயசேகர | : | ஆசிரியர் சேவை, ஆனந்தா மகளீர் வித்தியாலயம், கோட்டை |

**செயற்றிட்டக் குழு**

| | | |
|---|---|---|
| எம். ஆர். டப்ள்யு. மத்தும | : | பணிப்பாளர், சிங்கள மொழிகள் திணைக்களம் |
| பீ.ரீ.எம். ரத்னாயக | : | சிரேஷ்ட விரிவுரையாளர், சிங்கள மொழிகள் திணைக்களம் |
| கலாநிதி. வாவின்னே பஞ்ஞாநந்த தேரர் | : | உதவி விரிவுரையாளர், சிங்கள மொழிகள் திணைக்களம் |

**தமிழாக்கம்**

| | | |
|---|---|---|
| சிவப்பிரியா ஸ்ரீராம் | : | விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம் |
| எம். தேவநேசன் | : | ஆசிரியர் சேவை, மே.மா/ஹோ/ புவக்பிடிய சீ. சீ தமிழ் மகா வித்தியாலயம், புவக்பிடிய |

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | i |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | ii |
| கலைத்திட்டக் குழு | iii |
| 7.0 படைப்பாக்கமிக்க தொடர்பாடல் | 01 - 31 |
| 8.0 பொதுமக்கள் தொடர்பு மற்றும் நிகழ்வு முகாமைத்துவம் | 32 - 62 |
| 9.0 அபிவிருத்திக்கான தொடர்பாடல் | 63 - 82 |
| 10.0 தொடர்பாடல் கொள்கைகள் மற்றும் ஊடக வரையறைகள் | 83 - 100 |
| 11.0 இலங்கையின் ஊடகங்களும் சமகாலப் போக்கும் | 101 - 116 |
| 12.0 தொடர்பாடல் ஆய்வு | 117 - 135 |
| உசாத்துணை நூல்கள் | 136 - 138 |

# 7. படைப்பாக்கரீதியான தொடர்பாடல்

தேர்ச்சி : 7.0 படைப்பாக்கரீதியான தொடர்பாடல், அதன் அடிப்படைக்கூறுகள் மற்றும் அவசியம் என்பவை பற்றிய தெளிவுடன் வெவ்வேறு ஊடகங்களுக்குப் பொருத்தமான தகவல் தயாரிப்பின்போது அவற்றை உபயோகிப்பார்.

தேர்ச்சி மட்டம் :7.1படைப்பாக்கரீதியான தொடர்பாடல் மிகவும் பயனுறுதியுள்ளதொரு தொடர்பாடல்முறை என்பதை விபரிப்பார்.

பாடவேளைகள் : 16

கற்றற் பேறுகள்

- படைப்பாக்கரீதியான தொடர்பாடல் என்பதனை இனங்கண்டு தெளிவுறுத்துவார்.
- படைப்பாக்கரீதியான தொடர்பாடலின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் பற்றி விபரிப்பார்.

**பாடத்தைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**
கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**அறிமுகம்**

- மனிதன் இயற்கையாகவே படைப்பாக்கரீதியான தொடர்பாடலில் ஈடுபடும் ஒரு உயிரினமாகும். பண்டைய மானுடப் பண்பாட்டு மரபுரிமைகள் மற்றும் கலைகளின் பயன்பாடு என்பன அன்றைய மனிதனின் படைப்பாக்க மற்றும் புத்தாக்கத் தொடர்பாடலினை எடுத்தியம்புகின்றன. அப்பண்டைய பண்பாட்டுக் காலம் தொட்டுச் சமகாலம் வரை தொடர்பாடல் மற்றும் ஊடகக்கற்கைத் துறையில் படைப்பாக்கரீதியான செயற்பாடுகள் குறிப்பிடத்தக்களவு விருத்தியையடைந்துள்ளன.
- படைப்பாக்கரீதியான தொடர்பாடல் என்பதனை ஏதேனுமோர் தகவல் ஒன்றை இலக்குப் பெறுநருக்கு மிக நெருக்கமாக மற்றும் புரிந்துக்கொள்ளக்கூடிய விதத்தில் முன்வைத்தல் என வரையறை செய்யலாம். இது, சந்தர்ப்பங்களுக்கு மற்றும் நோக்கங்களுக்கேற்ப மாறுபடும். இதனூடாகப் படைப்பாக்கபூர்வமாகச் சிந்திக்கச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. படைப்பாக்கம் என்பதனை ஒக்ஸ்போர்ட் அகராதி பின்வருமாறு வரையறை செய்கிறது.

**“ஏதேனுமொன்றை உருவாக்க, கற்பனை அல்லது சுயமான கருத்துக்களைப் பயன்படுத்தல்; புதியது புனைதல்.”**

**‘The use of Imagination or original ideas to create something; inventiveness’**

- கலை என்பதனை ரஷ்யா நாட்டவரான லியோ டோல்ஸ்டோய் (Leo Tolstoy) பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறார். “ஒருவர் யாதேனும் ஒன்றை உணர்ந்த பின், சலனம்,

ரேகைகள், நிறம், ஒலி அல்லது வசன அமைப்புக்களின் துணையுடன் அவ் உணர்வை அவ்வாறே மற்றவர்களிடத்திலும் ஏற்படுத்துவது கலை ஆகும்.”

- அச்சு மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல்துறைகளின் எழுச்சி மற்றும் தொழினுட்பரீதியாக ஏற்பட்ட வளர்ச்சி காரணமாகத் தகவலொன்றைப் படைப்பாக்கரீதியில் பெறுநர்மயப்படுத்தல் அவசியமாகிற்று. இங்கு தொடர்பாடுநர் புதிய தகவலை முன்வைப்பதன் மூலமாகத் தன் ஊடகப் பாவனையைப் படைப்பாக்கம்மிக்கதாகவும் வினைத்திறனானதாகவும் மாற்றுகிறார்.
- பேராசிரியர் சுனந்த மஹேந்திர ‘படைப்பாக்கரீதியான தொடர்பாடல்’ எனும் நூலில் இது பற்றிக் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை ஆராய்தல் முக்கியமானதாகும்.

> ‘ஊடகப் பாவனையில் மிகச்சிறந்த எதிர்வினையைப் பெற்றுக்கொள்ளல் என்று இதனைக் கூறலாம். இவ் எண்ணக்கருவைத் தொடர்பாடுநர் முதலில் இனங்காண்பது ஏதேனுமோர் சமூகத் தேவையைத்தலையாய கடமையாய்க் கொள்தல் என்றாகும். இரண்டாவதாக, அத்தேவையின் உன்னதத் தன்மையை மற்றவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் முன்வைப்பது தீரமானிக்கப்படும். தொடர்பாடல் கற்கையில் வினைத்திறன்மிக்க தொடர்பாடல் (Effective Communication) எனக் குறிப்பிடப்படும் இப் படைப்பாக்க விதி படைப்பாக்கரீதியான தொடர்பாடல் (Creative Communication) எனப்படுகிறது. அதற்காக எம்மொழியில் எழுதினாலும், எம்மொழியில் பேசினாலும், எச்சமூகத்தால் பயன்படுத்தப்பட்டாலும் இது அதன் உலகப் பொதுப்பண்பாகக் காணப்படுகிறது.’

- அழகியல்சார் மற்றும் கலைத்துவப் படைப்பாக்கங்கள் மானுடத் தொடர்பாடல் செயற்பாட்டை அடிப்படையாகக் கொள்கின்றன. தொடர்பாடலில் தகவலொன்றை எவ்வளவிற்கு படைப்பாக்கரீதியாக முன்வைக்கக்கூடிய திறமை உள்ளதோ அவ்வளவிற்கு அதன் நோக்கம் நிறைவேற்றப்படுகிறது. இதன்மூலம் தெளிவாவது யாதெனில், படைப்பாக்கத் தன்மைக்கும் தொடர்பாடலுக்கும் இடையே பரஸ்பரத் தொடர்பொன்று காணப்படுகிறது என்பதாகும். அதனை இவ்வாறு தெளிவுறுத்திக் கொள்ளமுடியும்.
    1. பண்டைய காலத்தில் மனிதன் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்திய நுட்ப முறைமைகள் பிற்காலத்தில் கலைத்துவ முறைகளாக மாற்றமடைந்தன.
    2. அவ்வவ் மானுடப் பண்பாடுகளில் மனிதனுக்குப் படைப்பாக்கரீதியான தொடர்பாடலின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. சித்திரக் கலை – டாவின்சி, இலக்கியம் - ஷேக்ஸ்பியர், சங்கீதம் - பீதோவன் எனப் பற்பல துறைகளில் கலைப்படைப்புக்கள் சார்ந்து படைப்பாக்குநர்கள் உருவாகியுள்ளனர்.
    3. அனைத்து ஊடகங்களும் படைப்பாக்கரீதியான தொடர்பாடலை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை முன்வைப்பதோடு, வினைத்திறனான தொடர்பாடலுக்குப் படைப்பாக்கத் தன்மை அவசியமாகிப்போனமை காலத்தின் பேறாகும்.

### படைப்பாக்கரீதியான தொடர்பாடலின் இயல்பு

- உலகின் அடிப்படை இயல்பு படைப்பாக்கத்தன்மை ஆகும். அது ஏதேனுமோர் புறச் சக்தியொன்றின் விளைவாகக் கருதப்பட மாட்டாது. அத்தோடு தினந்தோறும் ஒவ்வொரு

நபரினாலும் பயன்படுத்தப்படும் படைப்பாக்கம்மிக்க தொடர்பாடல் தனிமையில் பயிற்சி செய்வதல்லாத சூழல் அல்லது தொடர்பாடல் சார்ந்த செயற்பாடாகும்.

- புத்தாக்கம் என்பது படைப்பாக்கரீதியான தொடர்பாடலின் அடிப்படை இயல்பாகும். தேர்ச்சியை நோக்கிச் செயற்படுதல், தீர்மானகரமான கற்பனையாற்றல் மற்றும் செயற்பாடுகளை விருத்தி செய்தல் போன்றன படைப்பாக்கரீதியான புத்தாக்கத் தொடர்பாடலின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.
- ஆதிகாலத்திலிருந்து மனிதன் புலன்களுடனும் சூழலுடனும் இணைந்த, பல்வேறு வகையான படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளான்.
- மனித நாகரீகத்தில் அப்படைப்பாக்கரீதியான தொடர்பாடல் முறைகளில் நடனம், சங்கீதம், இசை போன்றவை முதன்மையான கலையம்சங்களாக மாறின.
- 14ஆம் மற்றும் 15ஆம் நூற்றாண்டுகளில் (மத்திய காலம்) கலை எழுச்சியும் கல்வி மறுமலர்ச்சியும் இம் முதன்மைக் கலையம்சங்களை நவீனமயப்படுத்தின.
- மானுடப் பண்பாட்டு விருத்திக்கு இப் படைப்பாக்கரீதியான தொடர்பாடல் பெரும் பங்காற்றியுள்ளது. கைத்தொழில் புரட்சியின் பின்னரான தொழினுட்பவிருத்தியால் உருவான வெகுசன ஊடகத்துறை காரணமாக மனிதனின் நாளாந்த வாழ்க்கையில் படைப்பாக்கரீதியான தொடர்பாடல் மேலும் நெருக்கமானது.
- இவ்வாறாக வெகுசன ஊடக வளர்ச்சியோடு நடைமுறையிலிருந்த கலை ஊடகங்களுக்கு மேலதிகமாகப் படைப்பாக்கரீதியான செவிப்புல, கட்புல கலைத்துவ வடிவங்கள் பலவும் உருவாகின. அதன் விளைவாகப் பல்வேறு வகையான கலையம்சங்கள் விருத்தியடைந்ததோடு, ஒவ்வொரு ஊடகங்களுக்கும் ஏற்றவாறு தனித்துவப் பண்புகளும் வளர்ச்சியடைந்தன. இவ்வாறு எழுச்சிபெற்ற நவீன ஊடகக்கலை பல்வேறு கோணங்களில் வளர்ச்சியடையச் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமையைக் கற்றலின்வழி அறியமுடிகிறது.

**படைப்பாக்கரீதியான தொடர்பாடலின் அவசியமும் முக்கியத்துவமும்**

- நவீன மனிதனுக்குத் தனது நாளாந்த வாழ்க்கை மற்றும் தொழில்சார் வாழ்க்கை என்பவற்றை வலுப்படுத்தி, சுவாரஸ்யமிக்கதாக மாற்ற அவசியமான பண்பாக படைப்பாக்கரீதியான தொடர்பாடலைக் குறிப்பிடமுடியும்.
- செயற்றிறன் குறைந்த மனிதனை செயற்றிறன்மிக்க புதிய மனிதனாக மாற்றக்கூடிய சக்தி படைப்பாக்கரீதியான தொடர்பாடலில் காணப்படுகிறது.
- மகிழ்ச்சி, அமைதி, ஆன்மீகநெறி மற்றும் ஆரோக்கியம் போன்ற மனிதத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் அவற்றை வளப்படுத்தவும் படைப்பாக்கரீதியான தொடர்பாடல் அவசியமாகும்.
- படைப்பாக்கரீதியானதொடர்பாடலில் ஈடுபடுவதனூடாகச் சிக்கல் நிறைந்த மற்றும் ஓய்வற்ற தற்கால மானுட வாழ்க்கையை வெற்றிகொள்ள முடியும்.
- ஆழமான எண்ணக்கருக்கள் மற்றும் புலக்காட்சிகளை இலகுவாகப் புரிந்துகொள்ளவும், பல்வேறு மாற்று வழிகள் பற்றிய அறிவையும் வாழ்க்கையின் நடுநிலைத் தன்மையை இனங்காணவும் படைப்பாக்கரீதியான தொடர்பாடல் துணைபுரிகிறது.
- பாடத்துறையுடன் இணைந்த ஆளுள், ஆளிடை, கூட்டு, வெகுசன மற்றும் மெய்நிகர் தொடர்பாடல் களங்களில் சிறந்த தொடர்பியலாளராகப் படைப்பாக்கரீதியான தொடர்பாடல் திறன் அவசியமாகும்.
- கல்வி, மகிழ்வூட்டல், தகவல் வழங்கல் மற்றும் தூண்டல் போன்ற தொடர்பாடல் பணிகளை வினைத்திறனாக மேற்கொள்ளப் படைப்பாக்கரீதியான தொடர்பாடல் திறனை மேம்படுத்தல் அவசியமாகும்.

- பெறுநரைக் கவரும் வண்ணம் தகவல்களைப் பரிமாற்றப் படைப்பாக்கரீதியான தொடர்பாடல் மூலம் மட்டுமே முடியும்.
- ஜேம்ஸ் வாட்சன் (James Watson) என்ற தொடர்பாடல் விரிவுரையாளர்,**தொடர்பாடல் கற்கை என்பது யாது?** (What is Communication Studies?) என்ற தனது நூலில் “தொடர்பாடலும் படைப்பாக்கத் தன்மையும்” (Communication and Creativity) எனும் தலைப்பிலான பாட அலகை எழுதியுள்ளார். படைப்பாக்கரீதியான தொடர்பாடலினூடாகப் பத்துக் காரணிகளை மேற்கொள்ளமுடியும் என்பதே வாட்சனின் கருத்தாகும். அதற்காக அவர் சித்திர கலைஞர் ஒருவரின் உதவியுடன் இரண்டு பக்கங்களும் கையை நீட்டியவாறு இருக்கும் மனிதன் ஒருவனை வரைந்துள்ளார். கைவிரல்கள் பத்திற்கும் பத்துக் காரணிகளை முன்வைக்கிறார். அந்தப் பத்துக் காரணிகளையும் கற்பதனூடாகப் படைப்பாக்கரீதியான தொடர்பாடலின் பொருளை இலகுவாகப் புரிந்துகொள்ளலாம். அவையாவன:

01. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும்(Helps solvingproblem).
02. உந்துதலை மேம்படுத்தும் (Develops motivation).
03. ஊக்கத்துடனும் வினைத்திறனுடனும் செயற்படத் தூண்டும் (Helps motivation)
04. கருத்துக்களை உருவாக்க உதவும். (Helps generate ideas)
05. நடைமுறை அம்சமொன்றுக்குச் சவால் விடுக்கத் துணையாய் அமையும். (Helps challenge the obvious)

- இக்காரணிகள் ஐந்தும் ஒரு கை விரல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை கீழ்க்காணும் காரணிகள் ஐந்தும் மற்றைய கைவிரல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

01. படைப்பாக்கத் தன்மை என்பது வெளிப்படுத்தச் செய்தலாகும் (Creativity is exploration)
02. குழுச் செயற்பாடுகளுக்கு முக்கியமானது. (Vital in group work)
03. ஏனையோரின் படைப்பாக்கங்களைப் பாராட்டத் துணைபுரியும். (Helps us appreciate creativity in others)
04. படைப்பாக்கத்தன்மை வெளிப்படையானது மற்றும் பல்நோக்குகளின் பாற்பட்டது. (Opened and divergent)
05. பணித் திருப்தியைத் தரும். (Provides work satisfaction)

### மதிப்பீடு

1. படைப்பாக்கத் தொடர்பாடல் என்பதைத் தெளிவுபடுத்துக.
2. தொடர்பாடல் செயன்முறையில் படைப்பாக்கத் தொடர்பாடலின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் பற்றித் தெளிவுபடுத்துக.
3. படைப்பாக்கத் தன்மையைப் பயன்படுத்தித் தகலொன்றைத் திறம்பட முன்வைக்கக்கூடிய படைப்பாக்கங்கள் பத்தினைத் திரட்டுக.

தேர்ச்சி மட்டம் :7.2 படைப்பாக்கத்தின் அடிப்படைக் கூறுகளைக் கற்று அவற்றைச் சமயோசிதமாகப் பயன்படுத்துவார்.

பாடவேளைகள் : 24

கற்றற் பேறுகள்

- படைப்பாக்கத்தின் அடிப்படைக் கூறுகளை இனங்கண்டு புரிந்துணர்வுடன் விபரிப்பார்.
- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பல்வேறு ஊடகங்கள் மூலம் படைப்பாக்கரீதியான செய்திகளை முன்வைப்பார்.

**பாடத்தைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**
கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**படைப்பாக்கத்தன்மையின் அடிப்படைக் கூறுகள்**

- படைப்பாக்கத்தன்மையின் அடிப்படைக் கூறுகள் என்பது படைப்பாளி மற்றும் படைப்பாக்கச் செயற்பாட்டின் அவசியமான பண்புகளை இனங்காணலாகும். படைப்பாக்கத்தன்மையின் அடிப்படைக் கூறுகள்தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் காணப்படினும், அது தொடர்பான உறுதியான விடயங்களைக் குறிப்பிடல் கடினமாகவுள்ளது. படைப்பாக்கத்தன்மையின் அடிப்படைக் கூறுகளைப் புரிந்துகொள்வதற்காகப் படைப்பாக்கம் படைப்பாக்கத்திறன், படைப்பாக்கச் சிந்தனை, படைப்பாளி, படைப்பாக்கக் கட்டுரை போன்ற தலைப்புக்களின்கீழ் ஆராயவேண்டும்.

1. படைப்பாக்கம் (**Creation**)

- படைப்பாக்கம் என்பதில் குறிப்பிடப்படுவது‘முன்பு எப்போதும் நடைபெறாதது’என்பதாகும். அதனைப் புத்தாக்கம் எனவும் குறிப்பிடலாம். படைப்பாக்கம் என்பது நடைமுறையிலுள்ள அல்லது தற்போது காணப்படும் ஏதேனுமொன்றைவிடச் சற்று வேறுபட்ட வகையில் உருவாக்கப்படுவதாகும். அது சமீபத்திய ஒன்றாகும். படைப்பாக்கம் அல்லது ஆக்கம் என்பது அகராதியின்படி ‘புனைதல்’, ‘தயாரித்தல்’ எனக் குறிப்பிடப்படலாம் எனப் பேராசிரியர் சுனந்த மஹேந்திர கூறுகிறார்.
- படைப்பாக்கம் என்பதனை ஒக்ஸ்போர்ட் அகராதி (2015) பின்வருமாறு குறிப்பிடுகிறது. ‘படைப்பாக்கம்’ என்பது புதிதாக ஒன்றை உருவாக்கும் செயற்பாடு அல்லது செயற்பாட்டுத் தொகுதி’ என்பதாகும் (The act or process of making something that is new).
- முன்பு எப்போதும் நடைபெறாத புதிய ஒன்றை உருவாக்குவது யாரேனும் திறமையான நபரின் கலைத்துவம் சார்ந்த திறமையினாலாகும். எனவே - படைப்பாக்கம், படைப்பாளியின் திறமை, உள்ளுணர்வு, கற்பனைத்திறன், பரம்பரையியல்பு, பயிற்சி, ஆளுமை போன்று தத்துவார்த்த எண்ணக்கரு மற்றும் நோக்கம் போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் உருவானதாகும்.
- படைப்பாக்கம் என்பது பல்வேறு ஊடகங்களில் பல்வேறு விதமாகப் பயன்படுத்தப்படுகிறது. வெவ்வேறு ஊடகங்களுக்கேற்றவாறு படைப்பாக்கங்களை உருவாக்கும்போது படைப்பாளி ஊடகம் மற்றும் ஊடகத் தொழினுட்பம் பற்றிய அறிவினைப் பெற்றிருத்தல் வேண்டும்

**படைப்பாக்கத் திறன்**

- படைப்பாக்கமொன்றை ஆக்குவதற்கு படைப்பாளிக்கு உள்ள திறமை அல்லது சக்தி படைப்பாக்கத்திறன் ஆகும். அது உள்ளுணர்வு (Intuition) என மேலைத்தேய இரசனையுலகம் விபரிப்பதோடு, அது ஒருவருக்குப் பிறப்பினாலேயே கிடைக்கும் சக்தி மற்றும் அதிர்ஷ்டம் எனவும் குறிப்பிடப்படுகிறது. அது நபருக்குள் உள்ள ஆன்ம ஒளியைப் பலப்படுத்தும் சக்தி, கற்பனைத்திறன் மற்றும் ஆழமான முறையில் ஒன்றைக் காணும் திறன் (Insight) போன்ற காரணிகள் பலவற்றால் ஆனது.
- முன்பு எப்போதும் இடம்பெறாத விதத்தில் உலகைக் காணும் ஆற்றல், சூட்சுமமான விடயங்களைப் பார்த்தல், பொதுவாகப் பாரக்குமிடத்துத் தொடர்பற்ற உலக நிகழ்வுகள் இரண்டுக்கிடையில் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் தீர்வுகளை உருவாக்குதல் என்பன படைப்பாக்கத் திறனின் அடிப்படைப் பண்புகளாகக் கருதப்படுகின்றன.
- உலகப் புகழ்பெற்ற படைப்பாக்கக் கலைஞரான லியானாடோ டாவின்சி (Leonardo Da vinci 1452-1519) இது தொடர்பாக ஏழு பிரதான காரணிகளை முன்வைத்துள்ளார். அதனூடாகப் படைப்பாக்கத் திறனின் அடிப்படைகள் பற்றி நாம் விளங்கிக்கொள்ளலாம்.
- லியானாடோ டாவின்சி இத்தாலி நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற ஓவியராவதோடு அவர் சங்கீதம், சிற்பம், கணிதம், பொறியியல் விஞ்ஞானம், வானியல் விஞ்ஞானம், புவியியல் மற்றும் தாவரவியல் விஞ்ஞானம் போன்ற துறைகளிலும் தேர்ச்சி பெற்றவராவார்.

  1. ஆர்வம் (Curiosity)
  2. நிரூபணம் (Demonstration)
  3. பரபரப்பானது (Sensation)
  4. மென்மை (Soft)
  5. கலை மற்றும் விஞ்ஞானத்தின் சமநிலை (Balance of Art and Science)
  6. உடல் - உளச் சமநிலை (Balance of Body and Mind)
  7. தொடர்பு (Connection)

- ஓவியக்கலையை அடிப்படையாகக் கொண்டு அவர் குறிப்பிடும் கருத்துக்கள் நவீன ஊடகக் கலையிலும் பயன்படுத்தப்பட முடியும். அதற்கு மேலதிகமாகப் படைப்பாக்கரீதியான செயற்பாடொன்றை மேற்கொள்வதற்கான அடிப்படைக் கூறுகளை பல்வேறு கற்கைகளுக்கூடாக இனங்காணமுடியும். அவற்றுள் சில வருமாறு,

  1. ஆழ்பரிவு
  2. கற்பனை
  3. புலனுணர்வு
  4. புலக்காட்சி
  5. அனுபவம்
  6. கருத்துக்களை ஆய்வு செய்தல்
  7. பயிற்சி
  8. நுட்ப ஆற்றல் மற்றும் பாவனை

- தொடர்பாடுநர் ஒருவர் இவ்வாறான அடிப்படை அம்சங்களை இனங்கண்டு தெளிவு பெற்றிருத்தல், மொழிப் பாவனை, எழுத்தாக்கம், பேச்சாற்றல் மற்றும் ஆற்றுகை போன்றவற்றுக்கு மிகவும் முக்கியமானது.

2. படைப்பாக்கரீதியான சிந்தனை

- படைப்பாக்கமொன்று படைப்பாளி ஒருவரின் சுய வெளிப்பாடாகவே உருவாகிறது. படைப்பாளி தனது வாழ்வில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மற்றும் அவற்றின் மூலம் கற்றுக்கொண்ட பாடங்கள் என்பவற்றை இதற்காகப் பயன்படுத்துவார். படைப்பாளி ஒருவருக்கு அனுபவம் கிடைக்கக்கூடிய முதன்மையான வழிமுறைகள் மூன்றினைக் குறிப்பிடலாம்.
    1) சுய அனுபவம்
    2) மற்றவர்களால் கிடைக்கும் அனுபவம்
    3) ஊடகம் அல்லது வேறு அனுபவங்கள்
- இவ்வாறு ஏதேனுமோர் வழியில் கிடைக்கப்பெறும் அனுபவங்களைப் படைப்பாளி அவரின் சுய படைப்பாக்கச் சிந்தனை மற்றும் கற்பனை என்பவற்றின் துணையுடன் படைப்பாக்கமாக உருவாக்குகிறார். கற்பனை (Imagination) என்பது படைப்பாக்கச் செயற்பாட்டிற்கு அவசியமான எண்ணக்கரு மற்றும் புலக்காட்சிகளைக் கட்டியெழுப்புவதற்குப் படைப்பாளி ஒருவருக்கு இருக்கும் சக்தியாகும்.
- படைப்பாக்கத்தின்போது உள்ளுணர்வு, தொடர்பயிற்சி மற்றும் பிறப்பு ஞானம் என்பன அவசியப்படுவது அவற்றினூடாகக் கற்பனையானது மென்மேலும் நுணுக்கமாகவும் கூர்மையாகவும் மாற்றமுறுவதால் ஆகும்.
- நடைமுறையிலுள்ள கருத்துக்களை ஒன்றிணைத்தல் அல்லது மீண்டும் தயாரித்தல் மூலமாகப் புதிய கருத்துக்களை உருவாக்கும் சிந்தனைத்திறன், மாற்றங்கள் மற்றும் புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு மற்றும் பார்வைநோக்கின் நெகிழ்வுத் தன்மை என்பன படைப்பாக்கச் சிந்தனைக்குரியவை ஆகும்.
- புதிய பொருட்கோடல்களுக்கேற்ப, பிரதிபலிக்கும் தன்மை (Reflectivity), விமர்சனரீதியான (Critical), மற்றும் பகுப்பாய்வுரீதியான (Analytical), சிந்திக்கும் விதம் என்பவற்றினூடாகப் படைப்பாக்கத்திறன் விருத்தியடைவதாகக் கூறப்படுகிறது. பிரித்தானிய சமூக விஞ்ஞானியான கிரஹம் வோல்ஸ் (Graham Walls) 1926ஆம் ஆண்டு தனது "The Art of Thought" எனும் நூலில் படைப்பாக்கச் சிந்தனையில் நான்கு படிமுறைகளைச் சேர்த்துள்ளார்.
    1. தயாரித்தல் (Preparation): கருத்துக்கள் உணர்வுடன் மற்றும் முறையான விதத்தில் விமர்சனத்திற்குட்படும்.
    2. அரும்பல் (Incubation): கருத்துக்கள் பற்றி உணர்வு ரீதியாகச் சிந்திப்பதிலிருந்து விலகியிருப்பதன் மூலமாக அவை போஷணைக்குட்படும்.
    3. **ஒளியூட்டம்** (Illumination): படைப்பாக்க ரீதியான கருத்துக்கள் மூலமாகப் படைப்பாக்கத்திற்குத் தேவையான **ஒளியூட்டம்** தோற்றம் பெறும்.
    4. சரிபார்த்தல் (Verification): புதிய கருத்தின் செல்லுபடித் தன்மையைப் பரீட்ச்சித்துக் கருத்தை நிலையான படைப்பாக்கமாக மாற்றுதல்.

3. படைப்பாளி

- படைப்பாக்கமொன்றை உருவாக்குபவர், படைப்பாளி எனப்படுகிறார். ஏதேனுமொன்றை உருவாக்கிய அல்லது கண்டுபிடித்த நபர் படைப்பாளி என ஒக்ஸ்போர்ட் அகராதி (2006) வரைவிலக்கணப்படுத்துகிறது (Person who has made or invented a particular thing).

- படைப்பாளி அல்லது படைப்பாக்கக் கலைஞராதல் குறுங்காலப் பயிற்சியின் விளைவன்று. படைப்பாக்க நிபுணத்துவம் திடீரெனத் தானாகத் தோன்றுவதன்று. அது கலை, சமூகம், பண்பாடு, அரசியல் போன்றவை தொடர்பிலான புரிந்துணர்வுடன்கூடிய அனுபவத்துடனும் சமூக,உளம் மற்றும் மானுட விஞ்ஞானங்களை நீண்டகாலம் கற்பதன் மூலம் விருத்தி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். அதேபோன்று அறிவு, கற்பனை, உள்ளுணர்வு மற்றும் கலைத்துவப் பரீட்சயம் என்பவற்றின் ஊடாகச் செயற்படக்கூடிய திறமை படைப்பாளிக்கு கைவரப்பெறுவது நீண்டகாலப் பிரயத்தனத்தின் பின்பே ஆகும்.
- இவ் உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் ஏதேனுமோர் படைப்பாக்கச் சக்தியுடனேயே பிறக்கின்றான். அப்படைப்பாக்கச் சக்தியை இனங்கண்டு விருத்தி செய்யாதுவிடின் அது மறைந்து போகலாம்.

4. படைப்பாக்கக் கட்டுரை

- படைப்பாக்கக் கட்டுரை என்பது, ஏதேனுமோர் பாணியில் எழுத்தாளர் ஒருவரால் படைப்பாக்கச் சிந்தனையுடன் எழுதப்பட்ட ஒரு எழுத்தாவணம் ஆகும். அது கதை, நாவல், சிறுகதை, கவிதை அல்லது படைப்பாக்கத் தன்மையுடனான ஏதேனும் எழுத்தாவணமாக அமையலாம்.
- புதிய மொழிப்பாணியுடன் இரசிகர் மனதைக் கவரக்கூடிய ஓர் எழுத்தாவணமாகவும் படைப்பாக்கக் கட்டுரையைக்குறிப்பிடலாம்.
- இரசிகர்களின் உணர்வுகள், நினைவுகள் மற்றும் இரசனையுணர்வு போன்றவற்றில் கவர்ச்சியை ஏற்படுத்தல் படைப்பாக்கக் கட்டுரையின் நோக்கமாகும்.
- படைப்பாக்கக் கட்டுரை என்பதில் கவிதை, பாடல், நாவல், சிறுகதை, சுயசரிதை, இலக்கியத் திறனாய்வு போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதேபோல் திரைக்கதை வசனம், வானொலிப் பிரதியாக்கம், பத்தி எழுத்து (column), சிறப்புக் கட்டுரைகள் மற்றும் வர்த்தக விளம்பரப் பிரதிகள் என்பவையும் இதில் அடங்கும்.
- படைப்பாக்கரீதியான தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படும் மொழியானது இனிமையானது. கற்பனையைப் பொங்கியெழச் செய்வது. வாசகர், இரசிகர்களின் உள்ளக்கிளர்ச்சியைத் தூண்டக்கூடியது. மகிழ்ச்சி, சோகம் போன்ற உணர்வுகளை ஏற்படுத்தக்கூடியது.
- சிறந்த படைப்பாக்கக் கட்டுரையொன்றில் வெளித்தெரியும் கருத்துக்களைவிட உள்ளார்ந்த கருத்துக்கள் அதிகம் காணப்படும். அவ் ஆழமான அல்லது உட்கருத்துக்கள் இரசிகர்களின் உணர்வுகளைச் செழிப்பானதாக்கவும் மற்றும் உயிரியல் நுண்ணறிவிற்கும் காரணமாகும், சிறந்த படைப்பாக்கக் கட்டுரைகள் எப்போதும் அறிவுப் பிரவாகத்தை உருவாக்குவதாக அமையும்.

மதிப்பீடு

1. படைப்பாக்கம் மற்றும் படைப்பாக்கச் சிந்தனை என்பவற்றை விளக்குக.
2. 'படைப்பாக்கமொன்றின் அடிப்படைக் கூறுகள் படைப்பாக்கரீதியான தொடர்பாடலை வினைத்திறனானதாக்க உதவுகின்றன' எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

தேர்ச்சி மட்டம் :7.3 படைப்பாக்கரீதியான மொழிப் பாவனை மற்றும் பல்வேறு ஊடகங்களின் படைப்பாக்கத் திறனை இனங்கண்டு கருத்துத் தெரிவிப்பார்.

பாடவேளைகள் : 15

கற்றற் பேறுகள்

- தொடர்பாடலில் படைப்பாக்கரீதியான மொழியைப் பயன்படுத்த முடியும் என்பதைத் தெளிவுறுத்துவார்.
- படைப்பாக்கரீதியான மொழியைப் பயன்படுத்திப் பல்வேறு ஊடகங்களுக்கும் செய்தியைத் தயாரிப்பார்.

**பாடத்தைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**அறிமுகம்**

- மானிட நாகரீகத்தில் மனிதன் அடைந்த மிகப்பெரிய வெற்றி மனித மொழி உருவாக்கப்பட்டமையாகும். மொழி உருவாக்கப்பட்டதோடு மனிதத் தொடர்பாடலும் துரித வளர்ச்சியடைந்தது.
- இம் மானிடத் தொடர்பாடலின் முறையான பரிணாமத்தின் விளைவு மொழியை அடிப்படையாகக் கொண்ட சிறந்த தொடர்பாடல் திறனொன்று மனிதனுக்கு கிடைத்தமையாகும்.
- மொழியானது வாய்மொழியல்லாத ஓசைகளாலும் உருவாகிறது. குழந்தையொன்றை நித்திரை கொள்ளச் செய்யத் தாயானவள் எழுப்பும் ஓசைகளைக் கேட்டுக் குழந்தை நித்திரை கொள்வது அதன் அர்த்தங்களைப் புரிந்துகொண்டு அல்ல. அவற்றுள் இருப்பது வெறும் ஓசைகள் மட்டுமே. எனினும் இவ் ஓசைகளை செவிமடுக்கும் குழந்தை சுருதியுடனான அவ் ஓசையைப் பாடலாக இரசித்து உணர்கிறது.
- மனிதனிடம் கூட்டாக இணைந்து செயற்படும் திறமை, தர்க்கரீதியில் ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றல், மொழியூடாக ஏதேனும் விடயமொன்றை ஞாபகத்தில் நிலைநிறுத்தும் மற்றும் தேவையானபோது அவற்றை மீண்டும் நினைவுபடுத்தித் தீர்மானம் எடுக்கும் திறன், எழுத்துமொழி ஊடாகத் தகவல்களைக் களஞ்சியப்படுத்தும், முன்னர் உருவான அறிவியல் எண்ணக்கருக்களை வாசித்துப் புரிந்து கொள்ளும் திறன் போன்ற பல்வேறு ஆற்றல்கள் மொழியின் வருகையால் மனிதன் வசமானது.
- மொழியினால் மக்கள் குழுக்கள் உருவாகின. அம் மக்கள் குழுக்கள் சமூகமாக வாழும்போது சட்டங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், நீதிக்கட்டமைப்புக்கள் என்பன விருத்தியடைந்ததோடு இவை பேச்சு மற்றும் எழுத்துமொழி மூலம் அடுத்த தலைமுறைக்கும் கையளிக்கப்பட்டது.
- மொழியை அடிப்படையாகக் கொண்டு மக்கள் குழுக்கள், பிரஜைகள் மத்தியில் அவர்களுக்கு ஏற்றாற்போலப் பண்பாடு உருவாக்கப்பட்டது. ஒரு பண்பாட்டினூடாக இனம் உருவானது. அவ் இனங்கள் தமக்கான தேச எல்லைகளை வகுத்துவாழ ஆரம்பித்ததோடு நாடுகள் உருவாகின.

- நாடொன்றில் உருவான அறிவினை அடிப்படையாகக் கொண்டெழுந்த தொழினுட்பம் மற்றும் அபிவிருத்திக்கு ஏற்பவே ஒரு நாடு இன்னுமோர் நாட்டைவிட எந்தளவு சக்திவாய்ந்தது என்பது தீர்மானிக்கப்பட்டது. இவை எல்லாவற்றுக்கும் மிக அடிப்படையாக அமைவது படைப்பாக்கரீதியான சிந்தனையாகும். படைப்பாக்கச் சிந்தனையானது படைப்பாக்க மொழிப்பாவனையின் விளைவாகும்.
- மொழிக்கேயுரித்தான படைப்பாக்கமிக்க தன்மையினூடாக ஒவ்வோர் எழுத்தூடகங்களுக்கும் பொருத்தமான மொழிசார் விதிகள் உருவாகின. அவ் எழுத்தாளர்களுக்குரிய மொழிப்பயன்பாடும் உருவானது. அத்தோடு, அவ்வவ் ஊடகங்களுக்கெனத் தனித்துவமான மொழிப்பயன்பாடும் விருத்தியடைந்தது. இவ்வாறு மொழி கட்டியெழுப்பப்பட அடிப்படையானது மொழியைக் கற்பனைநயத்துடனும் படைப்பாக்கரீதியாகவும் பயன்படுத்தக்கூடியதாய் இருப்பதாகும்.
- படைப்பாக்கமிக்க எழுத்தாவணங்களுக்கூடாக வாசகர் சமூகமொன்று உருவானது. எழுத்தாளர் பரம்பரையொன்று உருவானது. மொழியை ஒரு ஊடகமாகக் கொண்டு மானுடச் சிந்தனைகளைப் பரப்புதல் எனும் வரலாற்றுப்பணி ஆற்றப்பட்டு வருகிறது.
- மொழியின் தனித்துவமான பண்பான படைப்பாக்கத் தன்மையினால் எழுத்தாளர் மற்றும் வாசகரிடையே செயற்றிறன்மிக்கத் துறைசார் பணியொன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாவல், சிறுகதை, கவிதை போன்ற படைப்பாக்க இலக்கியங்கள் உருவாவதும் சமயம், தத்துவம், அரசியல் போன்ற துறைகள் துரிதமாக வளர்ச்சி பெறவும், புகழ்பெறவும் காரணம் முற்கால சமூகத்தில் படைப்பாக்கமிக்க தொடர்பாடல் எழுத்து வடிவம் மக்கள் சமூகத்தின் ஒரு ஊடகமாக மாறியமையே ஆகும்.

**படைப்பாக்கமிக்க மொழிப்பாவனை**

- மொழிஎன்பது மனிதனின் பிரபல்யமான படைப்பாக்க வெளியீட்டு முறையாகும். மனிதனின் படைப்பாக்கத் திறன் காரணமாகவே மொழி உருவாக்கப்பட்டது. உலகில் பல்வேறு பண்பாடுகளில் பல்வேறு மொழிகள் தோற்றம் பெற்றன. ஒவ்வொரு மொழியும் அச் சமூகத்தின் பண்பாட்டு மற்றும் படைப்பாக்க வடிவங்களுக்கேற்பவே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. விசேடமாகக் கலை ஊடகங்களில் மொழி பலவாறாகப் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.
- மொழிப்பயன்பாட்டில் படைப்பாக்கத் தன்மையானது பேசுதல் (பேச்சு), கேட்டல் (செவிமடுத்தல்), எழுதுதல் (எழுத்து) மற்றும் வாசித்தல் போன்றவற்றின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. படைப்பாக்க மொழி பற்றிய வரைவிலக்கணங்களை நோக்குமிடத்து மொழியில் காணப்படும் அனைத்து அம்சங்களும் படைப்பாக்க மொழியாகக் கருதப்படுகிறது.
- ஓவ்வொரு ஊடகத்திற்கும் ஏற்றவாறு மொழி பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளமையானது மிகவும் சிக்கலான ஒன்றாகும். வானொலி மொழியானது ஒலி மற்றும் கேட்டலை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு, அதற்குச் செவி மற்றும் மனம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு முக்கியமானதாகும். அது சிக்கலான ஒரு செயன்முறையாகும். கேட்டல் மூலம் மொழியின் ஊடாக எண்ணக்கரு, சந்தர்ப்பம் மற்றும் காட்சியுருவாக்கம் என்பன நடைபெறுகின்றது.
- அச்சு ஊடகங்களில் எழுத்துமூல மொழி முதன்மை பெறுவதோடு, காட்சிவழி உருக்களும் பயன்படுத்தப்படும். வெவ்வேறு அச்சு ஊடகங்களில் படைப்பாக்கமொழி வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுதல் பற்றிக் கற்றல் அவசியம்.
- தொலைக்காட்சி ஊடகத்தில் மொழி, ஒலி மற்றும் காட்சி மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. காரணம், தொலைகாட்சி ஊடகமானது சினிமாவின் தொடர்ச்சியாக இன்றி வானொலியின் தொடர்ச்சியாகத் தோற்றம் பெற்றமையாகும். தொலைக்காட்சியின்

பல்வேறு நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்க மொழி பயன்படுத்தப்படுகிறது.

- நாடகக் கலையில் யதார்த்தவாத பிரவேசம் விளம்பரக் கலையில் உளவியல் பிரவேசம் என தொலைக்காட்சி மொழியின் படைப்பாக்க வடிவங்களை எம்மால் கற்க முடியும்.
- சினிமாவின் மொழி காட்சிகளாவதோடு அதன் இலக்கணமாகக் கருதப்படுவது செம்மையாக்கம் அல்லது படத்தொகுப்பாகும் (Editing). சினிமா மொழியானது மிகவும் பிரபல்யமான படைப்பாக்க மொழியாகும்.
- புதிய ஊடகங்களில் முன்னரைவிட மிக நுட்பமான முறையில் மொழி பயன்படுத்தப்படுகிறது. புதிய ஊடக மொழிப்பாவனைக்குத் தொழிநுட்ப அறிவு அவசியமாவது விசேட அம்சமாகும்.
- படைப்பாக்க மொழியின் அடிப்படைப் பணியாவது, மொழியை அடிப்படையாகக் கொண்டு பெறுநருக்குத் தகவல்களைப் படைப்பாக்கமிக்க வகையில் வழங்குவதாகும். அதன்போது எழுத்துமூல, வாய்மொழி, வாய்மொழியல்லாத, கட்புல மற்றும் செவிப்புலத் தொடர்பாடல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**பத்திரிகையும் படைப்பாக்க மொழிப் பயன்பாடும்**

- அச்சு ஊடகம் பற்றித் தேர்ச்சி மட்டம் 4.2 இல் கவனம் செலுத்தினோம். அச்சு ஊடகங்களில் பிரதானமாகப் பத்திரிகை, வெகுசன ஊடகப்பணி செய்து வருவதால், பத்திரிகையில் படைப்பாக்கமிக்க மொழிப்பாவனைப் பற்றி ஆராய்தல் முக்கியமாகும்.
- பத்திரிகை மொழி, வாக்கியங்கள் மற்றும் காட்சிகள் என்பவற்றால் ஆனது. இங்கு வாக்கியங்கள் என்பது எழுத்துமூலமான அம்சமாகும். செய்தி, சிறப்புக் கட்டுரைகள், விளம்பரங்கள் என்பவற்றில் வாக்கியங்கள் பயன்படுத்தப்படும். இவ் ஒவ்வொரு அம்சங்களுக்கேற்பவும் படைப்பாக்க மொழிப் பாவனை வேறுபடும். பத்திரிகையில் காட்சிகள் என்பதால் கருதப்படுவது புகைப்படங்கள், சித்திரங்கள், வரைபுகள் போன்றவற்றை கவர்ச்சிகரமான வர்ணப்பயன்பாடு, பக்கவடிவமைப்புடன் முன்வைத்தலாகும்.

1. **செய்தி**

- செய்தியில் பொதுவாக எளிமையான மொழிநடை மற்றும் நேரடி வசனங்கள் பயன்படுத்தப்படுகிறது. எனினும் சில விசேட சந்தர்ப்பங்களில் இலக்கிய இரசனையுடனான மொழிப்பயன்பாட்டுடன் செய்தி காணப்படலாம்.

    உதாரணம்: பிரபலமான நபரொருவரின் இறுதிக்கிரியைச் சந்தரப்பமொன்றை நேரடியாகக் குறிப்பிடுவதுபோல 'பல தசாப்த காலமாக நடிப்புத் துறையில் கொடிகட்டிப் பறந்து இரசிகர் மனங்கவர்ந்த நடிப்புச் செம்மல் இப்பூவுலகினின்று விடைபெற்றுச் செல்லும் துயரமான நாள் இது' என வர்ணித்துக்கூற முடியும்.

- பத்திரிகைச் செய்தியொன்றில் படைப்பாக்கமிக்க மொழிப்பாவனை அதிகம் இடம்பெறுவது தலைப்புச் செய்திகளிலாகும். அவ்வாறான தலைப்புச் செய்திகளைத் தேடியறிக.

    உதாரணமாக:

    "புன்னகையில் தொடங்குகிறது அமைதி" - இன்று உலக அமைதி தினம்

2. சிறப்புக் கட்டுரைகள்

- பத்திரிகையின் சிறப்பு அம்சங்களாகக் கடிதங்கள், பத்திகள், ஆசிரியர் தலையங்கம், சித்திரக்கதைகள், விமர்சனங்கள், விவாதங்கள், வாசகர் கருத்துக்கள், புகைப்படங்கள், திரைவிமர்சனங்கள் போன்ற செய்தி, விளம்பரங்களுள் அடங்காத அனைத்தும் அடங்கும்.
- பத்திரிகையின் கருத்தியல் வெளியிடப்படுவது ஆசிரியர் தலையங்கத்திலாகும். ஆசிரியர் தலையங்கம் (Editorial) பத்திரிகை ஆசிரியரால் எழுதப்படுவதாகும். செய்திப்பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் தலையங்கத்தில் பத்திரிகை ஆசிரியரின் தனித்துவம் வெளிப்படும். பத்திரிகையில் படைப்பாக்க மொழிப்பாவனை பற்றி ஆராயும்போது, ஒவ்வொரு செய்திப்பத்திரிகையினதும் ஆசிரியர் தலையங்கத்தை உதாரணமாகக் குறிப்பிடலாம். பல்வேறு செய்திப் பத்திரிகைகளினதும் ஆசிரியர் தலையங்கங்களை ஆராய்வதனூடாக இதனைச் சிறப்பாக விளங்கிக்கொள்ள முடியும்.
- சிறப்புக் கட்டுரைகள் எழுதும்போது வாசகரின் அவதானத்தைப் பெறும் வண்ணம் தலைப்புக்கள் இட வேண்டும்.
- பத்தி எழுத்தாளரின் மொழித் தனித்துவம் போன்று படைப்புக்கும் அதிக இடம் கிடைக்கிறது. உதாரணமாக பத்தியைக் கடிதமாக, அறிக்கையாக அல்லது கவிதையாகயும் ஆக்கமுடியும்.

3. விளம்பரம்

- வர்த்தக விளம்பரங்களைப் பிரதான விளம்பரங்கள், வகைப்படுத்தப்பட்ட விளம்பரங்கள் (Classified Ads), அறிவுரைப்பு விளம்பரங்கள் என வகைப்படுத்தலாம். பிரதான விளம்பரம் என்பது பத்திரிகையில் பரந்த இடப்பரப்பினைப் பெறுவதோடு வகைப்படுத்தப்பட்ட விளம்பரங்கள் சிறிய இடங்களை உள்வாங்கி வெளியிடப்படுகின்றன.
- அச்சு ஊடக விளம்பரங்களில், மொழியானது படைப்பாக்கமிக்கதாகப் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் இவ் விளம்பரங்கள், விளம்பர நிறுவனங்களால் தயாரிக்கப்படுகிறது.

புத்தகம் / நூல்

- புத்தகம் ஒரு படைப்பாக்கமிக்க அச்சு ஊடக வெளியீடாகும்.
- மொழியின் படைப்பாக்கத்தன்மையைச் சிறந்த முறையில் அவதானிக்க முடிவது அச்சிடப்பட்ட நூல்களிலாகும். படைப்பாக்க இலக்கியம் இங்கு முக்கியம் பெறுவதோடு நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், சுயசரிதைகள், நாடுகாண் பயணக்குறிப்புகள், மொழிபெயர்ப்புக்கள் ஆகிய இலக்கிய நூல்களில் படைப்பாக்கத்தன்மை அதிகம் காணப்படுகிறது.
- செய்திப்பத்திரிகையைவிட இலக்கிய நூல்களைப் படைக்கும்போது மொழியின் படைப்பாக்கத்தன்மை மற்றும் அதனால் ஏற்படுகின்ற இரசனையுணர்வு மற்றும் கற்பனா சக்தி என்பன விசேடமானதாகும். நூலொன்றின் படைப்பாக்க மொழிப்பாவனை படைப்பாளிக்கு படைப்பாளி வேறுபடும்.
- தமிழ் இலக்கியங்களில் மரபு இலக்கியம் மற்றும் நவீன இலக்கியங்களில் மொழி பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தை ஆராய்வதன் மூலமாகப் படைப்பாக்க மொழிப் பாவனை பற்றிக் கற்கலாம்.

**சஞ்சிகை**

- அச்சு ஊடகம் என்ற வகையில் சஞ்சிகைகளிலும் படைப்பாக்க மொழிப்பாவனையைக் காணலாம். சஞ்சிகை காலத்துக்கேற்ற தலைப்புடன் இலகுவாக அச்சிடக்கூடிய மற்றும் குறுகிய காலப்பகுதியில் அச்சிட்டு வெளியிடக்கூடிய ஓர் அச்சு ஊடகமாகும். இவைபெரும்பாலும் வாராந்த வெளியீடுகளாகக்காணப்படுகின்றன.
- பல்வேறு துறைகள் மற்றும் வாசகர் குழுக்களை இலக்காகக் கொண்டு சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. படைப்பாக்க மொழிப்பாவனையைக் கையாளல் சஞ்சிகைகளில் பெரும்பாலும் காணக்கிடைக்கிறது.
- சஞ்சிகை ஒன்றின் படைப்பாக்கத்தன்மையில் அதன் மொழியின் முன்வைப்பில் ரிதம், எழுத்து, வடிவம், உரு, புகைப்படம், குறிப்புகள், நிறம் மற்றும் பக்க வடிவமைப்பு போன்ற சகல விடயங்களும் பெரும் பணியாற்றுகின்றன.

**இலத்திரனியல் ஊடகப் படைப்பாக்கத்தன்மை மற்றும் படைப்பாக்க மொழிப்பாவனை**

**வானொலி ஊடகம்**

- வானொலி என்பது ஒலியை உயிர்நாடியாகக் கொண்ட ஒரு பிரபல ஊடகமாகும். வானொலி மொழியானது மனிதக் குரல், இசை, இயற்கை ஒலிகள், ஒலிப்பிரயோகங்கள் மற்றும் அமைதி என்பவற்றினாலான ஓர் கலவையாகும். வானொலியில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. செய்திகள், பாடல்கள், விளம்பரங்கள், வானொலி நாடகங்கள், அறிக்கைகள், சஞ்சிகை நிகழ்ச்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பன அவற்றுள் முக்கியமானவையாகும்.
- வானொலி ஊடகத்தில் முக்கிய நபராகத் திகழ்பவர், நேயர் வகிபாகத்தில் இருப்பவராவார். குரலை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதும், நிகழ்ச்சியைச் சுவாரஷ்யமாகவும் புதிய முறைகளிலும் உருவாக்குவது நேயரை இலக்குவைத்தே ஆகும்.
- பல்வேறு துறைகளுக்கேற்ப வானொலி நிகழ்ச்சிகளை வகைப்படுத்த முடியும். சமயம், கல்வி, அபிவிருத்தி, மருத்துவம், விவசாயம், விளையாட்டு எனவும் சிறுவர் மற்றும் பெண்கள் நிகழ்ச்சிகள் எனவும் வானொலி நிகழ்ச்சிகளை வகைப்படுத்த முடியும்.
- வானொலி ஊடகத்தின் அனைத்து நிகழ்ச்சிகளினதும் படைப்பாக்கத்தன்மையை நோக்கும்போது சில பொதுப்பண்புகளை இனங்காணலாம். எளிமைத் தன்மை, ஒரே தடவையில் புரிதலை ஏற்படுத்தக்கூடிய தன்மை, செவிமடுத்தலை அடிப்படையாகக் கொண்ட தூண்டல், நீண்ட மற்றும் சிக்கலான சொற்பிரயோகங்களைத் தவிர்த்தல், ஆளுள் தொடர்பாடலுக்குச் சந்தர்ப்பமளித்தல், மற்றும் இலக்குப் பெறுநர் குழுவின் அனுபவப் பின்புலத்திற்கு ஏற்றவாறான விடயங்கள் என்பன அப்பண்புகளாகும்.
- வானொலி பெறுநரின் மனதில் புலக்காட்சியை ஏற்படுத்துகிறது. புலக்காட்சியைத் தூண்டும் வண்ணம் வானொலியில் படைப்பாக்க மொழியைப் பயன்படுத்தல் அதன் முதல் சவாலாகும்.
- வானொலி அறிவிப்பாளர்கள், வானொலி நாடகக் கலைஞர்கள்,பேச்சாளர்கள் போன்றோர் நேயர்களைக் கவர்வது தமது குரலைப் பயன்படுத்துவதனூடாகவே ஆகும். நிகழ்ச்சியின் தேவைக்கேற்றவாறு பொருத்தமான முறையில் படைப்பாக்கரீதியாகக் குரல் பயன்படுத்தப்பட வேண்டும். அதன்போது குரலின் இனிமை, துல்லியம், தெளிவான மற்றும் சரியான உச்சரிப்பு மற்றும் பொருத்தமான வசனநடை என்பன தொடர்பில் பயிற்சி செய்தல் வேண்டும்.

- புகழ்பெற்ற நாடக ஆசிரியரான சுகதபால டீ சில்வா என்பவரினால் ஆக்கப்பட்ட ‘ஹன்ட நலுவா’ (Voice Actor) எனும் வானொலி நாடக நூலில் வானொலி மொழியின் செயலாக்கம் மற்றும் கற்பனைத்திறன் என்பன தொடர்பான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.
- வானொலி நாடகம் கற்பனையை முதன்மைப்படுத்திய ஓர் கலையாகும். வானொலி நாடகமானது நேயர்களின் கற்பனையைத் தூண்டும் விதமாகவே தயாரிக்கப்படுகிறது. நேயர்கள் வானொலி நாடகத்தைத் தமக்குள் உருவான புலக்காட்சியுடனேயே நுகர்கின்றனர். எனவே, பெறுநர்மைய புலக்காட்சி உருவாக்கப்படுகிறது. பெறுநர் மனதில் புலக்காட்சியை உருவாக்கும் வண்ணம் வானொலி நாடகப் பிரதி எழுதுதல் அல்லது தயாரிப்பில் படைப்பாக்கத்தன்மையைப் பாதுகாத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் விசேட பண்பாகும்.
- ஓசையைப் பயன்படுத்தும்போது உச்சரிப்பு, உணர்வு மற்றும் உணர்ச்சி வெளிப்பாடு, அதனுடன் இரண்டறக் கலத்தல் மற்றும் வளமான பண்பு என்பவை பெறுநர்களின் இரசனையுணர்வைத் தூண்டக்கூடியவையாகும்.
- சுகதபால டீ சில்வா அவர்களின் கருத்துக்களை ஆராயும்போது வானொலி ஊடகத்தில் கற்பனைத்திறன் பற்றிய தெளிவினைப்பெற இயலுமாயுள்ளது.

> “வானொலி எழுத்தாளர் தூண்டப்படுவது பெறுநரின் புலக்காட்சியின் பரந்துபட்ட தன்மையிலேயே ஆகும். இது பற்றிய விரிவான விளக்கம்‘கற்பனையை விஸ்தரித்தல்’ எனும் தலைப்பிலான அபூர்வமான சிறிய பிரதியொன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பிரதியை தயாரித்த ஸ்டான் ஃப்ரிபர்க் இற்கு விருதொன்றும் வழங்கப்பட்டது”.

மனிதன் : ரேடியோ? எதற்காக நான் வானொலியில் விளம்பரப்படுத்தல் செய்ய வேண்டும்? அதில் பார்ப்பதற்கு எதுவும் இல்லை, ஒரு படம்கூட இல்லையே.

பையன் : கொஞ்சம் சொல்வதைக் கேளுங்கள்….. டி.வி.யில் நினைக்கக்கூட முடியாததை ரேடியோவில் செய்ய முடியும்.

மனிதன் : செய்யும்வரைதான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

பையன் : சரி, அப்படியானால் இதைப் பார்த்துக்கொண்டு இருங்களேன். (தொண்டையைச் சரிசெய்து) நான் சைகை காட்டும்போது தயாராகுங்கள். இதோ, சுடச்சுடக் குமிழிகளை வெளியேற்றிக் கொதித்து ஓடிவரும் சொக்லட் நீரினால் நிரம்பிவழியும் நிலையில் உள்ள சொக்லட் குளக்கரையில், 700 அடி உயரமான பாரிய கிரீம் மலையொன்று காணப்படுகிறது. கிரீம் மலையின் உச்சியில் குமிழிகள் வெளிப்பாய்கின்றன. நீங்கள் குமிழிகளை வெளியாக்கும் அந்த கிரீம் மலையிலிருந்து புரண்டு புரண்டு வந்து செக்லட் குளத்தில் ‘தொப்’ என்று விழுகிறீர்கள். அந்த நேரத்தில் விமானப்படை குளத்துக்கு மேலாக பறந்துகொண்டு விமானங்களிலிருந்து உலர்ந்த முந்திரிகை 10 தொன்களை கிரீம் மலைமீது தூவுகின்றது. அதனைப் பார்த்துக்கொண்டிருந்த 25,000 மக்கள்கூட்டம் கரகோஷம் எழுப்ப, மலை சரிகிறது. (சைகை காட்டுங்கள்)

குரல் : கிரீம் மலை சரிந்து சொக்லட் குளத்தில் விழும் பாரிய சத்தம்

பையன் : இப்பொழுது விமானப்படையினர் சைகை காட்டுகிறார்கள்.

குரல் : விமானத் தொகுதியொன்றின் பறக்கும் ஒலி

பையன் : எங்கே 25000 பேரின் கரவொலிகளைக் கொண்டு வாருங்கள்.

குரல் : விசாலமான தொகையினரின் கரவொலி உருவாகிறது. ஒலிவேகமாகி மிகப்பலமாக உருவாகிறது.

குரல் : முடிந்தால் இவற்றைத் தொலைக்காட்சியில் செய்துகாட்டுங்கள்.

மனிதன் : இருந்தாலும்...

பையன் : பார்த்தீர்களா? வானொலி ஒரு அதிவிசேட ஊடகமாகும். வானொலி கற்பனையை விஸ்தீரணம் செய்வதால் இவ் எல்லா விடயங்களையும் மனதிலேயே உருவகித்துக் கொள்ளமுடியும்.

- இதற்கேற்பத் தெளிவாவது யாதெனில், வானொலியில் படைப்பாக்கத்தன்மை என்பது படைப்பாளி அதாவது பிரதியாக்குபவர்தான் முதலில் கற்பனை உலகொன்றை உருவாக்கி, அந்த உலகை இரண்டாவதாகப் பெறுநர்களின் கற்பனையில் உருவாக்கி உலவவிடும் கலையே ஆகும்.

**தொலைக்காட்சி ஊடகம்**

- தொலைக்காட்சி பூகோளச் சமூகத்தின் போக்கினை மாற்றியமைத்த ஒரு பரிமாற்று வெகுசன ஊடகமாகும். அது உலகை ஒரு தகவல் சமூகமாகவும் மனிதனைப் புரிந்துணர்வுடனான ஒரு பிரஜையாகவும் மாற்றுவதில் முதன்மையான பங்களிப்பை வழங்கியுள்ளது. கட்புல செவிப்புல ஊடகமான தொலைகாட்சி அவ் ஊடகத்திற்கே உரித்தான தனித்துவமான படைப்பாக்க அம்சங்களை விருத்தி செய்துள்ளது. தொலைக்காட்சி வானொலியின் நீட்சி என்பதால் ஒலிக்கும் இங்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.
- தொலைக்காட்சியின் திரை சிறியதாக இருப்பதனால் அது ஓர் கலை ஊடகமாகக் கருதப்படுவதில்லை. தொலைகாட்சித் திரையானது சினிமாத் திரையுடன் ஒப்பிடும்போது சிறியதாகும். அதேபோல் தொலைக்காட்சி ஒரு வீட்டு உபகரணமாகும். எனவே, அது ஒரு பொது ஊடகமாகும். குடும்பத்திலுள்ள அனைவரும் ஒரே நேரத்தில் நுகரக்கூடிய ஊடகமாகும்.
- தொலைக்காட்சியானது சம்பிரதாயபூர்வக் கலைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்காமையால் இது ஒரு கவர்ச்சிகரமான (Glamorous) ஊடகம் எனப்படுகிறது. எனவே, அலங்காரம், ஜனரஞ்சகம் மற்றும் படைப்பாக்கம் போன்ற பண்புகளில் இது தங்கியுள்ளது. இதன்மூலம் புதிய தன்மை (Newness), பயன்படும் தன்மை (Usefulness) மற்றும் சுயமான தன்மை (original) என்பன கருத்திற் கொள்ளப்படுகின்றன. அதுபோன்று படைப்பாக்கத்தன்மை, அதன் தாக்கம்,செலவு, வினைத்திறனான தெரிவு மற்றும் நெகிழ்வுத் தன்மை போன்ற காரணிகள்மீதும் கவனம் செலுத்தவேண்டும். நிகழ்ச்சிகளின் தரம் மற்றும் படைப்பாக்கப் பயன்பாடு என்பவற்றைக் கற்றல் மூலமாக இனங்காணவேண்டும்.


- தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பல வகைப்படுகின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பிரதானமாக புனைவு (Fiction) மற்றும் புனைவற்றவை (Non-Fiction) என வகைப்படுத்தப்படுகிறது. செய்தி, அறிக்கைகள், பல்சுவை (Variety) நிகழ்ச்சிகள் புனைவற்ற நிகழ்ச்சிகளுக்கு உதாரணங்களாகும். தொடர் நாடகங்கள். தொடர் திரைப்படங்கள், கார்டூன் கதைகள் போன்றவை புனைவுநிகழ்ச்சிகளுக்கு உதாரணங்களாகும். சிறுவர், பெண்கள், விளையாட்டு மற்றும் சுற்றுலா எனத் துறைசார்ந்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பலவாறாக வகைப்படுத்தப்படுகின்றன.
- தொலைக்காட்சி ஊடகத்தின் படைப்பாக்கம், பண்பாட்டு மற்றும் படைப்பாக்கத் தொழிலின் அடிப்படையில் விருத்தியடைவது. தொலைக்காட்சி நிகழ்ச்சி உருவாக்கத்திற்குத் தொலைக்காட்சி ஊடகத் தொழினுட்ப அறிவு அவசியம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அவ்வவ் சமூக, பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் நம்பிக்கையைப் பாதிக்கும், நிந்திக்கும் வகையில் தயாரிக்கக் கூடாது. காரணம், சிறுவர்கள், பெரியவர்கள், பெண்கள், படித்தவர்கள் மற்றும் படிப்பறிவில்லாதவர்கள் என அனைவரும் ஒன்றாகத் தொலைக்காட்சி முன் அமர்வதனாலாகும்.
- தொலைக்காட்சித் தொடர்நாடகக் கலையில் கருத்துக்கள் மற்றும் கதாபாத்திரங்கள், பிரதி மற்றும் கதையின் போக்கு, முரண்பாடு மற்றும் ஆர்வத்தைத் தூண்டல், ஓசை, கலந்துரையாடல், இசை என்பவற்றைப் படைப்பாக்கத்தன்மையுடனும் அர்த்தமுள்ளதாகவும் கட்டியெழுப்புவதனூடாக சிறந்த தொடர்நாடகமொன்றைக் கட்டியெழுப்ப முடியும்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒரு கூட்டுச்செயற்பாடாகும். ஒரு இயக்குநருக்குத் தொலைக்காட்சித் தொடர்நாடகமொன்றைத் தனியாக உருவாக்கமுடியாது. அதற்காக இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், முகாமையாளர்கள், நடிக நடிகைகள், ஒளிப்பதிவுக் கலைஞர்கள், ஒப்பனைக்கலைஞர்கள், செம்மையாக்கம் செய்யும் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள் மற்றும் நேரடி ஒளிபரப்புச் செய்யும் தொழில்நுட்பவியலாளர்கள் போன்ற பெருந்தொகையானோரின் உதவி அவசியமாகும்.
- தொலைக்காட்சி ஊடகப் படைப்பாக்கத்தன்மையின் அடிப்படை பிரதியாக்கம் ஆகும். தொலைக்காட்சி ஒரு கட்புல செவிப்புல ஊடகம் என்பதால் பிரதியாக்கம் அதற்கேற்றவாறு தயாரிக்கப்படும். திரைக்கதை என்பது தொலைக்காட்சி, சினிமா ஆகிய இரு கட்புல ஊடகங்களுக்கும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.
- தொலைக்காட்சி, சினிமா ஆகிய இரு கட்புல ஊடகங்களிலும் திரைக்கதை எழுதும் நுட்ப முறைகளில் ஒற்றுமை காணப்படுகிறது.
- தொலைக்காட்சிப் படைப்பாக்கம் ஒன்றின்போது கமரா தொழினுட்பக் கலைப் பாவனை, ஒளியமைப்பு, நடிப்பு, செம்மையாக்கம் மற்றும் ஓசை என்பவற்றைச் சிறந்த படைப்பாக்கத்தன்மையுடன் பயன்படுத்திப் படைப்பாக்கச் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

**சினிமா**

- உலகில் காணப்படும் ஒரு பிரதான கலை சினிமா ஆகும். அந்த ஊடகத்திற்கே தனித்துவமான மொழி மற்றும் இலக்கணம் என்பன வளர்ச்சியடைந்துள்ளன. செயற்பாடு (Action), சாகசம் (Adventure) கிரா∴பிக்ஸ் / அனிமேஷன் (Animation), வாழ்க்கை வரலாற்றுத்திரைப்படம் (Biopic), கார்ட்டூன் (Cartoon), நகைச்சுவை (Comedy), விவரணப்படம் (Documentry), பேரச்சம் (Horror), காதல் (Romance), இசை (Music), விஞ்ஞானப் புனைவு (Science fiction), திகில் (Thriller) மற்றும் யுத்தம் (War) போன்றவற்றைப் பிரதான திரைப்பட வகைப்பாட்டு அம்சங்களாகக் குறிப்பிடலாம்.

- சினிமா ஊடகத்தின் அழகியல் மற்றும் கலைசார் செயற்றிறன்,சினிமா அழகியல் (Film Aesthetics) எனக் கருதப்படுகிறது. அதன்மூலம் சிலர் சினிமாவை அழகியல் மற்றும் கலைத் தேவைகளையும் கடந்த மெய்யியல் அடிப்படையிலான ஒரு ஊடகம் எனக் கருதுகின்றனர். மானுட மற்றும் அரசியல் தொடர்புகள் இங்கு ஆழமாக ஆய்வுக்குட்படுத்த முடியும்.
- பிரபலம் (Popular) மற்றும் செவ்வியற்தன்மை (Classical) என்பது சினிமாத் தொழிற்துறையின் ஒரு பிரதான வகைப்படுத்தல் முறைமையாகும். எனினும், அது நடைமுறைத்தன்மை அற்றதாகும். பிரபலம் மற்றும் செவ்வியற்தன்மை எனக் கலை உருவாக்கங்களை வேறுபடுத்த முடியாது என்பது பெரும்பாலான ஆய்வாளர்களின் கருத்தாகும்.
- சினிமாக் கற்கையின்போது, கலை உருவாக்கம் தொடர்பான விமர்சனரீதியான இரசனை புரிந்துணர்வு, உலக சினிமாவின் போக்கு மற்றும் படைப்பாக்கம்மிக்க திரைப்படம் என்பவை தொடர்பாகக் கற்றல் அவசியமாகும்.
- பூகோளத் தொடர்பாடலில், படைப்பாக்கக் கற்கையின்போது திரைப்படக் கற்கை ஒரு பொது உரிமையாகக் கருதப்படுகிறது. மேலும் திரைப்படங்களை இரசித்தல், உள்ளடக்கங்களை விமர்சனம் செய்தல், தொழினுட்பம் பற்றிய விமர்சனம் அதன் பாவனைத் திறனை விருத்தி செய்தல் மற்றும் படைப்பாக்கப்பாவனை போன்றவை தொடர்பான கற்கையும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதேபோல் தயாரிப்புக்கு முன், தயாரிப்பு, தயாரிப்புக்குப் பின் போன்ற கட்டங்கள் பற்றிய அறிவும் அவசியமாகும்.
- திரைப்படக் கற்கையின்போது திரைக்கதை ஆக்கம், இயக்கம், தொழினுட்பம் மற்றும் செம்மையாக்கம் போன்ற துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
- சினிமாவில் படைப்பாக்கம்மிக்க பிரவேசங்களாக, சினிமாசார் (Cinematic), நாடகவியல் (Dramatic), இயக்கவியல் (Kinesthetic), ஒலியமைப்பு (Sonic), காலம்சார்ந்த (Temporal), திரைக்கதை (Narrative) மற்றும் சினிமாக் காட்சியாக்கம் (Miss-en-scence) போன்ற துறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.
- சினிமா ஊடகத்தில் படைப்பாக்கம்மிக்க பிரதியாக்கத்தின்போது கதைக்கரு (Motif), உருவவியல் (Metaphor) மற்றும் குறியீடுகள் (Symbols) பயன்படுத்தப்படுகின்றன. அது திரைக்கதை எனப்படுகிறது. திரைக்கதை திரைப்படத்தின் படைப்பாக்கரீதியான ஓர் எழுத்துருவாக அமைவதோடு, அது தொடர்பான அறிவை விருத்தி செய்யப் புகழ்பெற்ற திரைப்படங்களின் பிரதியாக்கங்களை வாசிக்கவேண்டும்.
- சினிமாவில் நடிப்பு என்பது விசேடமான படைப்பாக்க அம்சமாகும். திப்படத்தின் வெற்றி தோல்வியில் நடிப்பு அதிகத் தாக்கம் செலுத்தும் அம்சமாகும். மேலும் கலை இயக்கம், ஆடை மற்றும் ஒப்பனை, ஒளிப்பதிவு, செம்மையாக்கம், ஒலியமைப்பு மற்றும் இசையமைப்பு என்பவற்றிலும் படைப்பாக்கத் தன்மை அதிகமாகக் காணப்படுகிறது.
- கமரா கலைநுட்பத்தின்கீழ் கமராத் தூரங்கள் மற்றும் கோணங்களின் பாவனையினூடாகக் கட்புல செவிப்புல ஊடக ஆக்கமொன்றில் அர்த்தம் உருவாக்கப்படுமாற்றை ஆராய்தல் வேண்டும். தொலைக்காட்சி போன்று சினிமாப் படைப்பாக்கத்தின்போதும் பயன்படுத்தப்படும் இக் கமரா கோணங்கள் பற்றிய விதிமுறைகள் நடைமுறையில் படைப்பாக்கம் மற்றும் படைப்பாளியின் படைப்பாக்கச்சிந்தனை என்பவற்றுக்கேற்ப வேறுபடும்.


- கமராத்தூரங்கள் மற்றும் கோணங்கள் பற்றிய வகைப்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.



அண்மைநிலை எடுப்பு (Close-Up - CU)




மிகு அண்மை வீச்செடுப்பு (Big Close-UP - BCU)




மிகு அண்மைநிலை எடுப்பு (Extreme Close-Up – ECU)




இடைநிலை எடுப்பு (Medium Shout – MS)




இடைநிலை அண்மைக்காட்சி (Medium Close Up – MCU)




இடைநிலை நீள் எடுப்பு (Medium Long Shot - MLS)






மிகு நெடுந்தொலை எடுப்பு (Extreme Long Shot – ELS) நெடுந்தொலை எடுப்பு (Very Long Shot – VLS)

நீள் எடுப்பு (Long Shot – LS)





இடைநிலை அண்மைக்காட்சி (பதி கோணம்)
Medium Close-Up – Low Angle

நீள் எடுப்பு (உயர் கோணம்)
Long Shot – High Angle

- படைப்பாக்கத்திற்கு அவசியமான, பல்வேறு அசைவு வேகத்திற்கு ஏற்ப எடுக்கப்படும் காட்சிகள் மிகவும் சிக்கலான செம்மையாக்கலுக்குப்பின் கட்புல செவிப்புல ஆக்கங்களாக உருவாகும். படைப்பாக்கம்மிக்க தொலைக்காட்சி மற்றும் சினிமாப் படைப்புகள் தொடர்பான அறிவினை விருத்தி செய்துகொள்ள மற்றும் படைப்பாக்கத்தன்மையைப் பயன்படுத்த இவ் விதிமுறைகள் பற்றிய பரந்த அறிவு அவசியமாகும்.
- கட்புல செவிப்புல ஆக்கங்களில் பயன்படுத்தப்படும் மேற்குறிப்பிட்ட காட்சிகள் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தும். அவ்வாறான சில கருத்துக்கள் தொடர்பாக ஆராய்தல்

அவசியமாகும். புகழ்பெற்ற இலக்கியவாதியான மார்ட்டின் விக்கிரமசிங்கவின் ‘கம்பெரலிய’ எனும் நாவலினை மையப்படுத்தி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களால் ஆக்கப்பட்ட ‘கம்பெரலிய’ திரைப்படத்தின் சில காட்சிகளை நோக்குவோம்.

- கம்பெரலிய எனும் நாவலின் பின்னணியான பிரதேசம் தொடர்பாகப் பெறுநர்களைத் தெளிவுபடுத்த, திரைப்படத்தின் ஆரம்பத்தில் சில காட்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. நிகழ்வு ஒன்று நிகழும் விதம் அல்லது அந்தச் சூழல் எவ்வாறானது என்பது தொடர்பாக இரசிகர்களுக்கு ஏதேனுமோர் விளக்கத்தை வழங்குதல் இதன்மூலம் எதிர்ப்பார்க்கப்படுகிறது.
- ஏதேனுமோர் கட்புல செவிப்புல ஆக்கமொன்றின் ஆரம்பத்தில் மிக மிகத் தொலைவுப் படம் ஒன்று பயன்படுத்தப்பட்டு, தொடர் நிகழ்வுகளின் ஆரம்ப இடம், பின்னணி தொடர்பாக இரசிகர்கள் மத்தியில் ஓர் தெளிவு ஏற்படுத்தப்படும். இது கட்டியெழுப்பத் துணையாகும் காட்சி (Establishing shot) எனக் குறிப்பிடப்படுகிறது.



மிகு நெடுந்தொலை எடுப்பு

(Extreme Long Shot – ELS)



நெடுந்தொலை எடுப்பு

(Very long shot)



நீள் எடுப்பு

(Long Shot – LS)

- இக் காட்சிகளில் இடைநிலை நீள் எடுப்பு (Medium Long Shot), இடைநிலை அண்மைக்காட்சி (Medium Close Up) என்பன காட்டப்படுகின்றன. இதனூடாகக் கதாபாத்திரங்கள் மற்றும் பொருட்களின் பண்புகள் தெளிவாகக் காட்டப்படுகிறது. மனித உடலின் மேல் அரைப்பகுதி இதில் உள்ளடக்கப்படும். கம்பெரலிய என்ற திரைப்படத்தின் பியல் என்ற கதாபாத்திரம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இவ்வாறான காட்சிகளில் காண்பிக்கப்படுகிறது.



இடைநிலை நீள் எடுப்பு

(Medium Long Shot - MLS)



இடைநிலை அண்மைக்காட்சி

(Medium close up)



மூன்று பாத்திரங்களின் இடைநிலை அண்மைக்காட்சி

- அண்மைநிலை எடுப்பு (Close up) மற்றும் மிகு அண்மைநிலை எடுப்பு (Extreme close up) என்பவற்றினூடாகக் குறிப்பிட்ட கதாபாத்திரத்தின் அல்லது பொருளினுடைய நுட்பமான பண்புகள், உணர்வு வெளிப்பாடு என்பன இரசிகர்களுக்கு முன்வைக்கப்படுகிறது. அதனூடாக இரசிகர்களின் உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் உருவாக்கப்படுகிறது. கம்பெரலிய திரைப்படத்தில் நந்தாவின் திருமணம் நடைபெறும் சந்தர்ப்பத்தில் அவளின் மனநிலை இந்த அண்மைநிலை எடுப்புக்களுக்கூடாக அழகாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.
- மிகு அண்மைநிலை எடுப்பினூடாகக் (Extreme Close Up) கதாபாத்திரத்தில் அல்லது பொருளில்உருவாக்கிக் காட்டக்கூடிய பண்புகள் மிக அண்மையில் காட்டப்படும். திகில் மற்றும் அச்ச உணர்வுகளை ஏற்படுத்துவதற்கு இக் காட்சிகள் திறம்படப் பயன்படுத்தப்படுகின்றன. மிகச் சிறந்த மனஉணர்வை இரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்துதல் மற்றும் குறித்த படைப்பாக்கத்துடன் இரசிகர்களைக் கட்டியிழுத்துத் தக்கவைத்துக் கொள்ளலும் இங்கு நடைபெறுகிறது.








- பதி கோணத்தில் (Low angle) ஏதேனுமோர் கதாபாத்திரம் அல்லது பொருளினைக் கீழிருந்து மேலாகப் பார்க்கும்விதமாகக் காண்பிக்கப்படுகிறது. இதனூடாகக் குறிப்பிட்ட கதாபாத்திரத்திற்கு ஒரு பெறுமதியை வழங்க முடியும். இங்கு விபரிக்கப்படும் கதாபாத்திரம் அல்லது பொருள் சக்திமிக்கது என்ற எண்ணம் இரசிகர்களின் மனதில் ஏற்படும். கம்பெரலிய திரைப்படத்தில் ஜினதாச நந்தாவைத் திருமணம் செய்யும் காட்சியைப் படம்பிடிக்க இக்கோணத்திலான படப்பிடிப்பு முறைமை பின்பற்றப்பட்டுள்ளது.




- கம்பெரலிய எனும் திரைப்படத்தை இரசிப்பதனூடாகக் காட்சிகள் தொடர்பாக மேலும் கற்க முடியும். கோட்பாட்டுரீதியாகக் குறிப்பிடப்படும் காட்சி வகைப்படுத்தலானது அவ்வாறே சகல திரைப்படங்களிலும் பயன்படுத்தப்படமாட்டாது. படைப்பாளி மற்றும் படைப்பாக்கத்தின் தேவைக்கேற்ற வகையில் காட்சிப் பயன்பாடு அமையும்.
- பல்வேறு கமராக் கோணங்களைப் போலவே கமரா அசைவுகள் ஊடாகவும் கட்புல செவிப்புல தகவல்களுக்கு அர்த்தங்களை உருவாக்கமுடியும். அவ்வாறான அசைவுகள் பிரதானமாக இருவகைப்படுத்தப்படும். ஒன்று கமராவை நேராக வலமிருந்து இடமாக அல்லது இடமிருந்து வலமாக நகர்த்துதல் (Panning) மற்றும் கமராவை மேலும் கீழும் அசைப்பதனூடாகக் காட்சியை பதிவுச் செய்தல் (Tilting) என்பவையாகும்.





- கமராவை வேகமாக அல்லது மெதுவாக இருபக்கங்களுக்கும் அசைக்க (Pan) முடியும். இதன்போது தூரக் காட்சிப்படுத்தும் பிரதேசத்தின் அக்கம் பக்கத்தைக் காண்பிக்க முடியும். இதனூடாக நிகழ்வு நடைபெறவுள்ள இடம் தொடர்பான புரிதலை இரசிகர்கள் பெற்றுக்கொள்வர்.




- அதேபோல், கமராவை இவ்வாறு இரண்டு பக்கங்களிலும் நகர்த்துவதனூடாகத ˙திசை தொடர்பாகவும் ஏதேனுமோர் கருத்தைப் பெற்றுக்கொள்ள இயலுமாயுள்ளது. இவ்வாறு நகர்த்துவதை வேகமாக அல்லது மெதுவாக மேற்கொள்ள முடியும். அது படைப்பாளி அல்லது படைப்பாக்கத்தின் தேவைக்கேற்பப் பாவனை செய்யப்படும். கீழ்குறிப்பிட்ட காட்சியில் காட்டப்படும் நபர் ஓடும் திசையினூடாகக் கமராவை நகர்த்த முடியும்.



- கமராவை மேலும் கீழுமாக அசைத்துக் காட்சிப் பதிவு செய்தல் (Tilting) ஊடாகவும் பல்வேறு கருத்துக்களை உருவாக்க முடியுமாயிருப்பதோடு, கலைஞரின் திறமை, அனுபவம், படைப்பாக்கத்திறன் போன்ற அனைத்து அம்சங்களும் இங்கு செல்வாக்கு செலுத்துகிறது.




- தொலைக்காட்சி மற்றும் சினிமாப் படைப்பாக்கமொன்றின்போது தனிநபர், குழு, ஏதேனும் ஒன்று அல்லது இடம் தொடர்பாகச் சிறந்த அவதானத்துடன் காட்சிப்படுத்தவேண்டிய தேவையுள்ள சந்தர்ப்பங்களில் படைப்பாக்கத்திற்குப் பொருத்தான வகையில் இந்தக் கலைநுட்பங்கள் பயன்படுத்தப்படும்.




- தொலைக்காட்சி மற்றும் சினிமாப் படைப்பாக்கங்களை இரசிக்கும்போது மேற்குறிப்பிட்ட காரணிகள் தொடர்பாக விளக்கத்துடன் அவற்றைக் கற்றலினூடாகப் படைப்பாக்கம் தொடர்பாக மட்டுமன்றி காட்சி பற்றிய எழுத்தறிவை பெற்றுக்கொள்வதோடு விமர்சனத்தன்மையையும் விருத்தி செய்துகொள்ள முடியும்.
- தொலைக்காட்சி வர்த்தக விளம்பரமொன்றை அல்லது குறுஅறிக்கை நிகழ்ச்சியொன்றை ஒளிப்பதிவு செய்து, பொருத்தமான காட்சிகளுடன் கமராக் கோணங்களை பயன்படுத்தல், கமராவைப் பயணிக்கச் செய்தல், காட்சிகளை ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தல் மற்றும் செம்மையாக்கம்போன்ற கலைநுட்பங்களைப் பயன்படுத்துவதனூடாகப் படைப்பாக்கமொன்றில் கருத்து / பொருள் உருவாகும் விதத்தை அவதானிக்க முடியும்.

அரங்கம் (**Theatre**)

- நடிப்புக்கலை என்பது பல்லாயிரம் வருடங்களாக மனித வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் மற்றும் ஆய்வுகளுக்குப் பிரபலமானதொரு ஊடகமாக இருந்து வந்துள்ளது. இது ஒரு

சமூகக் கலையாக - விநோதம், அறிவுரைகள் மற்றும் சிகிச்சை என்பவற்றிற்காக மனிதனுடன் ஆழமான தொடர்புகளைப் பேணி வந்த ஓர் கலையாகும்.

- அரங்கம் மற்றும் நடிப்புக் கலை என்பன கூட்டுக் கலைகளாகும் (collaborative Art). நடிப்புக்கலை பற்றிய புரிந்துணர்வு, ஆளிடைச் சிந்தனை மற்றும் ஆற்றல்களை ஊக்குவிக்க வாய்ப்பளிக்கும். படைப்பாக்கச் சிந்தனையை விருத்தி செய்து விழிப்புணர்வுமிக்க ஆய்வாளராகி மானுட வாழ்வின் சிக்கல் தன்மையைப் புரிந்துகொள்ள முடிகிறது.
- இதனடிப்படையில் அரங்கம் மற்றும் நடிப்புக்கலையை இனங்காணல், அரங்கக் கலைஞர்கள், மேடை அமைப்பு, மேடை ஒளியலங்காரம், ஆடை ஆபரணங்கள் மற்றும் ஒப்பனை, நடிப்பு, இசை, நடனம், அளிக்கை உருவாக்கம் போன்ற பல்வேறு துறைகள் பற்றி அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.
- அரங்கம் படைப்பாக்கமான மிகவும் சிரமமான ஒரு பணியாகும். அதற்குப் பங்களிப்பு அவசியமாகும். நடிப்புக்கலையின் அடிப்படை அம்சங்களாக
    - இலக்கிய அடிப்படைகள்
    - தொழினுட்ப அடிப்படைகள்
    - ஆற்றுகை அடிப்படைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.
- இலக்கிய அடிப்படைகளுள் கருத்து, கதைக்கரு மற்றும் அதன் கட்டமைப்பு மாதிரி, உச்சஸ்தானம் (ஆரம்பம், இடை, இறுதி என்பன), கதாபாத்திரங்கள், விவரணம், மொழி, நுட்பம், தற்கிளவி (Monologue) என்பன அடங்கும்.
- தொழினுட்ப அடிப்படைகளாகக் காட்சி, ஆடை, நடிப்பு உபகரணங்கள், வெளிச்சம். சத்தம், கதாபாத்திர உருவாக்கம் மற்றும் இயக்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.
- ஆற்றுகையொன்றின் அடிப்படைகளாக, நடிப்பு,கதாபாத்திர ஊக்குவிப்பு (Character Motivation), கதாபாத்திர விமர்சனம், ஆழ்பரிவு, சுவாசக் கட்டுப்பாடு (Breath Control), வாய்மொழி வெளியீடுகள் (Vocal Expressions), ஏற்றத் தாழ்வு (Inflection), பேச்சு எறிவைகள் (Projections), பேச்சு நுட்பங்கள், வசன நடை (Diction), அபிநயம் (Gesture), உடல் மொழி, முக பாவனை மற்றும் சலனம் என்பன உள்ளடங்கும். இவை அனைத்தும் படைப்பாக்கத் தொடர்பாடலில் முதன்மை பெறும்.
- முதலில் எண்ணக்கரு (Thought), தொனிப்பொருள் (Theme) அல்லது யோசனை (Idea) போன்றவற்றைப் படைப்பாக்கரீதியாக உருவாக்க வேண்டும்.
- இரண்டாவதாக, அதனைச் செயற்பாடாக (Action) அல்லது கதையம்சமாக (Plot) மாற்றுவதற்கான படைப்பாக்க பிரவேசம் முக்கியமாகும்.
- மூன்றாவதாக, கதாபாத்திரங்களைத் தெரிவுசெய்யும்போது கதாபாத்திரத்தின் ஆளுமை, வயது, தோற்றம், நம்பிக்கை, சமூகப் பின்புலம் மற்றும் மொழிப்பாவனை போன்றவை படைப்பாக்கரீதியாக இனங்காணப்பட்டுத் தெரிவு இடம்பெறல் வேண்டும்.
- நான்காவது, மேடையமைப்பு முக்கியத்துவம் பெறுகிறது. அதன்போது நடிப்பு, கலைஞரின் உச்சரிப்பு, வெளிப்பாட்டுப் பாணி, கலந்துரையாடல் மற்றும் பாத்திர அமைப்பு போன்றவை படைப்பாக்கரீதியாகக் கட்டியெழுப்பப்படவேண்டும்.
- ஐந்தாவது, நாடக நடிப்புக் கலையின் முக்கியமான படைப்பாக்கரீதியான அம்சமான இசையமைப்பு, ரிதம், சுருதி, குரல் மற்றும் பாடல் என்பன மிகவும் நுட்பமான படைப்பாக்கவழிப் பயன்பாட்டுடன் உருவாக்கப்படும்.
- ஆறாவது, நடிப்புக்கலையில் காட்சி (Spectacle / Scene) என்பது முக்கியமான படைப்பாக்க அம்சமாகக் கருதப்படுகிறது. காட்சி என்பதன்மூலம் இங்கு கருதப்படுவது இரசிகர்கள் முன்னிலையில் மேடையில் உருவாக்கப்படும் காட்சிவழி அளிக்கையாகும். பல்வேறு நாடகம்சார் பிரவேசங்களினூடாக உருவாக்கப்படும் பாடல்சார் வெளியீடாகும்.

மதிப்பீடு

1. பத்திரிகை ஊடகத்தின் முன்பக்கத்தில் செய்தி மொழியில் மற்றும் சிறப்பம்சக் கடித மொழியில் காணப்படும் இயல்புகளை ஒப்பீட்டுரீதியாகத் தெளிவுபடுத்துக.
2. வானொலி நாடகப் படைப்பாக்க மொழிப்பாவனை தொடர்பாக எடுத்துக்காட்டுகளுடன் கலந்துரையாடுக.
3. நீர் விரும்பும் தொலைக்காட்சி விளம்பரம் ஒன்றை அல்லது விவரண நிகழ்ச்சியொன்றைப் படைபாக்கரீதியில் ஆராய்க.

தேர்ச்சி மட்டம்: 7.4 படைப்பாக்கரீதியான மொழிப் பாவனை மற்றும் பல்வேறு ஊடகங்களின் படைப்பாக்கத் திறனை இனங்கண்டு கருத்துத் தெரிவிப்பார். தகவலொன்றைப் படைப்பாக்கரீதியில் தயாரிக்க நாட்டாரியல் மற்றும் நாட்டார் கலை வடிவங்களைப் பயன்படுத்தலாம் எனும் தெளிவுடன் வெவ்வேறு ஊடகங்களுக்கான படைப்பாக்கத் தகவல் தயாரிப்பில் ஈடுபடுவார்.

பாடவேளைகள்: 15

கற்றற் பேறுகள்

- தொடர்பாடலில் படைப்பாக்கரீதியான மொழியைப் பயன்படுத்த முடியும் என்பதைத் தெளிவுறுத்துவார்.
- படைப்பாக்கரீதியான மொழியைப் பயன்படுத்திப் பல்வேறு ஊடகங்களுக்கும் செய்தியைத் தயாரிப்பார்.

**பாடத்தைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**அறிமுகம்**

- தொடர்பாடல் செயன்முறையின்போது அச்சு மற்றும் இலத்திரனில் ஊடகத் தகவல்களைப் படைப்பாக்கமிக்க வகையில் தயாரிக்க, நாட்டாரியல் அல்லது நாட்டார் கலை வடிவங்களைப் பயன்படுத்த முடியும்.
- நாட்டாரியல் என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை ஆராய்வதனூடாக நாட்டாரியல் தொடர்பான அடிப்படைத் தெளிவொன்றைப் பெறமுடியும்.
- 'மக்கள் சமூகமொன்றில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக உருவான நாட்டார் கதை, நாட்டார் பாடல், நாட்டார் விளையாட்டுக்கள்,நாட்டார் நம்பிக்கைகள், நாட்டார் விசுவாசங்கள்,புனைவுகள், புராணங்கள் போன்றவை கற்பதற்காக ஒதுக்கப்பட்ட பாடத்துறையாகும்.' ('தொடர்பாடல் ஓசை'– சுனந்த மஹேந்திர)

  நாட்டாரியல் என்பது,"அடிப்படை அல்லது சிக்கலான நிலைமைக்குட்பட்ட, நவீன அல்லது மக்கள் சமூகத்திற்கு இடையில் நீண்ட காலமாக வாய்மொழி வழியாக விருத்தியடைந்த ஒரு வளம்மிக்க செல்வமாகும்". ('நாட்டாரியல் விஞ்ஞானம்' - நந்தசேன ரத்னபால)

  'நாட்டாரியல் என்ற பதத்தின்மூலம் குறிப்பிடப்படுவது, ஏதேனுமோர் மக்கள் சமூகத்திற்கு இடையில் வாய்மொழி வழியாகப் பேணி வந்த பாரம்பரிய அறிவுத் தொகுதி, நாட்டார் கதை, நாட்டார் பாடல், பழமொழிகள் போன்றனவும் நாட்டாரியல் எனும் தலைப்பினால் அழைக்கப்படுகிறது. இது, ஆங்கிலத்தில் Folklore எனக் குறிப்பிடப்படுகிறது. (நாட்டாரியல் அகராதி - ஸ்ரீ லியனகே)
- நாட்டாரியல் என்பது காலங்காலமாக வாய்மொழி வழியாகப் பேணப்பட்டுவந்த அறிவுக் கொடையாகும். ஏதேனுமோர் நபரொருவரினால் படைக்கப்பட்ட நாட்டார் படைப்பொன்று

சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவது அது சமூக அறிவின் அடிப்படையில் அமைவதால் ஆகும். இதுவே நாட்டாரியல் உருவாக்கத்தின் சித்தாந்தமாகும்.

- சமூக அறிவு என்பது, சமூகத்தில் காணப்படும் இணங்குதல், மறுத்தல், ஏற்றுக்கொள்ளல், எதிர்ப்புத் தெரிவித்தல் போன்ற செயற்பாடுகளின் விளைவாகவும்,பொதுவாகச் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிந்தனைப் பரப்பாகும். இதனை மனிதனின் அறிவுஞானமாகக் கருதலாம். எனவே, நாட்டாரியல் என்பது பண்டைய மனிதர்களின் அறிவுஞான வளர்ச்சியின் வெளிப்பாடாகும்.
- நாட்டாரியல் என்பது படைப்பாக்கத்தன்மை மிக்கதாகும். படைப்பாக்கத்தன்மையுடன் மக்கள் தமது அறிவுஞானத்தை எதிர்காலச் சந்ததிக்கு கையளிப்பதில் நாட்டாரியலின் பங்கு எத்தகையது என்பதை இனங்காணல் வேண்டும். அதனூடாக நாட்டாரியலை உந்துசக்தியாகக் கொண்டு படைப்பாக்கங்களைக் கட்டியெழுப்ப முடியும். மக்கள்மயமான சிறந்த படைப்பாக்கங்களை ஆய்வு செய்யும்போது, அதிலுள்ள நாட்டாரியல் அடிப்படையை இனங்காணமுடியும். நாட்டாரியல் மற்றும் நாட்டார் கலை என்பன மக்களின் மரபுரிமைகளாகும்.
- நாட்டாரியல், நாட்டார் கலை, நாட்டார் பாடல், நாட்டார் கவிதை, நம்பிக்கைகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள், புதிர்கள், விடுகதைகள், பழமொழிகள், நாட்டார் வைத்தியம், நாட்டார் விளையாட்டுக்கள், நாட்டார் விழாக்கள் உள்ளிட்ட பாரம்பரிய அறிவுஞானத்தின் வெளிப்பாடாக இந்த மக்கள் உரிமை உருவாகியுள்ளது. இதற்கிணங்க, நாட்டாரியலை பாரம்பரிய அறிவுஞானத்தின் பொக்கிஷம் எனவும் குறிப்பிடலாம்.
- நாட்டாரியலின் நம்பகத்தன்மை கட்டியெழுப்பப்படுவது அவை வரலாறு மற்றும் ஆன்மீகத்துடன் பிணைப்புற்றுக் காணப்படுதலினாலாகும். அத்தோடு பண்பாடு, விவசாயம் உட்பட வாழ்க்கை முறை, மானுட விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற துறைசார் செயற்பாடுகள் பலவற்றிலும் நாட்டாரியல் பிணைப்புற்றுக் காணப்படுகிறது.
- மானுட வாழ்க்கை, மனிதாபிமானத்தின் உன்னதத் தன்மை, ஆச்சரியம், புதுமை என்பவற்றால் பிணைப்புற்றுக் காணப்படும் ஒரு படைப்பாக்கமிக்க ஊடகமாக நாட்டாரியல் குறிப்பிடப்படுகிறது.
- பண்பாட்டை - பௌதீக மற்றும் பௌதீகமல்லாத பண்பாடு என வகைப்படுத்த முடியும். மனிதர்களால் உருவாக்கப்பட்ட பண்பாட்டில், பௌதீகமல்லாத பகுதி தொட்டறிய முடியாத பண்பாடாகக் கருதப்படுகிறது. பௌதீகப் பண்பாட்டு அம்சங்களின் உருவாக்கத்திற்கு ஏதுவான அறிவு, அதனோடிணைந்த திறன்கள், படைப்பாக்கத்தன்மை போன்றவை தொட்டறிய முடியாதபண்பாட்டுடன் பிணைப்புற்றுக் காணப்படுகின்றன. நாட்டாரியல் மற்றும் நாட்டார் கலை என்பன படைப்பாக்கம்மிக்க தொடர்பாடலில் பயன்படுத்தும்போது தொட்டறிய முடியாத பண்பாடு தொடர்பாக விளக்கம் பெறல் அவசியமாகும்.
- மனப்பாங்கு, பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், நம்பிக்கைகள், தொழினுட்பம், கலை, இலக்கியம் போன்றவை தொட்டறிய முடியாத பண்பாட்டு மரபுரிமைகளாகக் கருதப்பட முடியும். நபரொருவர் சமூகத்தில் தனது பண்பாட்டு மரபுரிமைகளின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தி வருகின்ற பாவனை, நடிப்பு, திறன்கள் மற்றும் வெளியீடுகள் தொட்டறிய முடியாத பண்பாடாக 2003ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பு தமது பண்பாடு தொடர்பான கொள்கைப்பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளது. (General Conference of the United Nations Educational Scientific and Cultural Organization – 2003)
- 1972 ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பு தொட்டறிய முடியாத கலைத்துவ மரபுரிமை மற்றும் நாட்டார் கலை என்பவற்றைப் பாதுகாப்பதற்குக் கொள்கைகளையும் சட்டதிட்டங்களையும் வெளியிட்டது. 2011ஆம் ஆண்டளவில் 153 நாடுகளின் 911 பண்பாட்டு மரபுரிமைகள் இனங்காணப்பட்டு வெளியிடப்பட்டன. 2018ஆம் ஆண்டு

அம்பலங்கொடை பொம்மலாட்டக் கலை இலங்கையின் முதல் தொட்டறிய முடியாத பண்பாட்டு மரபுரிமையாக யுனெஸ்கோ அமைப்பின் பட்டியலில் இணைக்கப்பட்டது.

**நாட்டார்கலைப் பயன்பாடு**

- நாட்டார் கலை எனப்படுவது பண்டைய மனிதச் சமூகத்தில் உருவாகி வளர்ச்சியடைந்து வந்த ஒன்றாகும். நாட்டார் கலை மற்றும் நாட்டாரியல் என்பவற்றுக்கு இடையில் நெருக்கமான தொடர்பு காணப்படுகிறது. மக்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகத் தலைமுறை தலைமுறையாக வளர்ச்சியடைந்து வந்த கலையம்சமாக நாட்டார் கலை மக்கள் மயமாகியுள்ளது. நாட்டார் கலையானது மக்களின் அனுபவப் பின்னணியுடன் கட்டியெழுப்பப்பட்டதாகும். பாரம்பரிய ஓவியங்கள், சிற்பங்கள், பாய்பின்னல், செதுக்கல்கள், பலி, சாந்தி, சடங்கு, பாரம்பரியம் போன்று பாரம்பரிய இசைக்கருவிகளுடன் தொடர்புடைய படைப்பாக்கங்கள் போன்ற பல்வேறு துறைகள் நாட்டார் கலையுள் அடங்கும்.
- நாட்டாரியல், நாட்டார் கலை பற்றிய கற்கையின்போது அவை கட்டியெழுப்பப்பட்டுள்ள பாரம்பரியம், பண்பாட்டு அடிப்படைகள், பாரம்பரிய மரபுரிமை, படைப்பாக்கப் பாவனை போன்றவை தொடர்பாக விளங்கிக்கொள்ள முடியும். நாட்டாரியல் மற்றும் நாட்டார் கலை தொடர்பான அறிவினைத் தேசத்திற்குப் பொருத்தமான வகையில் படைப்பாக்கத் தொடர்பாடல் தகவல்களைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்த முடியும். இதனூடாகத் தேசத்தின் பண்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்றைப் பெறமுடியும்.

**படைப்பாக்கம்மிக்க தொடர்பாடலின்போது நாட்டார் கலை மற்றும் நாட்டாரியல் என்பவற்றின் பயன்பாடு**

- நாட்டாரியல் மற்றும் நாட்டார் கலை என்பன மனிதனின் அனுபவப் பின்னனியுடன் உருவாகி வந்துள்ளமையால் படைப்பாக்கத்தின்போது அந்த அனுபவத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கின்றமை வினைத்திறனான தொடர்பாடலுக்குக் காரணமாகிறது. அது மக்கள் இரசனையுணர்வுடன் நெருக்கமாகிறது.
- நாட்டார் கலை மற்றும் நாட்டாரியல் என்பவற்றைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் ஆக்கங்களினூடாகத் தமக்கும் தாம் சார்ந்த சமூகத்திற்கும் நெருக்கமான பரீட்சயமான ஓர் உணர்வை ஏற்படுத்த முடியும். அது பெறுநரின் ஆர்வத்தைத் தூண்டும் காரணியாக உள்ளது.
- நாட்டார் கலை மற்றும் நாட்டாரியல் பயன்பாட்டுடனான தகவல்கள் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளை இலகுவாக இனங்காணக்கூடியதாய் உள்ளதால் அதனூடாக முன்வைக்கப்படும் தகவல்கள் பெறுநர்மயமாதல் உயர்மட்டத்தில் உள்ளது. இதனால் அப் படைப்பாக்கம் மீதான பெறுநரின் நம்பகத்தன்மை உயர்நிலையில் பேணப்படுகிறது.
- பாவைக் கூத்து அல்லது முகமூடிகளைக் கொண்ட நிகழ்த்துகை எனும் நாட்டாரியற் கலை தகவல் பரிமாற்றத்திற்குப் புதிய துறைகளில் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது. நிகழ்காலச் சமூக அனுபவமொன்றைப் படைப்பாக்கரீதியாகக் காண்பியவாக்கம் செய்யப் பாரம்பரிய முகமூடிகளைப் பயன்படுத்த முடியும்.
- நாட்டார் கலை மற்றும் நாட்டாரியல் அம்சங்களைக் கற்றுணர்ந்து அவற்றை மேடை, வீதி நாடகங்களில் பயன்படுத்திச் சமூகத்திற்குப் பொருத்தமான அபிவிருத்தித் தொடர்பாடல் செய்திகளை வினைத்திறன்மிக்க வகையில் மக்கள்மயப்படுத்த முடியும்.

## மதிப்பீடு

1. தொடர்பாடல் செயன்முறையின்போது நாட்டார் கலை மற்றும் நாட்டாரியல் என்பவற்றைப் படைப்பாக்கமிக்க வகையில் பயன்படுத்துமாற்றை எடுத்துக்காட்டுகளுடன் முன்வைக்க.
2. உமக்குப் பிடித்த நாட்டார் கலை மற்றும் நாட்டாரியல் அம்சமொன்றைப் பயன்படுத்தி ஊடகமொன்றுக்குப் படைப்பாக்கரீதியான செய்தியொன்றைத் தயாரிக்க.

### கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| 01 படைப்பாக்கம் | – | Creativity |
| 02 கற்பனை | – | Imagination |
| 03. எண்ணக்கரு | – | Concept |
| 04. எண்ணக்கருப் படம் | – | Image, Imagery |
| 05. செம்மையாக்கம் | – | Editing |

# 8. பொதுமக்கள் தொடர்பு மற்றும் நிகழ்வு முகாமைத்துவம்

| | |
|---|---|
| தேர்ச்சி | : 8.0 பொதுமக்கள் / பொதுசனத் தொடர்பு மற்றும் நிகழ்வு முகாமைத்துவம் என்பது ஓர் பிரயோகப் பாடம் என்பதைக் கற்றுத் தம் வாழ்நாட் செயற்பாடுகளில் தாம் கற்றவற்றைப் பிரயோகிப்பார். |
| தேர்ச்சி மட்டம் | : 8.1 பொதுமக்கள் தொடர்பு, அதன் ஆரம்பம், முக்கியத்துவம் மற்றும் அவசியத்தைப் பரிசீலனை செய்வார். |
| பாடவேளைகள் | : 04 |

கற்றற் பேறுகள் :

- பொதுமக்கள் தொடர்பு ஆரம்பிப்பதற்குக் காரணமான காரணிகளை விபரிப்பர்.
- பொதுமக்கள் தொடர்பின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை விபரிப்பார்.

**பாடத் தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

அறிமுகம்

பொதுசனத் தொடர்பு என்பது நற்பெயரொன்றை அல்லது நற்தோற்றத்தை உருவாக்குவதற்காக நபர்களின் கருத்துக்கள் மற்றும் நடத்தைகளில் தாக்கம் செலுத்துதல் என எளிமையாக வரையறை செய்யலாம். நல்லெண்ணம், அந்நியோன்யப் புரிந்துணர்வு என்பவற்றை வியாபித்தல் மற்றும் பேணிப்பாதுகாத்தலிற்காகத் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் நிலையான பிரயத்தனம் எனப் பொதுமக்கள் தொடர்பினை அறிமுகப்படுத்த முடியும். ‘பொதுமக்கள்’ என்போர் ஒரேமாதிரியான மற்றும் பொதுத் தேவைகளையுடைய சமூகமொன்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் நபர்கள் எனக் குறிப்பிடலாம். அவர்கள் பல்வேறு தேவைகள், எதிர்ப்பார்ப்புக்கள் மற்றும் இலக்குகளைக் கொண்ட சமூகமாகும். எனவே அவர்கள் கொடுக்கல் வாங்கல் செய்வோர், விசேட தேவையுடையோர், அரசு, நிறுவனங்கள் அல்லது வேறு தலையீட்டாளர்களாகவும் இருக்கலாம். ‘தொடர்பு’ என்பதால் கருதப்படுவது பொதுத் தேவைகள் மற்றும் செயற்பாடுகளைப் பகிர்ந்துகொள்ளும் செயன்முறையினை

நோக்காகக் கொண்ட அந்நியோன்யப் புரிந்துணர்வாகும். ஏதேனும் இரு தரப்பினரின் தொடர்புகளில் ஆழமான மானுடப் பண்புகள் பொதிந்து கிடக்கின்றன.

மனிதர்கள் குழுக்களாக வாழ்ந்தபோது தாய், தந்தை மற்றும் பிள்ளைகள் எனும் பிரிவுகளினால் குடும்பம் எனும் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. மானுடவியலாளர்களின் கருத்துக்களுக்கிணங்க, குடும்பத்தின் சக்திமிகு தன்மையை நிலைக்கச் செய்வதற்குக் குடும்ப உறுப்பினர்களிடையே காணப்பட்ட அந்நியோன்யத் தொடர்புகள் காரணமாகின. மானுடப் பரிணாம வளர்ச்சியில் அரசியல் மற்றும் பொருளாதாரம் என்ற அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட சிக்கலான அமைப்புக்களினால் மனிதன் பின்பற்றிய அந்நியோன்யத் தொடர்புகள் வலுப்பெற்றன.

சமூகக் கட்டமைப்பின் காரணமாக உருவான வியாபார அமைப்புகள், சங்கங்கள், கழகங்கள் போன்ற அமைப்புகளில் செலுத்தும் தாக்கம் காரணமாகப் பொதுசனத்தொடர்புத் துறையானது விஞ்ஞானரீதியாகவும் ஒரு நவீன பாடத்துறையாகவும் வேர்விட்டுத் திகழ்கிறது. ஏதேனுமோர் சமூக அமைப்பினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களின் கவனத்தைப் பெறும் மற்றும் அதன்மூலம் சமூக அமைப்பானது தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும் ஒன்றிணைந்த வேலைத்திட்டமாகப் பொதுசனத் தொடர்பானது காணப்படுகிறது.

- தொடர்பாடலின் மூலம் தனிமனிதன்,சமூக அமைப்பு மற்றும் தொடர்பாடப்படும் தகவல் / செய்தி என்பன மிகவும் நெருக்கமாவது பொதுசனத் தொடர்பிற்கு ஏற்பவேயாகும். சமூகக் கட்டமைப்பின் செயற்பாடானது படிப்படியாக வளர்ச்சி நிலையை அடையும்போது அதற்கேற்ப அந்த அமைப்பினது தகவல்கள் சிறந்த முறையில் தனிமனிதன் மற்றும் சமூகத்திற்குப் பரவலாகவும் முறையாகவும் வழங்கப்பட வேண்டும். அதன்மூலம், பொதுமக்கள் தொடர்பானது சிறந்த முறையில் நடைமுறையில் பேணப்பட்டுக் காணப்படும்.
- பொதுசனத் தொடர்பு எண்ணக்கருவானது வளர்ச்சியடைந்து சமூகக் கட்டமைப்பின் பல்வேறு துறைகளிலும் வியாபித்துள்ளது. வியாபாரம், வர்த்தக நடவடிக்கைகள், வைத்தியசாலை, சங்கங்கள், அமைப்புக்கள்,அரசு, நிர்வாக நடவடிக்கைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றினை நடாத்திச் செல்லவும் மற்றும் தொழிற்துறைச் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதிலும் பொதுமக்கள் தொடர்புத் துறையானது தாக்கம் செலுத்துகிறது.

**பொதுசனத்தொடர்பின் ஆரம்பம் மற்றும் பரவல்**

- புராதன மானுடச் சமூகத்தில் பல்வேறு விதமான தொடர்புகள் பேணப்பட்டு வந்தன. அவை மனிதனுடைய அடிப்படைத் தேவைகளுக்காக உருவாக்கிக்கொண்ட தேவைகளாகக் கருதப்படுகிறது.
- பொதுமக்கள் தொடர்பு சுமார் 4000 வருடங்கள் வரையான வரலாற்றினைக் கொண்டது. ஈராக்கில் கிடைக்கப்பெற்ற ஆப்பு வடிவிலான எழுத்துக்களுடன் கிடைக்கப்பெற்ற

மட்பலகையொன்றில் ஆட்சியாளர்களால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் அறுவடை செய்வது எவ்வாறு?, நீர்ப்பாசனத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்துவது எவ்வாறு? மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஆவணமானது அரசன் மற்றும் மக்கள் இடையில் தொடர்பு பேணப்பட்டு வந்தமையை வலியுறுத்துகிறது.



Cuneiform

- ஜூலியஸ் சீசரினால் வெளியிடப்பட்ட 'பொதுமக்களின் கடமைப் பொறுப்புக்கள்' என்ற வெளியீட்டின்மூலம், சீசர் உரோமைக் கைப்பற்றப் பொதுமக்களின் உதவி மற்றும் ஒத்துழைப்பைப் பெற்றுகொண்ட விதம் தெளிவாகிறது. சீசர் அதற்காகத் தொடர்ச்சியாக "Ven - நான் வந்தேன், Vid– நான் கண்டேன், Vic - நான் வெற்றி பெற்றேன்" எனும் தாரக மந்திரத்தைப் பயன்படுத்தி வந்தார்.
- கிரேக்கர்களும் உரோமர்களும் தேசியப் பண்பாட்டை மேம்படுத்தப் பொதுமக்கள் தொடர்புத் திறன்களை (Public Relations Skills) பயன்படுத்தியுள்ளமை தெளிவாகிறது. இந்நாடுகளில் ஆட்சியாளர்களால் மக்களுக்கு எழுத்தாக்கங்களைப் புனைதல், கருத்துக்களைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.
- எமது நாட்டில் தேசியரீதியாக நடைமுறையிலிருந்த அத்தம் முறை, குளங்களைப் புனரமைத்தல்தொடர்புடைய அடிப்படைச் செயற்பாடுகளில் பொதுமக்கள் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டமை என்பவற்றையும் இங்கு ஒத்ததன்மையுடன் குறிப்பிடலாம். தேசியரீதியாக நடைபெற்ற இவ்வாறான எடுத்துக்காட்டுகள் தொடர்பாக ஆராய்தல் இக்கற்கைத்துறைக்குப் பயன்மிக்கதாக அமையும்.
- பொதுமக்கள் தொடர்பு ஒரு எண்ணக்கருவாக உருப்பெற்றது ஐரோப்பாவில் இடம்பெற்ற கைத்தொழில் புரட்சியின் பின்னராகும். தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்டு முதலாளிமார்களுக்கும் தொழிலாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளை முகாமைத்துவம் (Conflict Management) செய்வதற்காக இப்பொதுசனத் தொடர்பு, கோட்பாட்டுரீதியாக வளர்ச்சியடைந்தது.
- அமெரிக்காவின் பென்சில்வேனியப் புகையிரதப் பாதை மற்றும் நிலக்கரித் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்கள் தொடர்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய ஐவி லீ (1877 – 1934) உலகின் முதலாவது பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தை ஆரம்பித்தார்.




ஐவி லீ (1877 – 1934)

- முதலாம் மற்றும் இரண்டாம் உலகமகா யுத்த காலங்களில் பொதுமக்கள் தொடர்பு பற்றித் தீவிர கவனம் செலுத்தப்பட்டதோடு யுத்தம் முடிவடைந்தபின் அது வேகமாக வளர்ச்சியடைந்தது.
- இரண்டாம் உலகப் போரின் ஆரம்பகர்த்தாவான எல்மா**டேவிஸ்** என்பவரால் போர் தொடர்பான செய்திகளைப் பரிமாற்றும் அலுவலகமொன்று 1942ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரிற்கு மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்குப் பல்வேறு உபாய வழிமுறைகள் இவ் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.
- 1945 ஆம் ஆண்டு ‘Public Relations’ எனும் நூலினூடாக எட்வர்ட் எல். பெர்ணீஸ் (1881 – 1995) பொதுமக்கள் தொடர்பு பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதோடு, பொதுமக்கள் தொடர்பில் விழுமியக் கற்கைகளின் முக்கியத்துவம் பற்றியும் தெளிவுறக் கூறியுள்ளார்.



எட்வர்ட் எல். பெர்ணீஸ் (1881 – 1995)

பெர்ணீஸ் அவர்கள் எழுதிய
பொதுமக்கள் தொடர்பு எனும் நூல்




- 1950களின் பின்னர், பொதுமக்கள் தொடர்பு ஓர் தொழில்சார் துறையாக வளர்ச்சியடைந்ததோடு அது பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது.
- தற்காலத்தில் பொருளாதாரம், அரசியல், சமூகம், சூழலியல்,பண்பாடு மற்றும் பௌதீகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் பொதுமக்கள் தொடர்பு என்ற எண்ணக்கரு வியாபித்துள்ளது.
- பொதுமக்கள் தொடர்பை வரலாற்றுரீதியாக நோக்கிய ஜேம்ஸ் குருனிக் (James Grunig) மற்றும் றொட் ஹன்ட்ஸ் (Todd Hunts) ஆகியோர் நான்கு மாதிரிகளை விபரித்துள்ளனர்.

1. செய்தி முகவர்/பரப்புரை மாதிரி(Press Agentry/ Publicity Model)

- 19ஆம் நூற்றாண்டில், மக்கள் கருத்தியலில் தாக்கத்தைச் செலுத்தும் செய்திகளை உருவாக்கும் செய்தி முகவர் அமைப்புக்கள் உருவாகின.
- முன்னேற்றம் (promotion) என்பதால் கருதப்படுவது ஊடக உலகில் முன்னிலைக்கு வருதல் என்பதாகும்.
- அதனூடாக மிகைப்படுத்தலுக்கு முதலிடம் வழங்கப்படுவதோடு உண்மைக்கு இரண்டாம் இடம் வழங்கப்படுகிறது.
- ஒரு வழித் தொடர்பாடல் தாக்கம் காணப்படுகிறது.
-

2. பொதுமக்கள் தகவல் மாதிரி (Public Information Model)
   - 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் உண்மையானதும் சரியானதுமான செய்தி அறிக்கையிடலின் தேவை உருவானது.
   - தொடர்பாடல் மூலமாக மறைத்தல் இடம்பெறக்கூடாது என்ற கருத்துத் தோற்றம் பெற்றது.
   - ஒரு வழித் தொடர்பாடல் நடைமுறையிலிருந்தமை.

3. இருவழியான சமச்சீரற்ற மாதிரி (Two way Asymmetric Model)
   - 1900 தசாப்தமாகும்போது நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்தமை மற்றும் அதனால் ஏற்பட்ட போட்டித்தன்மையுடன் கூடிய பரப்புரை.
   - சந்தைப்படுத்தல் தொடர்பாடல் இலக்குக் குழுவினை அடிப்படையாகக் கொண்டு செயற்படல்.
   - விஞ்ஞானரீதியாகத் தூண்டுதல் பற்றிய கற்றல் விருத்தியடைதல் மற்றும் அதற்காக உளவியல் முறைமைகள் பயன்படுத்தப்படுதல்.
   - இருவழித் தொடர்பாடல் முறைகள் விருத்தியடைதல்.
   - அதன் சமநிலையற்ற தாக்கம் தொடர்பாக இனங்காணல் அவசியமாதல்.
   - சுயசரிதைத் தொடர்பாடல் (Autobiographic Communication) போக்குகள் தாக்கம் மிக்க சூழலொன்றை உருவாக்கின.

4. இருவழியான சமச்சீரான மாதிரி (Two way Symmetric Model)
   - 1980 களில் பொதுமக்கள் தொடர்பு எனும் பாடத்துறை அபிவிருத்தி அடைதல்.
   - எதிர்மறையான தாக்கங்கள் அதிகரித்ததால் ஒழுக்கவிழுமியங்களின் முக்கியத்துவம் உருவானமை.

- அப்போது காணப்பட்ட நடைமுறைசார் பரப்புரை அமைப்புகளுக்குத் தாம் மாற்றம் அடையவேண்டும் என்ற எண்ணம் உருவாதல்.
- அவ்வாறான அமைப்புகள் மற்றும் பெறுநரிடையே புரிந்துணர்வை விருத்தி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டமை.
- முரண்பாடுகளைத் தீர்த்தல், கலந்துரையாடல், கருத்தரங்கு, நிகழ்வு முகாமைத்துவம் என்பன முன்னேற்றமடைதல்.
- பரஸ்பரப் புரிந்துணர்வு, பரஸ்பர கௌரவம் என்பவற்றை ஏற்படுத்தும் ஜனநாயகத் தேவை ஏற்பட்டமை.
- பொதுமக்கள் தொடர்பு எனும் துறை வினைத்திறனான துறையாக மாற்றமடைந்தமை.

**பொதுமக்கள் தொடர்பின் அவசியமும் முக்கியத்துவமும்**

- பொதுமக்கள் தொடர்பானது அவசியமாவது ஒரு நிறுவனத்தின் நோக்கத்தைச் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்தக்கூடிய தொடர்பாடல் அம்சம் என்பதினாலாகும். அதன்போது பொதுமக்கள் தொடர்பு நிறைவேற்றும் செயற்பாடுகளை இனங்காண முடியும்.
- பிலிப் ஜே. கிச்சன் (Philip J. Kitchen) தனது Public Relations: Principles and Practice எனும் நூலில் பொதுமக்கள் தொடர்பின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் பற்றிக் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்.
  - ✓ பொதுமக்கள் தொடர்பானது முகாமைத்துவச் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்கிறது.
  - ✓ பொதுசனத் தொடர்பு மூலம் பல்வேறு செயற்பாடுகள் மற்றும் நோக்கங்களை நடைமுறைக்குச் சாத்தியமான முறையில் பரந்தளவில் மேற்கொள்ளமுடியும்.
  - ✓ பொதுமக்கள் தொடர்பு இருவழியாக அல்லது பரஸ்பரமாகச் செயற்படும்.
  - ✓ நிறுவனத்தோடு தொடர்பு கொள்வது தனி ஒரு மனிதனல்ல, நுகர்வோர் அல்லது மக்கள் என்பதைப் பொதுமக்கள் தொடர்பு சுட்டிக்காட்டுகிறது.
  - ✓ பொதுமக்கள் தொடர்பு மூலம் ஏற்படும் தொடர்பு குறுகிய காலத்துக்குரியதன்று. அது நீண்ட காலத்துக்குரிய செயன்முறையாகும்.
- இதற்கு மேலதிகமாக,
  - ✓ ஒரு நிறுவனத்துக்கும் மக்களுக்குமிடையே பொதுசனத்தொடர்பை உருவாக்குதல்.

- ✓ பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நல்லெண்ணத்தை மேம்படுத்தும் கலை அல்லது விஞ்ஞான முறையில் செயற்படல்.
- ✓ பொதுமக்களின் விருப்பு மற்றும் இரசனையுணர்வுக்கு ஏற்ப நிறுவனக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் முறையை அறிந்துகொள்ளல்.
- ✓ பொதுமக்களுடன் தொடர்பு கொள்வதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.

**பொதுமக்கள் தொடர்பு அவசியமான சந்தர்ப்பங்கள்**

- மக்கள் வாழ்வை வளமானதாக மாற்ற மற்றும் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக.
- பொதுவாக எல்லா வகையான சமூகச் செயற்பாடுகளிலும் (உதாரணமாக - பணிகள், சிக்கல்கள், வெற்றி என்பன) மக்களின் பங்களிப்பை உயர்மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்காக.
- புதிய பொருள் அல்லது சேவையை அறிமுகம் செய்வதற்காக.
- போட்டிச் சந்தர்ப்பங்களில் ஏற்படும் எதிர்விளைவுகளை இழிவளவாக்குவதற்காக.
- அமைப்பு மற்றும் அதன் அங்கத்தவர்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்துவைப்பதற்காக.
- நிறுவன நற்பெயருக்குக் களங்கம் ஏற்படும் சந்தர்ப்பங்களின்போது பிரதிமைகளுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக.
- அனர்த்த மற்றும் அவசர நிலைமையின்போது அறிவுறுத்தல் வழங்குவதற்காக.
- ஆபத்தான நிலைமைகளை நிர்வகிப்பதற்காக.
- பொதுமக்கள் தொடர்பு பற்றி மேலதிகமாகக் கற்பதற்கு முன் அது விளம்பரத்திலிருந்து எவ்வாறு மாற்றமடைகிறது என்பது பற்றி அறிதல் முக்கியமானதாகும்.இது தொடர்பாக ஜோசப்.ஆர்.டொமினிக் (Joseph R. Dominick – 2010) குறிப்பிடும் பிரதான காரணிகள் சிலவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்,
    - ✓ பொதுசனத்தொடர்பு மற்றும் விளம்பரம் என்பவற்றுக்கிடையிலான ஒற்றுமையாவது இவ் இரண்டு ஊடகங்களினதும் நோக்கம் தூண்டுதலாகும். அதற்காக வெகுசன ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
    - ✓ பொதுமக்கள் தொடர்பு, ஓர் முகாமைத்துவச் செயற்பாடாகும்.
    - ✓ விளம்பரப்படுத்தல், ஓர் விற்பனைச் செயற்பாடாகும்.
    - ✓ விளம்பரப்படுத்தல் வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்துவதோடு, பொதுமக்கள் தொடர்பு வெகுசன ஊடகங்கள் மற்றும் வேறு உபகரணப் பயன்பாட்டுத் தொடர்பாடல் உபாயவழிகளைப் பயன்படுத்துகிறது.

- ✓ விளம்பரப்படுத்தல் பொதுமக்கள் தொடர்பினைப்போல் ஆட்களிடைத் தொடர்புகளைப் பேணாது. அதேபோன்று விளம்பரப்படுத்தலுக்கு அனுசரணை அவசியமாகும். இதன் மூலம் கூறப்படுவது விளம்பரப்படுத்தலுக்காக நேரடியாகப் பணம் செலவு செய்யப்படுவதோடு பொதுமக்கள் தொடர்பில் பணச்செலவு ஏற்படாது.

**மதிப்பீடு**

1. பொதுமக்கள் தொடர்பின் பின்னணியை விளக்குக.
2. ஊடக நிறுவனமொன்றுக்கான பொதுசனத் தொடர்பின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் பற்றி எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.
3. சுதேசியரீதியாகக் காணப்பட்ட பொதுமக்கள் தொடர்புச் சந்தர்ப்பங்கள் ஐந்தினை ஆய்வுசெய்து முன்வைக்குக.

தேர்ச்சி மட்டம் : 8.2 பொதுமக்கள் தொடர்பு என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.

பாடவேளைகள் : 06

கற்றற் பேறுகள் : பொதுமக்கள் தொடர்பு என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.

**பாடத் தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

இந்தத் துறை தொடர்பாகப் பல்வேறு கோணங்களிலும் அவதானம் செலுத்தல் அவசியமாகும். ஆன்மீகத் தலைவர்கள், தத்துவஞானிகள், கல்வியாளர்கள், மற்றும் சமூகவியல் நிபுணர்கள் எனப் பல்துறைசார் நிபுணர்கள் இத்துறை தொடர்பாகக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவ்வாறான சில வரைவிலக்கணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. வெப்ஸ்டர் நியூ கொலிஜியட் அகராதி –Webster New Collegiate Dictionary

   "பொதுமக்கள் தொடர்பு என்பது ஒரு நபர், நிறுவனம் அல்லது அமைப்பு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் நல்லெண்ணத்தை மேம்படுத்துவதற்காகவும் மக்களைத் தூண்டும் செயற்பாட்டுப் பல்தொகுதியாகும்."

2. எட்வர்ட் எல். பெர்ணீஸ் (Edward L. Bernays)

   "பொதுமக்களை விழிப்புணர்வூட்டல், தூண்டுதல் மற்றும் அவர்களுக்கிடையில் இடைத்தொடர்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் திட்டமிடல் என்பன பொதுமக்கள் தொடர்பாகும்."

3. சார்ள்ஸ் பிளேகார்ட் (Charles Placard)

   "பொதுசனத் தொடர்பு என்பது நல்லெண்ணத்துடன் பாய்ந்துவரும் தெளிவான கருத்துப் பிரவாகமாகும்."

4. சாம் பிளக் (Sam Black)

   "ஏதேனுமோர் அமைப்புடன் தொடர்புடைய உள்ளக மற்றும் வெளியக அனைத்துத் தரப்பினருக்கிடையிலும் பரஸ்பரப் புரிந்துணர்வை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் பொதுமக்கள் தொடர்பு ஆகும்."

5. பொதுமக்கள் தொடர்புகளுக்கான பிரித்தானிய பட்டய நிறுவனம் (British Chartered Institute of Public Relations)

“பொதுமக்கள் தொடர்பானது பல்வேறு அம்சங்களுடன் தொடர்புறுகின்றது. சமூகமய அமைப்புகள்,வர்த்தக விளம்பரங்கள், தகவல், செய்தி அறிக்கை, சமூகம், பின்னூட்டல், ஊடகம், தொடர்பாடல் மற்றும் பெறுநர்கள் என்பன அவற்றுள் சிலவாகும்.

மக்கள் தொடர்பு என்பது பல்வேறு காரணிகளை உள்ளடக்கியுள்ளது. அமைப்புகள், விளம்பரங்கள், பிரச்சாரங்கள், தகவல், செய்தி, சமூகம், பின்னூட்டம், ஊடகம், தொடர்பாடல் மற்றும் இரசிகர்கள், நேயர்கள் என்பன அவற்றுள் சிலவாகும்.




- பொதுசனத் தொடர்பை ஒரு நிறுவனத்தின் இரு கண்களாகவும் இரு செவிகளாகவும் ஒப்பிடலாம். ஏனென்றால், ஒரு நிறுவனம் பற்றிய மக்களது மனப்பாங்கு, கருத்து மற்றும் அவர்களது எதிர்வினைகளை ஆய்வு செய்து அவற்றை மெருகூட்டப் பொதுசனத் தொடர்பு பெரிதும் துணைபுரிகிறது.

மதிப்பீடு

1. பொதுமக்கள் தொடர்பு என்பதனை வரைவிலக்கணங்களுடன் விளக்குக.
2. பொதுமக்கள் தொடர்பு பற்றி பல்வேறு அறிஞர்களினால் அல்லது நிறுவனங்களால் குறிப்பிடப்பட்ட மேலும் மூன்று வரைவிலக்கணங்களைத் தேடியறிந்து, அவற்றினூடாகப் பொதுமக்கள் தொடர்பு பற்றிய பல்வேறு கருத்துக்களை ஆராய்க.

தேர்ச்சி மட்டம் : 8.3 பொதுமக்கள் தொடர்புச் சந்தர்ப்பங்கள் பற்றிய தெளிவுடன் அவற்றை விபரிப்பார்.

பாடவேளைகள் : 06

கற்றற் பேறுகள் : பொதுமக்கள் தொடர்புச் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விபரிப்பார்.

**பாடத்தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழக்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

- ஏதேனுமோர் அமைப்பு அல்லது நிறுவனம் தம்மோடு இணைந்த மக்களுடன் பரஸ்பரப் புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் மேம்படுத்துவதற்கும், தாம் சார்ந்த தோற்றத்தை (Image) உயர்த்துவதற்காகவும் பொதுமக்கள் தொடர்பைப் பயன்படுத்துகின்றது. அது பல்வேறு சந்தர்ப்பங்களைக் கொண்டது.

**1. அரச - மக்கள் தொடர்பு**

- அரச - மக்கள் தொடர்பு என்பது பிரதானமாகச் சர்வதேசரீதியாக இரண்டு அல்லது பல அரசுகள் தமக்கிடையில் ஏற்படுத்துவதும் பேணுவதுமான நல்லுறவினைக் குறிக்கும். அதில் கீழ்க்காணும் காரணிகள் தொடர்பாக அவதானம் செலுத்தப்படும்.
    - அரசின் வெளிநாட்டுக் கொள்கை.
    - பல்வேறு சர்வதேச அமைப்புகளை உருவாக்குதல்.
    - வெளிநாட்டுத் தூதரகங்களுடன் ஏற்படுத்தப்படும் தொடர்புகள்.

- எனினும், தற்கால நிலைமையை விபரிக்கும்போது அரசின் மக்கள் தொடர்பு என்பதைச் சர்வதேச அரசுகளுடன் ஏற்படுத்தப்படும் தொடர்பு என்பதோடு மட்டும் வரையறுத்துவிட முடியாது. உள்நாட்டுக்குள்ளும் அரசின் மக்கள் தொடர்பு பற்றிக் கற்க முடியும். அதாவது, ஒரு அரசுக்குக் கீழுள்ள அனைத்து அமைப்புகளும் நிறுவனங்களும் அரச சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டும். எனவே, அந்நிறுவனங்கள் அரசுடன் பேணும் பொதுசனத் தொடர்பினையும் அரச மக்கள் தொடர்பு எனலாம். அதன்போது கீழ்வரும் காரணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

    - அரசின் உள்ளக நீதிக்கட்டமைப்பு.
    - அனுமதிப் பத்திரம் வழங்கல்.

- ➢ ஒழுக்கதர்மக் கட்டமைப்பு.
- ➢ அரசியற் பிரமுகர்களுடனானதொடர்பு முகாமைத்துவம்.
- ➢ தூண்டுதல் மற்றும் தூண்டுபவரின் செயற்பாடுகள்.

2. **நிறுவன- பொதுமக்கள் தொடர்பு**

- நிறுவனம்சார் மக்கள் தொடர்பு என்பது, நிறுவனமொன்று அதனோடிணைந்த உள்ளக மற்றும் வெளியக மக்களுடன் பேணும் தொடர்பினைக் குறிக்கும். அதன்போது கீழ்வரும் தரப்பினருடன் மேற்கொள்ளப்படும் தொடர்பு பற்றிக் கவனம் செலுத்தப்படும்.

1. ஊழியர்கள்
2. மக்கள்
3. அரசு
4. ஊடகம்
5. நுகர்வோர்/ பயனாளிகள்
6. முதலீட்டாளர்கள்

- இவ்வாறு பல்வேறு தரப்பினரோடு தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின்மீதான நல்லெண்ணத்தையும் மக்கள் பிரதிமையையும் உயர்த்துவதே நிறுவனத்தின் நோக்கமாகும். நிறுவனம்சார் மக்கள் தொடர்பைப் பேணும்போது பின்வரும் துறைகள் பற்றிக் கவனம் செலுத்தவேண்டும்.
  - ➢ நிறுவனத்தின் நற்பெயர்.
  - ➢ நிறுவனத்திற்கும் தொடர்பை ஏற்படுத்தும் தரப்பினருக்கும் இடையிலான நுழைவாயில்.
  - ➢ பல்வேறு கருத்துருவாக்க நபர்கள்.
  - ➢ ஊடகம் (வெகுசன மற்றும் புதிய ஊடகங்கள்).

3. **தொழில்சார் பொதுமக்கள் தொடர்பு**

- தற்கால நிமைமையை ஆராய்கையில், பொதுமக்கள் தொடர்பானது வெறுமனேகற்கை என்ற நிலையைத் தாண்டித் தொழில்சார்துறையாக மாறியுள்ளது. அதாவது, உலகில் பல அபிவிருத்தியடைந்த நாடுகளில் இத்துறை உயர்ந்த ஊதியமுடைய,நிறுவனத்தின் உயர்மட்ட முகாமைத்துவத் தரமுடைய தொழில்சார் துறையாக மாற்றமடைந்துள்ளது. ஆதலால், தொழில்சார் மக்கள் தொடர்பு பற்றிக் கவனம் செலுத்தும்போது பின்வரும் காரணிகள் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

- பொதுசனத் தொடர்பு மற்றும் தொழில்சார் நிலைமைக்கு இடையிலான தொடர்பு.
- பொதுசனத் தொடர்புக்கு அவசியமான பூரண தகுதிநிலை.
- பரிசோதனை மற்றும் அறிவு.
- பயிற்சி மற்றும் தொழிற்சார் அபிவிருத்தி.
- தொழில்சார் தரப்பினர் மற்றும் பங்குபற்றுநர்.
- நன்னடத்தைசார் கட்டமைப்பு.
- செயற்பாட்டாளர் தொடர்பான நம்பகத்தன்மை.
- சர்வதேச பிணக்குகள் தொடர்பான புரிந்துணர்வு.
- சமூகப் பொறுப்புணர்வு.

**4. வியாபாரம் மற்றும் பொதுமக்கள் தொடர்பு.**

- இலாபத்தை நோக்காகக் கொண்ட ஒரு வர்த்தகத் துறையால் தமது முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு உபாய வழிகள் வணிகரீதியான மக்கள் தொடர்பு எனக் குறிப்பிடப்படுகின்றது. இதன்போது வியாபாரிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் நுகர்வோரைக் கவர்வதற்காக அதனைப் பயன்படுத்துகின்றனர். தமது வியாபார விருத்திக்காக,
    - புதிய பொருட்கள் மற்றும் சேவைகளை அறிமுகம் செய்வதற்கு.
    - போட்டிச் சந்தர்ப்பங்களில் ஏற்படும் எதிர்விளைவுகளை இழிவளவாக்குவதற்கு.
    - அமைப்பு மற்றும் அதன் அங்கத்தவரிடையே ஏற்படும் முரண்பாட்டு நிலைகளைத் தீர்த்து வைப்பதற்கு.
    - நிறுவனத்திற்குக் களங்கம் ஏற்படும் செயற்பாடுகளின்போது நிறுவனத்தின் நற்பெயருக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கு.
- இதன்போது வியாபாரிகளால் பல்வேறு பொதுசனத் தொடர்பு உபாய வழிமுறைகள் பயன்பாட்டில் கொள்ளப்படும். அவையாவன,
    - வியாபாரக் கழிவு வழங்கல்.
    - வளர்ச்சிக்காக விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்ளல்.
    - நிறுவன சமூகப் பொறுப்புணர்வு (Corporate Social Responsibility-CSR) செயற்றிட்டத்தை செயற்படுத்தல்.
    - ஊடகப்பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
    - வர்த்தகக் கண்காட்சி நடாத்துதல்.
    - ஊடகத் தொடர்புகளைப் பேணல்.
    - அனுசரணை வழங்கல்.

5. ஊடகமும் பொதுமக்கள் தொடர்பும்

- ஒரு நிறுவனத்தின் நல்லெண்ணத்தைப் பரப்புவதிலும் அதன் தோற்றத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகிப்பவை ஊடகங்கள் ஆகும். தற்காலத்தில் வெகுசன ஊடகங்களோடு இணைந்து புதிய ஊடகங்களும் இப்பணியைச் செய்து வருகின்றன. அதன்போது அந்த ஊடகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள், பணிப்பாளர் சபை, ஊடகவியலாளர்கள், விசேட நிபுணர்கள், எழுத்தாளர்கள், பதிப்பாசிரியர்கள், புகைப்படக் கலைஞர்கள், பிரதி எழுத்தாளர்களோடு சிறந்த தொடர்பினைப் பேணுவதே ஊடகப் பொதுமக்கள் தொடர்பின் பிரதான நோக்கமாகும். அதற்காகக் கீழ்க்காணும் வழிமுறைகள் பின்பற்றப்படும்.

    - ஊடக அறிவித்தல்.
    - உத்தியோகபூர்வ செய்தி அறிவிப்பு.
    - ஊடக மாநாடு.
    - புகைப்பட அறிவிப்பு.
    - வீடியோச் செய்தி.
    - ஊடக குறுவெளியீடுகளை வெளியிடுதலும் தெளிவுபடுத்தலும்.

- மேற்குறிப்பிட்ட விடயங்கள் மாத்திரமல்லாது, சுயாதீன ஊடக முன்வைப்பாளர்களைப் பயிற்றுவித்தல், ஊடகவியலாளர்களுக்கு விருந்துபசாரங்களை ஏற்பாடு செய்தல், பரிசில்கள் வழங்குதல், வாழ்த்து அட்டைகளை அனுப்புதல் போன்ற உபாய வழிகள் மூலமாகவும்ஊடக நிறுவனம் பொதுமக்கள் தொடர்பைப் பேணி வருகின்றது.

## மதிப்பீடு

1. பொதுமக்கள் தொடர்புச் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக.
2. ஒரு நிறுவனம் என்ற வகையில் உங்கள் பாடசாலை வெளிச்சமூகங்களுடன் பேணும் தொடர்பை ஆராய்ந்து, பல்லூடக அளிக்கை மூலமாக (Multimedia Presentation) வகுப்பறையில் முன்வைத்தல்.

தேர்ச்சி மட்டம் : 8.4 பொதுமக்கள் தொடர்புக் கருவிகள் மற்றும் செயலொழுங்குகளை அறிந்து பயன்படுத்துவார்.

பாடவேளைகள் : 10

கற்றற் பேறுகள் :

- பொதுமக்கள் தொடர்புக் கருவிகள் மற்றும் செயலொழுங்குகளை வேறுபடுத்தி அறிந்து அவற்றை விபரிப்பார்.
- தேவையான சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் தொடர்புக் கருவிகள் மற்றும் செயலொழுங்குகளைப் பயன்படுத்துவார்.

**பாடத்தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

- பொதுமக்கள் தொடர்பைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு உபகரணங்களும் விதிமுறைகளும் காணப்படுகின்றன. இந்த உபகரணங்கள் மற்றும் விதிமுறைகளைப் பயன்படுத்தும் முறை நிறுவனத்துக்கு நிறுவனம் மற்றும் நபருக்கு நபர் வேறுபடும். ஒருவழி மற்றும் இருவழித் தொடர்பாடல் முறைகளில் பயன்படுத்தப்படும் பொதுமக்கள் தொடர்பு உபகரணங்கள் காணப்படுகின்றன.
- ஒருவழித் தொடர்பாடலில் செயற்படுத்தப்படும் மரபுரீதியான பொதுமக்கள் தொடர்பு உபகரணங்கள் மற்றும் முறைகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

| உபகரணங்கள் | முறைகள் |
|---|---|
| செய்தி அறிவிப்பு (News Release) | பரிசில்கள் வழங்குதல் (Complements) |
| ஊடகப் பொதி (Media Kit) | விருதுகள் வழங்குதல் (Awards) |
| சிறுபுத்தகங்கள் (Booklets) | ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் (Incentives) |
| விபரப் பத்திரிகை (Leaflets) | பரிந்து பேசுதல்(Advocacy) |
| செய்திமடல் (Newsletter) | நிதிவழங்குதல் (Funds) |
| வருடாந்த அறிக்கை (Annual Reports) | மக்கள் கருத்தை ஆய்வுசெய்தல் (Public Opinion Search) |
| புகைப்படங்கள் (Photographs) | விசேட நிகழ்வு முகாமைத்துவம் (Special Event Management) |

- இருவழித் தொடர்பாடலில் செயற்படுத்தப்படும் பொதுசனத் தொடர்பு உபகரணங்கள் சில,
  - வீடியோக் கருத்தரங்கு.
  - செய்மதி ஊடக வெளியீடு.
  - வீடியோச்செய்தி வெளியீடு.

- ➢ இணையவழிப் பொதுசனத் தொடர்பு (Web Casting, Web Sites, Email, Social Media Networks).
- ➢ இலத்திரனியல் ஊடகச் சஞ்சிகை.
- ➢ இலத்திரனியல் ஊடக மத்திய நிலையம்.

- இருவழித் தொடர்பாடல் முறையைப் பயன்படுத்தும் இப்புதிய பொதுமக்கள் தொடர்புக் கருவிகள், நிறுவனத்தையும் அதனைச் சார்ந்தோரையும் நேரடியாக ஒரே சந்தர்ப்பத்தில் தொடர்புபடுத்துகின்றன. அதன்போது கிடைக்கும் பின்னூட்டல்களின் அடிப்படையில் அச்சந்தர்ப்பத்திலேயே தீர்மானம் மேற்கொள்ளப்படும்.
- நிறுவனத்தின் உள்ளகப் பொதுசனத் தொடர்பின்போது ஊழியர்கள் மற்றும் முகாமையாளருக்கிடையில் தொடர்பாடலை மேற்கொள்ளப் பல்வேறு பொதுசனத் தொடர்புக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. உள்ளகத் தொலைபேசிக் கட்டமைப்பு, செய்தி மடல், ஆலோசனைப் பெட்டி, மின்னஞ்சல் போன்றவை இவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.
- நிறுவன பொதுசனத் தொடர்புச் செயற்றிட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியவாறு தொடர்பாடல் முறைகள் பின்பற்றப்படும். இதன்போது வெறுமனே இலாபத்தை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படாது நிறுவனத்தின் பொதுத்தேவை மற்றும் இருப்பு என்பவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும். வருடாந்த அறிக்கைகள், கருத்தரங்குகள், ஒழுக்கநெறிக் கோவைகள், வருடாந்தச் சுற்றுலா போன்ற பல்வேறு பொதுசனத் தொடர்புக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- ஊடகத் தொடர்புகளின்போது அந்த ஊடகத்தின் பிரதானிகள், ஊடகவியலாளர்கள், விசேட நிபுணர்கள், எழுத்தாளர்கள், பதிப்பாசிரியர்கள், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் பிரதி எழுத்தாளர்கள் போன்றோருடன் ஆரோக்கியமான தொடர்பினைப் பேணுதல் இந்த ஊடக மக்கள் தொடர்பின் பிரதான நோக்கமாகும். இதன்போது மக்கள் தொடர்புக் கருவிகளான செய்தி அறிவிப்பு, ஊடக அறிவிப்பு, புகைப்பட அறிவிப்பு,வீடியோச் செய்தி அறிவிப்பு, ஊடகச் சிறுவெளியீடுகள் போன்றவை பயன்படுத்தப்படும்.
- வணிகத் தொடர்பாடலின்போது ஒரு வியாபார நிறுவனமானது ஏனைய வியாபார நிறுவனங்களுடன் தொடர்புகளை மேற்கொள்கின்றன. விநியோகத்தர்கள், நுகர்வோர், வியாபாரிகள் போன்ற வியாபாரத்துடன் தொடர்புடையவர்களோடு இத் தொடர்புகள் பேணப்படுகின்றன. இதன்போது கண்காட்சி, வியாபாரச் சந்தைகள், செய்தி மடல் போன்ற பொதுசனத் தொடர்புக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- பொதுமக்கள் செயற்பாடு என்பது, அரசியல்வாதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள், சமயத் தலைவர்கள் போன்ற பொதுமக்கள் தொடர்பைக் கட்டியெழுப்புபவர்களோடு தொடர்புகளைப் பேணுதலாகும். இதன்போது பல்வேறு பொதுசனத் தொடர்புக் கருவிகளை

முன்வைத்தல், ஊடக அறிவுரைகள், தனிப்பட்ட சந்திப்புகள், பொதுக் கூட்டங்கள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

- மக்கள் தொடர்பு என்பது சமூகத்தில் உயர்மட்டக் குழுவினர், தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் மக்கள் தலைவர்களோடு தொடர்புகளைப் பேணுதலைக் குறிக்கும். இதன்போது கண்காட்சி நடாத்துதல், வெளியீடுகளை முன்வைத்தல், கடிதம் அனுப்புதல், கூட்டம் நடாத்துதல், சிறிய குழுச் செயற்பாடுகள், விளையாட்டுச் செயற்பாடுகள், விளையாட்டு அனுசரணைகளை மேற்கொள்ளல் போன்ற பல்வேறு தொடர்புக் கருவிகள் பயன்படுத்தப்படும்.
- முதலீட்டுத் தொடர்புகள் எனும்போது நிதியுடன் தொடர்புடைய அமைப்புக்கள் மற்றும் நபர்களுடன் தொடர்புகளைப் பேணுதலை குறிக்கும். இதற்காகச் செய்தி மடல், ஊடக அறிவிப்பு நிகழ்வுகள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.
- அனர்த்த முகாமைத்துவச் சந்தர்ப்பங்களின்போதும் திடீர் நிலைமைகளின்போதும் நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் தரப்பினருடன் தொடர்பாடலில் ஈடுபடலின்போதும் சிறந்த தொடர்புகளைப் பேணுதல் நடைபெறும். ஊடகக் கலந்துரையாடல், செய்தி அறிவிப்பு, விழிப்புணர்வூட்டல் போன்றவற்றினூடக அனர்த்த நிலைமையின்போது பாதுகாப்புப் பிரிவு, வைத்தியசாலை, போக்குவரத்து, வெகுசன ஊடகங்கள் மற்றும் மக்களைத் தொடர்புபடுத்தல் இங்கு நடைபெறும்.
- வெளியீட்டு முகாமைத்துவத்தில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் வெகுசன ஊடகத் தொடர்பாடல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல் நடைபெறும். பல்வேறு பொதுமக்கள் தொடர்புக் கருவிகளான துண்டுப் பிரசுரங்கள் தயாரித்தல், உள்ளக சஞ்சிகை, செய்தி மடல், ஊடக அறிவித்தல்கள் மற்றும் இணையத் தளம் என்பவற்றைத் தயாரித்தல் மற்றும்மதிப்பீடு செய்தல் என்பன இங்கு நடைபெறும்.
- இது தவிர வானொலி மற்றும் தொலைக்காட்சிக் கலந்துரையாடல், வினாவிடை நிகழ்ச்சிகள், கவிதை, சிறுகதை, சித்திரப் போட்டி, சஞ்சிகை, சுற்றுலா செல்லல் ஆகியவற்றையும் குறிப்பிடலாம்.

**மதிப்பீடு**

1. பொதுமக்கள் தொடர்புக் கருவிகள் மற்றும் விதிமுறைகள் பற்றிய பட்டியலொன்றைத் தயாரிக்க.
2. பாடசாலையில் ஏதேனுமோர் விழாவிற்கு ஊடக அனுசரணையைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய பொதுமக்கள் தொடர்புக் கருவிகள் மற்றும் விதிமுறைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
3. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் சிலவற்றில் பயன்படுத்தப்படும் பொதுசனத் தொடர்புக் கருவிகள் மற்றும் விதிமுறைகளை மேற்பார்வை செய்து ஒப்பீட்டுரீதியாக ஆராய்க.

தேர்ச்சி மட்டம் : 8.5 பொதுசனத் தொடர்பு அதிகாரியின் கடமைகளை விபரிப்பார்.

பாடவேளைகள் : 08

கற்றற் பேறுகள் :

- பொதுசனத் தொடர்பு அதிகாரி மற்றும் அவரின் கடமைகளை விமர்சனரீதியில் முன்வைப்பார்.
- ஊடக அதிகாரியின் பொதுமக்கள் தொடர்புக் கடமைகளை விபரிப்பார்.

**பாடத்தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**பொதுசனத் தொடர்பு அதிகாரியின்செயற்பாடுகள்**

- பொதுசனத் தொடர்பு அதிகாரி (Public Relations Officer – PRO) எனப்படுபவர் நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளியகத் தரப்பினர் இடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும் அதிகாரியாவார்.
- ஏதேனுமோர் நிறுவனத்தின் பொதுமக்கள் தொடர்புச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான நபர் பொதுசனத் தொடர்பு அதிகாரி ஆவார். அவருடைய செயற்பாடுகளாவது நிறுவனம் தொடர்பாக நல்லெண்ணம் உருவாகும் வகையில் மக்களுக்குத் தகவல்களை வழங்குவதாகும் - (Cambridge Business English Dictionary)
- புராதன காலத்தில் பல்வேறு இராச்சியங்களை அடிப்படையாகக் கொண்டு பொதுசனத் தொடர்பு அதிகாரியின் பதவி பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது.உதாரணமாக இலங்கையில் குரல்தரவல்ல அதிகாரி (Talking Chief) புராதன மிசராத்தில் எழுதுநர் (Scriber), புராதன இஸ்ரேலில் இறைதூதர்கள் (Prophets), ஐரோப்பாவில் பிரசித்தப்படுத்துபவர்கள் (Publists), இங்கிலாந்தில் பிரபுக்கள் சபையின் அதிபதி (Lord Chancellor) போன்ற அதிகாரிகள் செயற்பட்டுள்ளனர்.
- பொதுசனத் தொடர்பு அதிகாரிக்குச் சமூக விஞ்ஞானம், உளவியல் விஞ்ஞானம், பொருளாதார விஞ்ஞானம், அரசியல் விஞ்ஞானம், சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் போன்ற துறைகள் பற்றிய பரந்த அறிவு இருத்தல் வேண்டும்.
- நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை மக்களிடம் கொண்டு செல்லல் மற்றும் அது தொடர்பான தெளிவான புரிந்துணர்வை மக்களிடம் ஏற்படுத்தல் என்பன பொதுசனத் தொடர்பு அதிகாரியின் பிரதான கடமையாகும்.

- நிறுவனத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காகப் பொதுசனத் தொடர்புக் கருவிகள் மற்றும் உபாய வழிகளைப் பயன்படுத்துதல் பொதுசனத் தொடர்பு அதிகாரியால் மேற்கொள்ளப்படும்.
- பொதுசனத் தொடர்பு அதிகாரி நிறுவனத்துக்காக பொதுசனத் தொடர்புத் திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை இணைப்புச் செய்தல் மற்றும் அதற்கு அவசியமான உபாயங்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பனவற்றை மேற்கொள்வார்.
- பொதுசனத் தொடர்பு அதிகாரியினால் நிறுவனத்தினுள் கூட்டங்களை ஏற்பாடு செய்தல், வர்த்தக விளம்பர அறிவித்தல்களைத் தயாரித்தல், ஊடக அறிவித்தல்களை வெளியிடுதல், ஆலோசனைச் சேவைகளை நடாத்துதல் மற்றும் வெகுசன ஊடகங்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கட்டியெழுப்பல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
- பொதுசனத் தொடர்பு அதிகாரி ஒருவரிடம் இருக்கவேண்டிய பண்புகள் (Quality of Public Relations Officer) சில கீழே தரப்பட்டுள்ளன.
    - தூண்டலை ஏற்படுத்தக்கூடிய பேச்சு.
    - முன்வைக்கும் திறன்.
    - மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் திறன்.
    - செய்தி முன்வைத்தல், எழுதுதல் மற்றும் தயாரித்தல் திறன்.
    - அறிக்கை, தொழில்சார் வெளியீடுகள், எழுத்தாக்கம் மற்றும் முன்வைக்கும் திறன்.
    - பெறுநரைக் கவர்ச்சிகரமான பேச்சின்மூலம் அணுகும் திறன்.
    - பொதுமக்கள் தொடர்பு ஆய்வுகளை மேற்கொள்ளும் திறன்.

- பொதுசனத் தொடர்பு அதிகாரியிடம் காணப்படவேண்டிய குணாம்சங்களாக நேர்மை, நேரடித்தன்மை, பக்கச்சார்பின்றிய ஆளுமை, செயற்றிறன் மற்றும் ஒத்துழைப்புடன் செயற்படல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.
- நிறுவனமொன்றின் செயற்பாட்டில் பொதுசனத் தொடர்பு அதிகாரியின் பங்களிப்பைப் போலவே ஊடக அதிகாரிகளும் முக்கியமான பணிகளைச் செய்கின்றனர். சில நிறுவனங்களில் பொதுசனத் தொடர்பு அதிகாரியின் பணியைச் செய்வதும் அந்நிறுவனத்தின் ஊடக அதிகாரியே ஆவார்.
- ஊடக அதிகாரி என்பவர் ஏதேனுமோர் நிறுவனத்தின் அல்லது அமைப்பின் வெளியகப் பொதுசனத் தொடர்பை மேம்படுத்துவதற்காக ஊடகத் தொடர்புகளைப் பேணும் அதிகாரி எனலாம். அதன்போது, ஊடகத் தொடர்புகளைப் பேணுவதற்கு ஊடக அதிகாரியால் கீழ்க்காணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

ஊடக அதிகாரியின் பணிகள்:

- தாம் சார்ந்த நிறுவனம்மீது வெகுசன ஊடகங்களால் முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்குப் பதிலளித்தல் மற்றும் ஊடக மாநாடு, கலந்துரையாடல்கள் போன்றவற்றுக்கு நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்து கொள்ளல்.
- ஊடக மதிப்பீட்டு அறிக்கையைத் தயார் செய்தல், நிறுவனத்துடன் தொடர்புடைய கடிதங்களை எழுதுதல், மற்றும் ஊடக அறிக்கை வெளியீட்டினைப் பகிர்ந்தளித்தல்.
- நிறுவனச் செயற்பாடுகள் மற்றும் புதிய அறிமுகம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தல், தகவல் வழங்கல்.
- நிறுவனத்தில் நடைபெறும் ஊடக மேம்பாட்டு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- நிறுவனத்தின் புகழ் மேலோங்க ஊடகப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.
- தாம் சார்ந்த நிறுவனம் தொடர்பாக ஊடகங்கள், பொதுமக்களிடம் புரிந்துணர்வை ஏற்படுத்தல்.
- துண்டுப்பிரசுரங்கள், செய்தி அறிவிப்பு, சிறு புத்தகங்கள், சஞ்சிகை, செய்தி மடல், புகைப்படங்கள் மற்றும் இணையத்தளச் செயற்பாடுகள், ஊடக சந்திப்பு, ஊடக மாநாடு, கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.
- தமது நிறுவனத்தின் உற்பத்தி, வளர்ச்சி தொடர்பாக விவரணப்படம், அறிவித்தல்களை ஏற்பாடு செய்தல்.
- தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை மற்றும் இணையம் போன்றவற்றுடன் நேர்முகக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.
- தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஊடாக ஏனைய தரப்பினருடன் தொடர்புகளைப் பேணுதல்.
- ஊடக வெளியீடுகளை ஒப்பீட்டுரீதியாக ஆராய்தல்.
- முரண்பாட்டுகள் எழும் சூழ்நிலையின்போது ஊடக மற்றும் ஏனைய தொடர்புகளுக்கூடாக அதனை முகாமைத்துவம் செய்தல்.
- ஊடக ஒழுக்க தர்மங்களைப்பேணிக்காத்தல்.
- எப்போதுமே உண்மையான செய்திகளை வெளியிடல்.
- தற்கால வணிக உலகை ஆராயும்போது ஊடக அதிகாரியும் பொதுசனத் தொடர்பு அதிகாரியும் ஒரே நபர் எனக் குறிப்பிடலாம்.
- நிறுவனத்தின் ஏனைய தரப்பினருடன் ஊடகத் தொடர்புகளைப் பேணுதல் போன்ற மேற்குறிப்பிட்ட அனைத்துப் பணிகளும் பொதுசனத் தொடர்பு அதிகாரியினாலும் மேற்கொள்ளப்படும்.

- மேலும் தற்காலத்தில் ஊடக அதிகாரியின் பணிகளையும் தாண்டி 'ஊடகப் பேச்சாளர்' (Media Spokesperson) எனும் பதவி தோற்றுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- தற்காலத்தில் எதிர்பாராத அவசர சந்தர்ப்பங்களில் நிறுவனம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளின்போது நிறுவனம் மீதான நல்லெண்ணத்தையும் மக்கள் நிறுவனம்மீது கொண்டுள்ள பிரதிமையையும் பாதுகாத்துக் கொள்வதோடு ஊடக சந்திப்புகளை மேற்கொள்ளல், இணைந்து செயற்படும் தரப்பினருக்கு விழிப்புணர்வூட்டல் போன்ற பணிகளை செய்வது ஊடகப் பேச்சாளர் ஆவார்.
- அதற்கிணங்கத் தற்கால நிறுவனங்கள் அவ்வாறான அவசர நிலைமைகளை முகாமைத்துவம் செய்வதற்காக ஊடகப் பேச்சாளர்களைப் பயிற்றுவிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருவதைக் காணலாம்.

**மதிப்பீடு**

1. பொதுசனத் தொடர்பு அதிகாரியின் பணிகளை விளக்குக.
2. பொதுசனத் தொடர்பு அதிகாரியின் வகிபாகமும் பணிகளும் மாற்றமடையும் விதம் பற்றி விளக்குக.

தேர்ச்சி மட்டம் : 8.6 நிகழ்வு முகாமைத்துவத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.

பாடவேளைகள் : 10

கற்றற் பேறுகள் :

- நிகழ்வு முகாமைத்துவம் என்றால் என்ன என விபரிப்பார்.
- நிகழ்வு முகாமைத்துவத்தின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை விபரிப்பார்.

**பாடத்தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**அறிமுகம்**

- மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்க்கைக் காலத்தில் பல்வேறு நிகழ்வுகளை அவன் சந்திக்கவேண்டியிருக்கும். மனிதாபிமானம், ஒழுக்கம் என்பன உருவானதன்பின் மனிதன் தன் வாழ்க்கை நிகழ்வுகளை தாம் சார்ந்தோரோடு கொண்டாட ஆரம்பித்தான்.
- அதன்போது பல்வேறு சமய நிகழ்வுகள், வாழ்வியல் நிகழ்வுகள், சூழலியல் நிகழ்வுகள் மானுட வாழ்வில் ஒரு அம்சமாகக் கொண்டாடப்படுதல் சமூகத்தில் ஆரம்பமானமையை புராதன வரலாற்று மூலாதாரங்கள் மூலம் அறியலாம்.
- இவ்வாறு ஆரம்பமான நிகழ்வுகளைக் கொண்டாடுதலானது தற்காலத்தில் துரிதமாக முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, நிகழ்வுகளைக் கொண்டாடுதல் மட்டுமன்றி அதனை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாகவும் ஆழமாகக் கலந்துரையாடப்படுகிறது.
- தற்போது நிகழ்வு முகாமைத்துவம் என்பது வெறுமனே கொண்டாடுதல் மட்டுமல்லாது உயர்பெறுமதிமிக்க தொழில்ரீதியான கற்கையாகவும் மாறியுள்ளது.
- தற்காலத்தில் பல்வேறு நிகழ்வுகளைக் கொண்டாட மனிதன் பழகியுள்ளான். அந்நிகழ்வுகளைக் கீழ்க்காணுமாறு சில தலைப்புகளாக வகைப்படுத்தலாம்.
    - குடும்ப நிகழ்வுகள் - (திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டம், மங்கல - அமங்கல நிகழ்வுகள்)
    - பண்பாட்டு நிகழ்வுகள் - (கலை விழாக்கள், சமயரீதியான விழாக்கள்)
    - நலன்புரி நிதி சேகரிக்கும் நிகழ்வுகள் - (நடைபவனி, நாடக நிகழ்ச்சிகள், இசைநிகழ்ச்சிகள்)
    - விளையாட்டு நிகழ்வுகள் - (விளையாட்டுக் கழகங்களுக்கிடையில், பாடசாலைகளுக்கிடையில்)

- ➢ சுற்றுலா நிகழ்வுகள் - (வர்த்தகக் கண்காட்சிகள், பண்பாட்டுக் கண்காட்சிகள், சுற்றுலா)
- ➢ பூகோள வர்த்தகக் கண்காட்சி நிகழ்வுகள் - (பொருட்கள் சேவைகள் வியாபார அங்காடி)

- சந்தைப்படுத்தல் தொடர்பான பேராசிரியரான பிலிப் கொட்லர் (Philip Kotler) நிகழ்வுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்,
    1. சமூக மற்றும் வாழ்வியல் நிகழ்வுகள்
    2. கல்வி மற்றும் தொழில்சார் நிகழ்வுகள்
    3. விளையாட்டு மற்றும் களியாட்ட நிகழ்வுகள்
    4. அரசியல் நிகழ்வுகள்
    5. ஒன்றிணைந்த/சமூக நிகழ்வுகள்
    6. ஆன்மீக நிகழ்வுகள்

    - (Kotler Philip, Introduction to Event Management, 2004)
- தற்காலத்தில் வெறுமனே நிகழ்வுகளைக் கொண்டாடுதல் மட்டுமன்றி அதனை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாகவும் ஆழமாக ஆராயப்பட்டு வருகிறது. அந்த வகையில், தற்போது நிகழ்வு முகாமைத்துவக் கற்கை உயர் பெறுமதிமிக்க தொழில்சார் பாடமாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**நிகழ்வு முகாமைத்துவம் பற்றிய வரைவிலக்கணங்கள்**

- நிகழ்வு முகாமைத்துவம் ஆங்கிலத்தில் 'Event Management' எனக் குறிப்பிடப்படுகிறது. Event என்பது தமிழில் நிகழ்வு, சம்பவம், சந்தர்ப்பம், விழா என அகராதிகளில் அர்த்தப்படுத்தப்படுகிறது. கேம்பிரிஜ் அகராதியில் 'event' எனும் சொல்லானது முக்கியம் (Important) அல்லது வழக்கத்திற்குமாறான (unusual) எனக் குறிப்பிடப்படுகிறது. அதேபோல், பிலிப் கொட்லர் நிகழ்வு என்பதை இலக்குப் பெறுநர் குழுவொன்றுக்கு விசேடமான செய்தியொன்றைக் கொண்டுசெல்லத் திட்டமிடப்படும் சந்தர்ப்பமாகும் எனக் குறிப்பிடுகிறார்.
- கருத்தரங்குகள், வியாபாரக் கண்காட்சிகள், விருந்துபசாரங்கள் போன்ற வியாபார நிறுவனங்கள் அல்லது சேவைகளுக்கேற்ற சந்தர்ப்பங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் இங்கு கூறப்படுகிறது.
- அதற்கேற்ப நிகழ்வு முகாமைத்துவம் என்பதை, ஏதேனுமோர் நிகழ்வு, சந்தர்ப்பம், விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்தல் என எளிமையாக வரையறை செய்யலாம்.

- ஏற்பாடு செய்தல், செயற்படுத்தல், ஒன்றிணைந்து கட்டியெழுப்புதல், விமர்சித்தல், சந்தைப்படுத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் மதிப்பிடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல் ஆகும்.
- நிகழ்வு முகாமைத்துவம் என்பது, விஞ்ஞானரீதியாக திட்டமிடல், ஏற்பாடு செய்தல், மேற்பார்வை செய்தல், ஒன்றிணைத்தல், தூண்டுதல் மற்றும் அதனைப் பயனாளிக்கு எடுத்துச்செல்லல் ஊடாக ஒரு நபர் அல்லது நிறுவனத்துக்கிடையிலான தொடர்பினூடாக பயனாளிக்குரிய நற்பலன்களை பெற்றுக்கொடுக்கத் திட்டமிடல் என்பதாகும்.
- சமூகத்தின் ஏதாவது நிகழ்வினைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல் எனவும் நிகழ்வு முகாமைத்துவம் குறிப்பிடப்படும்.
- நிகழ்வு முகாமைத்துவத்தின் நோக்கமாவது சகல அம்சங்களையும் ஒன்றிணைத்து மிகவும் வெற்றிகரமான பயனுறுதிமிக்க சந்தர்ப்பமொன்றை உருவாக்குதல் ஆகும்.
- அப்பணியை மேற்கொள்பவர் நிகழ்வு முகாமையாளராவார். நிகழ்வு முகாமையாளர் என்பவர் ஏதேனும் நிகழ்வொன்றை அல்லது சந்தர்ப்பமொன்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும் நபராவார்.

**நிகழ்வு முகாமைத்துவத்தின்**

**அவசியமும் முக்கியத்துவமும்**

- நிகழ்வு முகாமைத்துவமானது தற்காலத்தில் மிக அவசியமான முக்கியமான ஓர் துறையாகும்.
    - நிறுவனம்மீதான நல்லெண்ணம் மற்றும் பிரதிமை என்பவற்றை விருத்தி செய்தல்.
    - நேரமுகாமைத்துவம்.
    - நிதி முகாமைத்துவம்.
    - முரண்பாட்டு முகாமைத்துவம்.
    - ஊடகங்கள் மூலமாகப் பரப்புரை செய்தல்.
    - நிறுவனசார் தரப்பினரைக் கவர்தல், தக்கவைத்தல்.
- இதன்போது நிகழ்வு முகாமையாளர் ஒருவரின் வகிபாகமானது (Role of an Event Manager) மிக முக்கியமானது. அவருடைய பணிகளுள்,
    - நிகழ்வின் கருப்பொருள் மற்றும் இலக்கை இனங்காணல்.
    - திட்டமிடல்.
    - அடிப்படை மூலதன செலவு பற்றித் திட்டமிடல்.
    - இலக்குக் குழுவை இனங்காணல்.
    - படைப்பாக்கத்திறன்.
    - சந்தைப்படுத்தல் மற்றும் நுகர்வோருடன் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்ளல்.

- நுகர்வோர் சேவைகளைத் திட்டமிடல்.
- அவசர நிலைமைச் செயற்பாட்டினைத் திட்டமிடல்.
- பாதுகாப்புத் தொடர்பாகத் திட்டமிடல்.
- பிரதி எழுதுதல்.
- இடம் ஒன்றை ஒதுக்குதல்.
- நிகழ்வை ஏற்பாடு செய்தல்.
- செவிப்புல-கட்புல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் என்பன முக்கியமானவை ஆகும்.

- இவை தவிர நிகழ்வு முகாமையாளரின் பணிகள் தற்காலத்தில் மிகப் பரந்துபட்டதாகக் காணப்படுகிறது.

**மதிப்பீடு**

1. நிகழ்வு முகாமைத்துவம் என்பதால் கருதப்படுவது யாது?
2. நிகழ்வு முகாமைத்துவத்தின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் பற்றி விளக்குக.
3. நிகழ்வு முகாமையாளரின் வகிபாகம் பற்றிய விடயங்களைப் பட்டியற்படுத்துக.

தேர்ச்சி மட்டம் : 8.7 நிகழ்வு முகாமைத்துவச் சந்தர்ப்பங்களை இனங்கண்டு தாம் கற்ற நிகழ்வு முகாமைத்துவ அறிவைப் பிரயோகம் செய்வார்.

பாடவேளைகள் : 12

கற்றற் பேறுகள் :

- நிகழ்வு முகாமைத்துவச் சந்தர்ப்பங்களை இனங்கண்டு தெளிவுபடுத்துவார்.
- நிகழ்வு முகாமைத்துவச் சந்தர்ப்பங்கள் பற்றிய தெளிவுடன் நிகழ்வு முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**பாடத்தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**நிகழ்வு முகாமைத்துவச் சந்தர்ப்பங்களை இனங்காணல்.**

- அடிப்படையில் நிகழ்வு முகாமைத்துவம் பல சந்தரப்பங்களில் பல படிமுறைகளில் நடைபெறும். நிகழ்வின் அடிப்படையில் இப்படிமுறைகள் வேறுபடும்.

  1. திட்டமிடல் (Planning)
  2. ஒழுங்குபடுத்தல் (Preparation)
  3. பரிசோதித்தலும் மதிப்பீடு செய்தலும் (Checking and Reviewing)
  4. செயற்பாடு (Action)

- இங்கு திட்டமிடல் எனும் படிமுறையில்,
  - நிகழ்வு வகைப்படுத்தலின்கீழ் எந்தச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான நிகழ்வு என்பதை விளங்கிக் கொள்ளல்.
  - சந்தர்ப்பம், இலக்கு என்ன என்பது தொடர்பாக விளங்கி கொள்ளல்.
  - அச்சந்தரப்பத்தினூடாக அடையவேண்டியது என்ன என்பதை விளங்கிக் கொள்ளல்.
  - சந்தர்ப்பத்தின் இலக்கு மற்றும் இலக்குக்குழுவினர் யாவர் என்பதை விளங்கிக் கொள்ளல்.

- திட்டமிடல், செயன்முறை, செயற்றிறன், அனுசரணை போன்ற நான்கு காரணிகள் பற்றிக் கவனம் செலுத்தவேண்டிய அம்சங்கள் உள்ளன. அவையாவன,
    - நிகழ்வு முகாமைத்துவச் சந்தர்ப்பத்தை இனங்காணல் மற்றும் திகதியைத் தீர்மானித்தல்.
    - மேற்கொள்ளவேண்டிய பணிகள் தொடர்பாகப் பட்டியலொன்றைத் தயாரித்தல்.
    - இடத்தைத் தீர்மானித்தல்.
    - இடத்தை மேற்பார்வை செய்தல்.
    - இடத்தை ஒதுக்குதல்.
    - வரவு செலவினைத் தீர்மானித்தல்.
    - அனுசரணை பெற்றுக் கொள்ளல்.
    - உணவு, குடிபான உபசரிப்பு ஏற்பாடு செய்தல்.
    - விருந்தினர்களைத் தீர்மானித்தல்.
    - நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல்.
    - அறிவிப்பாளர் மற்றும் முன்வைப்புகள் பற்றிக் குறிப்பிடல்.
    - சந்தைப்படுத்தல் தொடர்பாகத் திட்டமிடல்
    - ஊடகங்களை வரவழைத்தல்.
    - மேம்பாட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
    - அவசர நிலைமையின்போது செயற்படல் பற்றி மதிப்பிடுதல்.
    - சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பனவாகும்.

- நிகழ்வு முகாமைத்துவச் சந்தர்ப்பத்திற்கேற்ப இக்காரணிகள் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ காணப்படும். அத்தோடு மாற்றமடையவும் முடியும். திருமண நிகழ்வு, ஊடக விழா, ஊடக மாநாடு சந்தர்ப்பமொன்றை இதன்படி ஆராயலாம்.
- நிகழ்வு முகாமைத்துவத்தின்போது எல்லா விடயங்களுமே முக்கியமானவை. உதாரணமாக ஆசனங்களை ஒதுக்குதல், உணவு மேசையின் ஒழுங்கு முறை மற்றும் திட்டம் போன்ற சிறிய விடயங்கள் உட்பட அனைத்தும் இதனுள் அடங்கும்.
- சில நிகழ்வு முகாமைத்துவச் சந்தரப்பங்கள், அதில் அடங்கும் செயற்பாட்டுத் திட்டமிடல் என்பவற்றை கீழ்க்காணும் உருக்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

**மதிப்பீடு**

1. நிகழ்வு முகாமைத்துவ சந்தர்ப்பம் மற்றும் அதன் அவசியம், முக்கியத்துவம் தொடர்பாகக் கலந்துரையாடுக.
2. நிகழ்வு முகாமைத்துவச் சந்தர்ப்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, பாடசாலைஊடக தினத்தைக் கொண்டாடுவதை முன்னிட்டு நடைபெறும் விழாவிற்கான பருமட்டான திட்டமொன்றைத் தயாரிக்க.

**கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| பொதுசனத் தொடர்பு | - Public Relations |
| பொதுசனத் தொடர்பு அதிகாரி | - Public Relations Officer |
| நிகழ்வு முகாமைத்துவம் | - Event Management |
| நல்லெண்ணம் | - Good Will |

# 9. அபிவிருத்திக்கான தொடர்பாடல்

**தேர்ச்சி** :9.0 அபிவிருத்திக்கான தொடர்பாடலைப் பயன்படுத்துவதன் ஆரம்பம், வீச்சு, அவசியம் மற்றும் புதிய போக்குகளை இனங்கண்டும் அதற்கு ஏற்றாற்போல் அறிவு, எண்ணம், நடத்தை மாற்றம் பெறவேண்டிய விதத்தைப் பற்றிய தெளிவுடனும் அபிவிருத்தித் தகவலைத் தயாரிக்கும் திறன் பெறுவார்.

**தேர்ச்சி மட்டம்** :9.1 அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களைப் பகுத்தாய்வர்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற் பேறுகள்** :

- அபிவிருத்தி எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அபிவிருத்தி எண்ணக்கருவின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்கை விபரிப்பார்.
- அபிவிருத்தி எண்ணக்கருக்கள் தொடர்பான கருத்தியல்களை ஒப்பிட்டறிவார்.
- அபிவிருத்தி எண்ணக்கருவின் புதிய போக்குகளை அடையாளம் காட்டுவார்.

**பாடத் தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**
கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**அறிமுகம்**

**தோற்றம் மற்றும் பரவல்**

18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பின்னர் "அபிவிருத்தி" என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றதோடு, அதன்படி, விவசாய மற்றும் கைத்தொழில் தயாரிப்புக்களைத் தரம் உயர்த்துதல் மற்றும் தனிநபர் வருமானத்தை அதிகரித்தல் "அபிவிருத்தி" எனக் கருதப்பட்டது.

அக்காலத்திலிருந்து 1990 காலப்பகுதி வரை உலக சமூகத்தை மூன்றாகப் பிரித்து ஏற்படுத்தப்பட்ட வகைப்படுத்தல் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1. “முதலாம் உலகம்” என்பதில் பணக்கார சமூகத்தின் நிலைநோக்கைக் கொண்ட நாடுகள் உள்ளடங்கின. இதில், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா மற்றும் மேற்கு ஐரோப்பா ஆகிய நாடுகள் உள்ளடங்கின. இந்நாடுகளில் மொத்தத் தேசிய உற்பத்தியுடன் (GDP) கூடிய சந்தைப் பொருளாதாரம் காணப்பட்டது.
2. “இரண்டாம் உலகம்” என்பதில் சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கொள்கையினைக் கொண்ட நாடுகள் உள்ளடங்கின. ஐக்கிய சோவியத் சோசலிசக் குடியரசு, சீனா, **கியூபா** முதலிய நாடுகள் இதிலடங்கின. மையப்படுத்தப்பட்ட திட்டமிடல், மொத்தத் தேசிய உற்பத்தி (GDP) மற்றும் நன்கு வளர்ச்சியடைந்த கைத்தொழில் திட்டங்கள் என்பன இந்நாடுகளில் காணப்பட்டன.
3. “மூன்றாம் உலகம்” என்பதில் மேலே கூறப்பட்ட தொகுதிகளில் அடங்காத நாடுகள் உள்ளடங்கின. ஆபிரிக்கா, இந்தியத் துணைக் கண்டத்திலடங்கும் நாடுகள், கிழக்காசியா, மற்றும் சவுதி அரேபியா முதலான நாடுகள் இதிலடங்கின. இந்நாடுகளில் பல்வித அரசியல் நிலைப்பாடுகள் காணப்பட்டதோடு மொத்தத் தேசிய உற்பத்தியும் குறைவாகக் காணப்பட்டது. கைத்தொழில் அல்லாத பொருளாதாரப் போக்கும் காணப்பட்டது.

- ஆங்கில மொழியில் “அபிவிருத்தி” (Development) என்பதன் கருத்தாக “விரிவுபடுத்தல்” (Unfolding) மற்றும் “வளர்ச்சி” (Growth) ஆகியன காணப்படுகின்றன.
- 20ஆம் நூற்றாண்டில் பொருளியல் அறிஞர்கள் மற்றும் அரசியல்வாதிகள்,“பொருளாதார அபிவிருத்தி” அல்லது “அபிவிருத்தி” எனப் பயன்படுத்திய பதம் - தனி நபர் வருமானம், தேசிய ஆதாயம் மற்றும் பொருளாதாரத்தின் நேரான விருத்தி ஆகியவற்றைச் சுட்டி நின்றது.
- “அபிவிருத்தித் தொடர்பாடல்”எனும் துறை 1950-60 காலப்பகுதிகளில் வளர்ச்சிபெற்றது. “அபிவிருத்தி மற்றும் தொடர்பாடல்” (Development and Communication), “அபிவிருத்தித் தொடர்பாடல்” (Development Communication), மற்றும் “அபிவிருத்திசார் தொடர்பாடல்” (Developmental Communication) ஆகிய பதங்களும் இத்துறையைக் குறிப்பிட்டன.
- “அபிவிருத்தித் தொடர்பாடல்” என்று ஆரம்பத்தில் கருதப்பட்டது, “தேசிய அபிவிருத்தி” க்காக வெகுசன ஊடகங்கள் உள்ளடங்கலான பல்வேறு தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்துதல் என்பதாகும். “தேசிய அபிவிருத்தி” என்பது, சமூக, பண்பாட்டு, ஒழுக்கரீதியான மற்றும் பொருளாதார அடிப்படையில் நான்காகப் பிரிக்கப்பட்டதோடு அதில் பொருளாதார அபிவிருத்தி முதன்மை பெற்றது.
- தகவல் பரவலாக்கம், கல்வி, சமூக சந்தைப்படுத்தல், சமூக வளர்ச்சி, ஊடக வளர்ச்சி, சமூக அபிவிருத்தி என்பன அபிவிருத்தித் தொடர்பாடல் என்பதில் அடங்கின.

- அபிவிருத்தி தொடர்பாடல் மூலம் நிகழ்வது மேலிருந்து கீழ்நோக்கிய அதிகாரப் படிநிலையை (Top Down Hierarchy or Trickle Down) செயற்படுத்துவதாகக் கருதப்பட்டது.
- அபிவிருத்தித் தொடர்பாடல் என்பதை விபரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது அபிவிருத்தி மூலமாக வளங்களைக் கண்காணித்தல், சமூகச் சமமின்மை அதிகரித்தல், இராணுவவாதம் மற்றும் சூழல் மாசடைதல் என்பன அதிகரித்தமையாலாகும்.
- எனினும், 1960களில் லத்தீன் அமெரிக்காவை நவீனமயப்படுத்தும் செயற்பாடு தோல்விகண்டதை அடுத்து, புதிய, சமகால அபிவிருத்தித் தொடர்பாடல் ஆராய்ச்சியாளர்களுக்குத் தமது மூலக்கருக்களை மாற்றிக் கொள்ளவேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டது.
- அதன்படி பழைய அபிவிருத்தித் தொடர்பாடல் அடிப்படைகள் அதிகளவில் விமர்சிக்கப்பட்டன.
- மேற்குலக நாடுகள் மூன்றாம் உலக நாடுகளுடன் ஏற்படுத்திக்கொண்ட தொடர்புகள் வளச் சுரண்டலுக்கும், சார்ந்திருத்தலுக்குமான பொருளாதாரத் தொடர்புகளே என்பது வெளிச்சத்திற்கு வந்தது.
- அதன்படி, மூன்றாம் உலக நாடுகள் தமது அபிவிருத்திக்காகத், தமக்கு நன்மை பயக்கும், தமக்கேயுரித்தான அபிவிருத்திப் பாதையை உருவாக்குதல் என்பது புதிய நியமம் ஆகியது.
- அந்நோக்கில், அபிவிருத்திக்கான தொடர்பாடல் (Communication for Development) எனும் எண்ணக்கரு தோற்றுவிக்கப்பட்டது.
- **அபிவிருத்திக்கான தொடர்பாடல்** என்பது நிலையான, ஜனநாயக அபிவிருத்திக்கு சமூகத்தில் நிகழவேண்டிய அனைத்துவிதமான தொடர்பாடல்களையும் குறிப்பிடும் பதமாகும்.

**அபிவிருத்தி வரைவிலக்கணம்**

1. அபிவிருத்தி என்பது, வறுமை, சமமின்மை, மற்றும் தொழிலின்மை முதலானவற்றைக் குறைத்தல் அல்லது இல்லாதொழித்தல் என்பதாகும். டட்லி சியர்ஸ் (1969)

   Dudley Seers (1969): Development is a reduction or elimination of poverty, inequality and unemployment.

2. அபிவிருத்தி என்பது மக்களது அபிவிருத்தி (மனித அபிவிருத்தி) மாறாக, பொருள்சார் அபிவிருத்தி அல்ல. எட்கர் ஓவ்ன்ஸ் (1987)

   Edgar Owens (1987): Development is development of people (Human Development) and not development of things.

3. அபிவிருத்தி என்பது "முழுச் சமூகத்தின் அபிவிருத்தி" என்பதோடு அதில் உள, ஆன்மீக மற்றும் பொருள்சார் தேவைகள் அடங்கும்.

   மகாத்மா காந்தி

   Gandhi – "The total development of society" that includes mental, spiritual and material needs.

**அபிவிருத்திக்கான தொடர்பாடல்**

1. "அபிவிருத்திக்கான தொடர்பாடல் இருவழித் தொடர்பாடலை ஊக்குவிக்கிறது, அதன் மூலம் உரையாடல்களைத் துரிதப்படுத்தல்,மக்களுக்கு அவர்களது விருப்பங்களை, தேவைகளை வெளிப்படுத்த மற்றும் அவர்களுக்கே உரித்தான தொடர்பாடல் முறை மூலம் அவர்களது அபிவிருத்திசார் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தூண்டுதல் இடம்பெறுகிறது."

   ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை 51/172, 1996

2. "அபிவிருத்திக்கான தொடர்பாடல் என்பது, பரந்த மக்கள் குழுவொன்றில் கருவிகள் மற்றும் பொறிமுறைகளைப் பயன்படுத்தி உரையாடலை மேற்கொள்வதாகும். அத்தோடு அறிவு மற்றும் தேர்ச்சியை பரிமாற்றிக்கொள்ளல், கட்டியெழுப்புதல், மற்றும் கொள்கைகள், விவாதங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்காக செவிமடுத்தல், நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் வெவ்வேறு மட்டங்களில் வேறுபாடுகளை இனங்காணல் என்பதாகும். அபிவிருத்திக்கான தொடர்பாடல் என்பது மக்கள் தொடர்போ அல்லது நிறுவனத் தொடர்பாடலோ அல்ல."

   அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய ரோம் மாநாடு – 2006

3. சில்வியோ ஆர் வைஸ்போட் (Silvio R Waisbord) என்பவர் அபிவிருத்திக்கான தொடர்பாடலின் பிரயோகம் பற்றி ஐந்து கருத்துக்களைக் கூறியுள்ளார்,
   1. மையப்படுத்தப்பட்ட சக்தியை வலுப்படுத்தல் (தனிநபர்கள் மற்றும் சமூகம் அறிவைப் பெற்றுக்கொள்ளல், முரண்பாடுகளைத் தீர்த்தல்).
   2. மேல்-கீழ் மற்றும் கீழ் தரப்புக்களை ஒன்றிணைத்தல்.
   3. தொடர்பாடல் கருவிகளைப் பயன்படுத்தல்.

4. ஆளிடைத் தொடர்பாடல் மற்றும் வெகுசனத் தொடர்பாடல்களிடையே சமனிலையை உருவாக்குதல்.
5. தனிநபர் மற்றும் சமூகத்தை வழிநடத்தல் மற்றும் மாற்றுதல் முதலான நடவடிக்கைகளுக்கு முதன்மையளித்தல்.

(Media and Global Change. Rethinking Communication for Development, Hemer, Oscar, 2005, Chapter 4, Five Key Ideas: Coincidences and Challenges in Development Communication, Silvio Waisbord)

4. ஸ்ரீநிவாஸ் ஆர். மெல்கோட்டே (Srinivas R. Melkote) என்பவரால் அபிவிருத்திக்கான தொடர்பாடல் தொடர்பில் கூறப்பட்டவை:
   1. விமர்சனரீதியான கருத்துக்கள் மூலம் மனித சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.
   2. மனிதனது வரலாறு ஓர் செயன்முறை என்பதை இனங்காணல்.
   3. மூன்றாம் உலக நாடுகள் மதம்சார் பிணைப்புக்களிலிருந்து விடுபடல்.
   4. தொடர்பாடல் மற்றும் சமூகக் கட்டமைப்புப் பற்றிய இணைப்புகளை வலுப்படுத்தல்.
   5. மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திக்குத் தொடர்பாடலை மேம்படுத்தல் தொடர்பான யோசனை மற்றும் அவற்றைச் செய்வது எவ்வாறு முதலான கேள்விகள் மூலம் மாத்திரம் தேவைகளை இனங்காண முடியாது என்பதை உணர்தல்.

   Srinivas R. Melkote, H. Leslie Steeves,Communication for Development: Theory and Practice for Empowerment and Social Justice - 2015

5. சுவீடன் நாட்டு, மாலமோ பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணம் :

   "கோளமயமாதல் சந்தர்ப்பத்தில் அபிவிருத்திக்கான தொடர்பாடலின் பயன்பாடாவது, சமூக மாற்றத்திற்கான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் ஓர் செயல்."

   (Malmo University, Sweden)

**அபிவிருத்தி எண்ணக்கரு பற்றிய கருத்துக்கள்**

மேலே குறிப்பிட்டபடி "அபிவிருத்தி" எனும் எண்ணக்கருவிற்கு உலக அரசியல், பொருளாதாரம் மற்றும் தொடர்பாடல் ஆகியன தொடர் செல்வாக்கைச் செலுத்தியுள்ளதோடு, தற்போது உண்மையான மனித அபிவிருத்தி என்பது யாது என்பது பற்றிய குழப்பமும் ஏற்பட்டுள்ளது. ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளுக்குத் தேவையான பொருளாதார மற்றும் அரசியல் நன்மைகளை நோக்காகக் கொண்டு ஏனைய நாடுகளுக்கு எதிரான "ஆதிக்கத்தின் கருவியாக" "அபிவிருத்தி" மாற்றமடைந்தது என்பது ஓர் கருத்து.

உலகம் முழுவதுமுள்ள சமூகங்களில் தொடர்ச்சியாகப் பொருளாதார, சுகாதார, கல்வி மற்றும் ஏனைய அடிப்படை மனித உரிமைகள் தொடர்பிலான முரண்பாடுகள் வளர்ந்து வருகின்றன. பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் பின்பற்றிய அபிவிருத்திப் பாதைகள் குருட்டுப் பாதைகளாகக் கருதப்பட்டன. அபிவிருத்தியடையாத நாடுகள் தமது வளங்கள் மற்றும் வரையறைகள் பற்றிய தெளிவின்றி அறிந்தும் அறியாமலும் மேற்குலக நாடுகளைப் பின்பற்ற முனைகின்றன.

**அபிவிருத்தி எண்ணக்கரு : புதிய போக்குகள்**

- அபிவிருத்தி எண்ணக்கரு ஆரம்பகாலம் தொட்டு தற்காலம் வரை படிப்படியாக மாற்றமடைந்ததொன்று.
- **ஆரம்ப காலம் (1950 – 1970)–** அமெரிக்க சமூக விஞ்ஞானிகள் அபிவிருத்தி என்பதை ஓர் விஞ்ஞான எண்ணக்கருவாக விபரித்தனர். நவீனமயப்படுத்தல் கோட்பாடுகளுக்கு அமைய மேலிருந்து கீழ் நோக்கிய தொடர்பாடலின் போக்குகள் அடையாளம் காணப்பட்டன.
- **மத்திய காலம் (1970 – 1990)–** அபிவிருத்தி எண்ணக்கரு பற்றிய புதிய அணுகுமுறையாக எவரெட் எம். ரொஜர்ஸ் (1931-2004) என்பவர் 1962இல் **“புத்தாக்கப் பரவலாக்கம்”** (Diffusion of Innovation) எனும் ஓர் புதிய கோட்பாட்டை முன்வைத்தார்.
- 1950களில் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனிற்கான பொருளாதார ஆணைக்குழுவின் (The Economic Commission for Latin America and the Caribbean - ECLAC) ஆய்வின் மூலம் சார்புக் கோட்பாடு (Dependency Theory) அறிமுகம் செய்யப்பட்டது. வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதாரத்தில் சார்ந்திருத்தல் மூலம் வளர்ச்சியடையாத நாடுகள் அபிவிருத்தியடைய முடியும் என இக்கோட்பாடு கூறுகிறது.
- **தற்காலம் (1990 முதல் தற்போது வரை)** – புதிய உலக தகவல் மற்றும் தொடர்பாடல் கொள்கை (New World Information and Communication Order – NWICO) மூலம் “அபிவிருத்திக்கான தொடர்பாடல்”என்பது புத்தாக்கம் பெற்றது.
- இதன் மூலம் “அபிவிருத்தித் தொடர்பாடல்” எனும் எண்ணக்கரு விமர்சனத்திற்குட்பட்டதோடு அபிவிருத்திக்கான மாற்று வழிகள் தொடர்பில் ஆராயப்பட்டது. வலு மற்றும் பண்பாடு ஆகிய இரு காரணிகள் அபிவிருத்திக்கான தொடர்பாடலில் இணைக்கப்பட்டன.
- தற்காலத்தில் ஆளிடைத் தொடர்பாடல், பிரயோகத்தன்மை, பங்குபற்றல் மற்றும் அறிவுப் பரிமாற்றம் ஆகியன தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.
- தகவல் பிரவேசம், அறிவுக்கான திறந்த பிரவேசம், உபாயரீதியிலான தொடர்பாடல், பங்குபற்றல் தொடர்பாடல், பண்பாடு, ஊடகம், தொடர்பாடலின் உட்கட்டமைப்பு

வசதிகள் மற்றும் தொழினுட்பம் ஆகிய துறைகளை வலுப்படுத்துவது அபிவிருத்தித் தொடர்பாடலின் பிரதான பணியாக அமைந்தது.

- இருவழித் தொடர்பாடுநர், கிடைமட்டத் தொடர்பாடல், பொதுமக்கள் செவிமடுத்தல், விவாதம், கலந்துரையாடல், ஏனைய குழுவினரது அறிவுரைகள், பங்குபற்றல் வானொலி மற்றும் ஒளி நிகழ்ச்சிகள், மக்கள் மைய நாடகம், கதை மற்றும் இணைய உரையாடல் என்பன அபிவிருத்தித் தொடர்பாடலிலடங்கும்.
- நிலையான அபிவிருத்திக்கான தொடர்பாடல் (Sustainable Development Communication), அபிவிருத்தித் தொடர்பாடலுக்கான தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT4DC) என்பன அபிவிருத்திக்கான தொடர்பாடலின் உள்ளடக்கங்களாகின.
- இவ்வாறாக "அபிவிருத்தித் தொடர்பாடல்" "அபிவிருத்திக்கான தொடர்பாடல்" ஆக மாற்றம் பெற்றது. அத்தோடு "அபிவிருத்தி" போலவே "தொடர்பாடல்" என்பதும் முதன்மை பெற்றது.
- அபிவிருத்திக்கான தொடர்பாடல் என்பது செயல்கள் மூலம் அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் வழிமுறைகளுக்கு இயைவாக அடித்தள கிராமப்புற மக்களது தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உசிதமான முறைகளை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்தல் மூலம் சமூக உரையாடலை வலுப்படுத்தல் என்பதாகும்.

மதிப்பீடு

1. அபிவிருத்தி எண்ணக்கருவின் ஆரம்பம் மற்றும் பரவல் பற்றி விபரிக்க.
2. இந்நாட்டு அபிவிருத்தியில் அபிவிருத்திக்கான தொடர்பாடலின் அவசியம் பற்றி விளக்குக.
3. உங்கள் பிரதேசத்தில் காணக்கூடிய அபிவிருத்திக்கான தொடர்பாடல் துறைகளை ஆராய்ந்து அவை பற்றிக் கட்டுரை வரைக.

**தேர்ச்சி மட்டம்**:9.2 அபிவிருத்தி எண்ணக்கருவின் நவீன இயல்புகளை இனங்கண்டு தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற் பேறுகள்** : அபிவிருத்தி எண்ணக்கருவின் இயல்புகளை விபரிப்பார்.

**பாடத் தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**அபிவிருத்தி எண்ணக்கருவின் இயல்புகள்**

தற்காலத்தில் அபிவிருத்தி எண்ணக்கரு "அபிவிருத்திக்கான தொடர்பாடல்" என்பதில் தங்கியுள்ளது. அபிவிருத்திக்கான தொடர்பாடல் (C4D) 50 வருடங்களிற்கும் மேலாக நவீனமயமாதல், கைத்தொழில்மயமாதல் முதலான அபிவிருத்திசார் செயற்பாடுகளில் உபபிரிவாகக் காணப்படுகிறது. இதன் முக்கிய நோக்காவது, பல்வேறு பூகோள, பண்பாட்டு, சமூக மற்றும் பொருளாதாரச் சந்தர்ப்பங்களில் அபிவிருத்தியை மையப்படுத்தி வெவ்வேறு விதங்களில் தொடர்பாடலைப் பயன்படுத்தல் ஆகும்.

ஐக்கிய நாடுகளின் புத்தாயிரம் வளர்ச்சி இலக்குகள் மூலம் பூகோள அபிவிருத்திசார் பிரச்சினைகளுக்கு எதிரான புதிய பரிமாணங்களைத் தோற்றுவிக்கும் பொறிமுறைகள் மற்றும் தொடர்பாடல் பிரவேசத்தை மேம்படுத்தும் சந்தர்ப்பம் என்பன ஏற்படுத்தப்பட்டன. ஐக்கிய நாடுகளின் சபை இடைத் தொடர்பு விருத்திக்கான தொடர்பாடல் பிரவேசங்கள் நான்கை இனங்கண்டுள்ளது.

1. நடத்தைமாற்றத்திற்கான தொடர்பாடல் (Communication for Behaviour Change).
2. சமூகமாற்றத்திற்கான தொடர்பாடல் (Communication for Social Change).
3. பரிந்துபேசுவதற்கான தொடர்பாடல் (Communication for Advocacy)
4. ஊடக மற்றும் தொடர்பாடல் சூழலை வலுவூட்டல் மற்றும் செயற்படுத்தல் (Strengthening and Enabling Media and Communication Environment)

**மக்கள் மையம் (People-Centered)**

- மக்கள் மையம் என்பது அபிவிருத்திக்காக மக்களை மையப்படுத்திய ஒன்றிணைந்த மூலோபாயங்களை இனங்காண்பதாகும்.

- “மக்கள் மையம் என்பது ஒரு பிரஜை தனது சகல தேவைகளுக்குமான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வழங்கும் சந்தர்ப்பமாகும். அதாவது மனிதர்களது தேர்ச்சியை வலுப்படுத்தலாகும்.”
- மக்கள் மையம் பாதுகாக்கப்படுமிடத்து தனிநபர் (Individual) மையமும் பாதுகாக்கப்படும்.
- மக்கள் மைய அபிவிருத்திக்கு உபயோகமாகும் தொடர்பாடல் மூலதர்மங்கள் சில பின்வருமாறு,
    - ✓ நல்வாழ்வு விருத்தியானது தனிநபர் மையத்தைக் கருத்தில் கொள்ளல்.
    - ✓ பங்குவகித்தல் மற்றும் பங்குபற்றல்.
    - ✓ சமூக மற்றும் பண்பாட்டுப் பல்வகைமை பற்றிய உணர்திறன்.
    - ✓ ஊடக நுகர்வோரிடையேயான தொடர்பு மற்றும் தொடர்பாடலின் பண்புத்தரம்.
    - ✓ தனிநபர் தேவைக்கான எதிர்வினையுடன் கூடிய பாதுகாப்பு.
    - ✓ தொடர்ச்சியான இடைத்தொடர்புகள்.
    - ✓ உரிமை மற்றும் பொறுப்பு.
- அதேபோல், வாழ்நாள் முழுவதும் மக்களது முன்னேற்றத்திற்காகப் பொறுப்புக்கூறல், முரண்பாடுகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றிற்குத் தீர்வு காண மக்களை வழிநடத்தல் என்பனவும் மக்கள் மையத்தில் அடங்கும்.

உள்ளூர்மயமாக்கல் (**Localization)**

- உள்ளூர்மயமாக்கல் என்பது, ஒவ்வொரு நாடும் தமக்கு ஏற்றாற்போல் தம் நாட்டிற்குள்ளேயே அபிவிருத்தியை வடிவமைத்து அதனை மேற்கொள்வதாகும். இது தேசியமயமாதல் எனவும் அழைக்கப்படும்.
- கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும்போது வறுமையை ஒழித்தல் மற்றும் பொருளாதார விருத்திசார்ந்த முரண்பாடுகளைக் களைதல் போன்ற தலைப்புக்கள் முதன்னிலைப்படுத்தி விவாதிக்கப்படும்.
- மண் வளமிழப்பு மற்றும் பாலைவனமாதலைத் தடுத்தல், வனங்களைப் பாதுகாத்தல், நீர்வள முகாமைத்துவம் மற்றும் உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாத்தல் முதலான நடவடிக்கைகளில் கிராம மக்களது உயிர்ப்பான பங்களிப்பு உள்ளூர்மயமாக்கலில் அடங்கும்.
- இவ்வாறாக உள்ளூர்மயமாக்கல் என்பது யாதேனும் ஒரு நாட்டில் அபிவிருத்தியானது அந்நாட்டு சமூக, அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அந்நாட்டு மக்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும்.

**சமூகத் தொடர்புகள் மற்றும் சமத்துவத்தைக் கட்டியெழுப்புதல் (Building Social Relationships and Equality)**

- **சமூகத் தொடர்புகள்** - தமது சமூகச் செயல் ஒன்றை உருவாக்குவதன் மூலம் மற்றவர்களது செயல்களை அறிதல், இடைச் செயற்பாடுகளைத் தொடர்புபடுத்தல், சுய மதிப்பீடு, நிவாரணம் அளித்தல், ஊக்கப்படுத்தல் மற்றும் அனைத்துவிதங்களிலும் சமூக இடைச்செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் சமூகத் தொடர்புகள் எனப்படும்.
- **சமத்துவம்** - சமத்துவம் என்பது ஜனநாயகத்தின் தூணாகும். 18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுப் புரட்சி மற்றும் அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின்போது சமத்துவம் பற்றிய எண்ணக்கரு தோற்றம் பெற்றது. தற்காலத்தில் அனைத்து நாடுகளும் சமத்துவம் எனும் எண்ணக்கருவை ஏற்றுக்கொண்டுள்ளன.
- சமத்துவம் என்பது சமூகத்தில் காணப்படும் வேறுபாடுகளைக் களைதல், விசேட சலுகைகளை இல்லாதொழித்தல், ஆற்றலை அடிப்படையாகக்கொண்டு வாய்ப்புகள் வழங்குதல் மற்றும் மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வழிசமைத்தல் என்பனவாகும்.
- சமூகத் தொடர்புகள் மற்றும் சமத்துவத்தின் கூறுகள்
  - ✓ சிறப்பு மனித உரிமைகள் இல்லாமலாதல்.
  - ✓ அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்கள் சமமாக இருத்தல்.
  - ✓ குறைந்தளவிலான தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
  - ✓ வர்க்கப் பாகுபாடுகளைத் தவிர்த்தல்.
  - ✓ தீவிரமற்ற காரணிகளின் அடிப்படையில் வேறுபாடுகள் ஏற்படுத்தப்படல்.

**வறுமையை ஒழித்தல் (Poverty Reduction)**

- 1990களில் சர்வதேச அபிவிருத்திச் சிந்தனையில் ஏழ்மையை ஒழித்தல் முக்கிய அவதானத்தைப் பெற்றது. இவ்வாறாக வறுமையை இல்லாதொழித்தல் என்பது எப்போதும் அபிவிருத்தி தொடர்பான தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டங்களில் முதலிடம் பெறுவதாகும்.
- வறுமையை ஒழிப்பதற்காக,
  - ✓ நிலையான சீவனோபாயம்,தொழில் வாய்ப்பு, வினைத்திறனான வளங்களுக்கான பிரவேசத்தை அதிகரித்தல்.
  - ✓ அடிப்படைச் சமூக சேவைகளுக்கான வாய்ப்பு வழங்குதல்.
  - ✓ தமது சக்தியால் முன்னேற இயலாதவர்களுக்கு உதவுதல், வறுமையில் வாடும் மக்கள் மற்றும் அவர்களது அமைப்புக்களை வலுப்படுத்தல்.
  - ✓ வறுமையால் பாதிக்கப்படும் பெண்களுக்குத் தீர்வுகள் ஏற்படுத்திக்கொடுத்தல்.

✓ வறுமையை ஒழிக்க அபிவிருத்திக்கான தொடர்பாடலில் அதிக கரிசனை செலுத்துவதோடு அதற்காகச் சர்வதேச ஒத்துழைப்பையும் வலுப்படுத்தல்.

**கொள்கை உருவாக்குவதில் மக்கள் பங்குபற்றல் (People's Participation in Policy Making)**

- கொள்கை உருவாக்குவதில் மக்கள் பங்குபற்றல் என்பது, தனிநபர்களின் பிரச்சினைகள் பற்றிய முழுத் தெளிவுடன், பங்குபற்றுபவர்களின் பிரச்சினைகள், அவர்கள் முன்வைக்கும் காரணிகள், அனுபவம், அறிவு, கருத்து, எண்ணம், எதிர்பார்ப்பு, பயம் மற்றும் பெறுதிகளைப் பரிமாற்றிக்கொள்ளப் பங்குபற்றுபவர்களுக்கு வாய்ப்பளிப்பதாகும். பங்குபற்றுவதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் கொள்கைகள் உருவாக்குவதில் மக்களின் ஈடுபாட்டை அதிகரிக்கலாம்.
- அதற்காக,
  - ✓ அரச ஊடகங்களைவிட மிகவும் வினைத்திறனான ஊடகங்களைப் பயன்படுத்தல்.
  - ✓ முதலாளித்துவம் மற்றும் நிலப்பிரபுத்துவத் தடைகளை நீக்குதல், வளங்களை மக்கள் பயன்பாட்டிற்கு வழங்குதல்.
  - ✓ சாதாரண மனிதனின் அடிப்படைத் தேவைகளுடன் பொருந்தியதான உற்பத்திகளை மேற்கொள்ளல்.
  - ✓ பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடிவது பொதுமக்கள் மூலமாகவேயன்றி மாற்றுவழிகளிலல்ல என்பதைக் கருத்திற்கொள்ளல்.
  - ✓ புதிய தொழினுட்பத்தை மக்கள் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தல் முதலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**மதிப்பீடு**

1. அபிவிருத்தியில் தொடர்பாடல் பயன்படுத்தக்கூடிய விதத்தை உதாரணங்களுடன் விபரிக்க.
2. அபிவிருத்திக்காகச் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த நவீன தொடர்பாடல் தொழினுட்பத்தைப் பயன்படுத்தக்கூடிய விதத்தை விளக்குக.
3. உங்கள் பிரதேசத்தில் வறுமையில் வாடும் குடும்பங்களை இனங்கண்டு அவர்களது வறுமையை ஒழிக்கப் பொருத்தமான தொடர்பாடல் வழிமுறையை உருவாக்குக.

**தேர்ச்சி மட்டம்** :9.3 அபிவிருத்திக்கான தொடர்பாடலின் அவசியத்தை விமர்சனரீதியாக முன்வைப்பார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற் பேறுகள்** : அபிவிருத்திக்கான தொடர்பாடலின் அவசியத்தைத் தெளிவுபடுத்துவார்.

**பாடத் தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**அபிவிருத்திக்கான தொடர்பாடலின் அவசியம்**

- அபிவிருத்திக்கான தொடர்பாடலின் அவசியம் என்பது தொடர்பாடல் செயற்பாடுகள் மூலம் மக்கள் தமது தேவைகளை அறிந்துகொள்ளல், மாற்றுவழிகளை நாடுதல், முரண்பாடுகளைத் தீர்த்தல், ஒற்றுமையாகச் செயற்படல், நிலையான அபிவிருத்திக்கான நடவடிக்கைகளைத் திட்டமிடல், மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் ஆற்றலை வளர்த்தல் மற்றும் நிறுவனரீதியான செயற்றிறனை மேம்படுத்தல் முதலானவற்றின் அவசியமாகும்.
- உலக அளவில் பல்வேறு நிறுவனங்கள் அபிவிருத்திக்கான தொடர்பாடலின் அவசியம் பற்றித் தமது அவதானத்தைச் செலுத்தியுள்ளன. அவற்றுள் சில வருமாறு,

1. **ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றி மூன்று பிரிவுகளில் கவனம் செலுத்துகிறது.**
   - **I.** விவசாயக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்காக நாட்டார் தொடர்பாடல் அமைப்புக்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தைப் பயன்படுத்தல்.
   - **II.** மக்களை அடிப்படையாகக் கொண்ட வானொலி நிகழ்ச்சிகள் தயாரித்தல்.
   - **III.** மக்களை அடிப்படையாகக் கொண்ட இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களிற்கு இசைவாதல்.
2. **ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் பண்பாட்டு அமைப்பு – யுனெஸ்கோ (UNESCO)**
   - ✓ அபிவிருத்திக்கான தொடர்பாடல் ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டங்களை யுனெஸ்கோ கொண்டிருக்கிறது.

- ✓ சமூகத்தைக் கட்டியெழுப்ப தனிநபர் மற்றும் மக்களை வலுப்படுத்தக்கூடிய சாதாரண, பொருத்தமான மற்றும் உகந்த வழிகளில் அனைவருக்கும் தகவல் வழங்குதல்.
- ✓ வெளியீட்டுச் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரத்திற்காக வேலை செய்தல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பப் பயன்பாட்டை ஊக்குவித்தல் மூலம் "அறிவுச் சமூகத்தைக்" கட்டியெழுப்புதல்.

- யுனெஸ்கோ அபிவிருத்திக்கான தொடர்பாடல் வழிகாட்டல் அடிப்படை
  - ✓ மாற்றம் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தும் பங்குபற்றலை உருவாக்குதல்.
  - ✓ ஆண்-பெண் பாகுபாடற்ற முதன்மையான பிரிவுகளாக மாற்றுதல்.
  - ✓ சாதாரண தன்மை, பல்வகைமை மற்றும் பொறுமை என்பவற்றைத் தரமுயர்த்தல்.
- இவ் வழிகாட்டலில் கீழ்க்காணும் விடயங்களும் அடங்கும்.
  - ✓ திறந்த உரையாடல்களை நடாத்தும் சுதந்திரம், சுயாதீன மற்றும் பன்முக ஊடக வலையமைப்பு.
  - ✓ மக்கள் உரையாடலை வலுவூட்டும், வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறும் முறைகள்.
  - ✓ பல்வேறு தொடர்பாடல் ஊடகங்களில் மக்கள் பிரவேசத்தை விரிவாக்குதல்.

அபிவிருத்தித் திட்டம்

- அபிவிருத்திக்கான தொடர்பாடல் திட்டமிடல் பற்றிய அடிப்படை விளக்கம் இதன் மூலம் வழங்கப்படும்.
- அபிவிருத்திக்கான தொடர்பாடல் திட்டமிடல் என்பது குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்ப சுகாதாரம், மற்றும் ஏனைய சமூகத் தன்மைகளை மேம்படுத்தும் திட்டங்கள்.
- அபிவிருத்தி நிகழ்ச்சிகள், கொள்கைகள் உருவாக்குதல், மனிதாபிமான நடவடிக்கைகள், மனித நடத்தை மற்றும் சமூகப் போக்குகளை மாற்றுதல் முதலானவற்றுக்காக முறையான விதத்தில் திட்டமிட்ட மற்றும் சாட்சிகளின் அடிப்படையில் உருவான செயன்முறை.
- குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாட, அவர்களது பங்குபற்றலை ஊக்குவித்தல். விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை இனங்காணல் மற்றும் அவற்றைத் தயாரித்தல்.
- பிரதேசத்தில், கிராமத்தில் வீசும் கழிவுகளை சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றுதல், அல்லது ஒன்று சேர்த்து இயற்கை உரமாக்குதல் மற்றும் அவற்றின் மூலம் பணம் சம்பாதித்தல் மற்றும் அப்பணத்தைப் பாடசாலை அபிவிருத்திக்காகப் பயன்படுத்தல் பற்றிய திட்டம் ஒன்றைத் தயாரித்தல்.

**அபிவிருத்திக்கான தொடர்பாடல் திட்ட அறிக்கையிடல் படிமுறைகள்**

1) தொடர்பாடல் ஆரம்பக் காரணிகளை இனங்காணல்.
2) அபிவிருத்திக்கான அபிவிருத்தி வெளியீடுகளைத் (Output) தயாரித்தல்.
3) அபிவிருத்திக்கான அபிவிருத்திச் செயற்றிட்டங்களை உருவாக்குதல்.
4) அபிவிருத்திக்கான அபிவிருத்திக் குறியீடுகளை நிர்ணயித்தல்.
5) செலவீனங்களை மதிப்பிடல்.

**ஊடகத்தின் பண்புத் தரம் (Media Quality)**

- சமூகத்தில் ஊடகத்தின் பண்புத்தரத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இதன் மூலம் குறிப்பிடப்படுகிறது. சுதந்திர மற்றும் சுயாதீன ஊடகத்துறைக்கு ஆதரவளிப்பதன் மூலமாகவும் ஜனநாயகம் மற்றும் வினைத்திறனான ஜனநாயக உரையாடல் மூலமாகவும் ஊடகத்தின் பண்புத் தரம் உறுதிப்படுத்தப்படுகிறது. ஊடக வளர்ச்சி, ஊடக உரிமை மற்றும் ஊடகத்தின் வெளிப்படைத் தன்மை பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமை மற்றும் சுதந்திரம் என்பனவும் இதிலடங்கும்.
- ஊடகத்தின் பண்புத்தரத்தின் வாயிலாக ஊடாக கல்வி, சுகாதாரம், அனர்த்த நிவாரணம், ஊழல் குற்றங்களை வெளிப்படுத்தல், சிறுபான்மையினருக்கு அதிகாரமளித்தல் மற்றும் உள்ளூர்சமூகச் செயற்றிட்டங்களை வகுத்தல் போன்ற குறிக்கோள்களை நிறைவேற்றலாம். அபிவிருத்திக்காக தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தை (ICT4D) ஊக்குவித்தல் அவசியமாகிறது.

**பங்கேற்பு மற்றும் ஆட்களிடைத் தொடர்புகளை வலுவூட்டல் (Enhancing Participation and Interpersonal Relationships)**

- பங்கேற்பு மற்றும் ஆட்களிடைத் தொடர்புகளை வலுவூட்ட உரையாடல் மற்றும் தலையீடு அவசியமாகும். தனிநபர் மற்றும் குழுக்களை வலுப்படுத்தல், தலைமைத்துவ மற்றும் ஆலோசனைத் திறன்களை மேம்படுத்தல் மற்றும் பெண்களுக்கெதிரான முரண்பாடுகளைக் களைவதற்கான மாற்றுவழிகளை உருவாக்குதல் என்பன அடங்கும்.
    - ✓ பங்குபற்றல் தொடர்பாடல் நிகழ்ச்சிகளை உருவாக்குதல்.
    - ✓ தரமான மாற்றத்தை நோக்கிய உணர்வுபூர்வமான மற்றும் உரையாடல்கள் மூலம் மக்களது பங்கேற்பை அதிகரித்தல்.
    - ✓ மகளிர் மற்றும் பெண் சிறார்களுக்கிடையே பண்பாட்டடிப்படையிலான உணர்வுபூர்வமான நிகழ்ச்சிகளை உருவாக்குதல்.
    - ✓ இயலுமான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பங்கேற்பு மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகளை ஆவணப்படுத்தல் மற்றும் மதிப்பிடல்.

✓ அதிக மக்கள் பங்குபெறும் தொடர்பாடல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்.

- முரண்கள் மற்றும் தீர்வுகளுக்குப் பொருத்தமான மற்றும் வினைத்திறனான மாதிரிகளை இனங்காண, மக்கள் செயற்றிறனுடன் பங்கேற்க வேண்டும். மேல்மட்டப் பங்கேற்பு மூலம் சாதகமான முடிவுகள் எய்தப்படும்.

**அத்தியாவசியமான மனிதாபிமானத் தகவல் வழங்குதல்** (**Essential Humanitarian Information Compilation**)

- அடிப்படை மானுடத் தேவைகளை நிறைவேற்றல் மற்றும் மனிதாபிமானப் பண்புகளை வளர்த்தல் என்பன இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றன. மனிதர்கள் அன்றாடம் தீர்மானங்களை மேற்கொள்வதோடு நாம் எண்ணும் மற்றும் நம்பிக்கை கொள்ளும் விடயங்களின் அடிப்படையில் எமது வாழ்க்கை கட்டியெழுப்பப்படும்.
- மனிதர்கள் தமது அடிப்படைத் தேவைகளை வெவ்வேறு விதங்களில் நிறைவேற்றிக்கொள்கின்றனர். உணவு, சுவாசம், நீர், பாலுறவு, பாதுகாப்பு, தனித்துவம் பற்றிய உணர்வு, பண்பாடு, உரிமை மற்றும் பெறுமதிகளுக்கு மதிப்பளித்தல் என்பன அவசியமாகும். இது தொடர்பான போதிய தகவல்களை மக்களுக்கு வழங்க வேண்டும். மானுடத்துடன் கூடிய மனிதப் பண்புகளை வளர்த்தல் இதன் மூலம் குறிப்பிடப்படுகிறது.

**சீர்திருத்தத்திற்கான தலையீடு: முரண்பாட்டு மீளிணக்கம் மற்றும் தீர்மானம்** (**Intervention for Reform: Conflict Reconciliation and Resolution**)

- புதிய சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், குடியுரிமை பற்றிய வரையறையைத் தயாரிக்க மக்கள் சீர்திருத்தத்தில் ஈடுபடுதல் அவசியமாகின்றது. அதன் மூலம் அரசாங்கத்தின் பொறுப்புக்கள் மீண்டும் வரையறை செய்யப்படுகின்றது.
- அது மட்டுமன்றி, நாட்டின் சகல சீர்திருத்தச் செயற்பாடுகளுக்கும் மக்களின் தலையீடு அவசியமாகும். மீளிணக்கத்திற்கான தொடர்பாடல் என்பது நட்பை விரிவாக்குவதாகும்.
- மீளிணக்கம் பல்வேறு விடயங்களுடன் தொடர்புபட்டது.
- இனத் தொடர்புகள்: சமூகத்தில் ஒவ்வொருவருக்கிடையேயான இனப்பாகுபாடுகளை விடுத்துப் பண்பாட்டு உரிமைகள் மற்றும் அனுபவம், நம்பிக்கை மற்றும் கௌரவத்தின் அடிப்படையில் தொடர்புகளை உருவாக்கல்.
- சமத்துவத்தன்மை: வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் சமத்துவத்தன்மை காணப்பட வேண்டும். மனிதன் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கௌரவமான பிரஜை ஆவான். மனிதர்கள் சமத்துவ அடிப்படையில் சுயாதீனமான முடிவுகளை எடுத்தல் வேண்டும்.

- நிறுவன ஒருமைத்துவம் (Institutional Integrity): அரசியல், வியாபாரம் மற்றும் சமூகக் கட்டமைப்புக்களினூடாகச் சீர்திருத்தத்திற்கான செயற்பாட்டு ஒத்துழைப்புக்களை வழங்கல்.
- மீளிணக்கம்: பண்பாடு மற்றும் உரிமைகளின் தேசிய ஒருமைப்பாட்டின் விளைவாக மீளிணக்கம் ஏற்படுத்தப்படுகின்றது.
- முரண்பாடுகளைத் தீர்த்தல் என்பது, இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட தரப்புக்களுக்கிடையேயான சர்ச்சைகளுக்கு அமைதியான முறையில் சுமுகமான தீர்வைக் காணல் ஆகும். இவற்றில் தனிப்பட்ட முரண்பாடுகள், நிதி, அரசியல் அல்லது உறவியல் காரணங்களும் அடங்கும். உரையாடல் மூலம் முரண்பாடுகளுக்கான தீர்வுகளை காணல் அவசியமாகின்றது.
- முரண்பாடுகளுக்கான தீர்வு காணும்போது கலந்துரையாடலைச் சரியான முறையில் கொண்டுசெல்லப் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்,
    - முரண்பாடுகளை இனங்காணல்.
    - எதிர்த்தரப்பினருடன் தொடர்பாடல் மேற்கொள்ளல்.
    - நடைமுறைப்படுத்தக்கூடிய ஆலோசனைகளை முன்வைத்தல்.
    - பொருத்தமான தீர்மானத்தைத் தெரிவு செய்தல்.
    - மூன்றாவதாக ஒரு நபரை மத்தியஸ்தராக நியமித்தல்.
    - மாற்றுவழிகளை ஆராய்தல்.

### பூகோள அபிவிருத்தி (**Global Development**)

- பூகோள அபிவிருத்தி அல்லது உலகளாவிய அபிவிருத்தி என்பது சர்வதேச மட்டத்து வளர்ச்சி என்பது பரவலான கருத்தாகும். பூகோள அபிவிருத்தி **பூ**கோள மாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடுவதோடு நிலையான அபிவிருத்தி மூலம் உலகளாவிய மாற்றங்களை முகாமைத்துவம் செய்யும் ஓர் முறையுமாகும்.
- தொழினுட்பம், கண்டுபிடிப்புக்கள் முதலியவற்றை வியாபித்தல், வியாபாரம், சமூகம், பண்பாடு, அரசியல், பொருட்கள், சேவைகள் மற்றும் மக்களின் தலையீட்டின் ஊடாக உலகமயமாக்கல் மற்றும் வணிகத் தொடர்புகளைக் கண்காணிக்க முடியும்.
- உலகச் சுற்றுச் சூழல் மாறுபாடு தொடர்பில் கண்ணோட்டம் செலுத்துகையில் காலநிலை மாற்றம், உயிர்ப் பல்வகைமை, பாலைவனமாதல், மண்ணரிப்பு, கடல் மாசடைதல், நன்னீர்ப் பற்றாக்குறை, சனத்தொகை வளர்ச்சி, நாகரீகமயமாதல், எரிபொருள் பாவனை தொடர்பில் ஆராய வேண்டும்.

**மதிப்பீடு:**

- இலங்கையில் அபிவிருத்தி தொடர்பில் ஊடகங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கலந்துரையாடுக.
- மனிதாபிமானத் தகவல்கள் நவீன ஊடகங்களில் பரிமாற்றப்படுகின்றனவா என விமர்சித்தல்.
- உமது பிரதேசம் சார்ந்த சுற்றுச்சூழல் தொடர்பாடல் திட்டங்களுக்கான ஆலோசனைகளை வழங்குக.

**தேர்ச்சி மட்டம்:** 9.4 அபிவிருத்திக்கான தொடர்பாடல் எதிர்பார்ப்புகளை இனங்கண்டு விபரிப்பர்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற் பேறுகள்** : அபிவிருத்திக்கான தொடர்பாடல் எதிர்பார்ப்புகள் பற்றிய விமர்சனரீதியான கருத்துக்களை முன்வைப்பர்.

**பாடத் தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**அபிவிருத்திக்கான தொடர்பாடலின் நோக்கங்கள் (Expectations of Communication for Development)**

- அபிவிருத்திக்கான தொடர்பாடலின் நோக்கமாவது, பண்பாடு, ஊடகம், தொடர்பாடல் மற்றும் அபிவிருத்தி பற்றியதாகும்.
- இங்கு, பூகோள மற்றும் உள்நாட்டுச் சூழலில் சமூகத்தின் அனைத்து மாற்றங்களும் ஆராயப்படும். தகவல் தொடர்பாடல், கல்வி, நடத்தை மாற்றம், சமூக சந்தைப்படுத்தல், ஊடக ஒழுக்க நெறிகள், சமூக மாற்றத்திற்கான தொடர்பாடல் மற்றும் சமூகத்தின் பங்கேற்பினூடாக சமூக எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளை அபிவிருத்திக்கான தொடர்பாடலின் நோக்கங்களாகக் குறிப்பிடலாம்.

**தேவைகளை மையப்படுத்திய நடவடிக்கைகள் (Need Centered Actions)**

- சுகாதார சேவை, போஷாக்கு, உடல் நலம், மனித உரிமைகள் மற்றும் வசிப்பிட வசதிகள் தொடர்பான தேவைகளை நிறைவேற்ற அபிவிருத்திக்கான தொடர்பாடலைப் பயன்படுத்தல் தேவைகளை மையப்படுத்தல் எனப்படும்.

**சுய நிர்ணயம் (Self- Determination)**

- மனிதர்கள் தம் வாழ்க்கையைத் தாமே கட்டுப்படுத்துவர். சுயநிர்ணயம் என்பது, மனிதர்கள் தமது தனிப்பட்ட தேவைகள் மற்றும் உளவியல் தேவைகளைக் கருத்திற்கொண்டு மனித ஊக்கம் மற்றும் ஆளுமை பற்றிய விழிப்புணர்வுடன் செயற்படுவதாகும்.

- சுய நிர்ணயம் பற்றிய உளவியல் விளக்கமாவது, தமது தெரிவு மற்றும் தமது வாழ்க்கையைத் தாமே கட்டுப்படுத்தும் ஆற்றல் அல்லது அச் செயன்முறையை வலுப்படுத்தல் என்பதாகும்.
- சுய நிர்ணயம் என்பது உளவியல் நலத்தின் முக்கிய அங்கமாகும்.
  - ✓ சுயாதீனத் தன்மை: மனிதர்கள் தம்முடைய நடத்தைகளைக் கட்டுப்படுத்தத் தாம் இருப்பதாக எண்ணுதல்.
  - ✓ தேர்ச்சி: தம்முடைய தேவைகள், அறிவு மற்றும் திறன்களைக் கட்டியெழுப்ப அவசியமான செயற்பாடுகள் பற்றிய தேர்ச்சியை விருத்தி செய்யும் அவசியம்.
  - ✓ தொடர்புகள்: மனிதர்கள் மற்றைய நபர்களுக்கிடையே நட்பு மற்றும் உறவுகளைப் பேணுதல் அவசியம் என்பதை உணருதல்.

**தன்னம்பிக்கை (Self- Confidence)**

- உள்ளார்ந்த காரணிகள் அல்லது நிதி நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தம்மால் அபிவிருத்தி தொடர்பில் ஏற்படுத்திக் கொள்ளப்படும் நம்பிக்கை. நீண்ட கால சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சி மற்றும் உற்பத்தி சம்பந்தமான புரிந்துணர்வை ஏற்படுத்தத் தன்னம்பிக்கை உதவுகின்றது.
- உற்பத்தி மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான வசதிகளை மேம்படுத்துவது எவ்வாறு? நிலையான அரசியலில் வளர்ச்சிக்கான போக்குகளை உதாசீனம் செய்யும் வழிமுறைகள் என்ன? சமூக அமைப்பில் மறைக்கப்பட்ட பொருளாதாரப் பின்னணியை வெளிக்கொண்டு வருவது எவ்வாறு? முதலியவற்றை விமர்சித்தல்.
- இவ்வாறு அபிவிருத்தி சம்பந்தமான தெளிவான நம்பிக்கையைத் தாம் ஏற்படுத்தல் தன்னம்பிக்கை ஆகும்.

**சிறந்த சூழலைக் கட்டியமைத்தல் (Building a Better Environment)**

- இது சூழலியல் சமநிலை ஆகும். சுற்றுச்சூழலை கட்டியமைப்பதன் மூலம் சுமுகமான உறவுகள், ஆரோக்கியமான மற்றும் அழகான சூழல் சமநிலையைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியும்.
- சகல உயிரினங்களினதும் இருப்பிற்கு அவசியமான உணவு வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் அவற்றின் நிலைத்ததன்மை மூலம் சமநிலையை உருவாக்கலாம். சகல உயிர்களுக்கிடையிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அனைத்து நிகழ்வுகளும் சிறந்த சூழலைக் கட்டியமைக்கத் துணைபுரியும். இவ்வாறு அனைத்து உயிரினங்களினதும் உயிர்த்தொழிற்பாட்டை நிலையாக்குவதன் மூலம் சமநிலையான சூழலை உருவாக்க முடியும்.

- மனித செயற்பாடுகளான வளங்களைச் சுரண்டல் மற்றும் காடழிப்பு போன்றவற்றை பரிசீலித்தல், மரம் நடுதல், காடழிப்பைத் தடுத்தல் மூலம் காலநிலை மாற்றங்களிலிருந்து விடுபடலாம்.
- அனர்த்த முகாமைத்துவத் தொடர்பாடலும் இங்கு முக்கியமாகும்.

பங்குபற்றல் ஜனநாயகம் (**Participatory Democracy**)

- அபிவிருத்திக்காகத் தொடர்பாடல் மூலமாக ஜனநாயக உணர்வுகளை மேம்படுத்தல் மற்றும் பிரஜைகளின் பங்கேற்பை அதிகரித்தல்.
- பிரஜைகளின் அரசியல் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு இலத்திரனியல் தொழினுட்பத்தை உபயோகிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கல்.
- சமநோக்கம் மற்றும் இலக்குகளை உடைய நபர்கள் மற்றும் ஒரே கொள்கையுடைய நபர்களைச் சந்திப்பதற்கு மெய்நிகர் தொடர்பாடல் மூலமாக வழிவகுத்தல்.
- பழைய ஊடகங்களில் ஒளிபரப்பில் ஏற்பட்ட தடைகளைக் கருத்தில் கொண்டு,மெய்நிகர் தொடர்பாடல் மூலமாகச் சமூகப் பங்கேற்புக்களை மேலும் அதிகரித்தல் அல்லது முன்னேற்றுதல்.
- இதன் மூலமாகப் பொது மக்கள் தமது வினாக்களை அரசியல் தலைவர்களிடம் கேட்டறியலாம்.
- மக்களிடையே இடைத் தொடர்புகளை ஏற்படுத்தும் தொடர்பாடல் பங்குபற்றல் ஜனநாயகமாகும்.
- இவ்வாறு தொடர்பாடல் சக்திகள் மூலம் மக்களை அபிவிருத்திச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்கேற்க வைத்தல்.

மதிப்பீடு

- உங்களது தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பும்முகமாகச் சுய விமர்சனம் ஒன்று எழுதுக.
- உங்கள் பிரதேசத்தில் காணக்கிடைக்கக்கூடிய அபிவிருத்திசார் பிரச்சினையொன்றை இனங்கண்டு அதற்குப் பொருத்தமான அபிவிருத்தித் திட்டம் ஒன்றை முன்வைக்க.
- உங்கள் பிரதேசத்தில் ஒரு குடும்பத்தை இனங்கண்டு அவர்களது சுகாதாரம் மற்றும் போஷாக்கை மேம்படுத்தக் கூடிய அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்க.

**கலைச் சொற்கள்**

| | | |
|---|---|---|
| அறிவுச் சமூகம் | - | Knowledge Society |
| மொத்தத் தேசிய உற்பத்தி | - | Gross Domestic Production |
| வறுமையை ஒழித்தல் | - | Poverty Reduction |
| நவீனமயமாதல் கோட்பாடு | - | Modernization Theory |
| உள்ளூர்மயமாதல் | - | Localization |
| முரண்பாடுகளைத் தீர்த்தல் | - | Conflict Resolution |
| புத்தாக்கப் பரவலாக்கம் | - | Diffusion of Innovation |
| மக்களின் பங்கேற்பு | - | People's Participation |
| ஆய்வு | - | Research |
| சார்புக் கோட்பாடு | - | Dependency Theory |
| தகவற் பகிர்வு | - | Information Sharing |
| சூழலியல் சமனிலை | - | Ecological Balance |
| வினாக்கொத்து | - | Questionnaire |
| அபிவிருத்தி வரைவிலக்கணங்கள் | - | Development Definitions |
| மீளிணக்கம் | - | Reconciliation |
| சுயநிர்ணயம் | - | Self- determination |
| அபிவிருத்தி | - | Development |
| அபிவிருத்தித் தொடர்பாடல் | - | Development Communication |
| அபிவிருத்திக்கான தொடர்பாடல் | - | Communication for Development |
| பங்குபற்றல் ஜனநாயகம் | - | Participatory Democaracy |
| தன்னம்பிக்கை | - | Self Confidence |
| கணக்கெடுப்பு | - | Survey |
| நடத்தை மாற்றத்திற்கான தொடர்பாடல் | - | Communication for Behavioural Change |
| சமூக மாற்றம் | - | Social Change |
| பரிந்துபேசுதல் | - | Advocacy |
| மானுட அபிவிருத்தி | - | Human Development |
| நிலையான அல்லது பேண்தகு அபிவிருத்தி | - | Sustainable Development |
| தொழிலின்மையை இல்லாதாக்குதல் | - | Elimination of Unemployment |

# 10. தொடர்பாடல் கொள்கைகள் மற்றும் ஊடக வரையறைகள்

தேர்ச்சி: 10.0 தொடர்பாடல் கொள்கைகள், ஊடக வரையறைகள், வெகுசன ஊடக ஒழுக்கநெறிகள் மற்றும் வழிகாட்டிகள் மூலமாக ஊடகங்களின் வரையறைகள் எவ்வாறு காட்டப்பட்டுள்ளன என்பதை உணர்ந்து விமர்சனரீதியாகச் செயற்படுவார்.

தேர்ச்சி மட்டம்: 10.1 தொடர்பாடல் கொள்கைகள் பற்றித் தெளிவுபடுத்துவார்.

பாடவேளைகள் : 20

கற்றற் பேறுகள்

- தொடர்பாடல் கொள்கைகளை விபரிப்பார்.
- பேச்சு மற்றும் எழுத்துத் தொடர்பான அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ளன என்பதை அறிந்து அவற்றை விபரிப்பார்.
- ஊடக சுதந்திரத்தின் அர்த்தத்தை விபரிப்பார்.
- ஊடக சுதந்திரம் தொடர்பில் விமர்சனரீதியான கருத்துக்களை வெளிப்படுத்துவார்.
- புலமைச் சொத்துக்கள் சட்டம்பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பார்.
- தகவலறியும் உரிமை மற்றும் அதன் அவசியத்தைத் தெளிவுபடுத்துவார்.

**பாடத்தைத் தயார் செய்வதற்கான அறிவுறுத்தல்கள்:**
கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**தொடர்பாடல் கொள்கைகள்**

- தொடர்பாடல் மற்றும் ஊடகச் செயற்பாடு பற்றிய அரசின் அல்லது அரச அதிகாரிகளின் முடிவுகள் காணப்படுகின்ற அடிப்படையாகத் தொடர்பாடல் கொள்கைகளை விபரிக்கலாம். சிவில் சுதந்திரம் மற்றும் மானுட உரிமைகள் மீது தாக்கம் ஏற்படுத்தும்போது தொடர்பாடல் கொள்கைகள் பிரஜைகளின் கொள்கைகளாக மாறுகின்றன.
- தொடர்பாடல் வினைத்திறன் மிக்கதாக மாறுவது அதன் சக்தியானது சமூகக் காரணிகள் மற்றும் செய்திப் பரவுகையினூடாக பொதுமக்கள் கருத்தையும் அதனோடு இணைந்த காரணிகளையும் வெளிக்கொணரும்போதே ஆகும். தொடர்பாடல் கொள்கை எனப்படுவது Communication Policy என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகிறது.

தயாரிப்பாளர்கள், திட்டமிடுபவர்கள், அச்செயற்பாடுகளைத் தொழில்ரீதியாக செய்பவர்களின் கடமைப்பொறுப்பாவது, சமூகக் காரணிகள் விகாரமடையாதவாறு தொடர்பாடல் கொள்கைகளைத் தயாரித்தலாகும்.

- தொடர்பாடல் கொள்கைகளைக் கற்பதன் முக்கிய நோக்கம்- உள்ளடக்கம் பற்றிய அறிவு, ஊடகத் தொழிலின் உரிமையாண்மை, தொழினுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழினுட்ப விருத்தி, ஊடகத் தொடர்பு அதிகாரிகளின் பணிகள் முதலியவற்றைக் கற்பதாகும்.
- எனினும், பெரும்பாலான சமூகங்களை நோக்கும்போது புறக்கணிக்க முடியாத அல்லது தவிர்க்க முடியாத வேறு சமூகக் காரணிகள் பலவற்றையும் காணக்கூடியதாய் உள்ளது (உதாரணமாக-நிறபேதம், இனப்பாகுபாடு போன்றவை). தொடர்பாடல் கொள்கை முறை தயாரிக்கப்படுவது தற்காலச் சமூகத்தில் காணப்படும் அரசியல் மற்றும் சமூகப் போராட்டங்களுக்கு ஏற்பவே ஆகும்.
- 1927 இல் பி.பி.சி (BBC) நிறுவனம் பற்றிய பிரித்தானிய அனுமதி (Royal Charter) மூலம் பெரிய பிரித்தானியா மற்றும் காலனித்துவ நாடுகளில் வானொலி ஊடகத்தை இயக்குதல் தொடர்பான கொள்கைகள் அறிமுகம் செய்யப்பட்டன. இதன் அடிப்படையாக அமைந்தது பொதுமக்கள் சேவை (Public Service) வானொலி எண்ணக்கருவை வியாபிப்பதாகும். பிற்காலத்தில் இக் கொள்கைகள் தொலைக்காட்சி ஊடகத்திலும் பின்பற்றப்பட்டன.
- 1934 இல் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொடர்பாடல் தொழினுட்பச் சட்டமூலம் (Communication Act 08, 1934) காரணமாக அமெரிக்காவில் வானொலி, தொலைக்காட்சி, தொலைத் தொடர்புகள் மற்றும் வெளிநாட்டுத் தொடர்பாடலுக்காக சமஷ்டித் தொடர்பாடல் தொழினுட்ப ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. அது வெகுசன ஊடகங்கள் மத்தியில் தொழினுட்பச் சிக்கல்களை வரையறை செய்யும் அமைப்பாக இயங்கியது.
- தொடர்பாடல் கொள்கைத் திட்டமிடல் தொடர்பாக நடைபெற்ற முதலாவது மாநாடு 1976ஆம் ஆண்டு கோஸ்தாரிகாவின் சென். ஜோஸ்சில் நடைபெற்றது. தேசிய மற்றும் சர்வதேசரீதியான குழுவொன்றைப் புதிதாக அமைத்தல் தொடர்பாக அங்கு கலந்துரையாடப்பட்டது. சகல நாடுகளிலும் தேசிய உணர்வுக்கு மேலதிகமாக சர்வதேச தொடர்புகளை உறுதிப்படுத்தும் வகையிலும் தொடர்பாடல் கொள்கை தயாரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. அதன்பிறகு நாடுகள் தமது தொடர்பாடல் கொள்கையை ஒழுங்கு முறைப்படுத்தும் செயற்பாடுகளை ஆரம்பித்தன.
- 1970களின் பின்னரைப் பகுதியில் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற சீன் மக்பிறைட்டின் (Sean Macbride) பங்குபற்றலுடன் யுனெஸ்கோ அமைப்பினால் பூகோள ஊடகச் சித்திரிப்பை மிகவும் எளிமைப்படுத்த மக்பிறைட் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது.
- பூகோளத் தொடர்பாடலின் சமமற்ற தன்மை மற்றும் அதுசார்ந்த முரண்பாடுகள் அக்காலத் தொடர்பாடல் நிபுணர்களின் அவதானத்தைப் பெற்றது. 1964இல் வில்பர் ஷ்ராம் இனங்களுக்கிடையில் செய்தி பரவும் விதம் பற்றிக் கருத்துத் தெரிவித்ததோடு, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் செய்தி பற்றிய குறைவான அவதானம் மற்றும் யதார்த்தத்தைத் திரிபுபடுத்துவதான போக்குக் காணப்படுவதாகக் குறிப்பிட்டார்.
- 1969 இல் ஹேர்பட் ஷெல்லர் (Herbert Schaller) வானொலி சமிக்ஞைகள் பற்றி ஆய்வு செய்து, அவை செய்மதிகளின் துணையுடன் யுத்தத்திற்காக அதிகம் பயன்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டார். இக்கருத்து 1970களில் அணிசேரா நாடுகளின் மாநாடு மற்றும் யுனெஸ்கோ அமைப்பின் கலந்துரையாடலுக்கும்

**உட்பட்டது. இது, அணிசேரா நாடுகளுக்கிடையே செய்திப் பரிமாற்றும் முறை உருவாகக் காரணமாயிற்று.**

- யுனெஸ்கோவின் 'Many Voices One World' மக்பிறைட் அறிக்கையின்படி, நாடொன்றின் தொடர்பாடல் கொள்கை தயாரிக்கப்படவேண்டியது சமமின்மையை இல்லாதொழிப்பதற்கு ஆகும். எடுத்துக்காட்டாக, பெண்களை வேறுபடுத்தி நோக்குதலைக் குறிப்பிடலாம் அல்லது பெண்களை ஒதுக்கி வைத்தலைக் குறிப்பிடலாம். இதுபோன்ற விடயங்களால் சமூகத்தில் உருவாகும் பிரிவினைகள் காரணமாக அநேகமான நாடுகளில் நடைமுறையிலுள்ள வரப்பிரசாதங்கள் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எட்டாக்கனியாகின்றன. தேசிய, இன, பண்பாட்டு, அரசியல் மற்றும் மொழி ரீதியான வேறுபாடுகளுடனான சிறுபான்மை மக்களின் குரலை பிரதிநிதித்துவப்படுத்துதல் இருக்கவேண்டும். அவ்வாறில்லாவிடில் சிறு குழுவினரால் அவர்களது ஜனநாயகரீதியான கருத்துக்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களை தடுக்கப்படும்போது அந்த அழுத்தம் வேறு விதமாக வெடிக்கலாம்.
- யுனெஸ்கோ குறிப்பிடுவதற்கிணங்க, ஏதேனுமோர் நபருக்கு அவர் சார்ந்த சமூகத்திற்கும் தமக்குரியதுமான தனித்துவமான வாழ்க்கையை வாழும் உரிமை உண்டு. அதற்காக தேசிய மற்றும் சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொடர்பாடல் கொள்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். அதன்மூலம் சமூக இடைவெளி குறைவடையும். சமாதானமும் சமத்துவமும் கட்டியெழுப்பப்படும். இதற்கிணங்க எல்லா நபர்களினதும் ஆன்ம சக்தியை வலுப்படுத்தக்கூடிய தொடர்பாடல் கொள்கை தயாரிக்கப்படவேண்டும். மனித வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் தொடர்பாடல் பின்னிப்பிணைந்து காணப்படுவதால் மக்களிடையே தொடர்பாடல் இடைவெளியை ஒழித்து, ஒரு நாட்டின் தொடர்பாடல் கொள்கை தயாரிக்கப்பட வேண்டும்.
- ஒரு நாட்டின் ஊடகக் கொள்கை தயாரிக்கப்படுவது பரந்த அளவில் தொடர்பாடல் கொள்கையின் அடிப்படையிலேயே ஆகும். ஒரு நாட்டின் ஊடகக் கொள்கை நாட்டின் பொதுமக்களின் பொதுநலனைக் கருத்திற்கொண்டே தயாரிக்கப்படுகிறது.
    1. ஊடக உரிமையாண்மை.
    2. தொழினுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழினுட்பரீதியான விருத்தி.
    3. பொதுமக்களுடனான ஊடகத் தொடர்பு.
    4. ஊடக அதிகாரிகள் மற்றும் வணிக சந்தையுடனான செயற்பாடு என்பன ஊடகக் கொள்கையில் அடங்குவனவாகும்.

ஊடகக் கொள்கை முக்கியத்துவம் பெறுவது,

1. துல்லியத்தன்மை, நடுநிலைத்தன்மை மற்றும் நேர்மை என்பன தொடர்பான மூலதர்மங்களுக்கு மதிப்பளிப்பதற்கு.
2. ஜனநாயகம் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் மானசீகமாக மக்களுடனான தொடர்பை விருத்தி செய்வதோடு வெளியீட்டு உரிமையை உறுதிப்படுத்துவதனூடாக பல்வேறு பண்பாட்டு மக்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு.
3. அனைத்து ஊடக நிறுவனங்களினதும் செயற்பாடுகளைச் சுயாதீனமாக்குவதனூடாக ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கு.
4. ஒழுக்கநெறி, ஊடக வரையறைகளை விருத்தி செய்தல் மற்றும் சுயாதீனப் பொறிமுறையை உருவாக்குதல், ஊடகத் துறையின் வெளிப்படைத் தன்மையை விருத்தி செய்வதற்கு.

- ஊடகக் கொள்கைத் தயாரிப்பின்போது அடிப்படை அம்சமாக அமைவது நாடொன்றின் நிர்வாகக் கட்டமைப்பாகும். ஜனநாயக அரச கட்டமைப்பு ஊடகக் கொள்கை

தயாரிப்பின்போது மக்கள் சார்புத் தன்மையைப் பெறும். ஊடகக் கொள்கை தயாரித்தல் சாதாரணமாக அரசினால் மேற்கொள்ளப்பட்டாலும் ஐரோப்பிய ஆணைக்குழு, சர்வதேச வர்த்தக சங்கம் என்பவற்றுக்கிணங்க, ஊடகரீதியாகவும் தமது நிறுவனரீதியாகவும் நடைமுறைப்படுத்த நிறுவனத்தினாலேயே ஊடகக்கொள்கை தயாரிக்கப்பட முடியும். இதற்காக ஊடக அல்லது தொடர்பாடல் உரிமையாண்மை தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரியொன்றைப் பயன்படுத்தலாம். அத்தோடு,சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் நாடொன்றின் அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பேச்சு மற்றும் எழுத்து உரிமைகள் சட்டத்தின் அடிப்படைகளாக அமைகின்றன.

**சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்**

- மனித உரிமைகள் பற்றிய அவதானம் நீண்ட காலமாக வியாபித்த ஒன்று. அனைத்து நபர்களுக்கும் தமது மதத்தைத் தெரிவு செய்யும்,இனத்துவ ஒற்றுமையை உருவாக்கும் உரிமை உள்ளது எனும் கருத்து பற்றி அவதானிக்கப்பட்டது. பிறகு, பிறப்பு, சொத்து, தேசிய சமூக இணைப்பு, ஆண்-பெண் தன்மைகள் மற்றும் மதம் முதலியவற்றால் சமனிலை அற்றுப் போனதாகக் கலந்துரையாடப்பட்டது.
- சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் (Universal Declearation of Human Rights – UDHR) என்பது மனித உரிமைகள் வரலாற்றின் ஒரு மைல்கல்லாகும். உலகம் முழுவதும் எல்லா பிரதேசங்களிலும் பல்வேறு சட்ட மற்றும் பண்பாட்டு பின்னணியில் பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையானது வெளியிடப்பட்டது 1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டின் போதாகும். அதற்கிணங்க, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
- சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், இரண்டாம் உலகப் போரின் அனுபவமாக அமைந்தது. இதன் மூலம் சமகாலத்தில் பல நாடுகளிலும் அடிப்படை உரிமைகள் பற்றிய ஓர் அடிப்படையை உருவாக்க இயலுமாயிற்று.
- இந்த சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் மனித சமூகத்தின் அனைத்து அங்கத்தவர்களினதும் உயரிய, கௌரவமான உலகத்தின் சுதந்திரமான, நீதியான சமூக அமைப்பெனஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனூடாகப் புலப்படுத்தப்படுவது - மனித உரிமைகள் உலகளாவியது என்பதும், யார் எங்கு வாழந்தாலும், சகலரினாலும் அதனை அனுபவிக்க முடியும் என்பதுமாகும்.
- இப்பிரகடனத்தில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்குள் உயிர்வாழும் உரிமை, சுதந்திரம், சுதந்திரமான பேச்சு மற்றும் தனிப்பட்ட தன்மை போன்றன உள்ளடங்குகின்றன. தொடர்பாடல் பற்றி இப்பிரகடனத்தின் 19ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.இப்பிரகடனம் ஒரு உடன்படிக்கை அல்லாததோடு நாடுகளுடன் நேரடியான சட்டரீதியான பிணைப்பு காணப்படாது. (Article 19 – Everyone has the right to freedom of opinion and expression; this right includes freedom to hold opinions without interference and to seek, receive and impart information and ideas through any media and regardless of frontiers. - Universal Declaration of Human Rights).

**அரசியல் யாப்பு**

ஒரு நாட்டில் அரசியல் யாப்பு என்பது, சமகால நீதியின் விதிமுறைகளுடன் இணைந்து, நாட்டின் ஆட்சிக்குத் தேவையான சக்திமிக்கச் சட்டதிட்டமாகும்.

- 1978ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 3ஆவது சரத்தில் 10ஆவது உறுப்புரையில் இருந்து 14ஆவது உறுப்புரை வரை அடிப்படை உரிமைகள் குறிப்பிடப்படுகின்றன.
- 14(1)(அ) பேச்சு சுதந்திரம் மற்றும் வெளியிடுதல் உள்ளிட்ட கருத்து வெளியிடும் சுதந்திரம் அடங்கும். எல்லாப் பிரஜைக்கும்
  (அ) பேச்சு சுதந்திரம் மற்றும் வெளியிடுதல் உள்ளிட்ட கருத்து வெளியிடும் சுதந்திரம் உள்ளது.
- இந்த சுதந்திரம் அரசியலமைப்பில் குறித்தளவு எல்லைகளுக்குட்பட்டுள்ளது. அதுபற்றி 15(1) மற்றும் 15(2) உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 15(1) 13 ஆவது உறுப்புரைகளின் (5) ஆவது மற்றும் (6) ஆவது உப உறுப்புரைகளில் வெளியிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளை அனுபவிக்க முடியுமாயிருப்பதும் செயற்படுத்த முடிவதும் அரச பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகச் சட்டத்தினால் விதந்துரைக்கப்படும் எல்லைகளுக்குட்பட்டே ஆகும். இங்கு சட்டம் என்பதில் அக்காலகட்டத்தில் பொருத்தமான விடயங்கள் உள்ளடங்கும்.
- 15(7) சரத்து (12) ஆம் 13(1) ஆம் (12) ஆம் 14 ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா அடிப்படை மனித உரிமைகளினதும் பிரயோகமும் தொழிற்பாடும், தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் என்பவற்றிற்கு முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்திற்காக அல்லது ஜனநாயக சமூகத்தின் பொதுநலத்தின் நீதியான தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் நோக்கத்திற்காக சட்டத்தினால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும். இப்பந்தியின் நோக்கங்களுக்காக சட்டம் என்பது பொதுமக்களின் பாதுகாப்பு பற்றிய சமகால சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை உள்ளடக்கும்.
- அரசியலமைப்பின் 19ஆவது சீர்திருத்தத்தில் தகவலறியும் உரிமையும் அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஊடக சுதந்திரம்**

- தனிநபர் சுதந்திரத்தின் நீட்சியாகப் பத்திரிகைச் சுதந்திரமும், அதன் நீட்சியாக ஊடக சுதந்திரமும் பிரபல்யமானது. இதன் மூலம் குறிப்பிடப்படுவது இலத்திரனியல் அல்லது அச்சு அல்லது ஏதேனும் ஊடகம் மூலமாகத் தகவல் வெளியிடுவதில் "ஊடக சுதந்திரம்" அவசியம் என்பதாகும்.
- ஊடக சுதந்திரத்திற்குத் தடையாக அமையும் அரசியல், சமூக மற்றும் ஏனைய காரணிகள் யாவை என்பது கலந்துரையாடப்படும்.
- **"வெளியீட்டுச் சுதந்திரம்"** என்பது முதன் முதலில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டது 1948 டிசம்பர் 10இல் இடம்பெற்ற மனித உரிமைகள் பற்றிய பிரகடனத்தின் மூலமாகும்.
- ஒரு நாட்டில் ஊடக சுதந்திரம் சவாலுக்குட்படுத்தப்பட்டபோதிலும் அதற்கு அடிப்படையாகும் காரணிகள் சவாலுக்குட்படுவதில்லை.
- ஊடக சுதந்திரத்தின் பிரதான பணி, பெறுநருக்குக் கிடைக்கப்பெறும் தகவல்கள் பற்றி வாத விவாதம் மேற்கொண்டு அதனை ஏற்றுக்கொள்ளும் அல்லது மறுக்கும் கருத்துக்களை வெளியிடுதலாகும்.

- தாம் விரும்பிய கருத்துக்களை மட்டும் பெறுநருக்கு வழங்காது பலரது நோக்கங்களையும் நிறைவேற்றும் தகவல்கள் வழங்கல்.
- கணினி மற்றும் இணையத்தின் வருகையால் ஊடக சுதந்திரம் மேலும் சவாலுக்குட்படுத்தப்பட்டது. வரையறைகளுக்கு அப்பாற்பட்டதாகப் புதிய ஊடகம் காணப்படுகிறது.
- புதிய ஊடகங்களின் வளர்ச்சியால் உள்ளூர், வெளியூர் **பேதமின்றித் தகவல் சர்வதேச அளவில் தயாரிக்கப்படுவதோடு அதனால் ஒத்ததன்மையான கருத்தியல்கள் உருவாகின்றன.**

**2003 ஆம் ஆண்டு 36ஆம் இலக்கப் புலமைச் சொத்துச் சட்டம்**

- புலமைச் சொத்து எனப்படுவது, மனிதனது படைப்பாக்கத்தால் உருவாகும் படைப்புக்களாகும். தொழில்துறை, விஞ்ஞானம், இலக்கியம், கலை மற்றும் அழகியல்சார் துறைகள்சார்ந்த படைப்பாக்கங்களின் சொத்துரிமை இதன் மூலம் குறிப்பிடப்படுகிறது. நாவல், சிறுகதை, நாடகம்,திரைப்படம், இசை, ஓவியம், புகைப்படம், சிற்பம், கணினி ஆக்கங்கள், வீட்டு உள்ளக அலங்கரிப்பு, வியாபார நாமங்கள் மற்றும் காப்புரிமை (Patent) அனுமதிப்பத்திரம் என்பன இதிலடங்கும்.
- நாடொன்றின் படைப்பாக்கச் செயற்பாடுகளுக்குச் சட்டத்தின் பாதுகாப்பு அவசியமாகும். ஆதலால், இலங்கையில் புலமைச் சொத்தின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டதே 2003 ஆம் ஆண்டு 36ஆம் இலக்கப் புலமைச் சொத்து சட்டமாகும்.
- இந்தச் சட்டத்தின் 6ஆவது உறுப்புரைக்கு ஏற்ப, இலக்கிய, கலை மற்றும் விஞ்ஞானத் துறைகளின் முதல் அறிவுசார் படைப்பாக்கத்திற்கு இப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.இங்கு, வெளியீட்டு உரிமை என்பது, பொருளாதார உரிமைகள், ஒழுக்கநெறிசார் உரிமைகள் என இருவகைப்படுத்தப்படுகின்றது.
- உரிமையாண்மை, உரிமை ஆகிய இரண்டும் இதன்படி உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. பொருளாதார உரிமைக்கேற்ப ஏனையவர்கள் நபரொருவது ஆக்கத்தினைப் பயன்படுத்தும்போது படைப்பாளிக்குப் பொருளாதார ரீதியான நன்மையொன்று கிடைக்கிறது. ஒழுக்கநெறிசார் உரிமைகளில் எழுத்தாளர்கள், தயாரிப்பாளர்கள் அவர்களுடைய செயற்பாடுகளுடன் தொடர்புகளைப் பேணவும்,பாதுகாப்பு வழங்கவும் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமாயிருக்கிறது. பொருளாதார உரிமைகளில் உரிமையாளர் அல்லது படைப்பாளி அந்த உரிமையை இன்னொருவருக்குப் பணப்பெறுமதிக்குக் கைமாற்ற முடியும். பெரும்பாலான நாடுகளில் ஒழுக்கநெறிசார் உரிமைகளை இவ்வாறு கைமாற்ற முடியாது.
- எவ்வாறாயினும் உரிமையாளரின் சொத்து, ஏனைய சமூக அங்கத்தவர்களின் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகள் மற்றும் அவசியம் என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அதனால் சாதாரண பாதுகாப்பு நடவடிக்கைகளின்போது உரிமையாளர் அதனை எவ்வாறு பயன்படுத்துவார் என்பதைத் தீர்மானிக்க முடியும். அத்தோடு, அதனை அடுத்தவர் அனுமதியின்றிப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் முடியும்.
- இச் சட்டத்தின் 9(1) உறுப்புரைக்கேற்ப, பொருளாதார உரிமைகளில் உரிமையாளரால் மட்டும் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளாக - தனது ஆக்கத்தை மொழிபெயர்த்தல், பகிர்ந்தளித்தல், வாடகைக்கு வழங்குதல், இறக்குமதி செய்தல், காட்சிப்படுத்தல், ஒளிபரப்புதல் அல்லது தொடர்பாடல் செய்தல் ஆகியன உள்ளடங்குகின்றன. பொருளாதார உரிமையில் முதல் உரிமை எழுத்தாக்கத்தின் தன்மையிலேயே

தங்கியுள்ளது. அதற்கமைய கூட்டு ஆக்கமொன்றில் குறித்த தரப்பினரின் எழுத்தாக்கத் தன்மைக்கேற்ப பொருளாதார உரிமைகள் தீர்மானிக்கப்படும்.

- ஒழுக்கநெறிசார் உரிமைகள் சட்டத்தில் 10(1) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த உரிமைகள் பொருளாதார உரிமைகளிலிருந்து சுயாதீனமாகச் செயற்படும். இதன்போது ஆக்கத்தினை ஆக்கியோன் என்ற வகையில் பல்வேறு பெயர்நாமங்களைப் பயன்படுத்தும் உரிமை மற்றும் ஏதேனும் வகையில் திரிபுபடுத்தல் மூலமோ அல்லது வேறு மாற்றங்கள் மூலமோ அல்லது அவமதிப்பு நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கு உள்ள உரிமையோடு அவன் அல்லது அவளின் கௌரவம் மற்றும் கீர்த்திக்குப் பங்கம் ஏற்படாது பாதுகாக்கப்படும் உரிமையும் அடங்குகிறது. பொருளாதார உரிமைகளைப் போன்று ஒழுக்கநெறி உரிமைகளைக் கைமாற்ற முடியாது. ஆக்கத்தை ஆக்கியோனின் மரணம்வரை அந்த உரிமை குறித்த ஆக்கியோனிடமே காணப்படும். அதேவேளை, ஆக்கியோன் மரணித்து 70 ஆண்டுகளுக்குப் பின் ஒழுக்கநெறி உரிமை ஏனையோருக்கு கிடைக்கப்பெறும்.

### நியாயமான பாவனைக் கோட்பாடு **(Fair Use Doctrine)**

- நியாயமான பாவனை என்பது படைப்பாக்க உரிமையை மீறுதலாகப் பொருட்படாது. மாறாக விமர்சித்தல், தர்க்கரீதியாக ஆராய்தல், செய்தி அறிக்கையிடல், கற்பித்தல், புலமைப்பரிசில் மற்றும் பரிசோதனை என்பவற்றின்போது பயன்படுத்துதல் அதில் உள்ளடங்கும். பயன்பாட்டிற்கு நியாயமானதா என்பதைத் தீர்மானிக்கும்போது பின்வரும் நான்கு காரணிகள் மீது கவனம் செலுத்தப்படும்.

    - பாவனை மற்றும் அதன் தன்மை.
    - படைப்பாக்க உரிமை பாதுகாக்கப்பட்டுள்ள செயற்பாட்டின் தன்மை.
    - முழுமையான உரிமையாண்மையுடனான செயற்பாட்டின்போது பாவனை செய்யப்படும் அளவு.
    - உரிமையாண்மையைப் பாதுகாத்துச் சந்தையில் பயன்படுத்தும்போது ஏற்படும் சவால்கள்.

### 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கத் தகவல் அறியும் சட்டம்

- இச் சட்டம் மக்கள் அரச நிறுவனங்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்ள உள்ள உரிமை உறுதிசெய்கிறது. பிரஜையொருவர் தான் கேட்கும் தகவலைப் பெற்றுக்கொள்ள உள்ள உரிமை இச்சட்டம் மூலமாக உறுதிசெய்யப்படுகிறது.
- கொள்கை உருவாக்கத்தில் மக்கள் பங்குபற்றலை அதிகரிப்பதற்காக, வெளிப்படைத்தன்மை, அரச பொறுப்பு, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் ஊழலுக்கு எதிரான தகவலைப் பெற்றுக்கொள்ளும் உரிமை இதன் மூலம் உறுதிசெய்யப்படுகிறது. அச்சு ஆவணங்கள், கணினி ஆவணங்கள், கடிதங்கள், மின்னஞ்சல் பிரதி, உடன்படிக்கை, திட்டங்கள் மற்றும் ஒலி-ஒளிப் பதிவுகள் என்பன இதிலடங்கும். தகவல்கள் என்பதில் பரீட்சை சார்ந்த அந்தரங்க நடவடிக்கைகள், தனிப்பட்ட வைத்திய அறிக்கைகள் என்பனவிளக்களிக்கப்பட்டிருக்கும்.

**வரலாற்றுப் பின்னணி**

- உலகில் முதன்முதலாக 1766ஆம் ஆண்டு சுவீடனில் தகவல் அறியும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 1946ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் 59(1) இலக்க தகவல் அறியும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 1966ஆம் ஆண்டு அமெரிக்காவில் தகவல் சுதந்திரச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 1980ஆம் ஆண்டு ஐரோப்பிய ஆணைக்குழுவில் அரச நிறுவனங்களின் தகவலுக்கான பிரவேசம் பற்றி அங்கத்துவ நாடுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டது.
- ஆனால், தகவல் அறியும் சட்டம் இலங்கையில் நிறைவேற்றப்படுவதற்கு பெரும் பிரயத்தனப்படவேண்டி இருந்தது. இதன் ஆரம்பம் 2002/2003 ஆண்டுகளில் இடம்பெற்றாலும், 2016ஆம் ஆண்டே அரசினால் அது நிறைவேற்றப்பட்டது. உலகத் தரப்படுத்தலுக்கு ஏற்ப, உலக நாடுகளின் வினைத்திறன்மிக்க தகவல் அறியும் சட்டங்களில் 3ஆம் இடத்தை பெறுவது இலங்கையின் தகவலறியும் சட்டமாகும்.
- 2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்கத் தகவலறியும் சட்டத்தின் செயற்பாடுகள் 2017 பெப்ரவரி 02ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தகவலறியும் ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளதோடு, அதனூடாக மேன்முறையீடுகளும், சட்டத்துடன் தொடர்புடைய முறைப்பாடுகளும் விசாரிக்கப்படும்.
- இச்செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கு - அரச கட்டமைப்பு, அரச கட்டமைப்பின் பொதுசனத் தொடர்பு அதிகாரிகள் அல்லது தகவல் வழங்குதலில் தொழில்ரீதியாகப் பயிற்சி பெற்ற அதிகாரிகளின் சேவையோடு மக்கள் மத்தியிலான சட்டம் பற்றிய விழிப்புணர்வும் உறுதுணையாய் அமைகின்றன.

**மதிப்பீடு**

1. தொடர்பாடல் கொள்கை என்பதை அறிமுகம் செய்து அரசியலமைப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள பேச்சு மற்றும் எழுத்து தொடர்பான அடிப்படை உரிமைகளை விளக்குக.

2. ஊடக சுதந்திரம், புலமைச் சொத்துச் சட்டம், தகவல் அறியும் சட்டம் தொடர்பாக சிறுகுறிப்பெழுதுக.

3. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் உங்கள் ஊரில் காணப்படும் தகவல் பெற்றுக்கொள்ளக் கூடிய அமைப்புக்களைப் பெயரிடுக.

தேர்ச்சி மட்டம் : 10.2 ஊடக விதிமுறைகள் அல்லது வரையறைகளை வரைவிலக்கணப்படுத்தி அதன் அவசியம்,விசேட இயல்புகள், ஊடக வரையறைகளை நிறுவும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகளைப் பகுத்தாய்வார்.

பாடவேளைகள்: 20

கற்றற் பேறுகள்

- ஊடக விதிமுறைகள் அல்லது வரையறைகளை இனங்கண்டு தெரிவிப்பார்.
- ஊடக விதிமுறைகள் அல்லது வரையறைகளின் அவசியம் மற்றும் அவற்றின் விசேட இயல்புகளை விபரிப்பார்.
- ஊடக விதிமுறைகள் அல்லது வரையறைகளை நிறுவும் நிறுவனங்கள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடுவார்.
- ஊடக விதிமுறைகள் அல்லது வரையறைகளை நிறுவும் நிறுவனங்கள் சிலவற்றின் செயற்பாடுகளைக் குறிப்பிடுவார்.

**பாடத்தைத் தயார் செய்வதற்கான அறிவுறுத்தலகள்.**
கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**வெகுசன ஊடகத் தணிக்கை**

**அறிமுகம்**

- ஊடக விதிமுறைகள் அல்லது வரையறைகள், ஊடகக் கொள்கைகளுடன் நெருங்கிய தொடர்புடையன. அரசு மற்றும் உத்தியோகபூர்வ முடிவுகள் எடுக்கக் கூடிய அமைப்புக்களால் ஊடகக் கட்டமைப்பு, ஊடக நடத்தை மற்றும் ஊடக நிர்வாகம் பற்றிய முறைசார் மற்றும் முறைசாராத விதிமுறைகள் அல்லது வரையறைகள் உருவாக்கப்படுதல் இதன் மூலம் நிகழ்கிறது. இது அரச மற்றும் அரசசார்பற்ற வகையிலும் நிகழும்.
- வெகுசன ஊடகத் தணிக்கை என்பது வெகுசன ஊடகத் தொழிற்துறையின் மிக முக்கிய எண்ணக்கருவாகும். பொதுமக்கள் நிறுவனமொன்றினால் மக்களின் மதிப்பிற்குப் பாத்திரமான செயற்பாடுகள் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் இலக்குச் சார்ந்த கட்டுப்பாடு ஊடகத் தணிக்கை எனலாம்.
- பன்மைவாதம், பல்வகைமை, போட்டித்தன்மை மற்றும் சுதந்திரம் போன்றவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிறுவனங்களுக்கேற்ப சட்டரீதியாக மேற்கொள்ளப்படும் ஊடகச் செயன்முறையாக இதனைக் கருதலாம். பொதுநிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் சில தணிக்கைகள் இதிலடங்கும். வளங்களைப் பகிரும் ஒதுக்கீட்டு முறை (Quota), உரிமையாண்மையின் எல்லை என்பவற்றை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.
- பெரும்பாலும் அரசு மற்றும் அரசுடன் இணைந்து ஊடக நிறுவனங்கள் தணிக்கைச் செயற்பாட்டை மேற்கொள்ள முடியும்.

- தணிக்கை என்பது வெகுசன ஊடகக் கொள்கைகளில் அதிகம் பேசப்படும், விவாதிக்கப்படும், ஆராயப்படும் ஒரு துறையாகும்.
- அது சீர்மை நோக்குக் கொண்டது போலவே, ஒருவழிப் போக்குடன் செயற்படுவதையும் நாம் காணலாம். ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்துடன் செய்தியை முன்வைக்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல் சீர்மைமிகு தணிக்கை முறைமையாகும். ஏதேனுமோர் செய்தி ஊடகங்களில் வெளியாவதைத் தடுத்தல் தணிக்கையாகக் குறிப்பிடலாம்.
- தணிக்கையானது ஊடகங்களுக்கேற்ப வேறுபட்ட தனித்துவங்களுடன் காணப்படுகிறது. அச்சு ஊடகத் தணிக்கையுடன் ஒப்பிடும்போது, எண்மானத் தொழினுட்பத்தில் இணைய வலையமைப்பின் பரந்துபட்ட தன்மையால் அங்கு ஊடகத் தணிக்கையின் பொருள் மாற்றமடையலாம். அதுபோல, சர்வதேசக் கொள்கைளினாலும் தணிக்கை முறை மாறுபடலாம்.

**ஊடகத் தணிக்கையின் அவசியம்**

- தணிக்கையால் ஊடக சுதந்திரம் எல்லைப்படுத்தப்படுவதாகக் கருத்துக் காணப்படுகிறது. எனினும், ஜனநாயக சமூகமொன்றில் பெரும்பாலானோரின் உரிமை மற்றும் சமூகப் பொறுப்பு என்பவற்றுக்காகத் தணிக்கைச் செயற்பாடுகள் அவசியமாகின்றன. எனவே, தணிக்கையைச் சுதந்திரம், ஜனநாயகத்தின் மூலதர்மம் எனவும் குறிப்பிடலாம்.
- வெகுசன ஊடகத் தணிக்கையை 06 காரணிகளுக்கூடாக ஆராயலாம்.

1. அறிவுச் சமூகத்தில் நடைமுறையிலுள்ள பல்வேறு தொடர்பாடல் விதிமுறைகள் பொருளாதார வளம் சார்ந்தனவாகும். எனினும், அவற்றை முகாமைத்துவம் செய்யத் தணிக்கை அவசியமாகும்.
2. அரச நோக்கங்கள் மற்றும் நியாயம் என்பவற்றுக்காகப் பொதுமக்கள் சமாதானத்தைப் பேணத் தணிக்கை அவசியமாகும்.
3. முறையற்ற பொது மக்கள் தொடர்பாடல்களால் தனிமனித உரிமைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை கட்டுப்படுத்தத் தணிக்கை அவசியமாகும்.
4. தொழினுட்பத்தைத் தரப்படுத்தல், புத்தாக்கம், சர்வதேசத் தொடர்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல் முறைகளின் விருத்தி மற்றும் வினைத்திறனான பாவனைக்குத் தணிக்கை அவசியம்.
5. தாம் தெரிவுசெய்த தொடர்பாடல் மற்றும் பண்பாட்டுப் பாவனையினை அடிப்படையாகக் கொண்டு தகவலை அணுகுதல்,தொடர்பாடல் சுதந்திரம், பல்வகைமை மற்றும் பூகோளப்பெறுமதிமிக்க வளர்ச்சிக்குத் தணிக்கைச் செயற்பாடு முக்கியத்துவம் பெறுகிறது.
6. ஊடகச் சேவையில் சுதந்திர பொருளாதாரப் பயன்பாடுகள், அதிகரித்துவரும் போட்டித்தன்மை, நுகர்வோர் உரிமைகள் என்பவற்றைக் கொண்டு நடாத்தத் தணிக்கை அவசியமாகும்.

**தணிக்கை வகைப்பாடுகள்**

- ஊடகத் தணிக்கை பயன்படுத்தப்படும் அடிப்படையான பிரவேசங்கள் நான்கினைக் குறிப்பிடலாம்.

1. சுயதணிக்கை (Self- Regulation)
2. கூட்டுத்தணிக்கை (Co- Regulation)

3. சட்டரீதியான தணிக்கை (Statutory- Regulation)
4. நிறுவனரீதியான தணிக்கை (In-House Regulation)

01. சுய தணிக்கை (Self- Regulation)

- ஊடகத்தால் சுயமாக மேற்கொள்ளப்படும் தணிக்கைச் செயற்பாடு இதுவாகும். ஊடக உரிமையாளர்கள், ஆசிரிய பீடத்தினர், ஊடகவியலாளர்கள் ஆகியோர் கூட்டாக அல்லது தனித்தனியாக மேற்கொள்ளும் தணிக்கை முறைகள் இங்கு காணப்படும். இவ்வாறான செயற்பாடுகளின்போது ஒழுக்கநெறி / அறிவுரைப்பு வழிகாட்டிகள் தயாரிக்கும் செயற்பாடுகளுக்கு ஊடகத் தொழில்சார் நிபுணர்கள் பங்கேற்பார்கள். அத்தோடு அவை சரியான முறையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதில் பங்குபற்றுவோர் (ஆணைக்குழு, குழு, குழாம்) ஊடகச் செயற்பாடுகளிலும் தொழில்ரீதியாக ஈடுபடும் நிபுணர்களாவர். அவ்வாறான பிரிவுகளில் பொதுமக்கள் பிரதிநிதித்துவம் ஒன்றையும் வழங்கவேண்டும் என்ற நோக்கத்தினால் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். சுயதணிக்கையின் சிறப்பம்சம் யாதெனில், அது முழுமையாக அரச தலையீடின்றி நடைபெறுவதாகும்.
- வெகுசன ஊடகங்கள் எதிர்நோக்கும் உண்மையான பிரச்சினைகளை இனங்காண்பதற்கும் அவற்றுக்குத் துரிதமாகத் தீர்வு காண்பதற்கும் இம்முறை ஏதுவாய் அமைகிறது. அதன் பலவீனமாவது, ஊடகத் துறைசார்ந்தோரால் மேற்கொள்ளப்படுவதால் அது சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில் சந்தேகம் காணப்படுகிறது. அத்தோடு, தண்டனையளித்தல் தொடர்பாகச் சட்டரீதியான முறைமையொன்று காணப்படாமையையும் இங்கு குறிப்பிடலாம். சில ஊடகங்கள் சுயதணிக்கையினின்று விலகியிருக்கக் காரணமும் இங்கு சட்டரீதியான பொறுப்புடமை காணப்படாமையே ஆகும்.

02. கூட்டுத் தணிக்கை (Co- Regulation)

- ஊடகப் பிரதிநிதிகளின் முழுமையான தலையீட்டுடன் சட்டபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்ட தணிக்கையே கூட்டுத் தணிக்கையாகும். ஊடகப் பிரதிநிதிகளாக ஊடக உரிமையாளர்கள், ஊடக ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என்போரைக் குறிப்பிடலாம். வெகுசன ஊடகப் பிரதிநிதிகளின் பங்குபற்றலோடு ஊடக ஒழுக்க நெறிகள், ஊடக அறிவுரைப்பு வழிகாட்டிக் கோவைகள் என்பன தயாரிக்கப்படும். ஊடகத்துறை சார்ந்தோருக்கு இதன் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளினின்று விலக முடியாமை இதன் சிறப்பம்சமாகும். சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ளதால் அரச தலையீட்டினையும் இங்கு காணமுடியும். அதனால், வெகுசன ஊடகங்கள் இவ்வாறான தணிக்கை நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படப் பின்னிற்கும் நிலமையையும் காணலாம்.

03. சட்டரீதியான தணிக்கை (Statutory- Regulation)

- சட்டத்தினால் நிறுவப்பட்ட பிரதிநிதித்துவத்தின் வலுவான தலையீடற்ற தணிக்கை விதிமுறை இதுவாகும். சிவில் சமூகக் குழுக்கள், நீதியாளர்கள், கல்வி ஆய்வாளர்கள் போன்றோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினர் இங்கு அங்கத்துவம் பெறுவர். சில சந்தரப்பங்களில் பாராளுமன்றத்தினூடாக அல்லது அவ்வாறான ஏதேனுமோர்

அமைப்பால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளும் இதில் அடங்குவர். அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரித்தல் அதனோடிணைந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் என்பன சட்டபூர்வமாக மேற்கொள்ளப்படும்.

- அதிகமான அரசியல் பலத்துடன் செயற்படும் தன்மையும் இங்கு காணப்படலாம். அரசியல் தலையீடு காணப்படுவதால் இதன் சுயாதீனத்தன்மை சவாலுக்குட்பட்டுள்ளது. வெகுசன ஊடகங்களைத் தீவிரமாகக் கட்டுப்படுத்த முடியுமாதலால், இதனுடனான அவற்றின் தொடர்பு குறைந்த மட்டத்தில் காணப்படும்.

04. நிறுவனரீதியான தணிக்கை (In-House Regulation)

- சில ஊடக நிறுவனங்கள் தமது தணிக்கைச் செயற்பாடுகளை தமது ஊடக நிறுவனத்தினாலேயே மேற்கொண்டு செல்கின்றன. ஊடக நிறுவனத்தினால் ஊடக நிறுவனத்துக்காக ஓம்புட்ஸ்மன் (குறைகேள் அதிகாரி) நியமிக்கப்படுவார். ஊடக நிறுவனமொன்றில் பணியாற்றி ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் பெருமபாலும் இப்பதவிக்கு நியமிக்கப்படுவார். மேலும், ஊடகத் துறையில் பாண்டித்தியம் பெற்ற சுயாதீன நிபுணர் ஒருவரும்இப்பதவிக்குநியமிக்கப்படலாம்.
- ஊடக நிறுவனம் பற்றிய முறைப்பாடுகளை ஊடக ஆசிரியர்களுக்கு வழங்குதலும் அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பரிந்துரைகளைச் செயவதுமே ஓம்புட்ஸ்மனின் பணியாகும்.
- வெளிநிலைத் தணிக்கைச் செயன்முறையுடன் செயற்படுத்தக்கூடிய தணிக்கை முறையாக நிறுவனரீதியான தணிக்கை காணப்படுவதால் தொழில்ரீதியாக உயரிய மட்டத்தில் காணப்படும் ஊடக நிறுவனங்களுக்கு இப்பிரவேசம் சிறந்ததாகக் காணப்படுகிறது.

**ஊடக தணிக்கை நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும்**

(01) பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை (Public Performance Board)

- 1912இல் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவொன்றினால் இது உருவானது. கண்காட்சி, பிரசங்கம், திரைப்படம் போன்றவை பொதுமக்களுக்கு முன்வைக்கப்படுவதற்கு முன்னர் அவற்றைக் கண்காணித்து அதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இதன் நோக்கமாகும்.
- 1951ஆம் ஆண்டு 23ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் இந்நடவடிக்கையை மேற்கொள்ளப் பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. இதன் செயற்பாடுகளில் அதிகம் கலந்துரையாடல்களுக்கு உட்படுவது திரைப்படங்கள் திரையரங்குகளுக்காக வெளியிடப்படும்போது வழங்கப்படும் சான்றிதழ் தொடர்பாக ஆகும். இன்று X,U மற்றும் A ஆகிய தரங்களில் திரைப்படங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இச்சபை மூலம் காலத்துக்குக் காலம் தயாரிக்கப்படும் வழிகாட்டிக் கோவைக்கு ஏற்ப திரைப்படங்களின் வசன அமைப்புக்களைக் கண்காணித்தல், தெரிவு செய்யப்பட்ட காட்சிகளை நீக்குதல் போன்றவை மேற்கொள்ளப்படும். சில நேரங்களில் திரைப்படங்கள் முழுமையாகவும் தணிக்கைக்குட்படும்.

  “U” சான்றிதழ் - எல்லைகளற்ற பொதுமக்கள் திரையிடலுக்கு உகந்தது. எவ்விதத் தடையுமின்றி அனைவராலும் பார்வையிடக்கூடியது.

“X” சான்றிதழ் - வயது வந்தோருக்கு மட்டும் உகந்தது. 18 வயதுக்கு மேற்பட்ட அனைவராலும் பார்வையிடக்கூடியது.

“A” சான்றிதழ் - வயது வந்தோருக்கு மிகவும் பொருத்தமானது,வயது வந்தோருடன் வருகின்ற 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களும் பார்வையிடலாம்.

- சட்டத்திற்கேற்ப பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச்சபைக்கான பிரதிநிதிகளை நியமித்தல் அத்துறைசார் அமைச்சின் செயற்பாடாகும். எனினும், ஒவ்வொரு கால எல்லைக்கும் சபை உறுப்பினர்களை நியமிக்காது தனியொருவரின் கீழ் (தலைவர்) அதன் செயற்பாடுகள் நடைபெறுவதையும் காணலாம்.

(02) இலங்கைப் பத்திரிகைப் பேரவை (Sri Lanka Press Council)

- இலங்கையின் பத்திரிகைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அரசால் உருவாக்கப்பட்டதாகும். 1973ஆம் ஆண்டு 5ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் இது நடாத்தப்பட்டு வருகிறது. பத்திரிகைகளைத் தொழில்ரீதியாக மேன்மையுறச் செய்தல், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், பத்திரிகை ஒழுக்கநெறிகளைப் பாதுகாத்தல், பத்திரிகை ஒழுக்கநெறிகளைப் பேணச்செய்தல், பிரஜைகளின் உரிமைகள் பற்றிய உணர்வை ஏற்படுத்தல் உட்பட்ட பல்வேறு இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பத்திரிகைச் சபை ஆரம்பிக்கப்பட்டது.
- இலங்கைப் பத்திரிகைச் சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி, ஆணையாளராவார். அதன் தலைவர் உட்பட பணிப்பாளர் சபை நியமிக்கப்படுவது ஜனாதிபதியால் ஆகும். இலங்கைப் பத்திரிகைச் சபையின்கீழ் 1981 இல் வெளியிடப்பட்டுள்ள ஒழுக்கநெறிகளை மீறுதல் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை விசாரிக்கும் நடவடிக்கை தலைவர் தலைமையிலான பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்படும். பத்திரிகை ஒழுக்க நெறிகளை மீறிய குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து தீர்மானத்தை வெளியிட பகுதியளவான நீதிமன்ற அதிகாரங்களும் சட்டத்தின்மூலம் இதற்கு வழங்கப்பட்டுள்ளது.
- பத்திரிகை ஆணையாளர் (Press Commissioner) ஆணைக்குழுவின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, பத்திரிகைகளை ஆய்வுசெய்து அவற்றில் ஏற்படக்கூடிய ஒழுக்கநெறி மீறப்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு பணிப்பாளர் சபைக்கு அறிவுறுத்தும் பணியைச் செய்வார்.
- இந்நாட்டில் வெளியாகும் சகல செய்திப் பத்திரிகைகளும் வருடந்தோறும் இச்சபையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். அதற்கேற்ப 2016ஆம் ஆண்டு 211 பத்திரிகைகள் இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

(03) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (Telecommunications Regulatory Commission of Sri Lanka *(*TRCSL*))*

- 1996ஆம் ஆண்டு 27ஆம் இலக்கத் தொலைத்தொடர்பு சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனமாகும். இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு எனும் வகையில் இலத்திரனியல் செய்திகள் மற்றும் இலத்திரனியல் தொழிற்துறையின்

தணிக்கைச் செயற்பாடு, பொதுமக்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகள் இங்கு மேற்கொள்ளப்படும்.

- இலத்திரனியல் தொலைத்தொடர்புச் சேவையில் அதனுடன் இணைந்த உபகரணங்களின் வினைத்திறன் தொடர்பாகச் செயற்படும்போது, இலத்திரனியல் தொலைத்தொடர்பின் உபாயவழிமுறைகளை விருத்தி செய்தல் இவ் ஆணைக்குழுவின் நோக்கமாகும்.
- வானொலி மற்றும் தொலைக்காட்சிச் சேவைகளுக்கு அலைவரிசை ஒதுக்கீடு இதன் ஒரு பணியாகும். கையடக்கத்தொலைபேசிப் பாவனையின்போது பயனாளிகளுக்கு ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யவும், அதற்கேற்ற விசாரணைச் செயற்பாடுகளை மேற்கொண்டு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கவும் இவ்வாணைக்குழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.
- ஜனாதிபதியால் நியமிக்கப்படும் இவ் ஆணைக்குழுவில் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையால் கொள்கைரீதியான தீர்மானங்கள் எடுக்கப்படுவதோடு பணிப்பாளர் நாயகத்தினால் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(04) இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு (Press Complaints Commission of Sri Lanka)

- இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், பத்திரிகை வெளியீட்டாளர் சங்கம் என்பன இணைந்து உருவாக்கிய சுயாதீனத் தணிக்கை நிறுவனமாகும். இலங்கைப் பத்திரிகை நிறுவனத்துக்கு இணைந்ததாக 2003ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட தொழில்ரீதியான வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகை ஒழுக்கநெறிகளை மீறுதல் தொடர்பான முறைப்பாடுகளை இவ்வாணைக்குழுவில் முன்வைக்கலாம். பொதுமக்களால் எழுத்துமூலமாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளைக் குறித்த பத்திரிகை நிறுவனங்களுக்கு அனுப்பி, அவற்றின் உண்மைக் காரணிகளைச் சரியாகத் திருத்தம் செய்து வெளியிட வேண்டுகோள் விடுத்தல் இந்த ஆணைக்குழுவின் செயற்பாடாகும். முறைப்பாடுகளை விசாரணை செய்ய பத்திரிகை ஊடக மற்றும் வேறு துறைசார் நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்படும்.

(05) இலங்கை கணிணி அவசர சேவைகள் இணைப்பு நிலையம் (Sri Lanka Computer Emergency Readiness Team, Coordinating Centre – (SLCERT/CC)

- இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் நிறுவனத்தின் (ICTA) கீழ் 2006ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.நாட்டின் தேசிய இணையப் பாதுகாப்பு நிறுவனமாகத் தொழிற்பட்டு பல்வேறு அமைப்புகள் மற்றும் நபர்களினால் மேற்கொள்ளப்படும் இணையவழிக் குற்றங்களுக்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனமாக இது அமைகின்றது.
- கணினியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிதிசார் மற்றும் வேறு குற்றங்கள் தொடர்பாகவும், தீவிரவாத இயக்கங்களின் செயற்பாடுகளுக்கு எதிராக விழிப்புணர்வூட்டல், எச்சரிக்கை விடுத்தல் போன்றவையும் இதன் செயற்பாடுகளாகக் குறிப்பிடலாம்.

- கணினிசார் பிரச்சினைகளுடன் தொடர்புடைய பொதுமக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்து பொருத்தமான தீர்வுகளை முன்வைத்தல் இதன் மூலமாக மேற்கொள்ளப்படும் செயன்முறையாகும்.
- சமூக ஊடகங்களுக்குரிய போலிக் கணக்குகள் பற்றிய முறைப்பாடுகள் அதிகளவில் இந் நிறுவனத்திற்கு அனுப்பப்படும்.

**மதிப்பீடு**

01. ஊடகத் தணிக்கை என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி அதன் அவசியம் மற்றும் முக்கியத்துவம் என்பவற்றை விளக்குக.
02. ஊடகத் தணிக்கை நிறுவனங்கள் சிலவற்றின் செயற்பாடுகளை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

தேர்ச்சி மட்டம் : 10.3 வெவ்வேறு ஊடகங்களுக்கும் வெகுசன ஊடக ஒழுக்க நெறிகள் மற்றும் வழிகாட்டல்கள் உள்ளதென அறிந்து அவற்றின் அவசியம் பற்றிய கருத்துக்கள் தெரிவிப்பர்.

பாடவேளைகள் : 20

கற்றற் பேறுகள்

- ஊடக ஒழுக்கநெறிகள் பற்றிய கருத்துத் தெரிவிப்பர்.
- ஊடக வழிகாட்டல் என்றால் என்ன என அறிந்து விபரிப்பர்.
- ஊடக வழிகாட்டல்களின் அவசியம் பற்றிய விமர்சன ரீதியான கருத்துக்களை முன்வைப்பர்.

பாடத்தைத் தயார் செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**ஊடக ஒழுக்கநெறி மற்றும் ஊடக அறிவுரைப்பு வழிகாட்டி**

- இருபதாம் நூற்றாண்டில் வெகுசன ஊடகப் பயன்பாட்டோடு இணைந்ததாக உருவான முக்கிய அம்சமாக ஊடக ஒழுக்கதர்மத்தைக் குறிப்பிடலாம். உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எத் தொழிற்துறைக்கும் பொருந்தும் வகையில் ஊடக ஒழுக்க தர்மங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வெகுசன ஊடகச் செய்தியை அறிக்கையிடும்போது தொழில்வாண்மை, பொறுப்புணர்வு எனும் கருப்பொருட்களை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு ஒழுக்கநெறி தயாரிக்கப்படுகிறது. பொறுப்புணர்வுமிக்க ஊடகவியலாளர் ஒருவரை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- துல்லியத்தன்மை, தனியுரிமைகளைப் பாதுகாத்தல், மூலாதாரங்களை வெளிக்காட்டாமை மற்றும் பதிலளிப்பதற்கு உள்ள உரிமை போன்ற காரணிகள் ஒழுக்கக்கோவையில் உள்ளடங்கும் பிரதான அம்சங்களாகக் குறிப்பிடலாம். பெரும்பாலும் இவ் வழிகாட்டி குறித்த தொழிற்துறை சார்ந்தவர்களால் தயாரிக்கப்படும். அதற்கிணங்கத் தொழிற்படுதல் தொழிற்துறை சார்ந்தோரின் கடமையாகும். சில சந்தர்ப்பங்களில் சட்டத்திற்கு உட்பட்டு செயற்படும் ஒழுக்கநெறிகளையும் காணலாம்.
- தற்கால சமூகத்தில் பல்வேறு அமைப்புகளும் தாம் சார்ந்த அங்கத்தவர்கள் பின்பற்றும் வகையில் ஊடக அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.
- ஒழுக்கநெறிகள், ஒழுக்கநெறி வழிகாட்டிகள் (Guidelines) மற்றும் ஊடகப் பிரமாணம் போன்ற பெயர்களினால் இவை குறிப்பிடப்படுகின்றன. ஊடகச் செயற்பாடுகளை ஒழுங்கு முறையாகக் கொண்டு நடாத்தும் நோக்குடனேயே ஊடக அறிவுரைப்பு வழிகாட்டிகள் உருவாக்கப்பட்டன. நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படவேண்டிய மொழி, அறிவிப்புச் செயற்பாடு, மூலாதாரங்களை சமரப்பிக்கவேண்டிய முறை, தகவல் அறிக்கையிடப்படவேண்டிய முறை மற்றும் ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட அறிக்கை போன்றவை தொடர்பான விடயங்கள் ஊடக அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- ஊடக நிறுவனத்தின் நடைமுறைப் போக்குகள், தொழிநுட்ப விருத்தி என்பவற்றுக்கு ஏற்ப ஊடக அறிவுரைப்பு வழிகாட்டியில் மாற்றங்கள் செய்யப்பட்டு செயற்படுத்தப்படும்.

**பத்திரிகை ஒழுக்கநெறிகள்**

- 1973ஆம் ஆண்டு 05ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகைச் சபைச் சட்டத்தின்கீழ் அச்சு ஊடகவியலாளர்களுக்கு ஒழுக்கநெறிக் கோவையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதனைத் தயாரித்ததும் பிரதம பத்திரிகையாசிரியர்களைக் கொண்ட குழு ஒன்றாகும்.
- இவ்வொழுக்கநெறிக் கோவையானது அரச வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டதால் இதற்குச் சட்டபூர்வமான தன்மையும் காணப்படுகிறது.
- 2003ஆம் ஆண்டு இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினாலும் தொழில்சார் ஒழுக்கநெறிக் கோவையொன்று வெளியிடப்பட்டது.
- இரு சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்ட அந்த ஒழுக்கநெறிக் கோவையானது அச்சு ஊடகவியலாளர்களுக்காக உருவாக்கப்பட்ட சுயதணிக்கைச் செயன்முறையாகக் கருதப்படுகிறது.
- மேலும் பல்வேறு பத்திரிகை நிறுவனங்கள் தாம் சார்ந்த நிறுவனத்தில் மாத்திரம் தாக்கம் செலுத்தும் வகையில் தயாரித்த பல்வேறு ஒழுக்கநெறி முறைகளை இனங்காணலாம். பத்திரிகை அறிக்கையிடலின்போது பின்பற்றவேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கொள்கைகள் என்பன அதற்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

**வானொலி ஒழுக்கநெறிகள்**

- தனியார் வானொலி நிலையங்களுக்கு நிலையான ஒழுக்கநெறி அல்லது ஊடக அறிவுரைப்பு வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. அதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், பொது உடன்பாட்டிற்கு வருதல் சிரமமாக இருந்தமையால் அவ்வாறானவழிகாட்டிக்கான முயற்சிகள் பல தடவைகளில் கைவிடப்பட்டன.
- 1966ஆம் ஆண்டு 25ஆம் இலக்க இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புரைகளுக்கு இணங்க நிகழ்ச்சி ஒலிபரப்பும்போது பினபற்றவேண்டிய செயன்முறைகள், கூட்டுத்தாபனத்தின் சகல வானொலி அலைவரிசைகளுக்கும் பொதுவானதாகக் கருதப்படுகிறது.
- மேலும், வானொலிக்காகத் தயாரிக்கப்படும் விளம்பரங்களில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- சில வானொலி நிறுவனங்கள் தமது நிறுவனம் மற்றும் நிறுவனம் சார் தரப்பினருக்கு உகந்தவாறு வானொலி ஊடக ஒழுக்கநெறி மற்றும் ஊடக அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரித்துள்ளமையையும்நாம் இனங்காணலாம்.

**தொலைக்காட்சி ஒழுக்கநெறிகள்**

- 1982ஆம் ஆண்டு இலங்கைத் தொலைகாட்சிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் உறுப்புரைகளுக்கு அமைய நிகழ்ச்சித் தயாரிப்பின் பகுதிகள் ஒழுக்கநெறிகளுக்கு உட்பட்டுத் தயாரிக்கப்படும்.
- அதேபோல, விளம்பரங்களைப் பெற்றுக்கொள்ளும்போது பின்பற்றப்படும் ஒழுக்கநெறிகளும் காணப்படுகின்றன.
- பொதுவாகத் தொலைக்காட்சி நிறுவனமொன்றுக்கான அனுமதிப் பத்திரம் பெற அதற்கான ஒழுக்கநெறிக் கோவையொன்று அவசியமானது.

## புதிய ஊடக ஒழுக்கநெறிகள்

- புதிய ஊடக ஒழுக்கநெறி மற்றும் ஒழுக்கக்கோவை பற்றித் தீவிரமான கலந்துரையாடல் நடைபெறுகிறது. ஒவ்வொரு இணையத்தளங்களும் சமூக வலைத்தளங்களும் தமக்கேற்றவாறு தயாரித்துக்கொண்ட ஒழுக்கக்கோவைகளைத் தற்காலத்தில் காணலாம். சில நாடுகள் புதிய ஊடக ஒழுக்கநெறிகள் பற்றிய முயற்சிகள் மேற்கொள்கின்றன.
- புதிய ஊடகங்களில் ஒழுக்கநெறிகளைப் பின்பற்றுவதில் சிக்கலும் காணப்படுகிறது.

## மதிப்பீடு

01. ஊடகமொன்றுக்கு ஒழுக்கநெறி அல்லது ஊடக ஒழுக்க அறிவுரைப்பு வழிகாட்டி அவசியமா? விளக்குக.
02. தெரிவு செய்த பத்திரிகையில் செய்திக் கட்டுரைகள் 10ஐ விமர்சனம் செய்து, அவை ஒழுக்கநெறிகளைப் பின்பற்றியுள்ளனவா எனப் பரீட்சிக்க.

## கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் | - | Universal Declaration of Human Rights |
| இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு | - | The Constitution of the Socialist Republic of Sri Lanka |
| வெகுசனஊடகச் சுதந்திரம் | - | Mass Media Freedom |
| புலமைச் சொத்துச் சட்டம் | - | Intellectual Property Act/Rights |
| தகவலறியும் உரிமைச் சட்டம் | - | Right to Information Act |

# 11. இலங்கையின் ஊடகங்களும் சமகாலப் போக்கும்

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | : | இலங்கையின் ஊடகப் பரவல் மற்றும் ஊடகப் போக்குகள் பற்றிய அறிவைப் பெற்றுச் செயற்படுவார். |
| தேர்ச்சி மட்டம் | : | 11.1 இலங்கையின் சமகால ஊடகப் பரவல் பற்றி அறிந்து கருத்துத் தெரிவிப்பார். |
| பாடவேளைகள் | : | 12 |
| கற்றற் பேறுகள் | : | |

- இலங்கையின் ஊடகப் பரவல் பற்றிய முறைசார் அட்டவணையொன்றைத் தயாரிப்பார்.
- இலங்கையின் ஊடகப் பரவல் பற்றி விபரிப்பார்.

**பாடத் தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார்செய்க.

**அறிமுகம்**

**இலங்கையின் ஊடகங்கள் : ஆரம்பமும் பரவலும்**

- இலங்கையின் புராதன சமூக அமைப்பில் பல்வேறு தொடர்பாடல் முறைகள் காணப்பட்டதாக வரலாற்று மூலாதாரங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். 'ஹூ' சத்தம் எழுப்புவதிலிருந்து இலை குழைகளைத் தொங்கவிடுதல், வெற்றிலை கொடுத்தல்,பறை, மணி போன்றவற்றால் ஒலி எழுப்புதல் போன்ற முறைகள் அவற்றுள் முக்கியமானவை. மன்னராட்சிக் காலப்பகுதியில் தொடர்பாடல் வழிமுறைகள் அரசனைச் சூழ்ந்திருந்தன. பௌத்த, இந்துசமயங்கள் மற்றும் அரசனை மையப்படுத்தியதாகக் காணப்பட்ட தொடர்பாடல் ஆதிபத்தியம் இந்நாடு அந்நியரின் வசமானதின் பின்பு கிறிஸ்தவ சமயத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. பாடசாலைகள் திறக்கப்படல், அச்சகங்கள் உருவாக்கப்படல், சமயம்சார் பத்திரிகைகள் மற்றும் நூல்கள் அச்சிடப்படல் என்பன உள்நாட்டுத் தொடர்பாடலைப் பாதித்த முக்கிய காரணிகள் ஆகும். 1734ஆம் ஆண்டில் ஒல்லாந்து நிர்வாகத்தினரால் உத்தியோகபூர்வ அறிவிப்பு சிங்களத்தில் வெளியிடப்பட்டது. 1812 இல் கொழும்பு வேதாகமச் (Bible) சங்கம் சிங்களத்தில் வேதாகமத்தை அச்சிட்டமை, 1860 இல் லங்காலோகய பத்திரிகை மற்றும் 1834 இல் The Observer and Commercial Advertiser வர்த்தகப் பத்திரிகை வெளியிட்டமை என்பன இலங்கையின் தொடர்பாடலின் மைல்கற்களாகும். விசேடமாக ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராகச் சிங்கள பௌத்த பிரஜைகள் நாட்டுப்பற்றைப் பிரசித்தப்படுத்தப்படுவதற்காக அச்சுத் தொடர்பாடல் முறையைப் பயன்படுத்தியுள்ளமை

தெளிவாக அறியக்கூடியதாகவுள்ளது. இதன்போது இலக்கிய மற்றும் சமய விவாதங்கள் நடத்தப்பட்டதுடன் தேசியளவில் கற்றறிந்த சமூகம் உருவானது.

- பியதாஸ சிறிசேன, ஜோன் டீ சில்வா, சார்ள்ஸ் டயஸ் போன்ற நாவலாசிரியர்களும், நாடகக் கலைஞர்களும் பிரித்தானியர்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். ஜோன் டீ சில்வாவின் நாடகங்களில் சிங்கள தேசம் நாடகம், அழகேஸ்வர, ஸ்ரீ சங்கபோ, வீரவிக்கிரம போன்ற நாடகங்கள் விசேட விழிப்புணர்வை ஏற்படுத்தின.
- இதனிடையே சமயப்பரப்பாளர்கள் (Missionaries) கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்புவதற்காக நாடகத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். இந்தியாவின் இசைத்தட்டுச் சங்கமொன்று இலங்கை வந்து சிங்களப் பாடல்களை ஒலிப்பதிவு செய்ததன் பின்பு கிராமபோன் (Gramaphone) பண்பாடும் தோற்றம் பெற்றது. பியதாஸ சிறிசேனவின் ‘அதிர்ஷ்டவசமான திருமணம்’ ‘றோசலினும், ஜயதிஸ்ஸவும்’ போன்ற நாவல்கள் பிரபல்யமாயின.
- சிங்கள இனத்தவர்கள் எனும் பத்திரிகையினூடாகத் தேசப்பற்றுத் தொடர்பான கவிதைகளை வெளியிட்டனர். பிற்காலத்தில் Lake house எனும் பத்திரிகையகம் உருவானதினால் பத்திரிகையானது அரசியல், பண்பாட்டு, வர்த்தக, சமய ரீதியில் விசாலமான மாற்றமொன்றைச் சமூகத்தில் ஏற்படுத்தியது.
- இரண்டாம் உலக மகா யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் அதாவது 1924 தொடக்கம் வானொலித்துறை விருத்தியடைந்தது. ஏனைய கீழைத்தேய நாடுகளோடு ஒப்பிடுகையில் தெற்காசிய நாடுகளில் முதலாவது வானொலிச் சேவை இலங்கையிலேயே ஆரம்பிக்கப்பட்டது. இலத்திரனியல் தகவல் அலுவலகத்துடன் இணைந்து கட்டியெழுப்பப்பட்ட வானொலித்துறையானது, இரண்டாம் உலக மகா யுத்தத்தால் இந்நாட்டில் எஞ்சிய முக்கிய தொடர்பாடல் முறையாகும். பிற்காலங்களில் சிங்களப்பாடல்களுடன் கூடிய நாடகங்கள் அறிமுகமானதினால் வானொலி இந்நாட்டின் பிரதான பண்பாட்டு மற்றும் கலைமையமாக மாறியது.
- காலனித்துவ காலப்பகுதியிலிருந்து திரைப்படங்கள் அரச திரைப்படப் பிரிவினாலேயே உருவாக்கப்பட்டன. அந்நிலையத்திலிருந்து வெவ்வேறு விவரணங்கள், குறுந்திரைப்படங்கள் வெளியிடப்பட்ட அதேவேளை, இந்நாட்டின் பிரதான சினிமாப் படைப்புகளை உருவாக்கியதும் அரச திரைப்படக் கூட்டுத்தாபனமே.
- ‘கடவுணு பொறந்துவ’ (1948) எனும் திரைப்படத்தின் பின் இலங்கையில் தோற்றம்பெற்ற வர்த்தக சினிமாப் பண்பாடு இலங்கையை உலகிற்கு அறிமுகம் செய்ததோடு திரைப்படங்களை இரசிக்கும் சமூகக் குழுவொன்று உருவாகவும் காரணமானது. 1970 காலங்களில் உருவான சிங்கள, தமிழ்த் திரைப்படங்களைப் பற்றி ஆராய்வதன் மூலம் இதனை அறியலாம்.
- 1970 இன் பின்னரைப்பகுதியில் தொலைக்காட்சி ஊடகம் தோற்றம் பெற்றதால் இந்நாட்டுத் தொடர்பாடல் துறை மேலும் விருத்தி பெற்றது. 1979 இல் சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவை மற்றும் 1982இல் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் உருவானதால் தொடர்பாடல் பயணம் புதிய போக்கை அடைந்தது. உலகத்தைப்

பார்க்கவும் பொழுதுபோக்கு மற்றும் தூண்டல் செயற்பாட்டிற்கும், தகவல்களைப் பரிமாற்றிக்கொள்ளவும், பலமான ஊடகமாகத் தொலைக்காட்சி புதிய பண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

- இணையத்தளமானது இலங்கையின் தொடர்பாடல் துறையின ' 'நவீன மொழிபெயர்ப்பாளராக' அடையாளம் காணப்படுகிறது. அது தனிநபர் தொடர்பாலுக்கு அதிகமான பங்களிப்பை வழங்குகிறது. சமகால சமூகத்தின் பல்வேறு தேவைகளுக்காகச்சமூக ஊடகம் பயன்படுத்தப்படுகிறது. நெகிழ்வுத் தன்மையுடைய மெய்நிகர் தொடர்பாடல் நிகழும் ஓர் ஊடகமாகவும் இது அடையாளப்படுத்தப்படுகிறது. இதனூடாகத் தகவல் பரிமாற்றப்படும் வேகம், விதம் என்பவற்றின் அடிப்படையில் இதில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

### மதிப்பீடு

1. இலங்கையின் ஊடகப் பரவல் பற்றிய முறையான புள்ளிவிபர அறிக்கை ஒன்றைத் தயார் செய்க. அதில் தற்காலத்தில் காணப்படும் தரவுகளைக் கொண்டு அதனை மேம்படுத்துக.

2. இலங்கையின் பிரதான ஊடகங்கள் பிறப்பதற்குக் காரணங்களாக அமைந்த சமூக, அரசியல், வர்த்தகக் காரணிகளை ஒவ்வோர் ஊடகங்களுக்குமாகத் தனித்தனியே குழுச்செயற்பாடாக முன்வைக்க.

தேர்ச்சி மட்டம் : 11.2 சமகால ஊடகப் போக்குகள் பற்றிப் பகுத்தாய்வர்.

பாடவேளைகள் : 12

கற்றற் பேறுகள் :

- ஊடகப் போக்குகள் பற்றி விபரிப்பார்.
- ஊடகப் போக்குகள் பற்றிய எண்ணக்கருக்களை உதாரணங்களுடன் விளக்குவார்.

**பாடத் தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்:**
கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார்செய்க.

**ஊடகப் போக்குகள்**

ஊடகம் படிப்படியாகப் பரவலடையும்போது பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுகிறது. இம் மாற்றம் பொதுவில் பாவனை அல்லது தொழினுட்பத்தை அடிப்படையாகக் கொண்டமைவதோடு அவ்வாறான போக்குகள் சில இங்கு விமர்சிக்கப்பட்டடுள்ளன.

1. **ஊடகக் குவிகை (Media Convergence)**

- குவிகை என்பது பாரம்பரிய ஊடகங்களிலும் நிகழ்ந்தவொன்று. பல்வேறு பாரம்பரியத் தொடர்பாடல் முறைகள் ஒன்றிணைவதால் குவிகை ஏற்படுவதைக் காணக்கூடியதாயிருந்தது. உதாரணமாக- சொக்கரி, கூத்து, ஆற்றுகை, விழா, பெரஹரா முதலான நிகழ்வுகளில் தாளவாத்தியங்கள் வாசித்தல், பாடல் பாடுதல், நடனம் ஆடுதல் (கட்புல-செவிப்புல) ஆகிய பாரம்பரியத் தொடர்பாடல் சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளன.
- இலத்திரனியல் தொடர்பாடல் ஊடகத்தின் வருகையோடு இவ்வியல்பு மேலும் விருத்தியடைந்தது. உதாரணமாக - தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் இணைந்ததைக் குறிப்பிடலாம்.
- ஊடகக் குவிகை மூலம் நிகழ்வது அச்சு, வானொலி மற்றும் ஏனைய ஊடக உள்ளடக்கங்களை இணையத் தொழினுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தளத்திற்குக் கொண்டுவருதலாகும்.
  உதாரணம் - திறன் (ஸ்மார்ட்) கைத்தொலைபேசியில் (Smart Mobile Phone) மேற்குறித்த அனைத்து ஊடகங்களையும் பயன்படுத்தக் கூடிய ஆற்றல் காணப்படுவதைக் குறிப்பிடலாம்.
- குவிகை என்பது, ஒன்றிணையும் செயன்முறை அல்லது பொது இரசனையோடு ஒன்றிணைவது என வரைவிலக்கணப்படுத்தப்படும் (Dominick J.2010).

- ஊடகக் குவிகைக்குக் காரணமாவதும் அது வளர்ச்சியடைவதும் பொது இரசனை மற்றும் பொது நோக்கத்துடன் ஊடகத்தோடு இணைவதாகும்.
- ஊடகக் குவிகை மூலம் ஆளுள் தொடர்பாடல் (Intrapersonal Communication), ஆளிடைத் தொடர்பால் (Interpersonal Communication), குழுத் தொடர்பாடல் (Group Communication), மற்றும் வெகுசனத் தொடர்பாடல் (Mass Communication) ஆகியன வேறு திசைக்கு இட்டுச்செல்லப்பட்டுள்ளன.
- ஊடகக் குவிகை எதிர்கால உலகில் பல்வேறு வகைகளில் தொழினுட்பக் கருவிகளில் தாக்கம் செலுத்தலாம்.

**2. பெருந்திரளுக்கானதாக்குதலில் இருந்து சிறுகூறுகளாக்குதல்**
**(From Massification to Demassification)**

- தொடர்பாடல் கற்கையில் பெருந்திரளுக்கானதாக்குதல் (Massification) என்பது, பரந்த பெறுநர்களுக்குத் தகவல் அனுப்ப, அறிவித்தல் செய்ய ஊடகத்தைப் பயன்படுத்துவதாகும். எனினும், அவ்வாறு உருவான பாரிய பெறுநர்க் குழுக்கள் அவற்றிலிருந்து விலகிச் சிறு சிறு குழுக்களாக மாறுவது சிறுகூறுகளாக்குதல் (Demassification) எனப்படும்.
- பெருந்திரளுக்கானதாக்குதலில் இருந்து சிறுகூறுகளாக்குதல் எனப்படுவது, ஊடகப் பெறுநர்கள் குறும்பரப்பு (Narrowcasting) முறைகளுக்கு உட்படுதலாகும். அதாவது, பெறுநர்கள் சிறு இலக்குக் குழுக்களுக்களாக (Audience Segmentation) பிரிவதாகும்.
- இனந்தெரியாத பரந்த குழுவிற்குத் தொடர்பாடல் செய்வதைவிட, நிச்சயிக்கப்பட்டஇலக்குப் பெறுநர் குழுவிற்கு (Target Audience) தொடர்பாடல் செய்வது என இதனை அறிமுகம் செய்யலாம். ஏதேனும் ஒரு தகவல் தொடர்பாடல் செய்யப்படும்போது தமது இரசனைக்கேற்ப பெறுநராக மாறுவது கண்டிப்பானது என இங்கு குறிப்பிடப்படவில்லை.
- பொதுப் பெறுநருக்குத் தகவல் வழங்கிய ஊடகத் தொழினுட்பம், வளர்ச்சியின் காரணமாக இலக்குப் பெறுநர்க் குழுவை நோக்காகக் கொண்டு (சிறுவர்கள், பெண்கள், விளையாட்டு, செய்தி, திரைப்படம்) தகவல் வழங்குவதை முன்னெடுத்தது. பெறுநரது தேவையின் நிமித்தம் இது உருவானது.
- சிறுகூறுகளாக்குதல் (Demassification) வடத் தொலைக்காட்சி (Cable Television) மற்றும் தொலைக்காட்சி சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து, 20ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் வளர்ச்சியடைந்து 21 ஆம் நூற்றாண்டில் மென்மேலும் விருத்தியடைந்தது.

- இலத்திரனியல் வீடியோ முறை, வீடியோ விளையாட்டு இணையச் செயன்முறை மற்றும் கணினித் தொடரறா விளையாட்டுக்கள் காரணமாக சிறுகூறுகளாக்கும் செயன்முறைமேலும் வளர்ச்சியடைந்தது.
- சிறுகூறுகளாக்குதல் காரணமாக அச்சு, செவிப்புல மற்றும் கட்புல ஊடகங்களில் காணப்பட்ட பொதுப் பெறுநர்கள் இல்லாது சமமற்ற மற்றும் பல்வகைமையுடன் கூடிய பெறுநர்கள் தோற்றம் பெற்றனர்.
- சிறுகூறுகளாக்குதலின் இறுதியில் தொடர்பாடல் தனிநபரைச் சென்றடைவது தெளிவாகிறது.

Broadcasting ⟹ Narrowcasting ⟹ Personal casting

3. **கட்டுப்பாட்டுத் தளர்வு (Deregulation)**

- நடைமுறையில் காணப்படும் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், கட்டுப்பாட்டுத் தளர்வு எனப்படும்.
- ஊடகங்கள் தொடர்பான அரச உரிமையாண்மை மற்றும் வேறு சட்டதிட்டங்களைத் தளர்த்துதல் அல்லது நீக்குதல் கட்டுப்பாட்டுத் தளர்வு ஆகும். (Marcel Danesi, 2009, Dictionary of Media and Communication)
- 1980களில் கட்டுப்பாட்டுத் தளர்வின் அவசியம் உலக அளவில் கலந்துரையாடப்பட்டது. அதன்பிரகாரம், ஏதேனும் தொலைக்காட்சி அல்லது வானொலி நிறுவனம் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பயன்பாட்டில் காணப்பட்டால் அதன் பின்னர் அச்சேவையை விற்பனை செய்ய அல்லது மாற்ற முடியும் என்பது தீர்மானிக்கப்பட்டது.
- ஊடகத் தொழிலின் நலனுக்காகக் கட்டுப்பாட்டுத் தளர்வுக்கு அவசியமான காரணிகளை அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதன்படி, ஊடக நிறுவனங்கள் மிகவும் வினைத்திறனான மற்றும் இலாபகரமான ஊடக நிறுவனங்களாக மாற்றம்பெற முடியும் என்பது எடுத்துரைக்கப்பட்டது. இக் கருத்துக்கு மாறாக,இதன் மூலம் ஊடகங்களின் இயலுமை மற்றும் ஊடகங்களின் திறன்கள் முறையான வழியில் பயன்படுத்தப்படாது இலாபம் ஈட்டலை முதன்மையாகக் கொண்ட போட்டித்தன்மை தோற்றுவிக்கப்படும் என்று கட்டுப்பாட்டுத் தளர்வை எதிர்த்த அறிஞர்கள் கூறினர்.
- ஊடகங்கள் எவ்வளவு தூரம் அரச ஆதரவில் காணப்படுகின்றன என்பதைப் பொறுத்தே கட்டுப்பாட்டுத் தளர்வு தீர்மானிக்கப்படும்.

4. நுகர்வுமயம் (**Consumerism**)

- நுகர்வுமயம் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்தும் சமூக மற்றும் பொருளாதாரச் செயன்முறையாகும்.
- நுகர்வுமயப்படுத்தலின்போது, நுகர்வோரின் தேவைகள் முன்னிலைப்படுத்தப்படுவதோடு அதன் மூலம் சந்தையில் நேரடித் தாக்கமும் ஏற்படுத்தப்படும். கிரஹம் முர்டொக் (Graham Murdock) குறிப்பிடுவதன்படி, பிரஜையின் மற்றும் நுகர்வோனின் அபிலாசை, தேவை மற்றும் வகிபாகம் ஒருவருக்கொருவர் வேறுபடும்.
- ஊடகம் மற்றும்நுகர்வுமயம் ஆகிய இரு எண்ணக்கருக்களும் ஒன்றிலொன்று தங்கியுள்ளது.
- பெறுநர் ஊடக நுகர்வோனாகும். அவன் தனது நுகர்விற்காகப் பொருட்கள் மற்றும் சேவைகளைத் தெரிவு செய்வது போல் ஊடகத்தையும் ஊடக உள்ளடக்கத்தையும் தெரிவு செய்வான்.
- ஊடக நுகர்வுமயப்படுத்தலின்போது, நுகர்வோர் விற்பனைப் பொருட்களைத் தெரிவு செய்வது போல ஊடக உள்ளடக்கங்களைத் தமது இரசனை மற்றும் தேவைக்கேற்பத் தெரிவு செய்வர். உதாரணமாக,ஊடக நுகர்வின்போது ஏதேனும் தொலைக்காட்சி நிகழ்ச்சி பெறுநரால் புறக்கணிக்கப்படுமானால் அதன் வர்த்தகப் பெறுமதி குறைவடையும்.
- பெறுநரது ஊடக நுகர்வு உயர் மட்டத்தில் காணப்படுமானால், குறித்த ஊடகத்தின் பெறுநர் மதிப்பீடு (Rating) உயர்வடையும். அதன்படி அவ் ஊடகத்திற்கான விளம்பரம் விருத்தியடைவதோடு ஊடக நிறுவனத்தின் இலாபமும் உயர்வடையும்.

5. பண்டமயமாக்கல் (**Commodification**)

- அலிசன் ஹர்ன் (Alison Hearn) இனால் எழுதப்பட்ட **“Key Words for Media Studies”**எனும் நூலில் குறிப்பிடுவதன்படி, Commodification அல்லது பண்டமயமாக்கல் எண்ணக்கரு மூலம் தொடர்பாடல் கற்கையில் கூறப்படுவது, ஏதேனும் பொருள் (Goods), சேவை (Service), கருத்து (Ideas) மற்றும் மனிதர்கள் (People) முதலாளித்துவப் பொருளாதார முறைமைக்கு ஏற்பப் பண்டங்களாக்கி விற்பனைசெய்வதாகும்.
- கைத்தொழில்மயம் மற்றும் வணிகமயத்துடன் இணைந்த எண்ணக்கருவாகப் பண்டமயமாக்கலை இனங்காணலாம்.
- பண்டமயமாக்கலின்படி “தகவல்”என்பது வர்த்தகப் பொருளாகும். அவை ஊடகங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுப் பொருளாதார இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும்.

- பண்டமயமாக்கலின் சிறப்பம்சமாவது, “Commercial Dimensions” என்று கூறப்படும் வணிகப் பரிமாணங்களைச் சேவைகளிலும் தகவல் வழங்கலிலும் இணைப்பதாகும்.
- கலை (Art), சமயம் (Religion), மருந்து (Medicine) ஆகியவற்றிற்கு ஆரம்பச் சமூகத்தில் பணப்பெறுமதி வழங்கப்படாதிருந்தபோதும், முதலாளித்துவப் பொருளாதார முறையில் பணப் பெறுமதி வழங்கப்படுவதாகக் கார்ள் மார்க்ஸ் மற்றும் ப்(f)ரடிரிக் ஏங்கல்ஸ் ஆகிய மெய்யியலாளர்கள் கூறியுள்ளனர்.
- இவ்வாறாகவே மேலும் பல அறிஞர்கள், மனிதப் படைப்பாக்கத்தால் உருவாகும் சில தொடர்பாடல் நடவடிக்கைகள், பண்பாட்டு நடவடிக்கைகள், அரசியல் நடவடிக்கைகள் என்பனவும் இக் கருத்தின் பிரகாரம் பணப் பெறுமதிகொண்ட பொருட்களாக மாற்றம் பெறுகின்றன எனக் கூறியுள்ளனர்.
- பண்டமயமாக்கலின்போது ஊடக உள்ளடக்கம் வணிகப் பொருளாக மாறுவதோடு, விளம்பரதாரர்களால் ஊடக உள்ளடக்கம்,ஊடகத்தின் நேரம் மற்றும் வெளி என்பன விலைகொடுத்து வாங்கிக்கொள்ளப்படும். புதிய தொழினுட்பம் மூலம் ஊடக உள்ளடக்கங்கள் விளம்பரதாரர்களுக்கு எளிதில் விற்பனை செய்யப்படும். இக்கருத்திற்கு மாற்றுக் கருத்துத் தெரிவிக்கும் தொடர்பாடல் நிபுணரான ஐரிஸ் ஜென்ஸ் (Iris Jennes) கூறுவது, இச் செயற்பாட்டில் புதிய தொழினுட்பம் மூலம் பெறுநரது உறவுகள் பின்தள்ளப்பட்டு, வியாபார நோக்கங்கள் முன்னிறுத்தப்படும் என்பதாகும்.

### 6. வணிகமயப்படுத்தல் (**Commercialization**)

- வர்த்தக விளம்பரத் தொழிலைப் பயன்படுத்தி ஊடக அமைப்புகளின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளின் பொருளியல் தாக்கங்களை வலுப்படுத்தல் வணிகமயப்படுத்தலாகும். அதாவது, ஊடகத்தை நிலையாகப் பேணிக்கொள்வதற்கு அதன் பொருளியல் அடிப்படையை வலுட்டுவதாகும்.
- வணிகமயப்படுத்தல் செயற்பாட்டிற்காக விளம்பரத் தொழிலை (Advertising Industry) அடிப்படையாகக்கொண்டு ஊடகத் தயாரிப்புகள் மற்றும் நிறுவன ஊழியர்கள் ஊடகக் கட்டமைப்பு மற்றும் ஊடக அமைப்புக்களின் செயற்றிறனை பொருளியல்ரீதியில் வளப்படுத்துவர்.
- புதிய தயாரிப்புகளை அல்லது தயாரிப்பு முறைகளைச் சந்தையில் அறிமுகம் செய்யும் செயன்முறை அல்லது சுழற்சிமுறையாகும்.

  “The process or cycle of introducing a new product or production method in the market.” (Edward Scott, 2019)
- புதிய பொருட்கள் மற்றும் சேவைகளைச் சந்தைக்குக் கொண்டுவரும் செயன்முறை வணிகமயப்படுத்தலாகும். (Commercialization is the process of bringing new products or

services to the market). வணிகமயப்படுத்தல் செயன்முறை, புதிய தயாரிப்பு அல்லது சேவையின் வணிக வெற்றியை அடையத் தயாரிப்பு, விநியோகம், சந்தைப்படுத்தல், விற்பனை, நுகர்வு ஒத்துழைப்பு மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு அவசியமாகும்.

- ஊடக வணிகமயப்படுத்தலில், பூகோளமயமாக்கல், ஊடகச் செயற்பாடு மற்றும் சந்தைப் பொருளாதாரம் ஆகிய காரணிகள் பிரதானமாகத் தாக்கம் செலுத்தியுள்ளன. ஊடக வணிகமயப்படுத்தலின் மற்றுமொரு உபாயமாவது ஊடகங்களுக்கிடையிலான போட்டித்தன்மையை அதிகரித்தலாகும்.
- ஊடகங்கள் வணிக நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுவதால் சிலவேளைகளில் ஊடக ஒழுக்கநெறிகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. வணிகமயப்படுத்தப்பட்ட ஊடக சந்தையில் வர்த்தக விளம்பரதாரர்கள் மற்றும் வியாபாரிகள் ஊடகத் தொழிலில் பணத்தை முதலீடு செய்வதன்மூலம் அவர்கள் ஊடக உள்ளடக்கத்தில் தலையீடு செய்வதை அதிகமாகக் காணமுடிகிறது.
- வணிகமயப்படுத்தல் செயற்பாட்டிற்காகப் புதிய ஊடகங்களும் பயன்படுத்தப்படும். புதிய ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் காரணமாக வணிகமயப்படுத்தல் துரிதமடைந்துள்ளது.

## 7. பூகோளமயமாதல் (**Globalization**)

- பூகோள அடிப்படையில் சிதறியும் பரந்தும் காணப்படும் பல்வேறு பண்பாட்டு இனக் குழுக்கள், பல்வேறு கோள இயல்புகள், பொருளாதார நடத்தை, சமூகம், அரசியல் மற்றும் பொருளாதார வழிமுறைகள் மூலம் சமகாலத் தொடர்பால் தொழினுட்பத்தின் வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு ஒன்றிணைதல் பூகோளமயமாதல் எனும் சொல் உருவாகக் காரணமாயிற்று.
- “பூகோளமயமாதல் என்பது, மனிதர்கள், நிறுவனங்கள் மற்றும் பல்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசுகளுக்கிடையிலான இடைச்செயற்பாடுகளை ஒன்றிணைக்கும் செயற்பாடாகும். இச்செயற்பாடு சர்வதேச வியாபாரம் மற்றும் முதலீட்டுடன் முன்னெடுக்கப்படுவதோடு தகவல் தொழினுட்பம் அதற்குக் கைகொடுக்கும். அத்தோடு, சூழல், பண்பாடு, அரசியல் முறை, பொருளாதார அபிவிருத்தி மற்றும் சௌபாக்கியத்தன்மையோடு மனித பௌதீக முன்னேற்றம் அல்லது நலன் என்பவற்றில் பூகோளமயமாதல் தாக்கம் செலுத்தும்.” (The State University of New York, 2010)
- பூகோளமயமாதல் என்பது, முன்பு இடம்பெறாத வகையில் நேரம் மற்றும் வெளியைச்சுருக்குவதாகும். அது நேரடியாகத் தொடர்புறுவது சமூக, அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டுத் தொடர்புகளுடனாகும். பூகோளமயமாதலால் அதிகளவான தொடர்பாடல் இடைவெளிகள் குறைவடைந்துள்ளன.எல்லைகளைக் கடந்தது. சமூகக் குழுக்கள் அல்லது பண்பாட்டுப் பிரதேசமயமாக்கலில் தொடர்புறுவது.

பௌதீகமல்லாத வேறுவிதமான புதிய இடமொன்று ஊடகத்தால் பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- பூகோளமயமாதலால் பல்வித இனச் சேர்க்கைகள் இடம்பெற்றுள்ளன.
- பண்பாட்டு அடிப்படையில் பூகோளமயமாதல் காரணமாகச் சிந்தனை முறைகள், ஒழுக்க நெறிகள் மற்றும் கலைத்துவ வெளியீடுகள் பண்பாட்டிடை அடிப்படையில் பரிமாறப்படுகின்றன.

- பூகோளமயமாதலில்,
    - தொழினுட்ப வளர்ச்சியின் பரவல்
    - தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சி
    - சர்வதேச வியாபாரத் தொடர்புகள்
    - பொருட்கள் மற்றும் பொருட்களல்லாத மனிதத் தொடர்புகள் பரிமாறப்படல்
    - தனிப்பட்ட மூலதனத்தின் ஓட்டம் விருத்தியடைதல்
    - பல்லின வியாபாரம் முன்வருதல்
    - பயணம் மற்றும் இடம்பெயர்தல் அதிகமாகுதல்
    - நாடுகளுக்கிடையிலான பயணங்கள் மற்றும் தேசிய மனிதப் பல்வகைமை விருத்தியடைவது போலவே

பூகோளமயமாதலின் பிரதிபலனாக,

- தொடர்பாடல், இடைச் செயற்பாடு மற்றும் மக்களுக்கிடையில் தொடர்புகள் உருவாதல்
- சமூகங்களுக்கிடையில் போட்டித்தன்மை உருவாதல்
- பண்பாட்டு ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் முன்வருதல்.
- ஊடகத் தொழினுட்பம் சிறப்புத் தலையீட்டுடன் செயற்படுவது
- பூகோளமயமாதல் செயன்முறை மற்றும் திட்டங்களுக்கிடையே பல்வேறு முரண்பாடுகள் தோன்றுதல்.

- பூகோளமயமாதலின் போக்குகளுக்கு ஏற்ப வெளியிடப்பட்ட பிரதான கருத்தியலாவது தனி உலகப் பண்பாட்டை (Single World Culture) உருவாக்குவதாகும்.

மதிப்பீடு

01. ஊடகப் போக்கு பற்றி எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

02. நீர் விரும்பிய ஊடகப் போக்கு எண்ணக்கருவொன்றை இலங்கை ஊடகங்களுக்கூடாக விளக

தேர்ச்சி மட்டம் : 11.3 இலங்கைக்குரிய விசேடமான ஊடகப் போக்குகளை இனங்கண்டு விளக்குவார்.

பாடவேளைகள் : 12

கற்றற் பேறுகள் : ஊடகப் போக்கு எண்ணக்கரு தொடர்பாக இலங்கைக்குரிய விசேட காரணிகளை முன்வைப்பார்.

பாடத்தயாரிப்பிற்கான அறிவுறுத்தல்கள்

கீழ்காணும் விடயங்களுகூடாகப் பாடத்தை தயாரிக்க.

**அறிமுகம்**

இலங்கை ஊடகங்களின் முறையான வெளியீட்டு செயன்முறை வளர்ச்சி காரணமாக இங்கு புதிய போக்குகள் உருவாகியுள்ளன. இச்சமகால ஊடக போக்குகள் பிரதானமாக தொழிநுட்பம், நிறுவனம், உள்ளடக்கம் மற்றும் பெறுநர் போன்ற துறைகளுடாக ஆராயப்பட்டாலும் இந்தப் போக்குகளுக்கிடையே பரஸ்பர தொடர்பு காணப்படுகின்றமையைக் கீழ்வரும் விளக்கத்துக்கூடாக புரிந்துகொள்ள முடிகிறது.

1. **தொழிநுட்பரீதியான போக்கு**

- பூகோள ஊடகத் தொழிநுட்பப் போக்குகள் இலங்கை ஊடகத் தொழிநுட்ப போக்குடன் நேரடித் தாக்கத்தைச் செலுத்துகிறது. பழைய ஊடகங்கள் புதிய ஊடகங்களாக மாற்றமடைதல் அதன் விளைவாகும். இங்கு பழைய ஊடகங்களாக பத்திரிகை, வானொலி, தொலைகாட்சி என்பவற்றைக் குறிப்பிடலாம். புதிய ஊடகங்களாக முகநூல், வைபர், வட்ஸ் அப், ருவிட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்களும் கட்புலனாகாத மெய்மைகள் (Virtual Reality) போன்ற ஏனைய உப ஊடகங்களையும் குறிப்பிடலாம். இவ்வாறாக மனிதன் சமூக ஊடக உலகில் பிரவேசிக்கிறான்.

- எண்மானத் தொழிநுட்ப வளர்ச்சியால் இணையம் உருவானது. புதிய ஊடக வளர்ச்சிக்கு இணையவழி தொழிநுட்பம் தாக்கம் செலுத்துகிறது. 2019 ஜனவரி வரை இலங்கையில் இணையப் பாவனையாளர்களின் எண்ணிக்கை 7.13 மில்லியன்களாக இருப்பதோடு அதன் வருடாந்த வளர்ச்சிவீதம் 6.2% யும் தாண்டியிருக்கிறது. வலையமைப்பு வழி தொழிநுட்பத்தில் சமூக ஊடகப் பாவனை முதன்மைப் பெறுகிறது. அதனூடாக இணையத்தளங்கள் (Web sites), வலைப்பூக்கள் (blogs) (வலைப்பூக்கள் என்பது தினக்குறிப்பேடு போன்று பாவனை செய்யக்கூடிய இணைய வலையமைப்பாகும்), விலோக்ஸ் (vlogs) (வீடியோ காட்சிகளுடனான ஒரு இணையவழி தொலைகாட்சி ஆகும்), போட்காஸ்ட் (Podcasts) (பதிவிறக்கம் செய்யக்கூடிய பெறுநரின் பதிவுகள்) போன்ற ஊடக தொழிநுட்பங்கள் உருவாகியுள்ளன.

- இணையத்தை முதன்மையாக கொண்ட எண்மானத் தொழிநுட்பமானது ஊடக தொழிநுட்பத்தினூடாக ஊடகம் (Media) முதல் உள்ளடக்கம் (Content) வரை

தொடர்பாடல் மரபுகளை மாற்றியமைத்துள்ளது. எனவே, எந்த ஊடகத்தில் செய்தி முன்வைக்கப்படுகிறது என்பதைவிட புதிய ஊடக உள்ளடக்கங்களைத் தேடிச் செல்லல் முக்கியம் பெற்றுள்ளது.

- ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தொடர்பாடல் முறைமை முழுமையாக மாற்றமடைந்த Internet of Things – IOT எனும் புதிய தொடர்பாடல் பாவனையொன்று உருவாகியுள்ளது. 'இணையச் சொத்து' எனும் போக்கினால் கணினிசார் தொழிநுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி, இணையத்தினூடாக நபர்களுக்கு தத்தமது வாகனம், வீடு, அலுவலகம் மற்றும் ஏனையவை சார்ந்த நாளாந்தத் தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள முடிகிறது. அதேபோல், தரவுகளை அனுப்புதல் மற்றும் பெற்றுக்கொள்ளல், பல்வேறு கணினிசார் உபகரணமூடான உள்ளகத் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல், தகவல் பரிமாற்றம், தரவு பகுப்பாய்வு, தரவுகள் மற்றும் மானுட பெறுமதிகளை வளர்ச்சியடைய செய்தல் போன்ற தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளவும் 'இணையச் சொத்து' பயன்படுகிறது. இலத்திரனியல் உபகரணங்கள், உணர்வி (Sensors) மற்றும் வலையமைப்புத் தொடர்புகள் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனூடாக இணையவழி உபகரணங்களுக்கும் நாளாந்தத் தொடர்பாடல் செயற்பாடுகளுக்கும் இடையில் தொடர்புகள் காணப்படுகின்றன.

- அதேபோல் ஒப்புளி (Analog) தொழிநுட்பம் எண்சார் தொழிநுட்பமாக (Digital) மாற்றமடைந்ததோடு ஊடக அலைவரிசைகள் அதிவேகமான பரந்த வலையமைப்பிற்குள் பிரவேசித்துள்ளமை மற்றுமொறு ஊடக தொழிநுட்ப போக்காகும். இதனூடக, ஊடக தொழிநுட்பமானது நேரடி செய்மதி ஒளிபரப்பு (Direct Broadcasting Satellite), இணையவழி புரடோகோல் தொலைக்காட்சி (IPTV), கேபிள் தொலைகாட்சி (Cable TV), பரந்த வலையமைப்பு (Broad Band) மற்றும் செய்மதி போன்ற பல்வேறு ஊடக தொழிநுட்பங்கள் உருவாகின. அதனூடாக, ஊடக பாவனையானது மிக வேகமாக வியாபித்துள்ளது.

- முகில் கணினியமைப்பு (Cloud Computing) தொழிநுட்பப் போக்கு சமூக, கல்வி, பொருளாதாரம் போன்ற துறைகளில் மட்டுமன்றி புதிய ஊடகத் துறையிலும் புதிய போக்குகளை உருவாக்கியுள்ளது. கணினிசார் கட்டமைப்பினூடாகத் தரவுகளை சேமித்தல் மற்றும் அவற்றை மீண்டும் மீண்டும் பெற்றுக் கொள்ளக்கூடிய தரவுக் களஞ்சியம் இவ்வாறு அழைக்கப்படுகிறது. ஊடக உள்ளடக்கங்களைச் சேமித்து வைத்தல் தொடர்பான முகில் கணினியமைப்புச் செயற்பாடு மிகவும் வினைத்திறன் மிக்கதாகும்.

- ஏக ஊடகம் (Mono Media), பல்லூடகம் (Multimedia) என்பவற்றின் வருகையானது தொடர்பாடல் துறையில் பல புதிய போக்குகளை உருவாக்கியுள்ளது. ஏக ஊடகம் என்பது தேசிய மற்றும் பிரதேச அடிப்படையில் ஒரு உரிமைத்துவத்துடன் தொடர்பாடல் செயற்பாடுகளில் ஈடுபடுதலாகும். பல்லூடகம் என்பது கட்புல செவிப்புல காட்சிகள், வீடியோ போன்ற பல்வேறு ஊடகங்களைக் கொண்டு தொடர்பாடலில் ஈடுபடுதலாகும். பொதுமக்கள் பல்லூடகங்களையே பயன்படுத்துகின்றனர். பெறுநர்கள் அதனூடாகப் பல்வேறு வகையாக ஆளுள் தொடர்பாடலில் ஈடுபடுவதோடு பல்வேறு உள்ளடக்கங்களையும் உருவாக்குகின்றனர்.

- தொழிநுட்பப் போக்காக ஊடகப் பங்கீடு (Festribution) எனும் பிரவேசமாக (Access) மாறியுள்ளமையானது மிக வேகமாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கிறது.

- எதிர்காலத்தில் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படும் ஊடகப் போக்காகக் கட்புலனாகா மெய்மை (Virtual Reality), செயற்கையான அறிவு (Artificial Intelligence), அதிவேக பரந்த வலையமைப்பு, எண்சார் ஒளிபரப்பு (Narrowcasting) வானொலி கட்டமைப்பு, உணரி வலையமைப்பு (Sensor Network), கம்பிவலை வலையமைப்பு (Mesh Network), பல்லூடக ஒளிபரப்பு, பெறுநர்மய தொழிநுட்பம் (Context – Aware Technology), செய்மதி தொழிநுட்ப சேவை, நனோ தொழிநுட்பப் பாவனை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

01. நிறுவனரீதியான போக்கு

இலங்கை ஊடகக் கைத்தொழிலில் துரித வளர்ச்சியொன்றைக் காணக்கூடியதாய் உள்ளது. ஊடக நிறுவனங்கள் தொடர்ச்சியாக உருவெடுக்கின்றமை அவதானிக்ககூடிய ஒரு போக்காகும்.

- உரிமைத்துவம்

ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதின் பெறுபேறாக அரச ஊடகங்களின் பங்குகள் குறைவடைந்து செல்கின்றன.

- பிரதேச ஊடகம்

கொழும்பை மையமாகக் கொண்ட ஊடக நிறுவன முறைமையானது மாறித் தற்போது வேறு பிரதேசங்களை நோக்கி நகரும் தன்மை காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிகள் என்பன காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

- ஊடகவியலாளர்கள்

ஊடக நிறுவனங்களில் பணிபுரியும் நிரந்தர ஊடகவியலாளர்களுக்கு மேலதிகமாக சுயாதீன ஊடகவியலாளர்களும் உருவாகியுள்ளனர். நிறுவனமைய செயற்பாட்டினின்று விலகி தம்மால் உருவாக்கப்பட்ட செய்திகளைப் பல்வேறு ஊடக நிறுவனங்களுக்கும் அனுப்பும் பண்பு காணப்படுகிறது. இது புதிய ஊடக போக்காக உள்ளது.

- பால்நிலைச் சமநிலை

ஊடக நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துச் செல்கிறது. எனினும், அது இன்னும் சமநிலையற்ற நிலையிலேயே காணப்படுகிறது.

- தயாரிப்புச் சுதந்திரம்

நிறுவனரீதியான கட்டுப்பாடு காரணமாக வெகுசன ஊடகங்களில் தயாரிப்புச் சுதந்திரமானது குறைவடைந்துள்ளது. தயாரிப்பின்போது அரசியல் மற்றும் பொருளாதார காரணிகளைப் பற்றிக் கவனம் செலுத்தித் தயாரிக்கவேண்டியுள்ளமை அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பொதுவான நிலமையாகும்.

ஊடகச் செயற்பாடுகளுக்கு மற்றும் தொழில்சார் அமைப்புகளின் செயற்பாடுகளுக்கும் அரச ஊடகங்களில் மட்டுமே போதிய வசதிகள் காணப்படுகின்றன.

02. உள்ளடக்கம்

- உலகில் ஏனைய நாடுகளின் ஊடக உள்ளடக்கங்களைப் போன்றே இலங்கையினதும் ஊடக உள்ளடக்கங்கள் புதிய போக்கினை அடைந்துள்ளன. அவற்றுல் முதன்மையான சில ஊடக உள்ளடக்கங்களை நோக்குவோம்.

 1. எளிமையான மொழிப்பாவனை
 2. வர்த்தக விளம்பரங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லல்.
 3. புதிய முன்வைப்புப் பாணிகள் பயன்படுத்தப்படல்
 4. பொழுதுபோக்கிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படல்

எளிமையான மொழிப்பாவனை

- நியம மொழியை பயன்படுத்தும் முறைமையினின்று விலகி சாதாரண பெறுநர்களை இலக்காகக் கொண்ட, இலகுவாகப் புரிந்துக் கொள்ளக்கூடிய, மக்களுக்கு மிக நெருக்கமான ஒரு எளிமையான மொழியைப் பயன்படுத்தும் போக்கு காணப்படுகிறது.
- செய்தி அறிக்கையின்போது கூட விசேட அம்சங்களின்போது பயன்படுத்தப்படும் மொழியைப் பயன்படுத்தப்படும் போக்குக் காணப்படுகிறது.

வர்த்தக விளம்பரங்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்லல்

செய்தித் துளை (News hole) முறைமையையும் கடந்து, வெகுசன ஊடகங்களால் முன்வைக்கப்படும் விளம்பரங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

பாரம்பரிய விளம்பர முன்வைப்பு முறைமைகளையும் மீறிச் செய்தி வழி விளம்பரங்களை (ஆசிரிய விளம்பரங்கள் - Advertorials) முன்வைத்தலானது இன்றைய வெகுசன ஊடகங்களின் புதிய போக்காக உள்ளது.

புதிய முன்வைப்புப் பாணிகள் பயன்படுத்தப்படல்

ஊடக உள்ளடக்கத்தைப் பெறுநர்களைக் கவரக்கூடிய புதிய பாணிகளில் முன்வைக்க முயற்சிக்கும் புதிய போக்கினை அண்மைக்காலமாக ஊடகங்களில் காணக்கூடியதாயுள்ளது. கட்புல செவிப்புல ஊடகங்களில் அதிகமாக முன்வைக்கப்படும் மெய்மை நிகழ்ச்சிகளில் (Reality show) இதனை அதிகமாகக் காணலாம்.

அதேபோல், ஊடகக் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளிலும் (Talks show) புதிய முன்வைப்புப் பாணி தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

இப்புதிய முன்வைப்புப் பாணியானது ஊடக – பெறுநர் உள்ளக செயற்பாடுகளின் வளர்ச்சிக்கும் காரணமாகிறது.

அச்சு ஊடகங்கள் பற்றி நோக்கும்போது உருவவியல் செய்திகளை முன்வைப்பதில் வளர்ச்சி கண்டுள்ளதை அவதானிக்கலாம். அதன் பெறுபேறாகப் புகைப்படங்கள்,

உருக்கள், கார்ட்டூன்கள், வரைபடங்கள் போன்றவை இன்றைய அச்சு ஊடகங்களில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

நிச்சயமான தகவல் அறிக்கையிடலுக்கு மேலதிகமாக முறைசாரா தகவல்கள் (ஊர்வம்பு) தொடர்பாகவும் ஊடக உள்ளடக்கத்தில் குறிப்பிடத்தக்களவு கவனம் செலுத்தப்படும் போக்கு இன்றைய ஊடகங்கள் மத்தியில் காணப்படுகிறது.

பெறுநர்கள்

சமகால ஊடக முன்வைப்பு மற்றும் வளர்ச்சியினால் பெறுநர்களின் பின்புலம் மாற்றங்களுக்குள்ளாகி உள்ளது. ஊடகங்களில் ஏற்பட்ட தொழிநுட்பரீதியானதும் நிறுவனரீதியானதுமான உள்ளடக்கம் நேரடியாக தொடர்புடைய பெறுநர்களின் பின்புலத்தில் மாற்றங்களுக்கு காரணமாகியுள்ளது. இந்த ஊடக விரிவடைதலினால் பெறுநர்கள் செயற்படும் வாசகராக நேயராக இரசிகராக துரிதமாக மற்றும் விரைவாக புதிய தொழிநுட்பத்தை பயன்படுத்தி தொடர்பாடலை மேற்கொள்வர். இக்காரணிகளை அடிப்படையாக கொண்டு பெறுநர்களிடம் புதிய போக்குகளை பின்வருமாறு இனங்காணலாம்.

- செயற்படும் பெறுநர்களாக ஊடக உள்ளடக்கத்தை கட்டியெழுப்பும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது

தொழிநுட்பம் எனும் காரணத்தை அடிப்படையாக கொண்டு பெறுநர்களுக்கு ஊடக உள்ளடக்கத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் தீர்மானிக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இவ்வாறு கிடைத்துள்ள சந்தர்ப்பமானது பிரஜைகள் ஊடகம் என மேலும் விபரிக்கப்படுகிறது.

இவ்வாறு பெறுநர் செயற்படுவதால் சுயாதீன, சமநிலையான மற்றும் துல்லியமான தகவல்கள் வாயிற்காப்பு எண்ணக்கருவினின்று விலகி பரிமாற்றப்படுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

- தொடர்பாடல் செயன்முறையின்போது பெறுநர்களின் பின்புலம் மாற்றமடைதல்

ஒருவழியான மற்றும் இருவழியான தொடர்பாடல் முறைறமைகளையும் தாண்டி செயற்பாடு பெறுநர்களாக ஊடக உள்ளடக்கத்தைக் கட்டியெழுப்பத் துணைநிற்பதால் பெறுநர்களின் மரபுசார் பின்புலம் மாற்றமடைந்துள்ளது.

பத்திரகையை வாசித்த, வானொலியைக் கேட்ட, தொலைக்காட்சி மற்றும் சினிமா என்பவற்றை இரசித்த பெறுநர்களின் மரபுசார் பின்புலம் இவ்வாறு மாற்றமடைந்துள்ளமை சமகால ஊடகப் போக்காகும்.

அத்தோடு, இந்த பன்மைசார் ஊடகச் சூழலில் விசாலமாக பல்வகைமையான ஊடகச் செயற்பாட்டால் பெறுநர்கள் தமது தேவைக்கேற்ப இரசனையுணர்விற்கு ஏற்ப ஊடகங்களைத் தெரிவுசெய்யக்கூடியதாக உள்ளது.

பெறுநர்கள் புதிய தொழிநுட்பப் பாவனைக்குத் தீவிர ஆர்வம் காட்டல்

புதிய தொழிநுட்ப வளர்ச்சியோடு பெறுநர்கள் முன்எப்போதும் இல்லாதவாறு தொழிநுட்பத்துடன் இணைந்த ஊடக பாவனைக்குத் தீவிர ஆர்வம் காண்பித்து வருகின்றனர். உதாரணமாக ருவிட்டர் (Twitter Micro Blogging) முகநூல் (Facebook) சமூக வலைத்தளம், இன்ஸ்டாகிராம் (புகைப்படப் பகிர்வு), யூ ரியுப் (வீடியோ பகிர்வு) என்பவற்றோடு Whatsapp, Viber, IMO போன்ற கையடக்கத் தொலைபேசிப் பிரயோகங்களுடாக (Chatting) தொழிநுட்பரீதியாக இலகுவாக உலகில் எந்தவொரு நபருடனும் தொடர்பாடலில் ஈடுபடப் பெறுநர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையானது புதிய போக்காகக் கருதப்படுகிறது.

ஊடகப் பன்மைமயப்படுத்தலோடு பெறுநர்களின் பின்புலம் இவ்வாறு வளமாக வளர்ச்சியடைந்தாலும், புதிய தொழிநுட்ப ஊடகங்களின் வளர்ச்சி முறைமையினால் பெறுநர்கள் இணையவழி மோசடிகளுக்கும் இன்னல்களுக்கும் உள்ளாகமுடியும்.

உதாரணமாக துல்லியத்தன்மை, நடுநிலைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றிலிருந்து விலகிய தகவல் மற்றும் செய்திப் பரவுகைக்குத் தொடரறா ஊடகங்கள் வழிவகுக்கின்றன. அண்மைக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது தவறான செய்திகள் மற்றும் வெளியீடுகள் முகநூல் ஊடாகப் பரவியதால் மக்கள் தேவையற்ற குழப்பங்களுக்கு உள்ளானமையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

மதிப்பீடு

1. இலங்கை ஊடகங்களுக்கேயுரிய விசேடமான ஊடக போக்குகளை ஆராய்க.
2. பெறுநர்களை மையப்படுத்தி ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ள போக்குககள் விழிப்புணர்வுமிக்க விமர்சனமிக்க பெறுநர்களைப் பாதிக்குமாற்றை உதாரணங்களுடன் விளக்குக.

# 12. தொடர்பாடல் ஆய்வு

தேர்ச்சி : 12.0 தொடர்பாடல் ஆய்வு பற்றி முறையான கற்கையை மேற்கொண்டு அதன்மூலம் கற்றவற்றை வாழ்க்கையுடன் இணைத்துக்கொள்வார்.

தேர்ச்சி மட்டம் : தொடர்பாடல் மற்றும் ஊடக ஆய்வு என்பதற்குப் பொருட்கோடுவார்.

பாடவேளைகள் : 16

கற்றற் பேறுகள்

- ஆய்வு என்பதனை வரையறை செய்வார்.
- ஊடக ஆய்வு என்பதனை வரையறை செய்வார்.
- ஆய்வுகளின் சாதக, பாதகத் தன்மைகளை விபரிப்பார்.

**பாடத்தைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**அறிமுகம்**

- மனிதன் பல்வேறு சூழலியல் மாற்றங்கள் தொடர்பில் ஆர்வத்துடன் அவதானித்து அவற்றின் அர்த்தம், பயன்பாடுகள் மற்றும் விளைவுகள் என்பன பற்றி விளங்கிக்கொள்ள முயற்சி செய்து வந்துள்ளான். அதன் பிரதிபலனாக, மானுட சமூகம் முன்னேற்றம் அடைந்தது. மனிதன் தான்சார்ந்த சமூகம் மற்றும் சூழல் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளமையானது, இன்று விஞ்ஞான முறைமையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுக்குரிய பாடத்துறையாக வியாபித்துள்ளது.
- தொடர்பாடல் ஆய்வு என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஆய்வு எனும் பாடத்துறை தொடர்பில் தெளிவுபெறல் அவசியம். ஆங்கிலத்தில் Research எனும் பதத்தினால் குறிப்பிடப்படும் பரிசோதனை எனும் சொற்பதத்தின் பொருள் ‘மீளாய்வு’ என்பதாகும். அதற்கிணங்க, பரிசோதனை என்பது ஏதேனுமோர் விடயம் அல்லது செயற்பாடு தொடர்பாக ஆராய்தல் அல்லது தேடுதல் ஊடாக உண்மைத்தன்மையை ஒப்புவிப்பதற்கான செயற்பாடுகள் என அர்த்தப்படுத்தப்படுகிறது. அத்தோடு, ஏதேனுமோர் பிரச்சினை தொடர்பாக விஞ்ஞானரீதியாகச் சரியான முறையில் கற்றலானது பரிசோதனையின் மூலம் நடைபெறுகிறது. பரிசோதனை என்பது பல்வேறு விதமாக வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.
- Oxford Advanced Learning Dictionary குறிப்பிடுவதன்படி பரிசோதனை என்பது, ‘ஏதேனுமோர் அறிவுத்துறை பற்றி மிகவும் கவனமாகத் தேடுதல் அல்லது ஆராய்தலினூடாக புதிய விடயங்களை அதனுடன் இணைத்துக் கொள்ளல் ஆகும்’ எனப்படுகின்றது. எனவே, உலகம்பூராகவும் தினமும் பல்வேறு விதமான பரிசோதனைகள்

நடைபெற்று வருவதோடு, அதனூடாக புதிய அறிவுசார் விடயமொன்று உருவாக்கப்பட்டுச் சமூகமயப்படுத்தப்படுகிறது.

- உலகம் பூராகவும் பல்வேறு பாடத்துறைகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதோடு அதனூடாகப் பல்வேறு பயனுறுதிமிக்க புதிய அறிவுசார் விடயப்பரப்புகள் சமூகமயப்படுத்தப்பட்டு வருகின்றன. விஞ்ஞானத்துறை போலவே சமூக விஞ்ஞான பாடத்துறைகளினூடாகவும் பரிசோதனை மேற்கொள்ளப் பல்வேறு விதிமுறைகள் காணப்படுகின்றன. ஆய்வு செய்தல் என்பது அவற்றுள் ஒரு வகையான அணுகுமுறையாகும்.
- 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியாகும்போது வேறு பாடத்துறைகளுடன் இணைந்து காணப்பட்ட தொடர்பாடல் கற்கைகள் பாடத்துறையானது, தனியானதோர் பாடத்துறையாக வளர்ச்சியடைய நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பரிசோதனைகளும் ஆய்வுகளுமே பெரும் பங்கு வகித்துள்ளன. சமூகத்தில் பல்வேறு சம்பவங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு நபர்கள் பலவிதமான கருத்துக்களை கொண்டுள்ளனர். ஒருவர், சார்பான கருத்தினையோ மற்றவர், எதிரான கருத்தினையோ கொண்டிருக்க முடியும். அதேபோல், மத்தியஸ்தம் வகிக்கும் ஒரு தரப்பினர் அல்லது அதுபற்றி எவ்விதக் கருத்துக்களையும் கொண்டிராத மக்கள் கூட்டமும் சமூகத்தில் காணப்படலாம். எனினும், ஏதேனுமோர் சம்பவம் அல்லது பிரச்சினை தொடர்பாக விமர்சனம் செய்பவருக்கு அந்தக் கருத்துக்களின் பல்வகைமை முக்கியமானவையாகும். ஆய்வாளரால் ஏதேனும் பிரச்சினை தொடர்பில் முறையாகச் சேகரிக்கப்படும் கருத்துக்கள், நினைவுகள், உணர்வுகள், செயற்பாடுகள் மற்றும் நடத்தைகள் என்பன தொடர்பான தகவல்களை (தரவு) விமர்சனம் செய்வதனூடாக, புதிய அறிவுசார் விடயமொன்று சமூகமயமாக வாய்ப்புள்ளது. அவ்வாறானதோர் செயற்பாடு, ஆய்வு என அழைக்கப்படுகிறது. மேலோட்டமாகத் தெரியும் விடயங்களுக்கூடாகக் கருதுகோள்களுக்கு அல்லது முடிவுகளுக்குச் செல்வதைவிட, அது தொடர்பாக முறையாகக் கற்றுணர்ந்து வெளியிடும் கருத்துக்கள் மிகவும் வெற்றிகரமானதாகவும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுமாகக் காணப்படும்.
- தொழினுட்ப யுகத்தில் தொடர்பாடல் மனித வாழ்க்கையில் பல்வேறு செயற்பாடுகளுடன் ஆழமாக இணைந்துள்ளது. அதனூடாக ஒரு நபருக்கு அல்லது சமூகத்திற்கு ஏற்படும் தாக்கமானது மிகவும் பரந்துபட்டதாகும். இதன்போது பல்வேறு ஊடகங்களின் செயற்பாடுகள், தகவல் உள்ளடக்கம், அதன் சமூகத் தாக்கம் மற்றும் பெறுநரின் இரசனை போன்றவை தொடர்ச்சியாக ஆராய்தல் அவசியமாகும். தொடர்பாடல் தொழினுட்பம் எல்லையற்ற பரிணாம வளர்ச்சியடைந்து, எல்லாத் துறைகளிலும் வியாபித்துப் புதிய ஊடகங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் விசேடமாகக் கற்கைக்குட்படுத்தப்படல் வேண்டும்.
- குருன்வெல்ட் பிரகடனத்தில் குறிப்பிடப்படுவது, சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் ஊடக விளங்கறிவினுடனான விமர்சனமிக்கப் பெறுநராக மாற்றப்படவேண்டும் என்பதாகும். பரிசோதனை மற்றும் விஞ்ஞானரீதியான **வழிமுறைகளூடாக** ஊடகங்களின் தாக்கம் பற்றி முறையாகக் கற்பதனூடாக சிறுவர்களின் விமர்சனத்துவம் மற்றும் விளங்கறிவினை விருத்தி செய்ய அது பின்புலமாய் அமைகிறது என யுனெஸ்கோ அமைப்பு சுட்டிக்காட்டுகிறது. 1982ஆம் ஆண்டு குருன்வெல்ட் பிரகடனம் தொடர்பான கருத்துக்களை விருத்தி செய்து வெளியிடப்பட்ட ‘பரிஸ் நிகழ்ச்சி நிரல்’ (Paris Agenda) ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள 12 அம்சங்களின் விதப்புரையானது, ஊடகம் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களையும் ஈடுபடுத்தவேண்டும் என்பதாகும்.
- இதனூடாக ஆய்வு தொடர்பான பிரயோக அறிவினை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அதனூடாக மாணவர்களின் ஆய்வுத்திறன், விமர்சனத்திறனை விருத்திசெய்யச் சந்தர்ப்பம் வழங்கல் இந்த அமைப்பினால் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**தொடர்பாடல் மற்றும் ஊடக ஆய்வுகள்**

- மானுடத் தொடர்புகளைக் கொண்டு நடாத்தும் செயன்முறையானது தொடர்பாடலில் தங்கியுள்ளது. தொடர்பாடல் தொழினுட்பத்தின் முன்னேற்றம், மக்கள் ஊடக உருவாக்கம் மற்றும் வியாபகம் தொடர்பான ஒரு தொகுதியாக உருவாகக் காரணமாகியுள்ளது.
- ஊடக ஆய்வு எனப்படுவது, பெறுநர் ஆய்வினூடாக ஊடகம் தொடர்பான பெறுநர் துலங்கல் எவ்வாறானது, ஊடகங்களினூடாக பெறுநரில் ஏற்படுத்தப்படும் தாக்கம் எவ்வாறானது என்பதனை அடையாளம் காண்பதாயுள்ளது.
- ஊடகம் தொடர்பான பெறுநரின் துலங்கல் எவ்வாறானது என்பதை உணரக் கூடியதாயுள்ளதோடு, ஊடகங்களுடாகப் பெறுநர் மத்தியில் ஏற்படுத்தப்படும் தாக்கம் எவ்வாறானது என்பதையும் இனங்காண்பதற்கு ஊடக ஆய்வுகள் பயன்படுத்தப்படுகின்றன.
- இதன்போது மரபுரீதியான ஊடகங்கள், வெகுசன மற்றும் புதிய ஊடகங்கள் ஆகிய ஆய்வுக்குட்படுத்த முடிவதோடு வாசகர், நேயர், இரசிகர், பெறுநர்கள் மற்றும் பாவனையாளர்களைத் தரவு மூலங்களாகப் பங்குபற்றச் செய்யமுடியும்.
- ஊடக ஆய்வுகள் மூலம் தொடர்பாடுநர், ஊடகம், தகவல், பெறுநர் மற்றும் தாக்கம் போன்றவற்றின் தன்மை, புகழ்பெற்ற தன்மை, தொழினுட்பப் பயன்பாடு மற்றும் சமூக தாக்கம் என்பன பற்றி பெறுநரின் விருப்பு, கருத்து, வாதப்பிரதிவாதங்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் நடைபெறுகிறது.
- ஊடக ஆய்வு விசேட சந்தர்ப்பங்களில் நடைபெறமுடியும். அதனூடாக, காலத்துக்குக் காலம் ஊடக நடத்தைகள் வேறுபடும் முறையை இனங்காண முடிகிறது.

**“ஆய்வு” என்பதற்கான பொருட்கோடல்**

- ஆய்வு (Survey) எனும் பதத்தின் பொருள் ஒக்ஸ்போர்ட் அகராதியின்படி, “சாதாரண மக்களின் கருத்து மற்றும் நடத்தை பற்றி விமர்சிப்பதாகும். இது பொதுவில் அவர்களிடம் வினாக்கள் கேட்பதன் மூலம் நிகழும்” என்பதாகும்.
- ஆய்வு (Survey) எனும் பதத்தின் பொருளாவது, மலலசேகர அகராதியின்படி ஆராய்ச்சி செய்தல், ஆய்வு செய்தல், ஆய்வு என்பதாகும்.
- ஆய்வு என்பது தெரிவு செய்யப்பட்ட,நிச்சயிக்கப்பட்ட பின்புலத்தில் வாழும் மனிதர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்காகப் பின்பற்றப்படும் ஆராய்ச்சி விதிமுறையாகும்.
- ஆய்வு பற்றிய வரைவிலக்கணங்கள்,

    - “மக்களது படைப்பாக்கங்கள் மற்றும் அவை உருவாக்கப்பட்ட விதம் பற்றிச் சமூக விஞ்ஞான மனப்பாங்கின் மூலம் ஆராயும் போது பயன்படுத்தும், போதியளவு தரவுகளைச் சேகரிக்கும் செயன்முறையாகும்.”

      மார்க் ஏப்ரஹாம் (Mark Abraham).

    - “சமூக நிலைமை அல்லது சமூகப் பிரச்சினையை முறையாக மற்றும் விதிமுறைசார்ந்து பகுப்பாய்வு செய்யும் முறையாகும்.

      ஹர்மன் என் மோர்ஸ் (Herman N. Morse)

- பிரச்சினை அல்லது நிகழ்வு தொடர்பாக விஞ்ஞானரீதியான முறைமையினூடாக ஆராய மேற்கொள்ளப்படும் ஆய்வு நடவடிக்கைகளின்போது, அதனோடிணைந்த தரவு மூலங்களிடம் நேரடியாகத் தகவல்களைச் சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் உபாய வழியாக ஆய்வு கருதப்படுகிறது.

- ஆய்வினூடாக ஒரு நபரின் தனிப்பட்ட தகவல்கள், கருத்துக்கள், வாதங்கள்,ஆலோசனைகள், செயற்பாடுகள், நடத்தை, கொள்கை என்பன தொடர்பான தகவல்களைப் (தரவு) பெற்றுக்கொள்ள முடியும்.
- ஆய்வு நடவடிக்கையின்போது நடைபெறுவது முதன்மைத் தரவுகளைச் சேகரித்தலாகும்.
- சமகாலச் சிக்கலொன்று தொடர்பாக விஞ்ஞான முறையினூடாகத் தரவுகளைச் சேகரித்தல் ஆய்வின்மூலம் நடைபெறுகிறது.

**ஆய்வு விதி முறைகள்**

- ஆய்வொன்றின்போது தரவு சேகரிக்கப் பல்வேறு விதிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. சில எடுத்துக்காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன.

  - வினாக்கொத்து
  - நேர்முகக் கலந்துரையாடல்
  - தொலைபேசி
  - தபால் மற்றும் மின்னஞ்சல்
  - இணையம்

**ஆய்வு முறைகள் (வகைகள்)**

- ஆய்வு முறைகளைத் தெளிவுபடுத்தும் அடிப்படை ஆய்வு வகைகள் 02 பற்றிக் கலந்துரையாடப்படுகிறது.

  01. விவரணரீதியான ஆய்வு (Descriptive Survey)
  02. பகுப்பாய்வு (Analytical Survey)

**1. விவரணரீதியான ஆய்வு (Descriptive Survey)**

- ஏதேனுமோர் பிரச்சினை தொடர்பாகப் பல்வேறு கோணங்களில் தகவல் சேகரித்தல் என்பது விவரணரீதியான ஆய்வின் அடிப்படையாகும்.
- விவரணரீதியான ஆய்விற்காகக் கண்காணிப்பு விதி முறைகள், நிகழ்வுக் கற்கை முறைகள் என்பவற்றைப் பயன்படுத்த முடியும். ஊடகத்துறையில் சமகால ஊடகப் போக்கு, ஊடக நிறுவனம், நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய ஊடகச் செயற்பாடுகள் தொடர்பாக விவரணரீதியாக ஆய்வு செய்யமுடியும்.
- உதாரணமாக, சுற்றாடல் தொடர்பான ஊடக நிகழ்ச்சியொன்றிற்காகத் தகவல் சேகரித்தல் அல்லது பாடசாலை தொடர்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றை மேற்கொள்வதாயின், ஆய்வினூடாக அது தொடர்பான பல்வேறு காரணிகள் / தகவல்களைச் சேகரித்தலைக் குறிப்பிடலாம்.
- அதுபோன்று, தொலைக்காட்சியில் ஏதேனுமோர் கால எல்லைக்குள் ஒளிபரப்பப்படும் வர்த்தக விளம்பரங்கள் தொடர்பாக அளவு, வகை, தன்மை, காலம் என்பன பற்றி ஆய்வொன்றினூடாகத் தரவுகளைச் சேகரிக்க முடியும்.
- விவரணரீதியான ஆய்வினால் சேகரிக்கப்படும் தரவுகளுக்கூடாக நிகழ்வு அல்லது தாக்கம் பற்றி ஆழமாக அவதானம் செலுத்தப்படாது.
- பண்புத்தரம்மிக்க மற்றும் போதியளவு தகவல்கள் மட்டுமே ஆராயப்படும்.

2. பகுப்பாய்வு (**Analytical Survey**)

- தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறையில் பகுப்பாய்வின்மூலம் மேற்கொள்ளப்படுவது, ஏதேனுமோர் பிரச்சினை அல்லது சந்தர்ப்பம், நிகழ்ச்சி தொடர்பாக விஞ்ஞான முறையினூடாக ஆராய்ந்து பெறப்படும் தரவுகளை ஆய்வு நோக்கத்தின்கீழ் பகுப்பாய்வுடன் ஆய்வு செய்தலாகும்.
- உதாரணமாக, சமூக ஊடகங்களால் பரப்பப்படும் செய்திகளினால் ஏற்படும் தாக்கம் எவ்வாறானது? பொருளொன்றைக் கொள்வனவு செய்வதில் வர்த்தக விளம்பரமொன்று பெறுநர்மீது ஏற்படுத்தும் தாக்கம் எவ்வாறானது? போன்ற பிரச்சினைகளைப் பகுப்பாய்வு மூலம் ஆராயமுடியும்.

**ஆய்வொன்றில் எதிர்பார்க்கப்படும் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள்**

**அனுகூலங்கள்**

- குறுகிய காலத்தில் பிரச்சினை தொடர்பான தரவுகளைச் சேகரிக்கக்கூடியதாக இருப்பதோடு, ஒப்பீட்டுரீதியாகச் செலவு குறைவானது.
- தொலைபேசி, இணையம், தபால் போன்ற முறைகளுக்கூடாகத் தொலைவிலுள்ள தரவுகளை இலகுவாகப் பெறமுடிவதோடு, தரவு மூலத்திடம் எவ்வித சிரமங்களுமின்றி நெருங்கவும் முடிகிறது.
- தரவு மூலகர்த்தாக்கள் விசாலமான கூட்டமாயினும் தகவல் பெறமுடியும்.
- மென்பொருள் பயன்பாடின்றியோ அல்லது மென்பொருளொன்றைப்பயன்படுத்தியோ ஆய்வுக்கான தரவுகளைச் சேகரித்து விமர்சனம் செய்ய முடியும்.
- தொடரறாத் தளத்தில் (Online) ஆய்வு மேற்கொள்ளும்போது, விசேடமான மென்பொருள் மற்றும் பிரயோகம் (App) தயாரிக்கப்பட்டுள்ளதோடு, உடனடியாகத் தரவு சேகரிக்க, விமர்சனம் செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.
- பரந்த தரவுகளை ஆய்வு செய்யும்போது,மென்பொருள் பயன்பாட்டினூடாக அவற்றின் செல்லுபடியான தன்மை, நம்பகத்தன்மை, தொகையின் விஞ்ஞானரீதியான துல்லியத்தன்மையைப் பாதுகாத்துக் கொண்டு பல்வேறு மாறுபாட்டுத் தன்மைகளுக்கிடையிலான இடைத்தொடர்புகளை ஆராயும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.
- சரியான தரத்துடன் ஆய்வினை மேற்கொள்வதனூடாகக் குற்றச்சாட்டுக்களைக் குறைத்துக் கொள்ள முடியும்.

**பிரதிகூலங்கள்**

- சரியான, உண்மையான தகவல்களை நேர்மையுடன் வழங்கத் தரவு வழங்குநர்கள் அக்கறை காட்டாமலிருக்க வாய்ப்பு உள்ளது.
- சில தகவல்களை (வருமான அளவு) வெளியிடுதல், தமக்குப் பாதகமான நிலமையை ஏற்படுத்த முடியும் என்ற சந்தேகம் காரணமாகத் தரவு வழங்குநர் தகவல்களை மறைக்க முடியும்.
- தரவு வழங்குநர் பக்கச்சார்பாகத் தகவல்களை வழங்குதல்.
- சில வினாக்களுக்கு விடையளிக்கும்போது, ஞாபகக் குறைபாடு அல்லது ஞாபகமின்மையால் பொய்யான தகவல்களை வழங்கச் சந்தர்ப்பம் உண்டு.
- தரவு வழங்கும்போது தரவு வழங்குநரின் மனநிலை, தரவுகளின் உண்மைத்தன்மை, தரம் என்பவற்றைப் பாதிக்கலாம்

- சில வினாக்களைத் தரவு வழங்குநர் தவறாகப் புரிந்துகொள்ளும்போது, அளிக்கப்படும் விடைகள் விகாரமடையலாம்.
- கடந்தகால நிலமை பற்றி ஆராய்ந்து தரவுகளைச் சேகரிக்க முடியாது. உதாரணமாக, ஆரம்பகால இலங்கைப் பத்திரிகைகளின் கருப்பொருள் பற்றிய தரவு சேகரிப்பு.
- சிக்கல் நிறைந்தபிரச்சினை தொடர்பாக தனிநபர் நடத்தை, கருத்து மற்றும் கொள்கை தொடர்பாக அளவீடு செய்ய முடியாமை.
- ஆய்வில் வினாக்களை வினவி தரவு சேகரிக்கும்போது, அதற்கான ஆழமான விமர்சனரீதியான விடைகளைப் பெறமுடியாமை.

**மதிப்பீடு**

1. ஆய்வு என்பதனை வரைவிலக்கணங்களுக்கூடாக விளக்குக.

2. ஊடக ஆய்வு மற்றும் ஆய்வு முறைமைகள் பற்றி எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

3. தொடர்பாடல் துறையில் ஆய்வின் முக்கியத்துவம் மற்றும் அனுகூலங்கள் பற்றி உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.

தேர்ச்சி மட்டம் : 12.2. தொடர்பாடல் ஆய்வுச் செயற்பாட்டினைப் பின்பற்றி ஆய்வு மேற்கொள்வார்.

பாடவேளைகள்: 18

கற்றற் பேறுகள்

- ஆய்வின் படிமுறைகளை முறையாக முன்வைப்பார்.
- ஆய்வுப் படிமுறைகளைக் கருத்தில் கொண்டு ஆய்வொன்றை மேற்கொள்வார்.

**பாடத்தைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயார் செய்க.

**அறிமுகம்**

- ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும்போது பின்பற்றவேண்டிய நடவடிக்கைகள் அல்லது படிமுறைகள் பல காணப்படுகின்றன.
- ஆய்வின் தன்மைக்கேற்ப அந்நடைமுறைகள் வேறுபடும். அடிப்படை ஆய்வுப் படிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

**ஆய்வுப் படிமுறைகள்**

1. பிரச்சினையை இனங்காணல்
2. நோக்கத்தை இனங்காணல்
3. தலைப்பைத் தெரிவு செய்தல்
4. தரவு சேகரித்தல்
5. தரவுப் பரிசீலனை
6. முடிவும், எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகளும்
7. அறிக்கை எழுதுதல்

**1. பிரச்சினையை இனங்காணல்**

- ஆய்வு ஒன்றின் ஆரம்பம் பிரச்சினையை இனங்காணல் ஆகும்.
- வெளிச் சமூகம் தொடர்பாகக் கண்காணிப்புச் செய்தல் அல்லது அவதானிப்பதனூடாகப் பிரச்சினையொன்று தொடர்பான புரிந்துணர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- ஆய்வினை முறையாகக் கொண்டு செல்ல பிரச்சினை, பரிசோதனை பெரிதும் துணைபுரியும்.

- தெரிவுசெய்த தலைப்பிற்கேற்ப, நேரடியாக அல்லது மறைமுகமாக அல்லது எழுத்தாவணங்களைக் கண்காணிப்பதன் மூலம் மற்றும் வினைத்திறனான கண்காணித்தலினூடாகப் பிரச்சினையை அல்லது பிரச்சினைகளை இனங்காண முடியும்.
- பிரச்சினையொன்றை இனங்காணல் மற்றும் அதற்கானத் தீர்வினைத் தேடல், சமூகத்திற்கு முக்கியத்துவமுடையதா என்பது பற்றி அவதானம் செலுத்தப்படல் வேண்டும்.
- மரபுரீதியான ஆய்வு செய்யப்படாத பிரச்சினை தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டு புதிய அறிவியல் எண்ணக்கருக்களை உருவாக்க முடியும்.
- பிரச்சினையொன்றை இனங்காணும்போது எண்சார் தரவுகள், பெயர்ப் பட்டியல்கள், அறிக்கைகள், நூலக ஆவணங்கள் போன்றன துணைபுரிகின்றன.

- தொடர்பாடல் துறையில் பிரச்சினையொன்றை இனங்காணும் சந்தர்ப்பங்கள்

1. சமூக ஊடகப் பாவனை
2. வானொலி ஊடக செவிமடுத்தல்
3. அச்சு ஊடகப் பாவனை
4. தொலைக்காட்சியை இரசித்தல்
5. கையடக்கத் தொலைபேசிப் பாவனை

**02. நோக்கங்களை இனங்காணல்**

- ஆய்வொன்றின்போது பிரச்சினையுடன் தொடர்புடைய நோக்கங்களைக் கட்டியெழுப்புதல் தரவு சேகரிக்க முக்கியமானதாகும்.
- ஏதேனுமோர் பிரச்சினை தொடர்பாக ஆய்வினை மேற்கொள்வதற்கான காரணங்களை தெளிவுபடுத்துவதன் ஊடாகக் காரணங்காணல், ஆய்வின் பிரதிபலன்களைக் கட்டியெழுப்புதல் இங்கு நோக்கங்கள் என குறிப்பிடப்படுகிறது.
- ஆய்வொன்றில் பிரதான மற்றும் உப நோக்கங்கள் பலவும் காணப்படுகின்றன.

**03. தலைப்பைத் தெரிவுசெய்தல்**

- ஆய்வினை மேற்கொள்ளப் பொருத்தமான பிரச்சினையொன்றைத் தெரிவு செய்த பின்னர், பொருத்தமான தலைப்பொன்றைத் தீர்மானித்தல் வேண்டும்.
- பரிசோதனை செயற்பாட்டின் ஆரம்ப கட்டமாக, ஆய்வாளர் தலைப்பு தொடர்பாகத் தெளிவான அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ஆய்வாளர் அதிகம் ஆர்வம் செலுத்தும் பயன்பெறுதியுள்ள சிறந்த துறையில் தலைப்பைத் தெரிவுசெய்தல் ஆய்வு நடவடிக்கைகளை இலகுவாக்கும்.
- அந்தத் தலைப்பு தொடர்பாக எழுதப்பட்ட தலைப்புகள் இருப்பின், அவற்றை வாசித்து மற்றும் வகுப்பில் சக மாணவர்களுடன் தலைப்புத் தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளல் அவசியமாகும்.

## 04. தரவு சேகரித்தல்

### தரவு

- பண்பு மற்றும் அளவு என்ற அடிப்படையில் தரவுகளின் தன்மைக்கேற்ப அவை இருவகைப்படுத்தப்படும்.
- அளவுசார் தரவுகள் : அளவினை எண்ணிக்கையாகக் காட்டக்கூடிய தரவு.
- பண்புசார் தரவுகள் : எண்ணிக்கை குறிப்பிடமுடியாத, விசேட பண்புகள் மற்றும் அதற்கேயுரித்தான அம்சங்களைக் கொண்ட தரவுகள்.
- ஆய்வு நடவடிக்கையின்போது, தேவையான தகவல் துறைக்குள் சென்று தகவலைப் பெற்றுக்கொள்ளல் அல்லது ஆவணக் காப்பகத்திற்குச் சென்று தகவல்களைப் பெறமுடியும். அவ்வாறு பெறப்படும் தகவல்கள் தரவுகள் என அறிமுகப்படுத்தப்படுவதோடு, அந்தத் தரவுகளின் தன்மை அடிப்படையில் பிரதானமாகப் பாகுபடுத்தப்படுகிறது.

- முதல் நிலைத் தரவுகள் : ஆய்வாளராலேயே சேகரிக்கப்படும் ஆய்வின் நோக்கத்துடன் தொடர்புடைய விசேட தரவுகள்.
- இரண்டாம் நிலைத் தரவுகள் : வெளியீட்டுத் தகவல் மூலாதாரமொன்றிலிருந்து (நூல், ஆய்வறிக்கை) பெறப்படும் தரவுகள்.
- ஆய்வொன்றில் தரவு சேகரிக்கும் இரு பிரதான முறைகளாக வினாக்கொத்து, நேர்முகக் கலந்துரையாடல் என்பன காணப்படுகின்றன.

### வினாக்கொத்து

- சமூகம் தொடர்பான தகவல் சேகரிக்கும் பிரசித்திபெற்ற முறையாக வினாக்கொத்துத் திகழ்கிறது.
- பிரச்சினைக்கான தீர்வினை நோக்கிச் செல்ல அவசியமான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் விதமாக வினாக்கொத்துத் தயாரிக்கப்படவேண்டும்.
- வினாக்களுக்கான ஆய்வு மேற்கொள்ளப்படும் அடிப்படை நோக்கங்களுக்கு அமைய வினாக்கொத்து தயாரிக்கப்படவேண்டும்.
- வினாக்களுக்கான உறுதியான விடையொன்றைத் தரவு வழங்குநர் குறிப்பிடக்கூடிய விதத்தில் வினாக்கொத்துத் தயாரிக்கப்படவேண்டும்.
- கல்வி மட்டம், வயதெல்லை, வருமான மட்டம், மொழி தொடர்பான தரவுகளைத் தரவு வழங்குநரின் நிலைக்கேற்றவாறு வினாக்கொத்துத் தயாரிக்கப்பட வேண்டும்.
- நேரடி விடைகள் கிடைக்காது எனக் கருதும் வினாக்கள் மறைமுகமான முறையில் கேட்கப்படல் வேண்டும்.
- எல்லைப்படுத்தப்பட்ட அளவில் வினாக்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.
- முக்கியத்தின் அடிப்படையில் வினாக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.
- வினாக்கொத்து முறையில் நன்மைகள் போன்றே தீமைகளும் காணப்படுகின்றன.
- வினாக்கொத்து ஒன்றைத் தயாரிக்கும்போது, கீழ்க்காணும் காரணிகளைத் தவிர்க்க வேண்டும்.

  - பக்கச்சார்பான விடையை வழங்கக்கூடியவாறு வினாக்களைத் தயாரித்தல்.
  - நீண்ட வினாக்களை வினவுதல்.
  - அனுமானமாக வினாக்களை வினவுதல்.
  - குழப்பமான வினாக்களை வினவுதல்.

- ➢ தரவு வழங்குநரை சிரமத்திற்குள்ளாக்கும் வகையில் வினாக்களை வினவுதல்.
- ➢ ஒரு வினாவை மீண்டும் மீண்டும் வினவுதல்.

**நேர்முகக் கலந்துரையாடல்**

- ஏதேனுமோர் வினாவிற்கான விடையைத் தரவு வழங்குநரின் வாய்மொழி மூலமாகவே பெற்றுக்கொள்ளல் நேர்முகக் கலந்துரையாடல் எனப்படும்.
- ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வினாக்கொத்திற்கு ஏற்ப நேர்முகக் கலந்துரையாடல் இடம்பெறும்.
- கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் தரவு வழங்குநரின் துலங்கலின் தன்மைக்கேற்ப புதிய வினாக்களைச் சேர்த்தல் அல்லது ஏற்கனவே தயாரித்த வினாக்களில் மாற்றம் செய்தல் என்பன இடம்பெறலாம்.
- ஆய்வாளர் மற்றும் தரவு வழங்குநர் ஆகிய இருவர் மாத்திரம் நேரடிக் கலந்துரையாடலில் ஈடுபடுதல் வினைத்திறன் மிக்கதாகும்.
- கேட்கப்படும் வினாக்களுக்கான விடைகளுக்கு மேலதிகமாகத் தரவு வழங்குநரை அவதானிப்பதனூடாக அவரது மனநிலை, உணர்வுகள், செயற்பாடுகள்,கொள்கை, கருத்து மற்றும் எதிர்பார்ப்பு போன்ற அம்சங்கள் தொடர்பாகப் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.
- தரவு வழங்குநர் தொடர்பான முழுமையான புரிந்துணர்வுடன் நேர்முகக் கலந்துரையாடலை மேறகொள்ள முடியும்.
- தரவு வழங்குநருடன் நல்லுறவை வளர்ப்பதனூடாகக் கலந்துரையாடலைச் சிறப்பாக கொண்டு நடாத்த முடியும்.

**தெரிவுசெய்த மாதிரிக் குழு**

- ஆய்வாளரால் முழுச் சனக்கூட்டத்தையும் ஆய்வுக்குட்படுத்த முடியாது என்பதால், முழுச் சனத்தொகையையும் பிரதிநிதித்துவம் செய்யும் வண்ணம் அவரால் ஆய்வுக்குட்படுத்தப்படும் பிரிவினரே, தெரிவு செய்த மாதிரிக் குழு எனப்படும்.
- சரியாகத் திட்டமிட்டால், தெரிவு செய்த சிறுகுழுவினால் முழுச் சனக்கூட்டம் தொடர்பாகவும் ஒரு அனுமானத்திற்கு வரலாம்.
- மாதிரிக் குழுவொன்றைத் தெரிவு செய்யும்போது, பக்கச்சார்பின்றிச் செயற்படல் வேண்டும்.
- மாதிரிக் குழுவில் அடங்கும் எண்ணிக்கை விஞ்ஞானரீதியாகத் தெரிவு செய்யப்படவேண்டும்.
- முன்மாதிரிக் குழுவைத் தெரிவு செய்யப் பல்வேறு விதிமுறைகள் காணப்படும். அதேவேளை,பிரச்சினையின் இயல்பிற்கேற்ப மாதிரிக் குழுவைத் தெரிவு செய்யும் முறை தீர்மானிக்கப்படும்.
- மாதிரிக் குழுவொன்றைத் தெரிவுசெய்யும் எளிய முறையொன்று கீழே தரப்பட்டுள்ளது.

  உதாரணம் : 1
  வகுப்பறையொன்றில் இருக்கும் 50 மாணவர்களிடையே 10 பேர் கொண்ட மாதிரிக் குழுவொன்றைத் தெரிவுசெய்யும்போது சம அளவான 50 சிறு கடதாசித் துண்டுகளைப் பெற்று, 10 கடதாசித் துண்டுகளில் 1 – 10 வரை இலக்கமிட்டு ஏனையவற்றில் 0 என இடுக. பின்னர் அவற்றைச் சுருட்டி 50 மாணவர்களையும் எழுமாற்றாக எடுக்கச் செய்தல். 1 – 10 வரை இலக்கமிடப்பட்டத் துண்டுகளைப் பெறுபவர்களே மாதிரிக்

குழுவுக்குத் தெரிவு செய்யப்படுவர். இம்முறை எழுமாற்றான மாதிரிக் குழுத் தெரிவு முறை என அழைக்கப்படும்.

உதாரணம் : 2
வகுப்பறையிலுள்ள 50 இல் 25 மாணவர்களைத் தெரிவுசெய்ய வேண்டியிருப்பின் மாணவர் வரவு இடாப்பின்படி ஒற்றை அல்லது இரட்டை எண் அடிப்படையில் தெரிவு செய்ய முடியும். இது நிலையான தெரிவு செய்த மாதிரிக் குழு முறைஎனப்படுகிறது.

05. தரவுப் பகுப்பாய்வு

- ஆய்வின்மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டத் தரவுகளை முறையாக ஒழுங்குபடுத்திக் கோர்ப்பு செய்வதனூடாக விபரமாக மதிப்பீடு செய்தல் பகுப்பாய்வு எனப்படும்.
- எல்லைப்படுத்தப்பட்ட தரவுகள் காணப்படுமிடத்து, ஆய்வாளர் அவற்றைத் தொகுப்பாய்வு செய்யாது,தரவுகளை ஒழுங்குபடுத்திக் கோர்ப்பு செய்து பகுப்பாய்வு செய்தல் (Manual Data Processing and Analyzing) முடியுமாயிருப்பதோடு, தரவுகள் அளவில் அதிகமாகக்காணப்படுமிடத்து அவற்றைத் தொகுத்து வழங்க SPSS, Excel, ATLAS.ti, Minitab போன்ற கணினிசார் முறைகளைப் பயன்படுத்தலாம்.
- தரவுகளுக்கிடையிலான தொடர்புகளை இனங்காணல், ஒரு தரவுடன் இன்னுமோர் தரவு அல்லது தரவுகள் வேறுபடுமாற்றை இனங்காணல் என்பன தரவுப் பகுப்பாய்வின்போது நடைபெறும்.
- உதாரணமாக, கற்றல் உபகரணமாக மாணவர்கள் புதிய ஊடகங்களைப் பயன்படுத்துமாற்றை ஆராயும் ஒரு ஆய்வின்போது, கிராமிய மற்றும் நகர்புறப் பாடசாலை மாணவர்கள் புதிய ஊடகங்களைப் பயன்படுத்தலில் காணப்படும் வேறுபாடுகளை இனங்காணல் மற்றும் குடும்ப வருமானம் அதில் தாக்கம் செய்யுமாற்றை ஆய்வு செய்யமுடியும்.
- ஆய்வு ஒன்றில் வினாக்கொத்து அல்லது நேர்முகக் கலந்துரையாடல் மூலமாக பெற்றுக்கொள்ளப்படும் தரவுகள், முதனிலைத்தரவுகள் (Raw Data) என அடையாளப்படுத்தப்படுவதோடு அவற்றைப் பகுப்பாய்வு செய்வதோடு அடிப்படைக் கட்டமைப்பொன்றை உருவாக்கவேண்டும். அதற்காகப் பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள் பல காணப்படுகின்றன.

உதாரணம் : - சதவீதம்

அட்டவணை

வரைபு

இடை

இடையம்

ஆகாரம்

## சதவீதம் (Percentage)

- மொத்த அளவில் ஏதேனுமோர் பகுதியின் நூற்றுக்குப் பெறுமானமாகக் கருதப்படும்.
- சதவீத அளவு காட்டும்போது (%) எனும் குறியீட்டினை எண்ணக்கருவில் காட்டப்படல் வேண்டும்.
- ஆய்வுச் செயற்பாட்டின்போது பொதுவான பெறுமானத்தைக் காட்டச் சதவீதம் பயன்படுத்தப்படுகிறது.

உதாரணமாக : 60 மாணவர்கள் இருக்கும் வகுப்பறையொன்றில் 15 மாணவர்கள் தினமும் தொலைக்காட்சிச் செய்தியைப் பார்க்கின்றனர். அதனைச் சதவீதத்தில் நோக்கின

$$\frac{15 \times 100}{60}$$

25%

## அட்டவணை (Table)

- ஆய்வின்போது சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒழுங்குமுறைப்படுத்த அட்டவணை பயன்படுத்தப்படுகிறது.
- அட்டவணையில் செங்குத்தாக மற்றும் கிடையாகத் தரவுகளை உள்ளிடுவதன்மூலம் மிக விரைவாக மற்றும் இலகுவாகவும் தெளிவாகவும் இனங்காண வாய்ப்புக் கிடைக்கிறது. கீழ்வரும் உதாரணத்தைக் குறிப்பிடலாம்.


**INTERNET USERS AND 2018 POPULATION STATISTICS FOR ASIA**


| ASIA REGION | Population ( 2018 Est. ) | Pop. % World | Internet Users 30-June-2018 | Penetration (% Population) | Internet % Users | Facebook 31-Dec-2017 |
|---|---|---|---|---|---|---|
| Asia Only | 4,207,588,157 | 55.1 % | 2,062,197,366 | 49.0 % | 49.0 % | 818,934,000 |
| Rest of World | 3,427,170,271 | 44.9 % | 2,146,373,921 | 62.6 % | 51.0 % | 1,327,424,570 |
| ALL THE WORLD | 7,634,758,428 | 100.0 % | 4,208,571,287 | 55.1 % | 100.0 % | 2,146,358,570 |


வரைபு (**Graph**)

- தரவு தொடர்பான படம் மூலமான விளக்கமே வரைபு எனப்படும்.
- தரவு தொடர்பான வெளியீட்டின்போது எண்ணிக்கை அல்லது சொற்களாகக் குறிப்பிடுவதைவிட வரைபொன்றின்மூலம் காட்டப்படுமாயின், அது இலகுவாக இனங்காணக்கூடியதாயிருக்கும்.

உதாரணமாக: வட்டவரைபு
வளைந்த வரைபு
சுற்றுவட்ட வரைபு






**ஆகாரம் (Mode)**

- ஆய்வுச் செயற்பாடொன்றின்போது, ஏதேனுமோர் நிகழ்வொன்றில் அதிக தடவைகள் காட்டப்படும் பெறுமானமே ஆகாரம் எனக் குறிப்பிடப்படுகிறது.
- உதாரணமாக : வகுப்பறையொன்றில் மாணவர்கள் 50 பேர் இருக்கும் அதேவேளை அவர்கள் தினமும் தொலைக்காட்சியை இரசிக்கும் மணித்தியால அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| மணித்தியாலம் | மாணவர்கள் |
|---|---|
| 1 – 2 | 25 |
| 2 – 3 | 15 |
| 3 – 4 | 10 |

- மேற்குறித்த தரவுகளின்படி 1 – 2 மணித்தியாலங்களுக்கிடையில் தொலைகாட்சி இரசிக்கும் 25 மாணவர்களே ஆகாரமாகக் கருதப்படுகிறது.

**இடையம் (Median)**

- இடையம் என்பது இடைப் பெறுமானம் என்பதாகும். அதாவது எண்ணிக்கைகளை ஏறுவரிசை அல்லது இறங்குவரிசையாக ஒழுங்குபடுத்தும்போது சமமான இரு பிரிவுகளைக் கருத்தில் கொண்டு அவற்றின் இடைப்பெறுமானத்தைக் கணிக்கும்போது கிடைக்கும் இடைப்பெறுமானமே இடையம் எனப்படுகிறது.
- உதாரணமாக : வகுப்பறையொன்றில் 10 மாணவர்கள் இறுதியாக எழுதிய கடிதங்களின் எண்ணிக்கையை ஏறுவரிசைப்படுத்தியபோது அது பின்வருமாறு அமைந்நது.

1, 3, 4, 5, 7, 9, 11, 12, 13, 15

$$\frac{7+9}{2} = 8$$

இடை (**Mean**)

- அனைத்துத் தரவு எண்ணிக்கைகளையும் கூட்டி, எண்களின் தடவைகளை அதிலிருந்து பிரிக்கும்போது, அது மொத்த எண்ணிக்கையின் இடையாகும்.

$$1+3+4+5+7+9+11+12+13+15 = \frac{80}{10}$$

**விகிதாசாரம்**

- இரண்டு தொகைகளின் இடைத்தொடர்பு விகிதத்தினூடாகக் காட்டப்படுவதோடு, முதல் தொகையின் பெறுமானம் இரண்டாவது தொகையுடன் தொடர்புறுமாறு அமைத்தல் இங்கு நடைபெறுகிறது.
- விகிதாசாரப்படுத்தும்போது இரு தொகைகளையும் ஒப்பீட்டுரீதியாகக் காட்டும் தன்மை காட்டப்படுகிறது.

30 : 20
3 : 2

**8. முடிவும், எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகளும்**

- ஆய்வினூடாகப் பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் உறுதிப்படுத்தப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளரால் முடிவு ஒன்றுக்கு வரமுடியும்.
- தரவுப் பகுப்பாய்வின்போது உறுதிப்படுத்தப்பட்ட காரணிகள் ஆய்வாளரால் அவரின் புரிந்துணர்வின் அடிப்படையில் முன்வைக்கப்படும்.
- ஆய்வாளர் ஆரம்பத்தில் இனங்கண்ட பிரச்சினையை/பிரச்சினைகளை மற்றும் அவை கட்டியெழுப்பப்பட காரணங்கள், தன்மை என்பவற்றை இனங்காணல் மற்றும் பிரச்சினையைத் தீர்த்துகொள்ளத் தேவையான அறிவு என்பவற்றை முடிவின் ஊடாக முன்வைக்கலாம்.
- ஆய்வின் இறுதியில் முன்வைக்கப்படும் சில முடிவுகள் இன்னொரு ஆய்விற்கான ஒரு பிரச்சினை உருவாகக் காரணமாக அமையலாம்.
- முடிவு தர்க்கரீதியாக அமையவேண்டியதோடு தெளிவாகவும் சுருக்கமாகவும் இருத்தல் வேண்டும்.
- பொருத்தமான சிறந்த முடிவு ஒன்றுக்கு வருதலிலேயே முழு ஆய்வினதும் வெற்றி தங்கியுள்ளது.

**6. அறிக்கை எழுதுதல் மற்றும் முன்வைத்தல்**

- ஆய்வுச் செயற்பாட்டின் இறுதிப் படிமுறையாக அறிக்கை எழுதுதல் மற்றும் முன்வைத்தல் காணப்படுகிறது.
- ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளினூடாகக் கிடைக்கப்பெற்ற புதிய அறிவுசார் விடயமொன்றை வெளியிடுதல் இங்கு நடைபெறுகிறது.

- குறித்த பிரச்சினை தொடர்பாகத் தரவுகளை எதிர்பார்த்திருந்த அனைவருக்கும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட விடயத்தை அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைப்பது இந்த அறிக்கை எழுதுதல் மற்றும் முன்வைத்தலின் பின்னரே ஆகும்.
- எளிமையான மொழிநடை பின்பற்றப்பட்டாலும் அது ஒரு துறைசார் எழுத்தாவணமாகும். இலக்கிய இலட்சணங்களை அதற்குள் அடக்காது பார்த்துக்கொள்ளல் ஆய்வாளரின் கடமையாகும்.
- பரீட்சை நோக்கில் ஆய்வறிக்கை ஒன்றைத் தயாரிக்கும்போது, குறிப்பிட்ட சொற்களின் எண்ணிக்கைக்குட்பட்டே அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.
- ஆய்வறிக்கை ஒன்றைத் தயாரிக்கும்போது கீழ்க்காணும் முறைகளைப் பின்பற்ற முடியும்.

**அறிக்கையின் அடிப்படை அம்சங்கள்**

**01. அறிமுகம் செய்தல்**

- அறிமுகம் செய்தல் ஆய்வறிக்கையின் முக்கிய அத்தியாயமாகும்.
- அறிமுகத்தின்போது ஆய்வின் தலைப்பு மற்றும் அதன் பின்னணிக் காரணிகள் தொடர்பாக விபரிக்க வேண்டும்.
- ஆய்வின் நோக்கங்கள் மற்றும் முக்கியத்துவம் பற்றித் தெளிவுறக் குறிப்பிட வேண்டும்.
- ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட பிரச்சினை தொடர்பில் அறிமுகத்தில் தெளிவுறுத்தல் வேண்டும்.
- ஆய்வுச் செயற்பாட்டில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மற்றும் எல்லைகள் பற்றியும் இங்கு குறிப்பிட முடியும்.

**02. செயன்முறை**

- ஆய்விற்கான தரவு சேகரித்த செயன்முறை பற்றிக் குறிப்பிடப்படல் வேண்டும்.
- தரவு சேகரிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட மாதிரிக் குழு மற்றும் அதனைத் தெரிவு செய்த முறை தொடர்பாக விபரித்தல் வேண்டும்.
  - மாதிரிக் குழுவின் அளவு
  - மாதிரிக் குழுவின் வலயம்
  - மாதிரிக் குழுவின் கட்டமைப்பு
- சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்ட முறை பற்றிக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**03. தரவுப் பகுப்பாய்வு**

- வினாக்கொத்து மூலமாகத்திரட்டப்பட்ட தரவுகளை அட்டவணைகள், வரைபுகள் என்பவற்றைப் பயன்படுத்தி விபரிக்கவேண்டும்.
- வினாக்கொத்தில் அடங்கியுள்ள வினாக்களின் ஒழுங்குமுறைக்கேற்ப அல்லது மிகப்பொருத்தமான ஒழுங்கு முறையில் பகுப்பாய்வு செய்யமுடியும்.
- வினாக்கொத்து, நேர்முகக் கலந்துரையாடல் ஆகிய இரு முறைகளுக்கூடாகவும் தரவு திரட்டப்பட்டிருப்பின் அவற்றைத் தனித்தனியே பகுப்பாய்வு செய்தல் மிகவும் பொருத்தமானது.

04. முடிவு

9. தரவுப் பகுப்பாய்வினூடாக உறுதிப்படுத்தப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முடிவு உருவாக்கப்படுகிறது. இதன்போது, எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகளை முன்வைக்கும் போக்கும் பொதுவாகக் காணப்படுகிறது.

**மூலங்கள்**

- ஆய்வுச் செயற்பாட்டினை ஆரம்பித்த நேரம் முதல் ஆய்வாளரால் பரிசீலிக்கப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள், செவிப்புல கட்புலச் சாதனங்கள், பத்திரிகை என்பன தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.
- மூலங்கள் தொடர்பான தகவல் உள்ளடங்கும் தகவல் முறைகள் Harvard/APA எனும் பிரயோகங்களில் ஒன்றிற்கேற்பக் குறிப்பிடப்படமுடியும்.

உதாரணமாக : புத்தகமொன்றை வாசித்து அதிலுள்ள ஏதேனுமோர் கருத்தினை ஆய்வுச் செயற்பாட்டிற்குப் பயன்படுத்தினால்,

நூலாசிரியரின் பெயர், நூல் வெளியிடப்பட்ட வருடம், நூலின் பெயர், நூல் வெளியீட்டாளர், வெளியீட்டு நிறுவனம் மற்றும் நிறுவனத்தின் அமைவிடம் என்பன உள்ளடக்கப்பட வேண்டும்.

உதாரணமாக : விமல் திசாநாயக்க (1977), மானுடத் தொடர்பாடல், வரையறுக்கப்பட்ட **லேக்ஹவுஸ் நிறுவனம்**, கொழும்பு

**பின்னிணைப்பு**

- ஆய்வுச் செயற்பாட்டின்போது பயன்படுத்தப்பட்ட முக்கிய ஆவணங்கள் பின்னர் இந்த அறிக்கையை வாசிப்போனுக்கு முக்கியம் எனக் கருதுமிடத்து அது பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட முடியும்.
- தரவு சேகரிக்கப் பயன்படுத்தப்பட்ட வினாக்கொத்து இதனுள் உள்ளடக்கப்பட முடியும்.

**அறிக்கையை முன்வைத்தல்**

- எழுத்துமூல அறிக்கையை முன்வைக்கும்போது கட்டப்பட்ட புத்தக வடிவில் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும்.
- எழுத்துமூல அறிக்கைக்கு மேலதிகமாக அறிக்கையை முன்வைத்தல் கணினிவழிச் சுருக்கமான முறையில் (Power Point) அல்லது கட்புல ஊடக வழியாக முன்வைக்கப்படல் வேண்டும்.
- எழுத்துமூல அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் முக்கியமான அடிப்படை விடயங்களை மட்டும் முன்வைப்பிற்காக (Presentation) தெரிவு செய்தல் வேண்டும்.
- கணினிவழி முன்வைப்பு முறையைப் பயன்படுத்தும்போது (Power Point Presentation) எழுத்துமூல அறிக்கையிலுள்ள மிக முக்கியமான காரணிகள் மட்டும் தெரிவுசெய்யப்பட்டு முன்வைக்கப்பட வேண்டும்.

- கணினிசார் முன்வைத்தல் அல்லது கட்புல வழிமுறையொன்றில் சிறு குறிப்புகளை முன்வைப்பதோடு அது தொடர்பாக ஆய்வாளர் விரிவான விளக்கங்களை முன்வைக்கவேண்டும்.
- நிச்சியக்கப்பட்ட எல்லைக்குள் முன்வைத்தலை மேற்கொள்ள வேண்டும் என்பதால் முன்னாயத்தம் மிக முக்கியமாகும்.
- முன்வைத்தலின் இறுதியில் வினாக்களை வினவ மற்றும் கருத்துக்களைத் தெரிவிக்க பெறுநர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

**ஆய்வுச் செயற்பாடொன்றின் ஒழுக்க நெறிகள்**

- ஆய்வின் பண்பு மற்றும் தரத்தைப் பாதுகாத்தல்.
- சரியான ஆய்வு விதிமுறைகளைப் பின்பற்றல்.
- தரவுகளைத் திட்டமிட்ட வகையில் திரிபு செய்யாமை.
- தவறான தரவுகளை உள்ளடக்காமை.
- தரவு வழங்குநர் மற்றும் ஆய்வாளர் இடையில் நம்பகத்தன்மைக் கட்டியெழுப்பப்படல்.
- தரவு வழங்குநரின் விருப்புடன் மாத்திரம் அவரை ஆய்வில் இணைத்துக் கொள்ளல்.
- ஆய்வு தொடர்பாகவும் அதன் அடிப்படை நோக்கங்கள் பற்றியும் தரவு வழங்குநருக்குத் தெளிவுறுத்தல்.
- தரவு வழங்குநர் சுதந்திரமாகத் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுத்தல்.
- தரவு வழங்குநரின் தனிப்பட்ட விடயங்களைப் பாதுகாத்தல்.
- தரவு வழங்குநரை உடல் மற்றும் உளரீதியான சிரமத்திற்குள்ளாக்காது இருத்தல்.
- விரும்பிய நேரத்தில் தரவு வழங்குநர் ஆய்வுச் செயன்முறையினின்று விலக அனுமதி அளித்தல்.
- தரவு வழங்குநரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- ஆய்வுச் செயற்பாட்டின்போது ஆய்வாளர் தனது அதிகாரத்தைத்துஷ்பிரயோகம் செய்யாதிருத்தல்
- தரவு வழங்கியமைக்காகத் தரவு வழங்குநரைப் பாராட்டுதல்.
- புலமைச் சொத்துச் சட்டத்தை மீறும் நடவடிக்கைகளைத் தவிர்த்தல்.
- நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் செயற்படல்.
- ஆய்வாளர் பக்கச்சார்பாக நடத்தல் மற்றும் தனது தனிப்பட்ட கருத்தை ஆய்விற்குள் திணிப்பதற்கு இடமளியாமை.

**மதிப்பீடு**

1. உமது பாடசாலை மாணவர்களின் ஊடகப் பயன்பாடு தொடர்பான பிரச்சினையொன்றை இனங்கண்டு அதற்கேற்ப ஆய்வொன்றை மேற்கொள்க.

   - தலைப்பொன்றைத் தெரிவு செய்தல்.
   - அந்தத் தலைப்புக்குப் பொருத்தமான வகையில் தரவு சேகரிக்க வினாக்கொத்து ஒன்றைத் தயாரித்தல்.
   - தரவு சேகரிக்கப் பொருத்தமான மாதிரிக் குழுவொன்றைத் தெரிவு செய்தல்.
   - வினாக்கொத்து மற்றும் நேர்முகக் கலந்துரையாடல் போன்றவற்றினூடாக தரவுகளைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்தல்.
   - ஆய்வறிக்கை தயாரித்து வகுப்பறையில் மாணவர் முன்னிலையில் முன்வைத்தல்

## கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| நோக்கம் | - | Objective |
| ஒழுக்கநெறிகள் | - | Ethics |
| முறைகள் | - | Methods |
| தரவு | - | Data |
| தரவு சேகரித்தல் | - | Data Collection |
| தரவுப் பகுப்பாய்வு | - | Data Analysis |
| முடிவு | - | Conclution |
| மாதிரி | - | Sample |
| சோதனை | - | Research |
| வினாக்கொத்து | - | Questionnaire |
| மூலம் | - | Source |
| நேர்முகக் கலந்துரையாடல் | - | Interview |
| ஆய்வு | - | Survey |
| கண்டுபிடிப்பு | - | Finding |

**உசாத்துணை நூல்கள்**


1. ද සිල්වා සුගතපාල, (1993), **හඬ නළුව හෙවත් ගුවන්විදුලි නාට්‍ය**, වැල්ලම්පිටිය, චතුර මුද්‍රණාලය.
த சில்வா சுகதபால,(1993),**'ஹட நலுவ ஏவத் குவன்விதுலி நாட்டிய'**வெல்லம்பிடிய, சதுர பதிப்பகம்.

2. පෙරේරා, ලාල්, (1990)**සාධන පරීක්ෂණ**, කොළඹ, ඇගයීම් ශාඛාව - ජාතික අධ්‍යාපන ආයතනය.
பெரேரா லால்,**'சாதன பரீக்ஷன'**, கொழும்பு மதிப்பீட்டு சபை – தேசிய கல்வி நிறுவகம்

3. මහේන්ද්‍ර. සුනන්ද, (1991), **නිර්මාණාත්මක සන්නිවේදනය**, කොළඹ, ඇස්. ගොඩගේ සහ සහෝදරයෝ.
மஹேந்திர சுனந்த,(1991),'**நிர்மாணாத்மக சந்நிவேதன'**,கொழும்பு,எஸ். கொடகே சா சகோதரயோ.

4. සරච්චන්ද්‍ර, එදිරිවීර, (1958), **කල්පනා ලෝකය**, කොළඹ, එස්. ගොඩගේ සහ සහෝදරයෝ
சரத் சந்திர எதிரிவீர, (1958),**'கல்பனா லோகய'**,கொழும்பு, எஸ்.கொடகே சா சகோதரயோ.

5. සුරවීර ඒ. වී., (1991), **නිර්මාණ පසුබිම**, බොරලැස්ගමුව, ප්‍රබුද්ධ ප්‍රකාශකයෝ.
சுரவீர எச்.வீ,(1991),'**நிர்மான பசுபிம'**,பொரலஸ்கமுவ, பிரபுத்த வெளியீடு.

6. සුරවීර ඒ. වී., (1991), **සාහිත්‍ය විචාර ප්‍රදීපිකා**, බොරලැස්ගමුව, ප්‍රබුද්ධ ප්‍රකාශකයෝ.
சுரவீர எச்.வீ,(1991),'**சாஹித்ய விஷார பிரதீபிகா'**, பொரலஸ்கமுவ, பிரபுத்த வெளியீடு.

7. Bowen Christopher J., (2013), *Grammar of the Shot*, 3rd Edition, UK, Focal Press.

8. Central Bank (2016), *Annual Report of the Central Bank of Sri Lanka*, Sri Lanka.

9. Colin Fraser, Sonia Restrepo-Estrada (1998) *Communicating for Development: Human Change for Survival*, London: I.B. Tauris Publishers

10. Council of European Commission for Human Rights (2012)

11. Curran, J. (1996), *Media and Democracy: The Third Route*, Oslo: University of Oslo

12. David C. Watt, (1998), *Event Management in Leisure and Tourism*, Pearson Education, UK

13 Gamble W. Michael, Gamble K. Teri, *(1989), Introducing Mass Communication,* New York, McGraw - Hill Companies,

14. Hemer, Oscar, (2005), *Media and Glocal Change*. 'Rethinking Communication for Development, Chapter 4', Silvio Waisbord, Five Key Ideas: Coincidences and Challenges in Development Communica

15. Hornby, A. S, (2006), *Oxford Advanced Learner's Dictionary* (9th Edition), London, Oxford University Press

16. Huesca, R. (2003), 'Participatory Approaches to Communication for Development.' In B. Mody (Ed.), *International and Development Communication: A 21st Century Perspective*. Thousand Oaks, CA: Sage.

17. Jenkins, H. (2005), *Convergence Culture: Where Old & New Media Collide*, New York University Press

18. Joe Gold Blatt, (1997), *Special Events- Best Practices In Modern Event Management*, John Wiley and Sons, New York.

19. Johnson Craig E. and Hackman Michael Z., (1994), *Creative Communication: Principles and Applications***,** USA, Waveland Press

20. Lowery, Shearon, A., and De Fleur, Melvin L., (1988), *Milestones in Mass Communication Research*, New York, Logman Inc.

21. MacBride, S. (1980). *Many Voices, One World*: Towards a New, More Just and More Efficient World Information and Communication Order. New York: Unipub; Paris: UNESCO.

22. Manyozo, L. (2008). Communication for Development: An Historical Overview. In Media, *Communication and Information*: Celebrating 50 years of Theories and Practices, Paris: UNESCO.

23. Mc Quail, D. (2000), *McQuail's Mass Communication Theory*, 4th edition, London: Sage Publications

24. Melkote, S; & Steeves, H. L. (2001). *Communication for Development in the Third World: Theory and Practice for Empowerment.* New Delhi: Sage Publications.

25. NWICO - New World Information and Communication Order

26. Price, M. (2002), *Media and Sovereignty*, UK, Cambridge University Press

27. Secretariat for Media Reforms & International Media Support (2016), Rebuilding *Public Trust: An Assessment of the Media Industry and Profession in Sri Lanka*

28. Servaes, J. (1999). *Communication for Development: One world, Multiple Cultures*. Cresskill, NJ: Hampton Press.

29. Srinivas R. Melkote, H. Leslie Steeves, (2015), *Communication for Development: Theory And Practice for Empowerment and Social Justice*, California, USA: SAGE

30. Thaker, Alison.(2014), *The Public Relations Hand Book*, Routledge, New York

31. Trenholme, S. (2011). *Thinking through Communication: An Introduction to the Study of Human Communication*, U S A, Pearson

32. Vivian, John, (2013), *The Media of Mass Communication*, 11th Edition, Pearson Education, USA

33. Waisbord, S. (2003). State, Development and Communication. In B. Mody (Ed.), *International and development communication*: *A 21st century perspective.* Thousand Oaks, CA: Sage.

34. https://www.statista.com › Technology & Telecommunications › Telecommunications

35. https://www.statista.com/statistics/765516/internet-penetration-rate-sri-lanka/